
சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

# சொத்துடைமை என்றால் என்ன?

எம். சுவோரவா
பி. ரமானவ்



முன்னேற்றப் பதிப்பகம்

C 307

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

30

எம். சுவோரவா
பி. ரமானவ்

# சொத்துடைமை என்றால் என்ன?

1534
1514

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: க. சுவர்ணலதா

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:
எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி. டி. ஸோதவ், வி. வி. கிரபிவின்,
யூ. என். பொபோவ், வி. வி. ஸோபலெவ், எஃப். என். யூர்லொவ்

АВС социально-политических знаний

**М. Суворова, Б. Романов**

ЧТО ТАКОЕ СОБСТВЕННОСТЬ?

*на тамильском языке*

ABC of Social and Political Knowledge

**M. Suvorova, B. Romanov**

WHAT IS PROPERTY?

*in Tamil*

© Progress Publishers, 1986

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$C\frac{0602000000-466}{014(01)-89}315-89$

ISBN 5—01—001469—6

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . . . . . 7

அத்தியாயம் ஒன்று

உற்பத்தி முறையும் அதன் இரண்டு ஆதாரப் பொருட்களும்: உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் . . . . . . . . . . . . . . . . 13

சமூக வாழ்க்கையின் அடிப்படையாக உள்ள பொருள் உற்பத்தி . . . . . . . . . . . 13

சமூக உழைப்பு . . . . . . . . . . . . . . 16

உற்பத்திச் சக்திகள் . . . . . . . . . . . . . 21

உற்பத்தி உறவுகள் . . . . . . . . . . . . . 27

அத்தியாயம் இரண்டு

உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையும் உற்பத்தி உறவுகள் அமைப்பில் அதன் இடமும் . . . . . . . . . . . . . . . . . . . 38

பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல் உறவு என்ற வகையில் சொத்துடைமை . . . . . . . . . 38
உடைமையின் வரலாற்றுத் தன்மை . . . . . 45
உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவ தனியுடைமையும் அதன் முக்கிய அம்சங்களும் . . . . . . . . . . . . . . . . . 57

அத்தியாயம் மூன்று

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை . . . . . . . . . . . . . . . . . . 68

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையைப் புரட்சிகரமாக நிலைநாட்டும் வடிவங்களும் முறைகளும் . . . . . . . . . . 68
உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் பொருளாதார சாராம்சம் . . . . . 80
உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையும் சோஷலிச பொருளாதார நடவடிக்கையின் முக்கிய அம்சங்களும் . . . . . . 89

அத்தியாயம் நான்கு

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ் உழைக்கும் மக்களுக்கிடையே நுகர்வுப் பொருட்களின் வினியோகம் . . . . 99

சோஷலிசத்தின் கீழ் உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் உள்ள தொடர்பு 99
வேலையின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ப

வினியோகம் என்ற சோஷலிச மூலக் கோட்பாடு . . . . . . . . . . . . . . . . . . . 105
சமூக நுகர்வு நிதிகள் மூலமாக வினியோகம் . 115

அத்தியாயம் ஐந்து

சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் வடிவங்கள் . . . . . . . . . . . . . . . . . . . 122

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் முதன்மையான வடிவமான பொது மக்கள் உடைமை (அரசு உடைமை) . . . . . 122
அரசு (பொது மக்களின்) சோஷலிச உடைமைக்கும் முதலாளித்துவத்தின் கீழ் அரசுடைமைக்கும் இடையேயுள்ள வேறுபாடு . . . . . . . 129
சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்களின் மீதான கூட்டுறவு உடைமை . . . . . . . . 138
உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிசக் கூட்டுறவு உடைமைக்கும் முதலாளிவத்தின் கீழ் கூட்டுறவு உடைமைக்குமிடையேயுள்ள வேறுபாடு . . . . . . . . . . . . . . . . . . . 144
சோஷலிச உடைமையின் இரு வடிவங்களின் ஒற்றுமையும் அவற்றிற்கிடையே உள்ள வேற்றுமைகளும். . . . . . . . . . . . . . . . . 148

அத்தியாயம் ஆறு

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் வளர்ச்சி . . . . . . . . . . . . . . 153

பொதுமக்கள் உடைமையின் வளர்ச்சி . . . . 153
உற்பத்திச் சாதனங்களின் மீதான கூட்டுறவு உடைமையின் வளர்ச்சி விதிகள் . . . . . . 157

அத்தியாயம் ஏழு

சோஷலிசத்தின் கீழ் நுகர்வுப் பொருட்களின் மீதான உடைமை . . . . . . . . . . . . 163

சோஷலிசத்தின் கீழ் தனிநபர் உடைமை . . . 163
சோஷலிசத்தின் கீழ் பொது ஸ்தாபனங்களின் உடைமை . . . . . . . . . . . . . . 169
சோஷலிசத்தின் கீழ் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை . . . . . . . . . . . . . . 174

சொற்றொடர் விளக்கம் . . . . . . . . . . . 181

# முன்னுரை

இந்நூலில் ஆராயப்படும் பொருள் அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றான சொத்துடைமையாகும். உடைமை, அதன் வளர்ச்சி மற்றும் விதிமுறைக்கு உட்பட்ட அதன் தொடர்ச்சியான வடிவங்களை விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்ளுதல் வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாத அறிவின் கோடிக்கல்லாக இருக்கிறது.

பல தத்துவஞானிகளும் வரலாற்றாசிரியர்களும் பொருளியலாளர்களும் உடைமையின் சாராம்சத்தை வெளிக்கொணர்வதற்கு முயன்றிருக்கிறார்கள், தொடர்ந்து முயல்கிறார்கள், ஆனால் விஞ்ஞான சோஷலிசத்தின் ஸ்தாபகர்களான கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்தான் இதை முதல்முதலாக விஞ்ஞான ரீதியில் விளக்கினர்.

அவர்களுடைய முன்னோர்கள், முதன்மையான சிந்தனையாளர்களான பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்டுகள் அ. சான்-சிமோன் மற்றும் ஷா. ஃபூரியே, ஆங்கில பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் மூலவர்களான ஆ. ஸ்மித் மற்றும் டே. ரிக்கார்டோ, மேலும் ஜெர்மன் மூலச்சிறப்புள்ள தத்துவஞானியான கி. ஹெகல்

உட்பட எல்லோரும் சமூகத்தின் நிலை உடைமையைச் சார்ந்திருக்கிறது என்று உணர்ந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் உரிமைச் சட்டங்களில் பிரதிபலிக்கப்பட்ட சொத்துடைமையைத் தன்வயமாக்குதலுடனும் சொத்து உறவுகளுடனும் உடைமையை சமப்படுத்தியதன் மூலம் உடைமையின் சாராம்சத்தை உடைமையின் மீதுள்ள உரிமை என்ற நிலைக்குக் குறைத்து விட்டார்கள்.

பொருளாயத மதிப்புகளின் உற்பத்தி மற்றும் வினியோகம் சம்பந்தமாக மக்களிடையே உள்ள உண்மையான பொருளாதார உறவுகள் உடைமையின் சாராம்சத்தை உண்டாக்குகின்றன என்று மார்க்சியம் அறுதியிட்டுச் சொல்கிறது. அவ்வர்த்தத்தில், உடைமை என்பது மக்களுக்கிடையே உள்ள உறவே தவிர, பொருளின் பாலான மனிதனின் உறவல்ல (இது பொருளாயத மதிப்பு அல்லது பொருளின் மீதான மனிதனின் ஆட்சியில் வெளிப்படுகிறது). புறவுலகின் பொருட்களை உபயோகப்படுத்தும் மனிதனின் இயற்கையான திறமைதான் உடைமை என்றும் வரையறுக்க முடியாது. எனவேதான், ராபின்ஸன் க்ரூஸோவின் பொருளாதாரத்திலிருந்தும் அவரைச் சுற்றியுள்ள பொருட்களுடன் அவருக்கிருந்த தொடர்பிலிருந்தும் உடைமையை வரையறுப்பதற்கான பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்களின் முயற்சிகள் விஞ்ஞான ரீதியாகப் பயனற்றுப் போயின. ஒரு சமூக அங்கத்தினராக மனிதன் சமூகத்தால் உண்டாக்கப்படுகிறான். மேலும், ஏதாவதொரு சமூகத்தின் வரம்பிற்குட்பட்டு எப்போதுமே தனது பொருளாதாரச் செயல்களை நடத்திச் செல்கிறான். எனவே உடைமை என்பது தனி மனிதனின் வாழ்க்கை முறையிலிருந்து பெறப்படுவதைக் காட்டிலும், சமூகத்தின் பொருளாயத வாழ்க்கை நிலைகளிலிருந்து பெறப்பட வேண்டும்.

ஆகையால், உடைமை, அதன் சாராம்சம், அது எவ்வாறு தோன்றுகிறது, அது என் மாறுபடுகிறது என்பதையெல்லாம் நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், பொருளாயத மதிப்புகளின் சமூக உற்பத்தியில் மனிதர்களுக்கிடையே உள்ள உறவுகளை, அவர்களது விருப்பம் மற்றும் உணர்வு நிலைகளிலிருந்து சுயேச்சையாக தனித்து இருக்கிற உறவுகளை நாம் ஆராய வேண்டும்.

அது கூறப்பட்ட பின், மார்க்சியம் உடைமையின் பிரச்சினை சிக்கலானது என்பதையும் பலமுகப்பட்டது என்பதையும் ஒப்புக்கொள்கிறது. சமூக உற்பத்தியில்தான் உடைமையின் உண்மையான அடிப்படை உள்ளது. இது உடைமையின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் அவசியமானதாகும். ஆனால் உடைமை புற ரீதியான, வெளிப்படையான உரு வடிவங்களையும் கொண்டுள்ளது, அவற்றில் ஒன்றுதான் உடைமையின் மீதான உரிமை (சொத்துரிமை) என்பது. இது உடைமையின் உண்மையானப் பொருளாதாரச் சாராம்சத்தின் பிரதிபலிப்பாகும். அதாவது இது ஒரு சமூக உறவாக் உடைமையிலிருந்து பெறப்பட்டதால், உடைமைக்கு இரண்டாம் பட்சமானதாக இருக்கிறது. மேலும், மக்களுக்கிடையேயான உண்மையான பொருளாதார உறவுகளுடைய மனித உணர்வு நிலையின் பெயரளவான பிரதிபலிப்பாக இருப்பதால், அந்த உரிமையானது உடைமையின் பொருளாதாரச் சாராம்சத்தைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் பெரும்பாலும் திரித்துக் காட்டுகிறது.

இவ்வாறாக, பூர்ஷ்வா சட்ட ஒழுங்குமுறை முதலாளித்துவ சமூகத்தின் அங்கத்தினர்களான – முதலாளிகள், கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள் – எல்லோருமே தனியுடைமையாளர்கள் என்று நினைத்துக் கொள்கிறது. அத்துடன் ஆயிரக்கணக்கான கூலித் தொழிலா

ளர்களை வேலைக்கமர்த்தி, பெரிய தொழில் நிறுவனங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ள முதலாளிக்கும், தன்னுடைய உழைப்புச் சக்தியைத் தவிர வேறொன்றுமில்லா தொழிலாளி மற்றும் தானும் தன் குடும்ப அங்கத்தினர்களும் வேலை செய்யும் ஒரு சிறிய நிலப்பரப்பைச் சொந்தமாகக் கொண்டுள்ள விவசாயிக்கும் உள்ள தர வேறுபாட்டை அது மறைத்துக் காட்டுகிறது. முதலாளித்துவ சமூகத்தின் பொருளாதார சாராம்சத்தை எது உண்மையாகத் தீர்மானிக்கிறதென்றால், முதலாளி உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ள போது, எதுவுமற்ற தொழிலாளி, தன்னை இரக்கமற்ற சுரண்டலுக்கு உட்படுத்தும் முதலாளிக்கு தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்க நிர்ப்பந்திக்கப்பட்டு ஒரு கூலித் தொழிலாளியாக மாற்றப்படுகிறார்.

எனவே, உடைமை என்பது மனித விருப்பம் மற்றும் உணர்வு நிலையிலிருந்து சுயேச்சையாக, தனித்து உள்ள புறநிலையான நிகழ்ச்சியாகவும், பல்வேறு சட்ட பூர்வமான வடிவங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மேலெழுந்த வாரியான, அகநிலை நிகழ்ச்சியாகவும் உள்ளது.

அரசியல் பொருளாதாரம் உடைமையை சமூக உற்பத்தியில் உருக்கொண்டுள்ள புறநிலைக்குரிய உறவாக, சமூக உற்பத்தியின் போது மக்களுக்கிடையே உள்ள உறவாகக் காண்கிறது. உற்பத்தி உறவுகளே உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைச் சார்ந்திருப்பதாலும் இவைகளால் தீர்மானிக்கப்படுவதாலும், சமூகம் வளர வளர, உடைமையின் ஒரு வடிவமானது மற்றொன்றால் வெளியே தள்ளப்படுவது ஒரு இயற்கையான விஞ்ஞான போக்காகவும் முறைப்படியான செயல்முறையாகவும் இருக்கிறது என்பது ஒரு தவிர்க்க முடியாத முடிவாகிறது. பூர்விகக் கூட்டுச்

சமூக உடைமை முறை அடிமை உடைமை முறைக்கு இடமளித்தது, அடிமை உடைமை முறை நிலப்பிரபுத்துவ முறைக்கும், நிலப்பிரபுத்துவ முறை முதலாளித்துவத் திற்கும், முதலாளித்துவம் சோஷலிச பொது உடைமைக் கும் இடமளித்துள்ளன. அதனால்தான் உடைமையைப் பற்றிய விஞ்ஞான ரீதியான நோக்கு, மனிதனுடைய மாற்ற முடியாத குணாம்சத்திற்கு ஏற்றவாறு தனி யுடைமை என்பதும் இயற்கையான உடைமை, அதனால் அதே அளவு மாற்ற முடியாதது மற்றும் சாசுவதமானது என்ற கருத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது. முதலாளித் துவ தனியுடைமை இயற்கையானது மற்றும் என்றும் நிலைத்திருக்கக் கூடியது என்ற "புனிதமான" அடிப்ப டைக் கோட்பாட்டை நிரூபிப்பதையே தனது வர்க்க நோக்க மாகக் கொண்டுள்ள எல்லா பூர்ஷ்வா உடைமைப் போத னைகளிலும் இம்மாதிரியான நோக்கு பரவியுள்ளது.

எனவே, மார்க்சியம் உடைமையைப் பற்றிய எண் ணத்தை புறநிலைக்குரிய உற்பத்தி உறவுகளின் எல் லைக்கு மாற்றுகிறது. வேறு சொற்களில் கூற வேண்டு மானால், உடைமை என்பது முதன்மையாக ஒரு பொரு ளாதார நிகழ்ச்சியாகும். எனவே இந்த நியாயமான வினா: ஒரு பொருளாதார நிகழ்ச்சியாக உடைமை என் றால் என்ன?

மற்ற எந்த விஞ்ஞானத்தையும் போன்று, அரசியல் பொருளாதாரம் தன்னுடைய பொது அனுமானங்களை யும் முடிவுகளையும், தனிப்பட்ட கருதுகோள்களிலும் வரையறுப்புகளிலும் வெளிப்படுத்துகிறது, இவை அதற்கே உரித்தான மொழியாகின்றன. எனவேதான், இந்நூ லைப் படிப்பவர்கள் உடைமை உறவுகளின் சாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், இப்புத்தகத்தின் பல் வேறு கருதுகோள்களும் சிறப்புச்சொற்களும் எந்த அர்த்

தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதில் ஆசிரியர்களுடன் ஒரு மனதாய் ஒத்துப்போக வேண்டும். ஒரு குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால், பல நூற்றாண்டுகளாக எண்ணற்ற போக்குகளைக் கொண்டுள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம், முரண்பாடில்லாத, இசைவான விஞ்ஞான ரீதியான மொழியை உருவாக்கத் தவறிவிட்டது. உண்மையில், பூர்ஷ்வாப் பொருளியலாளர்கள் அதே கருதுகோள்களுக்கு வெவ்வேறான வியாக்கியானங்களைத் தருகிறார்கள்.

மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் மட்டுமே ஓர் இசைவான, முரண்பாடில்லாத கருதுகோளான சொற்றொடரை விரிவாக்கியுள்ளது. அதன் கருதுகோள்களும் வரையறுத்தல்களும் சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையை அறிய பொருள்முதல்வாத அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன. மார்க்சியப் பொருளாதார எழுத்துகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இப்புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதுமான சிறப்புச் சொற்களைக் கொண்டு ஒரு சுருக்கமான சொற்றொடர் விளக்கத்தை இப்புத்தகத்தின் இறுதியில் இணைத்துள்ளோம்.

அத்தியாயம் ஒன்று

# உற்பத்தி முறையும் அதன் இரண்டு ஆதாரப் பொருட்களும்: உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும்

## சமூக வாழ்க்கையின் அடிப்படையாக உள்ள பொருள் உற்பத்தி

மனிதர்களுடைய உணர்வு நிலை மற்றும் விருப்பம் தொடர்பாக அவர்களது சமூக இருத்தலின் முதன்மை யான மற்றும் முடிவான பங்கை அறிதல், சமூக வாழ்க் கையின் படிப்பிற்கான பொருள்முதல்வாத அணுகு முறையின் சாராம்சமாகும். இங்கு சமூக இருத்தல் என் பது திட்டவட்டமான, வரலாற்றுப் பூர்வமாகப் பதப்படுத் தப்பட்ட சமூக நிலைமைகளில் உண்மையான மனித நடவடிக்கையைக் குறிப்பதாகும்.

வரலாறு எப்பொழுதுமே மக்களால் ஆக்கப்படுவதா கும். பொதுவாக மக்கள் தங்களது பொருளாதார நடத் தைக்கு தங்களது சொந்த விருப்பங்களையும் மன வெழுச்சிகளையும் தானாக மனத்தில் எழுகிற, அக உணர்வு நிலைக்குரிய இலக்குகளையும் காரணம் காட்டுவ் தால், வரலாற்றின் பொருள்முதல்வாத நோக்கைப் புரிந்து கொள்ளுதல் கடினமாகும். பூர்ஷ்வா ஆராய்ச்சியாளர் கள், மனிதப் பொருளாதார நடவடிக்கையின் அக உணர்வு நிலைக்குரிய உந்துதல்களைப் படிப்பதுதான் அரசியல் பொருளாதாரத்தின் முக்கியமான பணி என்று கூறு

கிறார்கள். ஆனால் அது மனிதர்கள் ஏன் இந்த முயற்சி களையும் இலக்குகளையும் கொண்டுள்ளார்கள் என்றும், அவர்களது உந்துதல்கள் எங்கிருந்து தோன்றுகின்றன என்றும் தெளிவாக்கவில்லை.

மனித நடவடிக்கையை கருத்தியலான உந்து எண் ணங்களுக்கு அடையாளம் காட்டுவதாலும் இவற்றைப் படிப்பது அவசியம் என்று கருதுவதாலும் பூர்ஷ்வாப் பொருளாதாரம் முரண்பாடானதாக இல்லை, ஆனால் இது இந்தப் புள்ளியில் நின்று விடுவதாலும் பொருளா தார நடவடிக்கையின் புறநிலையான இயக்குக் காரணங் களைச் சோதனைச் செய்ய தவறுவதாலேயே அது முரண் பாடானதாக உள்ளது.

மார்க்சியம், மனித உணர்வு நிலையையோ அல்லது கருத்தியலான உந்து எண்ணங்களையோ அசட்டை செய்ய வில்லை, ஆனால் இவற்றை வரலாற்று பூர்வமான நிகழ்ச்சிகளின் முடிவான காரணங்கள் என்று கருத வில்லை. வரலாற்றின் உண்மையான இயக்குச் சக்திகள், தனி மனிதர்களின் (அவர்கள் எவ்வளவுதான் சிறப்பு மிக்கவர்களாக இருப்பினும்) தூண்டுதல்களில் வேரூன்றுவதில்லை. பெரிய மக்கள் திரள்களையும், மொத்த வர்க்கங்களையும், நாடுகளையும் நகர்த்துகின்ற தூண்டுதல்களிலேயே வேரூன்றியுள்ளன. இக்கூட்டுத் தூண் டுதல்களின் விசேஷ அம்சம் என்னவென்றால், இவை மனிதர்களின் வாழ்க்கையின் பொருளாயத நிலைமை களாலும் அவர்களது சமூக இருத்தலாலும் உண்டாக்கப் படுவதால், அவை நிரந்தரமானவையாகவும் உறுதியான வையாகவும் இருக்கின்றன.

மனித வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகள், முதலில், பூகோளச் சுற்றுச் சூழல், அதாவது நிலம், நீர், அதன் தாவர மற்றும் பிராணி இனங்கள், கனிச்

செல்வங்கள் மற்றும் தட்பவெப்ப நிலை இவற்றால் சூழப்பட்டுள்ள இயற்கை, இரண்டாவதாக, ஜனத்தொகை, அதன் அளவு மற்றும் கலவை, மூன்றாவதாக, பொரு ளாயத மதிப்புகளின் உற்பத்தி முறை ஆகியவற்றை உள் ளடக்கியுள்ளன. பிற்கூறப்பட்டது சமுதாயத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியின் பொருளாயத அடிப்படை என்பதை அரசியல் பொருளாதாரம் ஆராய்கிறது.

இச்சமூகமானது இரண்டு வகையான பொருளாயத நிலைமைகளில் இருந்தும், வளர்ந்தும் உள்ளது. ஒரு பக் கம், தன்னியல்பான விதிகளுக்கு உட்பட்டு வளரும், இன்று கூட மனிதனின் உணர்வு பூர்வமான கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்டு இருக்கும் பூகோளச் சுற்றுச் சூழல் உள்ளது. மறு பக்கம், இயற்கையின் அறிந்து கொள்ளப்பட்ட விதிகளின் உணர்வு பூர்வமான பயன் படுத்துதலை ஆதாரமாகக் கொண்டு, இயற்கையின் மீது ஒரு துடிப்பான தாக்கத்தை ஏற்படுத்தி, மனிதன் தன் வாழ்க்கையின் குறிப்பிட்ட நிலைமைகளை உருவாக்கிக் கொள்கிறான். வார்த்தையின் விரிவான அர்த்தத்தில் அது பொருளாயத பண்பாட்டு நிலை மேலும் பொருள் உற்பத்திக் களமாகும்.

பல நூற்றாண்டு காலமாக, மனித உழைப்பு, சுற்றி யுள்ள பொருளாயத உலகத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. இவ்வாறாக, மனிதர்கள் நகரங்களையும், கிராமங்களை யும் கட்டியுள்ளனர், மேலும், மிகப் பெரும் நிலப்பரப்பு களை இரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள், மின்கம்பிகள், குழாய் வழி பாதைகள், இவை போன்ற அமைப்பால் மூடியுள்ளார்கள். தொழிற்சாலைகள், மின்சக்தி நிலை யங்கள், சுரங்கங்கள், பண்ணைகள், வீடு கட்டும் இடங் கள் எல்லாவற்றிலும் மனிதர்களைச் சுற்றியுள்ள பல் வேறுபட்ட பொருட்களின் உலகம் முடிவில்லாது பெரும்

அளவில் மீண்டும் மீண்டும் புனருற்பத்தி செய்யப்படுகிறது. மனித உழைப்பின் இவ்வுற்பத்திப் பொருட்கள் இயற்கையின் பொருட்களைப் போன்றே ஸ்தூலமானவையாகும். நவீன தொழில்நுட்பம் முழுவதும், திருகுக் குறட்டிலிருந்து கணக்கிடும் கருவியான கம்ப்யூட்டர் வரை, எல்லா நுகர்வுப் பொருட்களும் (உணவுப் பொருட்கள், துணிவகைகள், காலணிகள், வீட்டில் உபயோகிக்கும் பொருட்கள், போக்குவரத்து முதலியன) இயற்கையின் விதிகளுக்கு ஏற்ப இயற்கைப் பொருட்களிலிருந்து மனிதனால் உண்டாக்கப்பட்டவையாகும். மனிதனே இயற்கையின் ஒரு அங்கமாகும், அதன் வளர்ச்சியின் மிக உன்னதமான உற்பத்திப் பொருளாகும்.

மனித வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகள் மாற்றத்திற்கு அப்பாற்பட்டவையாக இருக்கின்றன, அவை வளர்ச்சியடைந்துகொண்டும் முன்னேற்றமடைந்து கொண்டும் இருக்கின்றன. அவற்றின் வளர்ச்சி முதலில் உழைப்பின் நிலைமைகளிலும், தன்மையிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

## சமூக உழைப்பு

உழைப்பு என்பது, முன்வைக்கப்படும் இலக்குகளை உணர்வு பூர்வமான அடைதல் மூலம் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மனிதனின் செயல்முனைப்பான நடவடிக்கையாகும். உழைப்பின் இயற்கை அங்கங்களான தலையும் கைகளும் உழைப்புச் செயல்முறையில்தான் வளர்ச்சி பெறுகின்றன, மேலும் மேம்படுத்தப்படுகின்றன. இது உழைப்புக் கருவிகளை உண்டாக்கும் போதும், பயன்படுத்தும் போதும் நடைபெறுகிறது.

உழைப்பு என்பது மனிதனைப் பிராணி இனத்திலிருந்து தனிப்படுத்துகிற, மனிதனுக்கு மட்டுமே இயற்கையாக அமைந்துள்ள செயலாகும். பிராணிகள் "வேலை செய்கின்றன" என்று சொல்லும் போது அந்த வார்த்தையை மறை பொருளாக உபயோகப்படுத்துவதாகும், ஏனென்றால் அவற்றின் உழைப்பு பரம்பரையாகப் பெறப்படும் இயற்கையான உள்ளுணர்ச்சியிலிருந்து வெளிக் கிளம்புகிறது. ஒரு மிக மோசமான கட்டிடக் கலைஞனை மிக நல்ல தேனீயிலிருந்து எது வேறுபடுத்துகின்றதென்றால் "ஒரு கட்டிடக் கலைஞன் நடைமுறையில் ஒரு கட்டிடத்தை எழுப்புவதற்கு முன்பு அதைத் தன் கற்பனையில் எழுப்புகிறான்"* என்று மார்க்ஸ் கூறுகிறார்.

உழைப்புச் செயல்முறை பின்வரும் சாதாரண அம்சங்களைக் கொண்டுள்ளது: 1) மனிதனின் செயல்முனைப்பான நடவடிக்கை அல்லது உழைப்பு; 2) உழைப்புப் பொருட்கள்—உழைப்புச் செயல்முறையில் எதன் மீது மனிதன் தாக்கம் செலுத்துகிறானோ அப்பொருட்கள்; 3) உழைப்பின் கருவிகள்—உழைப்புப் பொருட்களின் மீது செயல்பட மனிதன் பயன்படுத்தும் கருவிகள். உழைப்புக் கருவிகள் மற்றும் உழைப்புப் பொருட்கள் சேர்ந்து உற்பத்திச் சாதனங்களை உண்டாக்குகின்றன, உழைப்பு என்பதே உற்பத்தித் திறன் வாய்ந்த உழைப்பாகும். உற்பத்தித் திறன் வாய்ந்த உழைப்பு என்ற வரையறை எந்த சமூக அமைப்பின் கீழும் உண்மையானதாகும். மனிதனுடைய செயல்முனைப்பான உழைப்பானது மனிதனின் உடல் சம்பந்தமான, மனம் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்களையும் பொருளாயத மதிப்பு

* K. Marx, *Capital,* vol. I, Moscow, Progress Publishers, 1974, p. 174.



2—1245

களையும் உற்பத்தி செய்வதையே இலக்காகக் கொண்டுள்ளது. மனிதனிடம் உற்பத்திச் செயலுக்குத் தேவையான உடல்பலமும் மனத் திறமைகளும் இருப்பதால் அவன் பொருளாயத மற்றும் தார்மீக உற்பத்தியில் உழைப்புச் சக்தியாக இருக்கிறான்.

ஆனால் உழைப்பு என்பது பல்வேறுபட்ட மனிதத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான பொருள் மதிப்புகளின் தோற்றுவாய் மட்டுமல்ல; அது, மனிதனை விலங்கினத்திலிருந்து பிரித்துக் காட்டும் மனித நடவடிக்கையின் சாராம்சத்தை வெளிப்படுத்தும் செய்முறையாகும். உழைப்பு மனிதனை அவ்வாறே உருவாக்கியுள்ளது; மனிதன் எவ்வாறு இருக்கிறானோ, அவனை அவ்வாறு செய்தது உழைப்பேயாகும், உழைப்புச் செயல்முறை மூலமாக மட்டுமே மனித ஆளுமை மேம்படுத்தப்படுகிறது. ஸ்காட்லாந்து வரலாற்றாசிரியரும் தத்துவஞானியுமான தாமஸ் கார்லைல் உழைப்பே மனிதனுடைய உண்மையான வாழ்க்கை என்று வலியுறுத்துகிறார். ருஷ்ய எழுத்தாளரான லெவ் டால்ஸ்டாய், ஒன்றுமே செய்யாமலிருப்பதுதான் மகிழ்ச்சி என்ற எண்ணம் ஒரு வியத்தகு குழப்பமென்றார்.

வேலை செய்வதின் தேவையானது ஒவ்வொரு ஆரோக்கியமான தனி மனிதனுக்கும் மாறுபட்ட அளவுகளில் இயற்கையானதாகும், இதன் மூலம் மனிதன் தன்னுடைய சாராம்சத்தை உணருகிறான், இது ஒரு ஆரோக்கியமான தேவையாகும். ஆனால் உழைப்பு பற்றி ஒரு தனி மனிதனின் மனோ நிலையும் உழைப்பின் தன்மையும் மிக முக்கியமாக சமூக அமைப்பைச் சார்ந்துள்ளன. பல நூற்றாண்டுகளாக மற்றவர்களுக்காகச் செய்த, கீழ்ப்படிதலுள்ள தாழ்ந்த வேலையும் மக்கள் திரள்களை மிருகத்தனமாகச் சுரண்டுதலும், அவர்களுடைய உழைப்

பை ஒரு பளுவான சுமையாக மாற்றி விட்டன. மேலும் உலகம் முழுவதற்கும் தேவையான மனிதச் செயல் முறையான உழைப்பின் மீது சொல்லொணாத் தீங்கை ஏற்படுத்தி உள்ளது. அடிமைகளும் பண்ணையடிமை களும் சுரண்டல்காரர்களுக்காக வேலை செய்ய கட்டாயப் படுத்தப்பட்டதால் (பொருளாதாரச் சார்பற்ற வழிகளில்) அவர்கள் வேலை செய்வதைத் தவிர்ப்பதை விரும் பினார்கள். முதலாளித்துவ சமூகத்தில் கூலித் தொழி லாளிகளுக்கு தனிப்பட்ட சுதந்திரம் இருந்த போதிலும் கூட அவர்களும் முதலாளிக்காக வேலை செய்யப் பொரு ளாதார நிலைமைகளால் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

எனவே, சுரண்டல் வர்க்கங்கள்—அடிமையுடைமையா ளர்களும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும்—பொது மக் களின் உழைப்பை மிகச் சிரமமான, முதுகை உடைக்கிற கடின உழைப்பாக மாற்றி, அதன்மீது ஒரு வெறுப்பையே ஏற்படுத்திவிட்டார்கள். சுரண்டல் வர்க்கங்களே உற் பத்தித் திறன் வாய்ந்த உழைப்பை வெறுத்தன. இவ் வாறாக, பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் மூலவ ரான ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஆடம் ஸ்மித் உழைப்பை, ஒரு சாபமாகவும் மற்ற எல்லாவற்றையும் சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியாகவும் என்று கண்டார்.

வேலை செய்யும் மனிதனுடையவோ அல்லது மற்ற மனிதர்களுடையவோ தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்யத் தேவையான நோக்கோடு கூடிய மனிதச் செயலே உழைப்பாகும். உழைப்பு எவருக்குமே தேவை இல்லை என்றால் உழைப் பின் முக்கியமான தன்மை அதிலிருந்து நீக்கப்பட்டு விடும். கிரேக்கப் புராணங்களில், கடவுள்கள் மனிதர் களின் மீது மிக மோசமான தண்டனையைச் சுமத்த விரும்பிய போது, அவர்களை முற்றிலும் அர்த்தமற்ற

வேலைகளைச் செய்ய வைத்தார்கள். சிசிபஸ் ஒரு மிகப் பெரிய கல்லை (அது திரும்பவும் கீழே உருண்டு வருவதைக் காண்பதற்காகவே)குன்றின் மீது உருட்ட வேண்டியிருந்தது. மேலும், டனைடஸ்கள் ஒரு அடிப்பாகமற்ற பாத்திரத்தில் எப்பொழுதும் தண்ணீரை ஊற்றும் வேலையை தண்டனையாகப் பெற்றார்கள். இவையாவும் எல்லோரும் தங்களது உழைப்பின் பரிபூர்ணமான பயனின்மையை அறிதலால் ஏற்படும் உடல், உள வேதனையையே உருவகப்படுத்துகின்றன.

வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசிய பொருட்களைப் பெறுவதற்கு, மனிதன், இயற்கையில் உள்ள பொருட்களை தன்னுடைய தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தும், அதை பல பயனுள்ள பொருட்களாக உருமாற்றியும் இயற்கையுடன் ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்கிறான். எனினும் வாழ்க்கைக்குத் தேவையான அத்யாவசியப் பொருட்கள் மனிதர்களுடைய தனி முயற்சியினாலேயே அடையப் பெறுவதில்லை, மற்ற மனிதர்களுடன் சேர்ந்தே பெறப்படுகின்றன. இவ்வர்த்தத்தில், பொருள் மதிப்புகளின் உற்பத்தி என்பது கூட்டுச் சமூகச் செயலாகும். சமூக உற்பத்தி இயற்கைப் பொருட்களிலிருந்து பொருள் மதிப்புகளை மக்கள் உற்பத்தி செய்யும் முறையினால் வர்ணிக்கப்படுகிறது. மனிதர்கள் வாழ்க்கையின் அத்தியாவசியப் பொருட்களைப் பெறும் முறை கூட்டு உற்பத்தியில் சம்பந்தப்பட்டுள்ள மனிதர்களுக்குள்ளே உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு வினியோகிக்கப்படுகின்றன, எவ்வாறு அவை பரிவர்த்தனை செய்யப்படுகின்றன, நுகரப்படுகின்றன என்பதையெல்லாம் தீர்மானிக்கிறது.

உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவற்றை சுயேச்சையானவையாகவும், மனிதச் செயலின்

தனிப்படுத்தப்பட்ட வகைகளாகவும் கருதும் பூர்ஷ்வாப் பொருளாதார வல்லுநர்களுக்கு எதிர்மாறாக, மார்க் சிஸ்டுகள் இவற்றிற்குள்ளே உள்ள இடைத் தொடர்பை யும் ஒற்றுமையையும் வெளிக்கொணர்ந்து அவற்றை விஞ்ஞான ரீதியாக நிரூபித்துள்ளனர். உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு யாவும் திரும்பத் திரும்ப நிகழ்கிற ஒரே உற்பத்தி செயல்முறை யான புனருற்பத்தி செயல்முறையின் இடைத்தொடர் புள்ள பல கட்டங்களாகும். இங்கு உடனடி உற்பத்திச் செயல்முறை என்பது புனருற்பத்திச் செயல்முறையின் ஆரம்ப மற்றும் இறுதியான கட்டமாகும். மேலும், வினி யோகம், பரிவர்த்தனை, பொருள் மதிப்புகளின் நுகர்வு ஆகியவற்றில் மக்களுக்கு இடையே உள்ள உறவுகள், உற்பத்தியில் அவர்களின் உறவுகளைச் சார்ந்துள்ளன.

**உற்பத்திச் சக்திகள்**

உடனடி உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகிய கட்டங்களின் தொகுப்பான சமூக உற்பத்திச் செயல் முறை என்பது எதன் மூலமாக மக்கள் இயற்கையை, தங்களை, மற்றவர்களுடன் தங்களுக்குள்ள உறவுகளை யெல்லாம் மாற்றிக் கொள்கிறார்களோ, அந்த ஜீவாதார மான மனிதச் செயல்பாட்டின் பெரும் களமாகும். அத னால்தான் சமூக உற்பத்தி என்பது, அதன் அடிக்கடி நிகழ்கிற, விருத்தியடைகிற வளர்ச்சிக்கு ஈடான, ஓயாத இயக்கத்தில் இருக்கிறது. ஆகவே, காலத்திற்கும் இடத் திற்கும் அப்பாற்பட்டு உற்பத்தி பொதுவாக இல்லை, சமூக வளர்ச்சியின் ஒரு திட்டவட்டமான கட்டத்திலோ அல்லது திட்டவட்டமான சமூக உற்பத்தி முறையிலோ தான் உற்பத்தி எப்போதும் இருக்கிறது.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் மாற்றமும் அந்தச் செயல்முறையின் இயக்குச் சக்தியாக உள்ளன, இது சமூக உற்பத்தி உறவுகளில் கூட மாற்றங்களைத் தவிர்க்க முடியாது ஏற்படுத்துகிறது. உற்பத்தி முறை என்பது குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் அவற்றின் வளர்ச்சி யில் உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கு மிடையே உள்ள ஒரு திடமான ஒற்றுமையாகும். ஆகவே, உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளைப் பற்றிய கருதுகோள்கள் மார்க்சிய அரசியல் பொருளா தாரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் என்பவை முதலில் தங்களது அறிவு, செய்முறை அனுபவம், உழைப்புத் திறமைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள மனிதர் களாகும், இரண்டாவதாக, மக்களால் இயக்குவிக்கப்படும் உற்பத்திச் சாதனங்களில் அடங்கிய, மனிதனால் செய்யப் பட்ட உழைப்புப் பொருட்களும் மனிதனால் செய்யப்பட்ட உழைப்புக் கருவிகளுமாகும். ஆகவே மனிதர்கள்தாம் முதல்முதலில் சமூக உற்பத்திச் சக்திகளாகும். மேலும், அவர்கள்தாம் உற்பத்திச் சாதனங்களைத் தயாரிக்கிறார் கள், அவற்றை இயக்குவிக்கிறார்கள். அதனால் சமூகத் தின் தலையாய உற்பத்திச் சக்தியாக மனிதன் இருக் கிறான். ஆதலால் அவனது சமூக வளர்ச்சி, தனி மனி தனாக அவனது வளர்ச்சி, வாழ்க்கையின் பொருள் மதிப்புகளை உருவாக்குபவனாக ஓர் உற்பத்திச் சக்தியாக அவனது வளர்ச்சியில் இருக்கிறது.

பூர்ஷ்வா விஞ்ஞானிகள், இத்தகைய பொருளாயத அணுகுமுறை, மனிதனை உற்பத்திச் சாதனங்களோடு சமப்படுத்தி, ஒரு தனி மனிதனாக அவனை குறைத்து மதிப்பிடுகிறது என்று கூறுகிறார்கள். அவர்கள், மனிதன் நீதி நெறிகள் அல்லது தர்ம சாஸ்திரத்தின் அகப்பொரு

ளானவன் என்றும், அவனுடைய ஆளுமையை மேம் படுத்துவதே உயர்ந்த, உன்னதமான மதிப்பு வாய்ந்தது என்றும், அதனால்தான் உற்பத்திச் சக்தியாக அவ னுடைய வளர்ச்சியைக் காட்டிலும், மனிதனின் தார்மீக மேம்பாடே அவனுடைய வளர்ச்சியாகும் என்றும் கூறு கிறார்கள். அதன் விளைவாக அவர்கள், மார்க்சியம் மனி தனை வளர்ச்சியின் இலக்காக அல்லது முடிவாகக் காணாமல், வளர்ச்சியின் கருவியாக மட்டுமே காண்ப தாகக்குற்றம் சாட்டுகிறார்கள்.

உண்மையில், வர்க்கப் பகை முரணியல்பான சமூ கங்களில், ஆளும் வர்க்கங்களை பணக்காரர்கள் ஆக்கு வதற்கான கருவிகளாகவும், அவர்கள் ஒரு ஒட்டுண்ணி அல்லது சுரண்டல் வாழ்க்கை நடத்துவதை சாத்திய மாக்கும் மூலகாரணமான நிலைக்கும் சுரண்டப்பட்ட மக் கள் திரளினர் குறைக்கப்பட்டு விட்டார்கள். இதன் கார ணம் என்னவென்றால், அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள், சுரண்டலின் பொருட்களாக ஆகி விட்டார்கள். எந்த அளவு தார்மீக மேம்பாடும் சுரண்டப்பட்ட மக்கள் இந்தச் சுரண்டலிலிருந்து விடுபடுவதற்கு உதவி செய்ய முடியாது, ஏனென்றால், மனித சமுதாயம் மிக உன் னதமான சமூக இலக்குகளை முன்வைக்க உதவும் புதிய மற்றும் மேலும் பூரணமான உற்பத்தி உறவுகளை உரு வாக்குவதன் மூலமும், உற்பத்திச் சக்திகளை விருத்திய டையச் செய்வதன் மூலமும் மட்டுமே அவர்களால் அதைச் செய்ய முடியும். சமூகப் புரட்சிகளின் போது மக்கள் திரளினர், அவர்கள்தான் தலையாய உற்பத்திச் சக்தி, சமூக முன்னேற்றத்தின் முக்கியமான கருவி என்று மட்டுமல்லாமல், அதன் மிக உயர்ந்த இலக்கு கூட அவர் களே என்றும் தங்கள் செயல் மூலம் மெய்ப்பித்துக் காட்டுகிறார்கள்.

ஒரு உற்பத்திச் சக்தியாக மனிதனின் வளர்ச்சி சமூக முன்னேற்றேத்தின் மூல காரணமாகும். இந்த வளர்ச்சியில் மனிதனின் சொந்த தார்மீக மற்றும் தனி மனிதனாக அவனுடைய மற்ற முன்னேற்றத்தின் தோற்றுவாய்கள் இருக்கின்றன.

ஆகவே, மனிதனின் சமூக சாராம்சம், முதன்மையாக அவன் ஒரு தலைமையான உற்பத்திச் சக்தி என்ற வரையறை, அவனை இழிவுபடுத்துவதாகாது, மாறாக அவனை உயர்த்துகிறது, மேலும் அவனை தன்னுடைய சொந்த வரலாற்றைப் படைக்கும் சிற்பியாக குணாதிசயப் படுத்துகிறது. மனிதகுலம் அதனுடைய உற்பத்திச் சக்திகளை விருத்தி செய்ய இயலாமல் போயிருந்தால், அது மிகவும் தாழ்வான மூர்க்கத்தனமான மிருக நிலையிலும், அறியாமையான காட்டுமிராண்டி நிலையிலுமே பின் தங்கியிருக்கும்.

ஓர் உற்பத்திச் சக்தியாக மனிதனின் படைக்கும் சக்தி, தன் கைகளின் பலத்தைப் பெருக்கி உள்ள மற்றும் முன்னேற்றத்திற்கு எல்லையற்ற சாத்தியங்களைத் திறந்துள்ள, செயற்கை உழைப்புக் கருவிகளைப் படைக்கும் திறமையிலேயே உள்ளது. உழைப்புக் கருவிகள், அவற்றின் எண்ணிக்கை மற்றும் பூரணத்துவத்தின் அளவு ஆகியவை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் மிக முக்கியமான குறியீடுகளாக இருக்கின்றன.

மனித சமுதாயத்தின் எழுச்சி மற்றும் வளர்ச்சியில், உழைப்புக் கருவிகள் தீர்மானகரமான பங்காற்றியுள்ளன. ஏனெனில் அவை இல்லாமல் மனிதன் எந்த ஆரம்ப இடத்திற்குச் சொந்தமானவையாகயிருந்தானோ அந்த மிருக உலகத்திலிருந்து தனித்து நிற்க இயலாதவனாகி விடுகிறான். தாமஸ் கார்லைலின் சொற்களின்படி, மனிதன் பலமற்றவன், எப்படியாயினும் பல மிருகங்கள்

அவனை விட பலமிக்கவையாயிருக்கின்றன. ஆனால் அவனுடைய சக்தியைப் பலமடங்கு பெருக்கக் கூடிய கருவிகளை மனிதன் பயன்படுத்த முடியும். இனி அவன் ஒரு போதும் இயற்கையின் விளையாட்டுப் பொருளல்ல, அவன் காற்று, நெருப்பு, சூரியச் சக்தி மற்றும் அணு சக்தி ஆகியவற்றின் மீது ஆதிக்கத்தைப் பெற்றுள்ளான். கருவிகளின் உதவியுடன் மனிதனால் மலைகளை நகர்த்த முடியும். உழைப்புக் கருவிகளின்றி மனிதன் ஒன்றுமில்லை, கருவிகளிருப்பின் அவன் எல்லாமாயிருக்கிறான்.

உழைப்புக் கருவிகள் மனித சக்தியின் வளர்ச்சியின் அளவுகோலாக இருப்பதோடு, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் பொதுவான குறியீடுகளாகவும் இருக்கின்றன. ''பொருளாதார சகாப்தங்களைப் பேதம் காண செய்யப்பட்ட பண்டங்கள் உதவுவதில்லை, ஆனால் அவை எவ்வாறு செய்யப்பட்டன, எந்த உழைப்புச் சாதனங்களால் செய்யப்பட்டன என்பவையே வேறுபாடு காண உதவுகின்றன'' என்று மார்க்ஸ் எழுதினார்.* உழைப்பின் இயந்திர சாதனங்களின் முழுமையே, உற்பத்தியின் எலும்பும் தசைகளுமாக இருக்கின்றன என்று அவர் கூறினார்.

பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இயந்திரக் கருவிகள் கையினால் செய்யப்பட்ட கருவிகளாகத் தோன்றி வளர்ந்து வருகின்றன. ஆனால் உற்பத்தியின் அடிப்படையான மாற்றங்கள் உற்பத்தியின் தொழில்நுட்ப அடித்தளத்தில் ஒரு முழுமையான தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்தின. அப்புரட்சி 18வது நூற்றாண்டின் தொழிற் புரட்சியால் துவக்கி வைக்கப்பட்டது. கையினால் செய்யப்பட்ட கருவிகளிலிருந்து இயந்திரங்களுக்குச் செல்லும்

* K. Marx, *Capital,* vol. I, p. 175.

காலகட்டத்திற்கு இறுதியாகக் மாறியதுதான் அப்புரட்சி யின் சாரமாகும்.

இயந்திரத் தொழில்துறையின் தோன்றுதலுடன், விஞ் ஞானம் உற்பத்தியில் ஒரு பெரும் பங்காற்றத் துவங்கி யுள்ளது. உற்பத்தி விஞ்ஞானத்தின் தொழில்நுட்பம் சார்ந்த பிரயோகத்தின் துறையாகிறது, மேலும் பொது வான விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தை நேரி டையாகச் சார்ந்துள்ளது. விஞ்ஞானம், குறிப்பாக நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சியின் கீழ், ஒரு நேரிடை உற்பத்திச் சக்தியாக வளர முற்படுகிறது. விஞ்ஞானம் என்பதே சமூக உணர்வுநிலையின் ஒரு வடிவம் என் பதையும் அது மனித சமுதாயம் திரட்சியாக வைத்துள்ள ஆன்மீக மதிப்புகளைச் சேர்ந்தது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். எனவே விஞ்ஞானம் மனிதகுலத் தினால் திரட்டப்பட்ட அறிவின் முழு மொத்தமாக, ஒரு நேரிடை உற்பத்திச் சக்தியாக வளரவில்லை, ஆயினும் உற்பத்திச் சாதனங்களில் பொதிந்துள்ள அறிவின் சக்தி, உடனிகழ்வாக மெய்யாகவுள்ள விஞ்ஞான ரீதியான உழைப்பு–ஆராய்ச்சி, வடிவமைப்பு மேலும் பொறியியல் கலை முதலியன–பொருள் மதிப்புகளின் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன.

உற்பத்திச் சக்திகள் எப்போதுமே பொருளாயத தன் மையைக் கொண்டுள்ளன. மேலும் ஓர் உற்பத்திச் சக்தி யாக மனிதனின் நடவடிக்கை, அவன் பெற்றுள்ள விஞ் ஞான அறிவைப் பிரயோகிக்கும், அதன் மூலமாக விஞ் ஞான ரீதியான அறிவை ஊர்ஜிதம் செய்கிற சமூக நடை முறையாகும். எனவேதான் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, சமூகத்தின் வளர்ச்சியின் முதன்மையான பொருளாயத அடிப்படையாக உள்ளது. பொருளாயத

உற்பத்தி மட்டுமே சமூக வாழ்க்கையின் மற்ற எல்லா துறைகளின் வளர்ச்சிக்கு அஸ்திவாரமாக உள்ளது.

## உற்பத்தி உறவுகள்

உற்பத்தி முறையின் இரண்டு அம்சங்களில் ஒன்று உற்பத்திச் சக்திகளாகும், அதன் மற்றொரு அம்சம், உற்பத்தியில் மக்கள் ஒருவருக்கொருவர் ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகளாகும், எனெனில் இது மக்கள் எப்போதுமே ஒன்றுகூடி ஈடுபடும் செயல்முறையாகும். இவ்வுறவுகள் மக்களுக்கிடையே உற்பத்தி (அல்லது பொருளாதார) உறவுகளை ஏற்படுத்துகின்றன. எந்த உற்பத்தி உறவுகளின் உயிருள்ள வாகனங்களாக மக்கள் இருக்கிறார்களோ, அந்த உறவுகளின் வரலாற்றுப் பூர்வமான வளர்ச்சி, தனி மனிதனாக அவனது வளர்ச்சி, மனிதனின் சமூக வளர்ச்சியின் மறு பக்கமாகும்.

உற்பத்திச் சக்திகளும், உற்பத்தி உறவுகளும், மனிதச் செயல்பாட்டின் புறவியலான நிலைமைகள் அல்ல, ஆயினும் அந்தச் செயல்பாடேயாகும். மனிதன், எப்பொழுதுமே தலையாய உற்பத்திச் சக்தியாக செயல்படுகிறான், உடனிகழ்வாக சமூக, உற்பத்தி அல்லது பொருளாதார உறவுகளின் வாகனமாகவும் செயல்படுகிறான். அவ்வர்த்தத்தில் மனிதன் எப்போதுமே சுறுசுறுப்பான ஆதாரப் பொருளாக இருக்கிறான், சமூக உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் இயக்கத்தின் மூலகாரணமாகவும்இருக்கிறான். முதன்மையாக ஓர் உற்பத்திச் சக்தியாக வளர்ந்து வரும் போது, மக்கள் கட்டாயம் எதாவது ஒரு சமயத்திலாவது தங்களது உற்பத்தி உறவுகளை மாற்றவோ அல்லது

மேம்பாடடையச் செய்யவோ வேண்டியதின் அவசியத்தை உணருகிறார்கள்.

பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்ய வேண்டுமாயின், மனிதர்கள் எப்போதும் அந்நோக்கத்திற்காக ஏதாவதொரு வகையில் ஒன்று சேர வேண்டும். வரலாற்றுக்கு முந்தைய காலங்களில்கூட மாபெரும் யானைகளையும் மற்ற பெரிய மிருகங்களையும் வேட்டையாடுவதற்கு மக்கள் தம் சக்திகளை ஒன்றுதிரட்டினார்கள். இந்நாளில், இத்தேவை இன்னும் பெரியதாக இருக்கின்றது. ஏனெனில், கார் போன்ற சிக்கல் நிறைந்த உற்பத்திப் பொருளின் தயாரிப்பு மோட்டார் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான மக்களின் உழைப்பை மட்டுமல்ல, ஆனால் பலவிதமான உட்பகுதிகளையும் உறுப்புகளையும் (கண்ணாடி, டயர், ப்ளாஸ்டிக் போன்றவை) வழங்கும் மற்ற பல தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் கூட்டுசேர்த்திணைத்தலையும் முன்னனுமானிக்கிறது. ஆகவே, உற்பத்தி சம்பந்தமாகக் குறிப்பிட்ட உறவுகளில் ஈடுபடும் பல மக்களின் கூட்டு உழைப்பு மூலமாக, உற்பத்திப் பொருள் எப்போதுமே கூட்டாகப் படைக்கப்படுகிறது.

உழைக்கும் ஒவ்வொரு தனிநபரின் உழைப்பும், ஏதாவதொரு வழியில் சமூக ஒருங்கிணைந்த உழைப்பின் ஒரு பகுதியாக இருப்பதால் உழைக்கும் மக்கள் தங்களுக்குள் குறிப்பிட்ட உழைப்பு உறவுகளில் இருக்கிறார்கள். ஒரு தனி தொழிற்சாலையில் உழைப்பு, அல்லது ஒரு தனி விவசாயி அல்லது கைவினைஞனின் உழைப்பு புறத்தோற்றத்தில் முழுமையாக ஒரு சுயேச்சையான, தனியான செய்முறையாகத் தோன்றினால் கூட, அதுவும் ஒரு கூட்டு உழைப்பேயாகும். ஒரு நெருங்கிய பார்வை தயாரிப்

பாளர்களுக்கிடையே உள்ள தொடர்புகளையும் சார்பு களையும் வெளிப்படுத்தும்.

கூட்டுச் சமூக உற்பத்திச் செயல், உழைப்புப் பிரிவினை மற்றும் உழைப்பின் கூட்டுறவு வடிவங்கள் மூலமாக செயலுருவாக்கப்படுகிறது. கூட்டு உற்பத்திச் செயலின் ஒரு வடிவமாக உழைப்புப் பிரிவினை முதலில் வயது வந்த வர்கள் குழந்தைகளுக்கிடையே, ஆண்கள், பெண்களுக் கிடையே ஓர் இயற்கையான உழைப்புப் பிரிவினையாக தோன்றியது. அது படிப்படியாக சமூக உழைப்புப் பிரி வினையாக மாறியது. இது ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருள் அல்லது அதன் பல்வேறு பாகங்களைத் தயாரிப்பதில் அல்லது முடிவான உற்பத்திப் பொருள் செய்வதின் சில உழைப்புச் செயல்பாட்டில்—நூல் நூற்றல் அல்லது நெய்தல் போன்ற செயல்பாட்டில்—ஒவ் வொரு உழைக்கும் மனிதனின் சிறப்புப் பயிற்சியைக் குறிக்கும். இந்நாளில் இரண்டு வகையான உழைப்புப் பிரிவினைகள் உள்ளன: ஒன்று சமூகத்திற்குள், மற்றொன்று தொழில் நிறுவனத்திற்குள். சமூகத்திற் குள் உழைப்புப் பிரிவினை என்பது பிரித்தெடுப்புத் தொழில்துறை, பதப்படுத்தும் தொழில்துறை, வேளாண் மை, போக்குவரத்து முதலிய பெரும் துறைகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதையே குறிக்கும். இவை ஒவ்வொன் றும் சிறுசிறு கிளைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வா றாக, வேளாண்மை என்பது பயிர் தொழிலையும் கால் நடை வளர்த்தலையும் உட்கொண்டுள்ளது, இதில் பிற் கூறப்பட்டது பால் பண்ணைத் தொழில், பன்றி வளர்த் தல், கோழி வளர்த்தல் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. தொழில் நிறுவனங்களுக்குள், பல்வேறு பட்டறைகள், வேலை செய்யுமிடங்களுக்கிடையேயும் தொழிலாளிகளுக்

குள்ளும் பொறியியலாளர்களுக்குமிடையேயும் உழைப்புப் பிரிவினை உள்ளது.

உழைப்பின் கூட்டுறவு என்பது ஒரே உழைப்புச் செயல் முறையில் அல்லது ஒன்றுக்கொன்று தொடர்புடைய வெவ் வேறு செயல்முறைகளில் பல மக்கள் கூட்டாகவும், சமநிலையிலும் பங்கு கொள்ளும் உழைப்பின் ஒரு வடிவ மாகும். உழைப்பின் கூட்டுறவு என்பது மிகப் பழைமை யான ஒன்றாகும். இவ்வாறுதான், பூர்விகக் கூட்டுச் சமூ கத்தின் அங்கத்தினர்கள் வேட்டையாடுதல், மீன் பிடித் தல் போன்றவற்றில் தங்களது முயற்சிகளை ஒன்று குவித்தார்கள். மேலும் அடிமையுடைமை சகாப்தத்தில் ஆயிரக்கணக்கான அடிமைகள் பிரமிடுகளை எழுப்ப, அற் புதமான கட்டிடங்கள் கட்ட, நீர்ப்பாசன முறைகள் அமைக்க, சாலைகள், மற்ற கம்பீரமான ஞாபகச் சின் னங்கள் அமைக்கவும் ஒன்று சேர்ந்து உழைத்தார்கள். உழைப்பின் கூட்டுறவு இயந்திர உற்பத்தியில் அதன் உச்ச நிலையை எட்டியது, தற்காலத்திய நவீன ஆலைகளும் தொழிற்சாலைகளும் உழைப்பின் கூட்டுறவு அமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

உழைப்புப் பிரிவினையும், கூட்டுறவும் உற்பத்திச் செய் முறையில் செயல்களின் பரிவர்த்தனையை இன்றியமை யாததாக்குகின்றன. தனி நிறுவனங்களின் அளவில், உற்பத்தியில் பங்கு கொள்ளும் பல்வேறு மக்களுக் கிடையே உள்ள நேரிடைத் தொடர்புகள் மூலமாக பலவித மான செயல்களின் தொகுப்பு உள்ளது. சமூக முழுதான அளவில், இம்மாதிரியான செயல் பரிவர்த்தனை பெரும் பாலும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களின் பரிவர்த் தனையின் வடிவத்தைப் பெறுகிறது. இவ்வாறாக, இயந் திரக் கட்டுமான தொழிற்சாலைகள் உலோகத் தொழில் நிறுவனங்களுக்கும் மற்ற தொழிற்சாலைகளுக்கும் உப

கரணங்களை உற்பத்தி செய்யும் போதே, உலோகத் தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் உலோகத்தைப் பயன்படுத்துகின்றன.

எனவே, உற்பத்தியின் உடனடிச் செயல்முறையில், செயலின் பரிவர்த்தனையை உட்படுத்தும் உறவுகள், மக்களுக்கிடையே உற்பத்தியின் ஒரு பகுதியாகவே எழுகின்றன.

ஆனால், ஓர் உழைப்பின் உற்பத்திப் பொருளின் வாழ்க்கை, உற்பத்தியுடன் முடிவடைவதில்லை. உற்பத்திச் செயல்முறையிலிருந்து வெளிப்பட்டு நுகர்வு நிலையை அடையும் முன்பு அது வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. முதன்முதலாக அது உற்பத்தியில் பங்கு கொண்டவர்களுக்கிடையே வினியோகிக்கப்பட வேண்டும். பல்வேறு தனித் துறை பயிற்சி பெற்ற உற்பத்தியாளர்களால் படைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் அவர்களுக்குத் தேவையான மற்ற பொருட்களுக்காக பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும். அதன் பிறகுதான் இப்பொருட்கள் நுகர்வு நிலையை அடைகின்றன, உற்பத்தி நுகர்வு அல்லது சுய நுகர்வில் மறைந்து விடுகின்றன.

இயற்கை விவசாயத்தில் உற்பத்திப் பொருள் ஓர் எளிய, சுய வெளிப்படையான வழியில் வினியோகிக்கப்பட்டது. இவ்வாறாக, உற்பத்தி செய்யப்பட்ட தானியத்தில் ஒரு பகுதி விதைக்காகவும், கால்நடைத் தீவனத்திற்காகவும் ஒதுக்கப்பட்டது. இதனால் ஒரு குடும்பம் அடுத்த வருடத்தில் வயலில் விதைக்கவும் கால்நடைகளுக்கு உணவளிக்கவும் முடிந்தது. மற்றொரு பகுதி உழவர் குடும்பத்தின் சொந்த நுகர்வுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. ஒரு பொருளாதார அலகாக விவசாயியின் குடும்பம் மற்ற குடும்பங்களுடன் உற்பத்தி உறவுகளில் ஈடுபடவில்லை. ஏனெனில், அதன் பொருளாதாரம் குறுகியதாக இருந்

தது, மேலும் அது என்ன உற்பத்தி செய்ததோ அதை மட்டுமே நுகர்ந்தது. ஆனால் பொதுவாக, குறிப்பாக இந்நாளில், உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களைத் தாங்களே நுகர்வதில்லை (அல்லது ஒரு பகுதியைத்தான் நுகர்கிறார்கள்). எந்தப் பொருட்களின் உற்பத்தியில் தாங்கள் எந்தப் பங்கும் கொள்ளவில்லையோ அவ்வகைப் பலதரப்பட்ட பொருட்களை நுகர்கிறார்கள்.

எனவே, உற்பத்தி அதனுடைய விளைபயனான உற்பத்திப் பொருளின் வினியோகத்தால் தொடரப்படுகிறது. வினியோகம் ஒரு பரந்த பொருளாதாரக் காட்சியைக் கொண்டிருந்தாதலும் வழக்கமாக பொருளியலாளர்கள் அதன் மூலம் உழைப்பின் உற்பத்திப் பொருட்களின் வினியோகத்தையே குறிக்கிறார்கள். எந்த சமூக அமைப்பின் கீழும், உற்பத்திப் பொருட்களின் வினியோகப் பிரச்சினை அப்பொருட்களை யார் சுவீகரிக்கிறார்கள், அவை முடிவில் யாரால் எப்படிப் பெறப்படுகின்றன என்பதிலேயே அடங்கிவிடுகிறது. ஏனெனில் அவற்றில் எவ்வளவு பங்கு உற்பத்திக்கும் சுய நுகர்விற்கும், மற்ற மக்களின் நுகர்விற்கும் செல்கிறது என்பது அதைத்தான் சார்ந்து இருக்கிறது.

உற்பத்தியின் மீது, உற்பத்திப் பொருட்களின் வினியோக முறை ஒரு தீவிர செல்வாக்கைக் கொண்டுள்ளது. இவ்வாறாக, சமூகத்தின் அங்கத்தினர்களிடையே நுகர்வுப் பொருட்களின் வினியோகம் பெரும்பாலும் வேலையின் மீது அவர்களின் மனோ நிலையை தீர்மானிக்கிறது. ஏனெனில் அதுதான் வேலைக்கான குறைந்த அல்லது அதிகமான ஊக்கம் அல்லது ஊக்கமின்மையை அளிக்கிறது.

உற்பத்திப் பொருட்களின் வினியோகம் உற்பத்தியினால் தீர்மானிக்கப்படுகிறது, வேறு சொற்களில் கூற வேண்டுமாயின் உற்பத்திப் பொருட்களின் வினியோக

முறை அவற்றின் உற்பத்தி முறையினால் தீர்மானிக்கப் படுகிறது. முன்பே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மட்டுமே வினியோகிக்க முடியும் என்ற எளிய உண்மை மட்டுமே வினியோகம் உற்பத்தியைச் சார்ந்திருக்கிறது என் பதை வெளிப்படுத்துகிறது. இவ்வர்த்தத்தில் வினியோகம் எப்போதுமே உற்பத்தியைத் தொடர்ந்து வருகிறது, மேலும் அது உற்பத்தியினால் தீர்மானிக்கப்படுகிறது.

ஆனால் வினியோகம் உற்பத்தியைச் சார்ந்திருத்தல் உற்பத்திப் பொருட்கள் சமூகத்தில் எப்படி வினியோகிக் கப்படுகின்றன என்றோ எந்த அடிப்படைக் கொள்கையின் மீது, எந்த அளவு நுகர்வுப் பொருட்கள் அதன் அங்கத் தினரிடையே வினியோகிக்கப்படுகின்றன என்பனவற்றை யெல்லாம் விளக்குவதில்லை. அது மற்றொரு வகையான வினியோகத்தை, உற்பத்திக்கே இயற்கையான வினி யோகத்தை, அதாவது தனிமனிதர்கள், சமூகக் குழுக்கள் மற்றும் வர்க்கங்களிடையே நடைபெறும் உற்பத்திச் சாதனங்களின் வினியோகத்தைச் சார்ந்துள்ளது. தனிநபர் கள், சமூகக் குழுக்கள், வர்க்கங்களிடையே நடைபெறும் வினியோகத்தின் முறைகள், வடிவங்கள் மற்றும் அதன் அளவு, உற்பத்தியில் பங்கு கொள்பவர்களிடையே செய் யப்படும் உற்பத்திச் சாதனங்களின் வினியோகத்தைச் சார்ந்துள்ளன.

உழைப்பின் உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனை, முதன்முதலாகச் செயல்களின் பரிவர்த்தனையை, அதா வது உற்பத்தி செயல்முறையின் பல்வகைப்பட்ட உழைப்பு களின் பரிவர்த்தனை, மேலும் தனித் துறை பயிற்சி பெற்ற உற்பத்தியாளர்களிடையே உழைப்பின் உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனை ஆகியவற்றையும் உட் கொண்டுள்ளது என்பதை நினைவுபடுத்திக் கொள் வோம். குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் இப்பொருட்

களின் பரிவர்த்தனை பண்டங்களின் பரிவர்த்தனையாக உருப்பெறலாம். இது பல்வகை உற்பத்தியாளர்கள், பல் வேறு உற்பத்தி நிறுவனங்களின் பொருளாதாரத் தனித் துவத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு சிறப்பான பரிவர்த்தனை யாகும். இது வாங்கல், விற்றல் மூலம், சந்தையின் மூல மாக நுகர்வோருக்கு பொருட்கள் வழங்கப்படுவதை முன் னனுமானிக்கிறது.

மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் உற்பத்தி தோன்றியது, நிலவுகிறது, வளர்ந்து வருகிறது. இத்தேவைகள் பொருளாயத தேவைகளாகவோ ஆன் மீகத் தேவைகளாகவோ இருக்கலாம், இவை பல்வகைப் பட்ட பொருட்களின் உற்பத்தியால் பூர்த்தி செய்யப்படு கின்றன: ரொட்டி, பால் போன்றவைப் பொருளாயத தேவைகளையும், இசைத்தட்டுக்கள், புத்தகங்கள் போன் றவை ஆன்மீகத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. தேவைகள், உற்பத்தி சம்பந்தமானவை (உற்பத்திச் சாத னங்களில்) தனி மனிதர் சம்பந்தப்பட்டவை (நுகர்வுப் பொருட்களில்) என்றும் பிரிக்கப்படலாம்.

உற்பத்தி நுகர்வு, உற்பத்திச் சாதனங்களைப் – உழைப்புக் கருவிகள் மற்றும் உழைப்பின் ஆதாரப் பொருட் களை – பயன்படுத்தி ஒரு பொருளை உருவாக்கும் உற் பத்தியிலேயே நிகழ்ந்து விடுகிறது.

தனிநபர் நுகர்வு என்பது மக்களினாலேயே நுகரப் படும் உணவு, உடை, காலணிகள், குடியிருப்புவசதி போன்றவற்றைக் குறிக்கும். அது உடனடி உற்பத்தியின் வரம்பிற்கு அப்பாற்பட்டு நிகழ்கிறது, மேலும் அது உற் பத்தியின் இயற்கையான இலக்கை அடைவதற்குச் சம மாகும். தனிநபர் நுகர்வில் உற்பத்திப் பொருள் முழு வதுமாகப் பயன்படுத்தப்பட்டு விடுகிறது.

நுகர்வைப் பொறுத்தவரை உற்பத்தி ஒரு தீர்மானகர

மான பங்கு வகிக்கிறது. அந்த அர்த்தத்தில் நுகர்வை விட உற்பத்திக்கு ஒரு முதன்மைத்துவம் உள்ளது. அதாவது, ஒரு பொருள் நுகரப்படுவதற்கு முன்பு அது உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றும், உற்பத்திப் பொருள் இல்லாமல் நுகர்வு சாத்தியமில்லை என்பதையுமே அது குறிக்கிறது. உற்பத்தியின் முதன்மைத்துவம் என்பது உற்பத்தி தேவைகளைப் பிறப்பிக்கிறது என்பதையும் குறிக்கிறது, அல்லது மார்க்ஸ் கூறுவது போல உற்பத்தி நுகர்வுக்கு ஒரு தூண்டுதலையும் உருவாக்குகிறது. தேவைகள், எப்போதுமே மனித உணர்வு நிலையினால் வடிகட்டப்பட்டு தூய்மையாக்கப்பட்ட போதும், இத்தேவைகள் சொந்த விருப்பங்கள், தனி மனிதன் வாழும் சூழ்நிலைகள், நாகரிக நிலைகளின் மீது ஒரு முத்திரையைப் பதித்த போதிலும், இச்செய்முறையின் மூலம் தனிநபர்களை மட்டுமே முழுவதுமாக சார்ந்து அவை அக உணர்வு நிலைக்குரியவையாகத் தோன்றிய போதும், இத்தேவைகள் நெடுநோக்கில் உற்பத்தியால் தீர்மானிக்கப்படுகின்ற புறப் பொருளுக்குரிய அடிப்படையையும் கொண்டுள்ளன. இவ்வாறாக, குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் அல்லது மின்மப் பெருக்கிகளுக்கான நுகர்வோர் தேவைகள் அவற்றின் உற்பத்தி தொடங்கிய பிறகே தோன்றின.

ஆகவே, சமூக உற்பத்திப் பொருள் இயக்கத்தின் பல்வேறு படிநிலைகளான உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வுடன் பொருள் மதிப்புகளின் இயக்கம் தொடர்பு கொண்டுள்ளது: இச்சமூக உற்பத்திப் பொருள் முதலில் உற்பத்தி செய்யப்படுகிறது, பின்பு வினியோகிக்கப்படுகிறது, மேலும் பரிவர்த்தனை செய்யப்படுகிறது, முடிவாக நுகரப்படுகிறது. அவ்வர்த்தத்தில் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகிய

யாவும் ஒரு தனித்த முழுமையின் பகுதிகளேயாகும். இது உற்பத்திக்கு தீர்வான பங்கு உரிமையாயுள்ள ஒரே உற்பத்திப் பொருளின் இயக்கமாகும்.

இந்த நான்கு படிநிலைகளைக் கொண்டுள்ள இந்த முழுமை பரந்த அர்த்தத்தில் உற்பத்தி என்று அறியப் படுகிறது. எதிர்மறையாக, உற்பத்திப் பொருளின் இயக் கத்தின் தொடக்க நிலையான உற்பத்தி நேரிட உற்பத்தி அல்லது உடனடி உற்பத்தி என்று அறியப்படுகிறது. வார்த்தையின் பரந்த அர்த்தத்தில் உற்பத்தி என்பது உடனடி உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வைக் கொண்ட அமைப்பியல் சார்ந்த ஒருமை யாகும், இதில் உடனடி உற்பத்தி அடிப்படையான, தலை மைப் பங்கு வகிக்கிறது.

நான்கு படிநிலைகள் மூலமாகச் செல்லும் ஒரு தொடர்ச் சியான செயல்முறையாக உற்பத்தி இருப்பதினால், மக் களுக்கிடையே உற்பத்தி உறவுகள் உடனடி உற்பத்தியில் அறுதியாக உருவங் கொள்வது மட்டுமின்றி, உற்பத்திப் பொருட்களின் வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர் வில் மக்களுக்கிடையே உள்ள எல்லா உறவுகளையும் தழுவிக்கொள்கின்றன. ஆகவே, உற்பத்தி உறவுகள் என் பவை பொருள் மதிப்புகளின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வுச் செயல்முறையின் போது மக்களுக்கிடையே எழும் உறவுகளாகும்.

சமூக உற்பத்தி என்பது, உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் ஒரு குறிப்பிட்ட ஒற்றுமையாகும், அவ்வழியில் அது உற்பத்தி முறையாகும். உற்பத்திச் சக்திகள் — இயற்கையின் பால் மனிதனுக்குள்ள உற வாக — உற்பத்தி முறையின் உட்பொருளாக இருக்கும் அதே நேரத்தில், உற்பத்தி உறவுகள் அதன் சமூக வடி வமாகும். வேறு சொற்களில் கூற வேண்டுமாயின்,

உற்பத்தி உறவுகள், உற்பத்தியின் விளைபயனான உற்பத்திப் பொருள், உற்பத்திச் சாதனங்கள் உள்ளிட்ட பொருள் மதிப்புகளின் இயக்கத்தின் சமூக வடிவமாகும்.

வரலாற்றில் ஐந்து வகை உற்பத்தி முறைகள் இருந்துள்ளன: பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு முறை, அடிமையுடைமை முறை, நிலப்பிரபுத்துவ முறை, முதலாளித்துவ முறை, மேலும் கம்யூனிச முறை (இதில் சோஷலிசம் முதல் படிநிலையாகும்). இவை ஒவ்வொன்றிற்கும் உற்பத்திச் சக்திகளின் குறிப்பிட்ட வளர்ச்சி மட்டமும், குறிப்பிட்ட பொருளாதார, உற்பத்தி உறவுகளும் உண்டு. வர்க்கச் சமூகங்கள் தங்களது வர்க்கக் கட்டமைப்புகளையும் கொண்டுள்ளன. எல்லா உற்பத்தி உறவுகளும், சமூகத்தின் பொருளாதார அமைப்பை, அல்லது அதன் பொருளாதாரத்தை ஏற்படுத்துகின்றன. இந்த அர்த்தத்திலேயே ஒரு முதலாளித்துவ அல்லது சோஷலிச பொருளாதாரத்தைப் பற்றி பேசுகிறார்கள்.

அத்தியாயம் இரண்டு

# உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையும் உற்பத்தி உறவுகள் அமைப்பில் அதன் இடமும்

## பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல் உறவு என்ற வகையில் சொத்துடைமை

ஒவ்வொரு படிநிலையிலும் (உற்பத்தி, பரிவர்த்தனை, வினியோகம் மேலும் நுகர்வு) உற்பத்தி உறவுகள், (அல்லது பொருளாதார உறவுகள்) பொருள் மதிப்புகளின்—உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களின்—சுவீகரித்தலோடு தொடர்பு கொண்டுள்ளன.

உடைமை என்பது மக்கள் பொருள் மதிப்புகளை சுவீகரிக்கும் முறையும், வடிவமுமாகும். சொத்துடைமை என்பது அன்றாட வாழ்க்கையில் ஒருவரிய உடைமையில் உள்ள பொருட்கள் அல்லது மற்ற பொருள் மதிப்புகளின் கூட்டுத் தொகையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் வழக்கமான சொல்லாகும். மக்கள் அடிக்கடி கூறுகிறார்கள்: எனக்குச் சொந்தமான பொருட்கள் எனது உடைமை. ஆனால் வழக்கமான அர்த்தத்தைக் காட்டிலும், விஞ்ஞான ரீதியான உட்கருத்தில், உடைமை என்பது ஒரு பொருளல்ல, ஒரு நபருக்கு ஒரு பொருளின் பாலான உறவுமல்ல.

உடைமை எப்போதும் பொருட்களுடன் தொடர்

பாயிருந்த போதிலும், பொருட்களே உடைமை அல்ல, ஆனால் சுவீகரித்தலின் பொருள் மட்டுமேயாகும். வார்த்தையின் விஞ்ஞான ரீதியான உட்கருத்தில், உடைமை என்பது பொருள் மதிப்புகளின் (உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களின்) சுவீகரித்தல் குறித்து சமூக உற்பத்தியில் பங்கு கொள்வோருக்கிடையே உள்ள பொருளாதார உறவாகும்.

பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல் குறித்து மக்களிடையே உள்ள உறவாக உடைமை, எப்போதுமே சுவீகரித்தலின் அடிப்படைப் பொருளாக தனி மனிதர்கள், மக்களின் குழுக்கள், வர்க்கங்கள் அல்லது சமூக முழுமையும் இருப்பதையே குறிப்பிடுகின்றது. உடைமை எப்போதும் ஒரு சட்டம் பற்றிய வெளிப்பாடைக் கொண்டிருக்கும் போதும், அவ்வர்த்தத்தில் சொத்துரிமையாக விளங்கும் போதும், சுவீகரித்தலாக உடைமை ஒரு பெயரளவான சட்டம் பற்றிய செயலல்ல. பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல், முதன்மையாக, ஒரு உண்மையான பொருளாதார செய்முறையாகும். இச்செய்முறையின் போது உடைமையாளர் (அதாவது பொருள் மதிப்புகளை சுவீகரிப்பவர்) இம்மதிப்புகளைத் தன் விருப்பப்படி பயன்படுத்தும் உரிமையைப் பெற்றுள்ளார், மேலும் அவர் அவற்றை பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் பயன்படுத்த முடியும். இவ்வாறாக, பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்பட முடியும், மேலும் குறிப்பிட்ட பொருளாதார நிலைமைகளின் கீழ், மற்றவர்களின் சம்பளம் கொடுக்கப் பெறாத உழைப்பை சுவீகரிப்பதற்கு உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்த முடியும், பல்வகைப்பட்ட தேவைகளை நிறைவு செய்ய நுகர்வுப் பொருட்கள் பயன்படுத்தப்பட முடியும்.

ஆகவே, ஒரு உற்பத்திப் பொருளின் உடைமையாளர்

அப்பொருளைத் தன் விருப்பப்படி கையாளுகிறார், ஏதாவதொரு. புனருற்பத்திச் செயல்முறையில் அதைப் பயன்படுத்துகிறார், ஆனால் உடைமையாளர்கள் அல்லாதவர்கள் அப்பொருளை தம் விருப்பப்படி பயன்படுத்த முடியாது என்பதன் மூலம் பொருளாதார அர்த்தத்தில் சுவீகரித்தலாக உடைமை வெளிப்படுத்தப்படுகிறது. எனவே ''என்னுடைய பொருள்'' என்ற எண்ணம் இது ''என்னுடைய'' பொருளாக இருப்பதால் அது என்னுடைய செலவழிக்கும் உரிமையில் இருக்கிறது, அதை ''நான்'' பொருளாதார வழியில் பயன்படுத்தலாம் என்றும், அதே நேரத்தில் அது மற்றவர்களின் பொருளாக இல்லாதிருப்பதால் அது அவர்களின் சுவீகரித்தலுக்கான அல்லது பயன்படுத்துதலான பொருளல்ல என்பதையும் குறிக்கிறது. ஆகவேதான், ஒரு பொருள் உடனிகழ்வாக மற்றவர்களுக்கு உரியதாக இல்லாதிருக்கும் போதுதான் ''என்னுடைய பொருள்'' என்ற எண்ணத்திற்கு அர்த்தம் உள்ளது, ஆயினும் ''நம்முடைய பொருள்'' என்ற எண்ணம் அப்பொருளின் சுவீகரித்தலில் ஈடுபட்டுள்ள அனைவரும் அப்பொருளைத் தம் விருப்பப்படி பயன்படுத்துதலிலும் சரிசமம் என்பதைக் குறிக்கிறது.

சமூக உற்பத்தியில் பங்கு கொள்ளும் எல்லோர் மீதும் உடைமை ஒரு நேரிடையான தாக்கத்தைக் கொண்டுள்ளது, மேலும் அப்பொருட்களை சுவீகரிக்கும் (தனியுடைமை பற்றி குறிக்கப்படும் பொழுது) அல்லது சுவீகரிக்காத, சுவீகரித்தலின் அடிப்படை பொருட்களான பிரஜைகளையும் கொண்டுள்ளது. ஒரு பொருள் சமூக உடைமையாக வைத்திருக்கப்படும் போது, அது சமூக முழுவதனாலும், அதன் எல்லா அங்கத்தினர்களாலும் சுவீகரிக்கபடுகிறது, ஆகையால் அதைச் சுவீகரிக்காத தனி மனிதர்களே இருப்பதில்லை.

உற்பத்திச் சாதனங்கள் மற்றும் அதன் விளைபய னான உற்பத்திப் பொருட்களை சுவீகரிப்பவர் யார், அல் லது வேறு சொற்களில் கூற வேண்டுமானால் அவற்றின் எசமானன் யார் என்ற வினா பொருளாதார தத்துவத் திற்கும், அரசியல் பொருளாதாரத்திற்கும் அதி முக்கியத் துவம் வாய்ந்தவையாகும்.

ஒரு முன் பின் தெரியாத வீட்டிற்குள் நுழைந்தவுடன் நாம் தெரிந்து கொள்ள விரும்பும் முதல் விஷயம் வீட்டின் எசமானர் யார் என்பதாகும். ஏனெனில் அவ் வீட்டில் எல்லாம் அவனைச் சார்ந்துள்ளன. அது போன் றே சமூகத்தின் முறைகளை நாம் அறிய விரும்பினால், அதாவது அதன் பொருளாதார அமைப்பை அறிய விரும் பினால், நாம் முதலில் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களின் எசமானன் யார், சுவீகரிப்பவர் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். உண்மையில் எசமானறன் ஆளுமையிலோ, அவனது பட்டப் பெயரிலோ அரசியல் பொருளாதாரம் அக்கறை கொள்ளவில்லை, ஆனால் அது எசமானர்களின் சமூக வகைகளை ஆராய்கிறது, சுவீகரித்தல் மற்றும் உடைமை யின் தலையாய வகைகளை ஆராய்கின்றது.

உடைமை உறவுகள், சுவீகரித்தலின் பொருள் சார்பாக இரண்டு பிரிவுகளான உறவுகளைக் கொண்டுள்ளன. பொருட்கள், மற்றும் பொருள் மதிப்புகள் எப்போதும் சுவீ கரித்தலின் செயல் இலக்காக உள்ளன. ஆனால் பொரு ளாதார ரீதியில் அவை உற்பத்தியின் நிபந்தனையான உற்பத்திச் சாதனங்கள் என்றும், உற்பத்தியின் விளை பயனான உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. உற்பத்திச் சாதனங்களை உட்படுத் தியுள்ள சுவீகரித்தலின் உறவுகளும், உற்பத்தியின் விளை பயன்களை சுவீகரிப்பது சம்பந்தமான உறவுகளும் சம

மதிப்புள்ளவை அல்ல. உற்பத்திச் சாதனங்களின் சுவீ கரித்தல் தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் அது உற்பத்திச் சக்திகளின் கூறுகளான உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உழைப்புச் சக்தியின் இணைப்பு முறையை தீர்மானம் செய்கிறது.

உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமைதான் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான உள்நோக்கம் மற்றும் சமூக இலக்கைத் தீர்மானிக்கிறது. கொடுக்கப்பட்ட உற்பத்தி உறவுகளின் அமைப்பில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் நோக்கம் என்ன? உற்பத்திச் சாதனங்களின் பயனை சீராக அமைத்திடும், அவற்றின் உடைமையாளர்களின் இலக்கு என்ன? உற்பத்திச் சாதனங்கள் அவற்றின் உடைமையாளர்களின் பொருளாதார தனி நலன்களை நிறைவு செய்ய பயன்படுத்தப்படுவதால் இவ் வினாக்கள் எழுகின்றன. இவ்வாறாக, தன் உடைமையில் உள்ள உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் முதலாளியின் அக்கறை என்னவெனில் கூலியுழைப்பைச் சுரண்டுவதன் மூலம் லாபம் காண்பதேயாகும். ஆனால், உற்பத்திச் சாதனங்கள் சமூக முழுமைக்கும் உரிமையாகவுள்ள போது, அவற்றின் பயன் சமூக முழுமை மற்றும் அதன் அங்கத்தினர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய இயக்கி விடப்படுகிறது. இறுதியாக, சுவீகரித்தல் முறை சமூக உற்பத்தி இயக்கத்தின் முறையைத் தீர்மானிக்கிறது: உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையின் கீழ் தவிர்க்க முடியாது நிகழ்வது போல அது தன்னியல்பாக வளருமா அல்லது உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ் நிகழ்வது போல திட்டமிட்ட முறையில் வளர்ச்சியடையுமா என்பதையும் தீர்மானிக்கிறது.

ஆக, மற்ற உறவுகளின் பிரிவுகளோடு ஒப்பிடும் போது,

அதாவது உற்பத்திப் பொருட்களின் சுவீகரித்தல் குறித்த உறவுகளுடன் ஒப்பிடும் போது, உற்பத்தி சாதனங்களின் மீதான உடைமை அடிப்படையான உற்பத்தி உறவாகும். முன் கூறப்பட்ட பிரிவு ஒரு இரண்டாம்பட்சமான, சார்பான உற்பத்தி உறவு, ஏனெனில் உழைப்புப் பொருட்களின் வினியோக முறை, அவற்றின் பரிவர்த்தனை மற்றும் நுகர்வு ஆகியவற்றின் தன்மை உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை உறவுகளால் முழுமையாகத் தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறாக, பொருளின் சுவீகரித்தல், உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையைச் சார்ந்தது, உற்பத்தி பொருள் எப்போதும் உடைமையாளருக்குச் சொந்தமாயிருக்கும்.

உடைமையைப் பற்றி மார்க்சியம் அல்லாத பார்வையில், உடைமை என்பது ஒரு பொருளுடன் மனிதனுக்கு உள்ள உறவாக மதிக்கப்படுகிறது. இதன் மூலம் பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல் குறித்து மக்களுக்கு இடையே உள்ள உறவான உடைமையின் சமூகச் சாரம் குறைக்கப் படுகின்றது; பூர்ஷ்வா பொருளியலாளர்கள் தனி உடைமை சாசுவதமானதென்றும் மனித இயற்கைக்கு சுபாவமானது என்றும் காட்டுகின்றனர். ஆதலால், அவர்கள், உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையை நிலைநாட்டும் சோஷலிசம் எல்லா உடைமையையும் ஒழித்துக் கட்டுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள், ஏனெனில் அவர்கள், இயற்கையான வடிவமான தனி உடைமை மட்டுமே வாழ்வதற்கு உரிமை உண்டு என்று கருதுகிறார்கள். மார்க்சும் எங்கெல்சும் கூட 1848ஆம் ஆண்டில் எழுதிய **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** “பொதுப்பட்ட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, முதலாளித்துவ சொத்துடைமையை ஒழிப்பதே கம்யூனிசத்திற்குரிய

சிறப்பியல்பு''* என்று வலியுறுத்திக் கூறி இந்தப் புத்தாக்கப் புனைவுகளை மறுத்து வாதிட்டார்கள்.

எல்லா உயிரினங்களுக்கும் இயற்கையான உயிரியல் சார்ந்த சுவீகரித்தலின் ஒரு செயலாக உடைமையைக் குறைப்பது, உடைமையைப் பற்றிய பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களின் நோக்கில் ஒரு மாறுபாடாகும். இதை ஆதரித்துப் பேசுபவர்கள் எல்லா உயிரினங்களும் உயிர் வாழ்வதற்காக, இயற்கையின் பொருட்களைப் பயன் படுத்த வேண்டும் என்றும், மனிதன் இதிலிருந்து வேறு பட்டவனல்ல, ஏனெனில் அவனும் தன் வாழ்க்கையில் பொருட்கள் மற்றும் பொருள் மதிப்புகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்றும் வலியுறுத்துகின்றனர். இந் நோக்கு விஞ்ஞான ரீதியற்றது, ஏனெனில் மனிதன் இயற்கையின் தயாரராயுள்ள பொருட்களைப் பயன்படுத்து வதற்குப் பதில் சமூக உற்பத்தியின் உற்பத்திப் பொருட் களைப் பயன்படுத்துகிறான் என்ற முக்கியமான விஷயத் தை இங்கே தவற விடுகிறார்கள். தங்களது தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு பொருளைப் பயன்படுத்துவதற்கு முன்பு மனிதர்கள் முதலில் அதை உற்பத்தி செய்ய வேண்டும், (இதை எப்போதும் அவர்கள் கூட்டாகச் செய் கிறார்கள்), விநியோகிக்க வேண்டும், பரிவர்த்தனை செய்ய வேண்டும், பின்புதான் அவர்கள் அதை நுகர முடி யும். ஆனால், பொருள் மதிப்புகளை மனிதர்கள் சுவீ கரித்தல், உற்பத்தி, விநியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு சார்பாக அவர்களுக்கிடையே உள்ள உறவுகளைக் குறிக்கிறது. இது இயற்கையுடன் அவர்களுக்குள்ள உற வின் ஒரே ஆதாரமாகும்.

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கம் 214.

## உடைமையின் வரலாற்றுத் தன்மை

மனித வரலாறு முழுமையிலும், பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல், உடைமை ஆகியவை மாற்ற முடியாதவை யாக இருந்ததில்லை. இது வளர்ச்சியின் பல்வேறுபட்ட படிநிலைகளில் பற்பல ஸ்தூலமான வடிவங்களைக் கொண்டு வரலாற்று பூர்வமாக எப்பொழுதும் தனி வேறுபட்டதாகவே இருக்கிறது. உடைமைக்கு சில வகை களும் சில வரலாற்று பூர்வமான வடிவங்களும் உள் ளன.

மனித வரலாற்றில், பொருள் மதிப்புகளின்—எல்லா வற்றிற்கும் மேலாக உற்பத்திச் சாதனங்களின்—சுவீகரித் தலில் இரண்டு வகைகள் இருந்துள்ளன: கூட்டு, சமூக சுவீகரித்தல் மற்றும் தனிப்பட்ட மனிதர்களின் சொந்த சுவீகரித்தல். இவ்விரண்டு வகையான சுவீகரித்தல்களும் வேறுபட்ட வரலாற்று பூர்வமான வடிவங்களைக் கொண் டுள்ளன. இவ்வாறாக, சமூக உடைமை, உற்பத்திச் சாத னங்கள் பூர்விக சமூகத்தின் எல்லா அங்கத்தினர்க ளாலும் சுவீகாரிக்கப்பட்ட பூர்விகக் கூட்டு உடைமையின் வடிவத்தைக் கொண்டது; உற்பத்திச் சாதனங்கள் சமூகம் முழுமையாலும், அதன் எல்லா அங்கத்தினர்களாலும் சுவீகரிக்கப்பட்ட, சோஷலிசத்திற்கே தனி இயல்பான பொது மக்கள் உடைமையின் வடிவத்தைக் கொண்டது; உற்பத்திச் சாதனங்கள் மக்களின் ஒரு குழுவால் கூட்டாக சுவீகரிக்கப்பட்ட, கூட்டுப் பண்ணை மற்றும் கூட்டுறவு உடைமையின் வடிவத்தையும் கொண்டது. உற்பத்திச் சாத னங்களின் மீதான தனி உடைமை பற்பல வடிவங்களில் இருந்துள்ளது: அடிமையுடைமை வடிவத்தில், நிலப் பிரபுத்துவ வடிவத்தில், மேலும் முதலாளித்துவ வடி

வத்தில். சிறு பண்ட உற்பத்தியாளர்களின் — விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களின் — உடைமையும் தனி உடைமையாகும்.

உற்பத்திச் .சாதனங்களில் உடைமைகளின் வடிவங்கள் பற்றிய ஒரு சுருக்கமான மறு சீராய்வு, பூர்விகக் கூட்டு முறையில் இருந்த சமூக உடைமையின் அமைப்பே மனித சமுதாயத்திற்குத் தெரிந்த மிகப் பழமையான உடைமையின் தொடக்கமான வடிவம் .என்பதைக் காட்டும். இது, அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ முறைகளின் தனி உடைமையினால் பின் தொடரப்பட்டது. ருஷ்யாவில், **1917**ஆம் ஆண்டு நடந்த மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, உற்பத்திச் சாதனங்களின் மீது சோஷலிச சமூக உடைமை முதன்முதலாக தன்னை நிலைநாட்டிக் கொண்டது. **1939 – 1945**ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின் சில ஐரோப்பிய, ஆசிய, அமெரிக்க நாடுகளில் சோஷலிசப் புரட்சிகளின் வெற்றியால், எல்லா சோஷலிச நாடுகளிலும் சமூக உடைமை தலையானதாக விஞ்சி மேம்பட்டு இருக்கிறது.

ஆகவே, உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை கீழ்க்கண்டவாறு வளர்ச்சியடைந்துள்ளது: பூர்விகக் கூட்டு வடிவத்தில் சமூக உடைமை — மூன்று வேறுபட்ட வடிவங்களில் தனி உடைமை — சோஷலிச வடிவத்தில் சமூக உடைமை; சுருக்கமாகச் சொல்வதென்றால் சமூக — தனி — சமூக உடைமை. இவ்வகை வளர்ச்சி முறை தற்செயலாக நிகழ்ந்ததா? அச்செய்முறையின் ஆதாரமான காரணங்களை ஆராய்வதன் மூலம் ஐயத்துக்கிடமின்றி அவ்வாறில்லை என்று நாம் காண முடியும்.

நாம் கூறியபடி, உற்பத்திச் சக்திகள், உற்பத்தி முறையின் உட்பொருளாக இருப்பதாலும் அவற்றின் வளர்ச்சி

யின் சமூக வடிவமாக உற்பத்தி உறவுகள் இருப்பதாலும் உற்பத்தியின் சமூக வடிவத்தின் வளர்ச்சி—உற்பத்தி உறவுகள் மற்றும் அவற்றின் பொருளாதார அடிப்படை, அல்லது அடைப்படையான பொருளாதார உறவு, உற் பத்திச் சாதனங்களின் மீதான உடைமை—உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சியால் தீர்மானிக்கப்படுகிறது. உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமைகளின் தொடர்ச்சியான வடிவங்களும் வளர்ச்சியும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி யினால் தீர்மானிக்கப்படுகின்றன என்ற முடிவு, வாதப் பொருத்தமுடையதாகவும், மறுத்தற்கியலாததாகவும் உள் ளது.

ஆயினும் இம்முடிவு மிகவும் பொதுவானதாக உள் ளது, ஏனெனில் உற்பத்திச் சக்திகள் முன்னோக்கி வளர முற்படுவதால் ஒவ்வொரு படிநிலையிலும் முந்தைய படி நிலையைக் காட்டிலும் அவை இன்னும் வளர்ச்சி யடைந்ததாக உள்ளன. இவ்வாறாக, பூர்விகக் கூட்டுச் சமூகத்தின் உற்பத்திச் சக்திகளுடன் ஒப்பிடும் போது, அடிமையுடைமை முறையின் உற்பத்திச் சக்திகள் ஒரு அடி முன்னேற்றம் அடைந்திருந்தன, நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் உற்பத்திச் சக்திகளுடன் ஒப்பிடும் போது, முதலாளித்துவ முறையின் உற்பத்திச் சக்திகள் ஒரு மிகப் பெரிய முன் தாவுதலை காண்பித்தன. உற்பத்திச் சக்திகள் விருத்தி அடைந்து கொண்டே இருக்கின்றன, அவற்றின் தர மட்டம் உயர்ந்து கொண்டே இருக்கிறது, ஆனால் ஒரு கட்டத்தில் அது உற்பத்திச் சாதனங் களின் மீதான சமூக (பூர்விகக் கூட்டு) உடைமையிலிருந்து தனி உடைமையின் மாற்றத்திற்கிட்டுச் சென்றது, இன் னொன்றில், இது எதிர்மறைச் செய்முறையாக, உற் பத்திச் சாதனங்களின் மீதான தனி உடைமையிலிருந்து

சோஷலிச சமூக உடைமையின் மாறுதலுக்கு இட்டுச் சென்றது.

எனவே, உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை யின் வடிவங்கள் மாறியதற்கு உற்பத்திச் சக்திகளின் தர மட்டத்தின் உயர்வு மட்டுமே காரணமாகாது.

பல்வேறு உழைப்புக்கருவிகள், இயந்திரங்கள், உபகரணங் கள் முதலியன உற்பத்திச் சக்திகளின் மிக முக்கியமான ஆதாரப் பொருட்களாகும். அவற்றின் வளர்ச்சியின் மட்டம் இயற்கை மீது மனிதனின் ஆதிக்கத்தைச் சுட்டிக்காட்டும் அளவுகோலாகவும், உழைப்புச் சக்தியின் வளர்ச்சியின், அதாவது மனித சமுதாய முழுமையின் உற்பத்தித் திறனின் அளவுகோலாகவும் உள்ளது. அதே நேரத்தில், உழைப்புக் கருவிகள்தான் உற்பத்திச் சக்திகளின் மிகுதி யாக இயங்குகிற ஆதாரப் பொருட்களாகும். மேலும் அவற்றின் வளர்ச்சியின் அளவு, ஒவ்வொரு வரலாற்று சகாப்தத்திலும் உற்பத்தியின் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டு கிறது.

மக்களிடம் இருக்கின்ற உழைப்புக் கருவிகள், மனிதர் கள் கூட்டாகவோ, தனியாகவோ எவ்வாறு உழைக்கிறார் கள் என்பதை தீர்மானம் செய்கின்றன. அவ்வர்த்தத் தில், உழைப்பின் தன்மை உழைப்புக் கருவிகளின் தன்மையை—அவை கூட்டாகப் பயன்படுத்தப்படுகின்றனவா அல்லது தனியாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என் பதை—சார்ந்துள்ளது என்று கூறலாம்.

இவ்வாறாக, தொன்மையான மனிதனிடம் கற்களும் கழிகளுமே முதன்முதலான கருவிகளாக இருந்தன. எந்த ஒரு தனி மனிதனும் தன்னுடைய தனி முயற்சியி னாலேயே ஒரு பெரிய மிருகத்தைக் கொல்ல முடியாத அளவு, இக்கருவிகள் பலமற்றவையாக இருந்தன. ஆனால் மக்கள் இக்கருவிகளைக் கூட்டாகப் பயன்படுத்திய

போது, அப்பெரிய மிருகத்தை ஒரு பொறியில் விரட்டி வேட்டையாடுகிற போது, அவர்கள் கற்களையும் கழிகளையும் பயன்படுத்தி அதைக் கொல்ல முடிந்தது. அதனால், மனிதனால் பயன்படுத்தப்பட்ட தொன்மையான உழைப்புக் கருவிகளின் பூர்விகக்கூட்டுத் தன்மை கூட்டு உழைப்பை இன்றியமையாததாக்கியது. உழைப்புக் கருவிகளின் கூட்டுப் பயன்படுத்துதல் அல்லது கூட்டுழைப்பு, இக்கருவிகளின் கூட்டு சுவீகரித்தலை இன்றியமையாததாக்கியது. ஆகவே உற்பத்திச் சாதனங்களின் சுவீகரித்தலின் முதல் வரலாற்று பூர்வமான வடிவம் அல்லது உடைமையின் முதல் வரலாற்று பூர்வமான வடிவம் உற்பத்திச் சாதனங்களின் மீது சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களுடைய கூட்டு உடைமையாக இருந்தது.

உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையின் பூர்விகக் கூட்டு வடிவத்தையும், சோஷலிச வடிவத்தையும் சமப்படுத்துதல் கூடாது. சோஷலிச உடைமை, சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களாலும் சுவீகரிக்கப்படுகிறது என்பதை நாம் கீழே பார்ப்போம். ஆனால் பூர்விகக் கூட்டுடைமை சிறிய தனிப்பட்ட கூட்டுக் குழுக்களாலும், குலமரபுக் குழுக்களாலும், தந்தைவழிக் குடும்பங்களாலும் பயன்படுத்தப்பட்டது. மற்றொரு வேறுபாடு என்னவெனில் உற்பத்திச் சாதனங்களின் மீதான பூர்விகக் கூட்டுடைமை அக்கட்டத்திலிருந்த உற்பத்திச் சக்திகளின் மிகக் குறைவான வளர்ச்சியின் விளைபயனாகும். ஆனால் உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிச சமூக உடைமை உற்பத்திச் சக்திகளின் உயர்ந்த வளர்ச்சி மட்டத்தின் பயன் ஆகும். மேலும் இது சமுதாயம் தழுவிய அளவில் உற்பத்திச் சாதனங்களின் சமூகத் தன்மையால் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வுடைமை வடிவங்களுக்குள் தனிச் சிறப்பியல்பு

கள் இருந்த போதிலும், உற்பத்திச் சாதனங்களின் மீதான பூர்விகக் கூட்டுடைமையும், சோஷலிச சமூக உடைமையும் ஒரே வகையான சமூக அல்லது கூட்டு வகையைச் சார்ந்துள்ளன. இது, உற்பத்திச் சாதனங்கள் ஒரு சிலரிடமிருந்து பறிக்கப்பட்டு மற்றும் ஒரு சிலர் உற்பத்திச் சாதனங்களைச் சுவீகரித்தலைப் பொருத்தமற்ற தென்று விலக்குகிறது. அதாவது, இது மனிதனால் மனிதன் சுரண்டப்படும் உறவுகளைப் பொருத்தமற்ற தென தள்ளுகிறது.

உற்பத்தியின் போது, மனிதன், தனது தேவைகளை இன்னும் பெரிய அளவில் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேலும் பல உற்பத்திப் பொருட்களை உண்டு பண்ணுகிறான், அதனால், அவன் பயன்படுத்தும் கருவிகளை மேம்படுத்துகிறான். இச்செய்முறை பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பில், உழைப்புக் கருவிகளின் தனித் துறைப்பாட்டுக்கு வழிவகுத்தது. தனிநபர்களின் கருவிகள் என்பவை, தாங்களாகவே தனித்து வேலை செய்யும் தனி நபர்கள் கையாள மிகவும் வசதியானவையாகும். உண்மையில், மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட அம்பு, வில், வேட்கோத்திகிரி அல்லது நூற்புக்கதிர் முதலியன தனி மனிதர்கள் பயன்படுத்துவதற்கானவையாகும், எனெனில் அவ்வாறு இருப்பின் விளைபயன் இன்னும் அதிகமானதாக இருக்கும்.

உழைப்புக் கருவிகளின் தனித்தன்மையும் தனித் துறைப்பாடும் அதன் விளைபயனான தனிநபர் உழைப்பும் இக்கருவிகளை சுவீகரிக்கும் முறையில் ஒரு மாற்றத்தை, அதாவது அவற்றின் கூட்டு சுவீகரித்தலிலிருந்து தனி சுவீகரித்தலுக்கும் உற்பத்திச் சாதனங்களில் தனி உடைமைக்கும் மாறும் மாற்றத்தை அவசியமாக்கின. உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களாலும், தனிப்பட்ட

உழைப்புக் கருவிகளுடன் மனிதன் தன் விருப்பத்தின் பேரில் உற்பத்தியில் வேலை செய்ய வந்ததாலும் அது தவிர்க்க முடியாததாகியது.

ஆகவே, உற்பத்திச் சாதனங்களின் மீதான பூர்விகக் கூட்டுடைமையிலிருந்து, தனிவுடைமைக்குச் செல்லும் மாற்றம் வலிமை வாய்ந்த தனிமனிதர்களால் உற்பத்திச் சாதனங்கள் “கைப்பற்றப்பட்ட” காரணத்தைக் காட்டிலும், உற்பத்தியில் ஏற்பட்ட மாறுதல்கள், மற்றும் உழைப்பு, உழைப்புக் கருவிகளின் தன்மையில் ஏற்பட்ட மாறுதல்களின் விளைபயனாகும். அவ்வர்த்தத்தில், மனித வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தனிவுடைமையின் துணிபுரை விதிமுறைக்குட்பட, வரலாற்றுபூர்வமாக தவிர்க்க முடியாத மற்றும் முன்னேற்றமடைகிற ஒரு செயல்முறையாகும்.

உழைப்புக் கருவிகளின் தனித்துறைப்பாடு, தனி உடைமைக்குச் செல்லும் மாற்றத்திற்கான ஒரு அடிப்படையை வழங்கியது மட்டுமல்ல, அத்தோடு கூட உழைப்பின் சமூகப் பிரிவினைக்கு ஒரு அடிப்படையை வழங்கியது. முதலில் பயிர்த்தொழிலிலிருந்து கால்நடை வளர்ப்பு பிரிக்கப்பட்டது, பின்பு கைவினைஞானமும் வாணிகமும் தனி செயல்துறைகள் ஆயின. சமூக உழைப்புப் பிரிவினை ஒரு புறமும், உற்பத்திச் சாதனங்களின் மீதான தனி உடைமை மறு புறமும் ஒரு புது வகையான பொருளாதாரத்தை உருவாக்கின: பண்ட உற்பத்தி. இது சந்தையில் பரிவர்த்தனை செய்து கொள்ளப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தனித்துறை உற்பத்தியாளர்களால் நடத்தப்படுகிறது. பண்ட உற்பத்தி இயற்கைப் பொருளாதாரத்தைத் தள்ளிவிட்டு அவ்விடத்தைக் கைக் கொண்டது. இந்தப் பொருளாதாரத்தில் பரிவர்த்தனைக்காக அன்றி, கொடுக்



4*

கப்பட்ட ஒரு மூல அலகின் வரம்பிற்குள் உள் நுகர்வுக் காகப் பொருட்களை உண்டு பண்ணுகிறது.

சமூக உழைப்புப் பிரிவினை உற்பத்தியாளர்களை (அவர்களை ஒருவருக்காக ஒருவர் வேலை செய்ய வைப்ப தன் மூலம்) ஒன்றுபடுத்தியது. அது உற்பத்திச் சாதனங் களின் மீதான தனியுடைமையைப் பெற்றுள்ள சுயேச் சையான உற்பத்தியாளர்களால் நடத்தப்படுவதால் மனிதச் செயலின் முக்கியமான அமைப்பான உற்பத்திச் செயல் முறையில் அவர்கள் தனித்தனியாகப் பிரிக்கப்படுகிறார் கள். இந்நிலைமைகளில் சந்தையில் உற்பத்திப் பொருட் களின் பரிவர்த்தனை ஒன்றுதான் உற்பத்தியாளர்களி டையே ஒரு இணைப்பாக உள்ளது. மனித உழைப்பின் உற்பத்திப் பொருட்களை பரிவர்த்தனைக்காக உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதார அமைப்புதான் எளிய பண்ட உற்பத்தி என்று அறியப்படுகின்றது. விவசாயிகள் அல்லது கைவினைஞர்கள், எளிய பண்ட உற்பத்தியாளர்கள் ஆவார்கள்.

தன்னியல்பான, திட்டமிடப்படாத வளர்ச்சி, எளிய பண்ட உற்பத்தியின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும். ஒவ்வொரு நிறுவனத்தினுள்ளும் அதன் எஜமானன் உற்பத்தியை திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைக்கிறான்; ஆனால் தனியுடைமை, தேசியப் பொருளாதாரத்தை சுயேச்சையான, எண்ணற்ற நிறுவனங்களாகத் துண்டு போடுவதால் தேசியப் பொருளாதார வளர்ச்சி வெறும் தற்செயல் நிகழ்ச்சியாகிறது. எவரும் சமூகத் தேவை களை மதிப்பிடுவதில்லை (இந்நிலைமைகளில் அதைச் செய்யவே முடியாது). மேலும் உற்பத்தியாளர்கள் அவர் களின் போட்டியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பண் டங்களின் அளவை அறிவதில்லை. எனவேதான் உற்பத்தி

மற்றும் பரிவர்த்தனையில் இத்தற்செயல்தனமும் அராஜகமான குழப்பமும் நிலவுகின்றன.

அதே நேரத்தில், உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமை, அடிமையுரிமையான தனியுடைமை என்ற வடிவத்தில் ஒரு வரலாற்று பூர்வமான ஆதிக்கத்தைப் பெற்றது. அதன் ஸ்தாபனம் கட்டாயப்படுத்துதலை உட்படுத்தியது, உடனடி உற்பத்தியாளர்கள் (ஜனத் தொகையின் பெரும் பகுதி) வலுக்கட்டாயமாக அடிமைகளாக மாற்றப்பட்டனர். பொருளாதாரச் சார்பற்ற நிர்ப்பந்தமும் வன்முறையும் அடிமையுடைமை தோன்றி, செயல்பட்டதில் ஒரு முக்கியமான பங்காற்றிய போதிலும் தனியுடைமைக்கு மாறியதானது பலாத்காரத்தை அல்ல, உற்பத்தியின் மாற்றங்களையே ஆதாரமாகக் கொண்டிருந்தது. அடிமையுடைமை முறையிலிருந்து உற்பத்திச் சாதனங்களின் மீதான நிலப்பிரபுத்துவ தனியுடைமைக்குச் செல்லும் மாற்றத்தில் கூட பொருளாதாரச் சார்பற்ற நிர்ப்பந்தம் முக்கியமானதாயிருந்தது. முதலாளித்துவத்தின் கீழ்தான் உடனடி உற்பத்தியாளன்–தொழிலாளி–தன்னுடைய சுயச்சார்பு நிலையிலிருந்து விடுபட்டு சட்டமுறையான சுதந்திரத் தனிமனிதனாக ஆனான். அடிமையுடைமையாளருக்காக அடிமையையும், நிலப்பிரபுவிற்காகவும் நிலக்கிழாருக்காகவும் பண்ணையடிமையையும் வேலை செய்ய வைக்கும் பொருளாதாரச் சார்பற்ற நிர்ப்பந்தம் முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதாரச் சார்பான நிர்ப்பந்தத்திற்கு இடமளிக்கிறது. பிற கூறப்பட்டது–தொழிலாளியிடம் ஒரு உற்பத்திச் சாதனமும் இல்லை என்ற உண்மை–முதலாளிக்காக அவனை வேலை செய்ய வைத்து அவனை ஒரு கூலியுழைப்பாளியாக மாற்றி விடுகிறது.

பூர்விகக் கூட்டு அமைப்பின் சிதைவு நிலையிலிருந்து

வெளிப்பட்ட எளிய பண்ட உற்பத்தி, அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ உற்பத்தி முறைகளிலும் ஒரு கீழ்படுத்தப்பட்ட இடத்தில் தொடர்ந்து இருந்துவருகிறது. அடிமையுடைமை மற்றும் நிலப்பிரபுத்துவ அமைப்பின் கீழும் தலையாய பங்கு இயற்கையான உற்பத்திக்கு உரித்தானதாக உள்ளது. மேலும் முதலாளித்துவத்தின் கீழ் பெரிய அளவிலான முதலாளித்துவ பண்ட உற்பத்திக்குத் தலையாய பங்கு உரித்தானதாக உள்ளது. இது எளிய பண்ட உற்பத்தியிலிருந்து எங்கு அவசியமாக வேறுபடுகிறதென்றால், பிற்கூறப்பட்டது தங்கள் வசமுள்ள உற்பத்திச் சாதனங்கள், உடைமையாளர்களின் சொந்த உழைப்பு, அவர்களின் குடும்ப அங்கத்தினர்களின் உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படும் போது, முதலாளித்துவ பண்ட உற்பத்தி வேறு வகையான பொருளாதார அடிப்படையின் மீது நிறைவேற்றப்படுகிறது என்பதிலேயே வேறுபடுகிறது. உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திச் சாதனங்களை இழந்து, கூலித் தொழிலாளிகளாக மாறினார்கள். உற்பத்திச் சாதனங்கள் ஒரு சில தனிப்பட்ட முதலாளிகளின் கைகளில் குவிக்கப்பட்டன. அவர்கள், எளிய பண்ட உற்பத்தியாளர்கள் செய்வது போல ஒரு சிறிய அளவில் உற்பத்தி செய்யாமல், கூலித் தொழிலாளிகளின் உழைப்பைப் பயன்படுத்தி பெரிய அளவில்—ஆலைகள், தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்களில்—உற்பத்தியை நிறைவேற்றினார்கள்.

இவ்வித்தியாசங்கள் இருப்பினும், எளிய பண்ட உற்பத்தியும் முதலாளித்துவ பண்ட உற்பத்தியும் ஒரே வகையைச் சேர்ந்தவை, ஏனெனில் இவை இரண்டும் உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமை என்ற பொருளாதார அடிப்படையின் மீது சார்ந்துள்ளன. இது

எளிய பண்ட உற்பத்தியையும் முதலாளித்துவ பண்ட உற்பத்தியையும் ஒன்றுக்கொன்று இயல்பாக்குகிறது. பண்ட உற்பத்தி விதிகளின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த அவை இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டியிடும் போது, சிறு பண்ட உற்பத்தியாளர்கள் தவிர்க்க முடியாது பிரிவுபடுகின்றனர், அவர்களில் செல்வராக்கப்பட்ட உயர்ந்தோர் குழாம் உருவாகிறது, பெரும்பான்மையோர் முற்றிலும் வீழ்ச்சியடைகின்றனர், அவர்கள் உற்பத்திச் சாதனங்களை இழக்கிறார்கள். தம் உழைப்புச் சக்தியை விற்பதே அவர்கள் உயிர் வாழ்வதற்காக அவர்களிடம் உள்ள ஒரே வழியாகும். இப்படி எளிய பண்ட உற்பத்தி தன்னியல்பாக, முதலாளித்துவத்தின் மூலக் கூறுகளைத் தோற்றுவிக்கிறது. ஆனால் சிறு உற்பத்தியாளர்களின் பிரிவுபடுத்துதல் முதலாளித்துவத்திற்குச் செல்லும் வழிகளில் ஒன்றேயாகும்.

மேற்கு ஐரோப்பாவில் **15**ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து **19**ஆம் நூற்றாண்டின் முற் பகுதி வரை நீடித்திருந்த மூலதனத்தின் ஆதித் திரட்சி முதலாளித்துவம் தோன்றுவதில் ஒரு முக்கியப் பங்காற்றியது. விவசாயிகளை நிலத்திலிருந்து வன்முறையில் பிரித்தலும் பொது நிலங்களை அடைதலும் ஆதித் திரட்சியின் சாராம்சமாகும். அடிமை வியாபாரமும், எண்ணற்ற நிலப் பிரபுத்துவ போர்களின் போது ஏற்பட்ட ஜனத்தொகையின் கொள்ளையும் கூட மூலதனத்தின் ஆதித் திரட்சியை விருத்தி செய்தன.

காலனி நாடுகளைக் கைப்பற்றுதல்களும், காலனிகளின் கொள்ளையும் மூலதனத்தின் ஆதித் திரட்சியில் ஒரு குறிப்பிட்ட தீய பங்காற்றின. காலனி ஆதிக்கமுறை ஆட்சித்தலைமை நாடுகளின் முதலாளிகளை மேலும் செல்வந்தர்களாக்குவதற்கு பெரிதும் உதவியது. காலனி

நாடுகளிலிருந்து ஏராளமான வளங்கள் ஆட்சித்தலைமை நாடுகளுக்கு தொடர்ச்சியாக ஒரு சமமதிப்பற்ற பரிவர்த் தனை மூலம் கொண்டு வரப்பட்டன. ஒரு வரிவிதித்தல் கொள்கை ஆட்சித்தலைமை நாடுகளுக்கு மிகப்பெரும் பணத்தொகைகளைக் கொண்டு வந்தது. மேலும் அவை காலனிகளின் தேசியச் செல்வத்தை தடையில்லாமல் கொள்ளையடித்தன. இச்செயல்முறைகளின் விளைபயனாக மிகத் தொன்மை நாகரீகமுடைய நாடுகளாகிய இந்தியா, எகிப்து போன்ற நாடுகள் தாங்கள் காலனி அடிமை யாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட போது தங்களை அடிமை படுத்திய தேசங்களின் (இங்கிலாந்து, பிரான்ஸ், போர்ச் சுகல்) பொருளாதார வளர்ச்சியின் நிலையிலிருந்து பெரி தும் குறைந்தவைகளாக இல்லை, ஆனால் அவை அரசி யல் ரீதியான சுதந்திரத்தைப் பெறும் போது ஆட்சித் தலைமை நாடுகளிலிருந்து மிகவும் பின்தங்கி இருந்தன. காலனி நாடுகளில் ஒன்றுகூட நவீன தொழிற் உற்பத்தி யைக் கொண்டிருக்கவில்லை, வழி மரபான, காலனி ஆதிக்கத்திற்கு முந்தைய முறைகளைப் பயன்படுத்தி விவ சாயம் நடந்தது. மேலும், அவற்றின் ஜனத்தொகையின் நபர் ஒருவருக்கான மொத்த தேசிய உற்பத்திப் பொருள் ஆட்சித்தலைமை நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் ஒரு சிறு பகுதியாக இருந்தது.

இன்று கூட, முன்னாள் காலனி நாடுகள் அரசியல் சுதந்திரத்திற்கு உயர்ந்தும், வளரும் நாடுகள் என்று அறியப்பட்ட போதும் அவை வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் சுரண்டலுக்கு ஒரு குறி இலக்காகவே தொ டர்ந்து உள்ளன, அவை முதலாளித்துவ நாடுகளின் முதலாளிகளை வளமூட்டவும், எல்லாவற்றிற்கும் மேலாக, பன்னாட்டு ஏகபோகங்கள் செல்வம் சேர்க்க வும் உதவியாயிருக்கின்றன.

## உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவ தனியுடைமையும் அதன் முக்கிய அம்சங்களும்

முதலாளித்துவ தனியுடைமை என்பது வரலாற்று பூர்வமாக, தனியுடைமையின் இறுதி, முக்கிய வடிவமாகும். முதலாளித்துவம் சிறு தொழில் உற்பத்தியை தனது பலத்தினால் அழித்தும், அதாவது மக்கள் திரளிடமிருந்து நிலம் மற்றும் உற்பத்திச் சாதனங்களைப் பறித்தும் தனது வரலாற்று பூர்வமான வளர்ச்சியைத் துவக்கியது. அதன் விளைவாக, தனிநபர் உழைப்பின் மீது ஸ்தாபிக்கப்பட்ட தனியுடைமை, கூலியுழைப்பின் சுரண்டுதல் மீது ஸ்தாபிக்கப்பட்ட முதலாளித்துவ தனியுடைமையால் நீக்கப்பட்டது.

இலாபம் முதலாளித்துவ உற்பத்தியின் நோக்கமாகும். அது இரண்டு அவசியமான நிபந்தனைகளை முன்னனுமானிக்கிறது: முதலாவதாக, சிலர் உற்பத்திச் சாதனங்களை (நெசவுத் தறிகள், நூல் நூற்கும் இயந்திரங்கள், பஞ்சு, நூல் போன்றவை) விலைக்கு வாங்க முடிபவர்களாக இருக்க வேண்டும், இரண்டாவதாக, வாழ்க்கையின் அத்தியாவசிய சாதனங்கள் பறிக்கப்பட்ட மக்களும் இருக்க வேண்டும். வேறு விதமாக கூற வேண்டுமானால், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களாக முதலாளிகளும், முதலாளிகளின் வசமுள்ள இயந்திரங்களை இயக்குவதனால் மட்டுமே ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியுமென்ற நிலையில் தொழிலாளர்களும் இருக்க வேண்டும். உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவ தனியுடைமை மூலதனத்தின் வடிவத்தைக் கொள்கிறது.

எனவே மூலதனம் என்றால் என்ன? மூலதனம் பல்வேறுபட்ட பொருட் சார்பான உருவங்களை மேற் கொள்கிறது: உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள், கட்டிடங்கள், கச்சாப் பொருட்கள், எரிபொருள் முத லியன; இது தொழில் நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட விளைப் பொருட்களின் உருவத்தையும் கொள்கிறது: இயந்திரங்கள், துணிவகைகள், சர்க்கரை முதலியவை; மேலும் ஊதியத்தைக் கொடுப்பதற்கும் அல்லது உற் பத்திச் சாதனங்களை விலைக்கு வாங்கவும் பயன்படும் பணத்தின் வடிவத்தையும் கொள்கிறது.

ஆனால், ஒவ்வொரு இயந்திரம், உபகரணத்தின் பகுதி அல்லது கட்டிடம், பணத்தின் ஒவ்வொரு தொகையும் மூலதனமல்ல. இவ்வாறாக, ஒரு விவசாயி ஒரு வீடு, ஒரு சில ஏக்கர்கள் நிலம், கால்நடை, சிறிது பணம் கொண் டிருக்கலாம், ஆனால் மற்ற சில நபருக்கு அவன் ஒரு எசமானனாக இல்லையென்றால், வேறு சொற்களில் கூற வேண்டுமாயின், அவன் கூலியுழைப்பை வேலைக் கமர்த்தவில்லையென்றால், அவனது உடைமை மூல தனமல்ல.

உபரி மதிப்பைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் போது தான் உடைமை, மூலதனம் ஆகிறது. அதாவது, உற் பத்திச் செயல்முறையில் உபரி மதிப்பை உருவாக்கும் தொழிலாளர்களை கூலிக்கமர்த்த பயன்படுத்தப்படும் போதுதான் உடைமை மூலதனமாகிறது.

முதலாளி எவ்வாறு உபரி மதிப்பைப் பெறுகிறான்? இரகசியமான கொள்ளை மூலம் என்று மார்க்ஸ் பதிலளிக் கிறார். தொழிலாளியின் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கும் போதும், அதன் மதிப்பை உழைப்பு ஊதியம் என்ற வடிவில் செலுத்தும் போதும், முதலாளி, தொழி லாளியை அவனது உழைப்புச் சக்தியின் மதிப்பை ஈடு

செய்யத் தேவையான நேரத்திற்கும் கூடுதலாக வேலை செய்ய வைப்பதன் மூலம் உபரி மதிப்பைப் பெறுகிறான். இவ்வாறு அதிகப்படியான நேரங்களில் தொழிலாளியால் உருவாக்கப்படும் மதிப்பு முதலாளியால் ஈடு செய்யப்படா மல் சுவீகரித்துக் கொள்ளப்படுகிறது. இது உபரி மதிப் பாகும். பிற் கூறப்பட்டதின் ஒரு பகுதி முதலாளியால் அவனது சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப் படுகிறது, எஞ்சியிருப்பது புதிய மூலதனமாகப் பயன்படுத் தப்படுகிறது: முதலாளி இதை தன்னிடம் முன்பே உள்ள மூலதனத்துடன் சேர்ப்பதனால் அவனால் அதிக தொழி லாளர்களை வேலைக்கு அமர்த்த முடிகிறது, மேலும் அடுத்த உற்பத்திச் சுழற்சியில் இன்னும் அதிக அளவில் உபரி மதிப்பைப் பெற முடிகிறது, இது அவனது மூல தனத்தில் முடிவில்லாத பெருக்கத்தையே குறிக்கிறது.

ஆரம்பகாலத்திய தொழில்துறை முதலாளித்துவத்தில் தொழில் நிறுவனங்களும் தொழிற்சாலைகளும் சிறிய வையாயிருந்தன. வழக்கமாக ஒரு குடும்பத்திற்கோ அல் லது பங்குதாரர்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவிற்கோ சொந்தமாயிருந்தன. ஆனால் ஒவ்வொரு புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்பும் மேலும் அதிகமான மூலதனத் தைக் கோரின, எனவே தொழில் நிறுவனங்கள் விரை வாக அளவில் வளர்ச்சியுற்றன. எந்தத் தொழில் துறையிலும் பெரிய நிறுவனங்கள் சிக்கனமானவை களாகவும் மிக வேகமாக வளர மற்றும் அதிக லாபம் அளிக்க வல்லவையாயும் இருந்த போது சிறிய நிறு வனங்கள் பல அவற்றுடன் போட்டியிட முடியாது, மூடப் பட வேண்டி இருந்தன அல்லது மேலும் சக்தி வாய்ந்த போட்டியாளர்களால் பிடுங்கப்பட்டன. அவ்வழியில் போட் டிக்குரிய போராட்டத்தில் சிறிய முதலாளிகள் பெரிய முத லாளிகளால் வெளியேற்றப்பட்டனர். மேலும் மூலதனம்

ஒரு சில தொழில் மற்றும் நிதித் துறை முக்கியஸ்தர்களின் கைகளில் மேலும் மேலும் குவிந்தது.

அது, உற்பத்தியைச் சமூகமயமாக்கல் அல்லது உற்பத்திச் செய்முறைக்குச் சமூகத் தன்மையைக் கொடுப்பது என்பதைக் குறிக்கும். சமூகமயமாக்கல், முதலாவதாக, பெரிய மற்றும் மிகப்பெரிய தொழில் நிறுவனங்களில் உற்பத்தி சென்று குவிதலைக் குறிக்கிறது, அங்கே ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைச்செய்கிறார்கள். இரண்டாவதாக, நாட்டின் பொருளாயத உற்பத்தியில் எல்லா உழைக்கும் மக்களின் உழைப்பின் பயனான விளைபொருட்கள் உண்டாகும் சமூக உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சியையும் குறிக்கிறது (இன்று, பல நாடுகளின் உழைக்கும் மக்களின் கூட்டுழைப்பின் பயன் கூட). கார் போன்ற தொழில் நுட்ப ரீதியாக சிக்கலான விளைபொருட்களின் தயாரிப்பைப் பற்றி கூறாமல், சாதாரண சுத்தியல், வாள் அல்லது ஒரு கண்ணாடி போன்ற எளிய விளைபொருட்களின் தயாரிப்பு கூட பல நிறுவனங்களையும் முடிவாக சமூக முழுமையுமே உட்படுத்துகிறது.

உண்மையில், ஒரு சுத்தியலின் உற்பத்தி ஓர் இரும்புத் தாதுச் சுரங்கம், உலோக உற்பத்தித் தொழிற்சாலைகள், இவற்றிற்கு உபகரணங்கள் வழங்கும் இயந்திரக் கட்டுமான நிறுவனங்கள், மர உற்பத்தித் தொழில்துறை, எல்லா கிளைகளுக்கும் ஆற்றல் அளிக்கும் மின் சக்தி நிலையங்கள், வேளாண்மை, மேலும் இவ்வெல்லாவற்றிலும் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கை அத்தியாவசிய பொருட்களை வழங்கும் உணவுத்துறைகள் மற்றும் சிறு பண்ட தொழிற்சாலைகள் ஆகிய எல்லா துறைகளின் ஈடுபடுத்துதலையும் கோருகிறது. உண்மையில், ஒரு மிகச் சிறிய அளவிலேயே ஆயினும், ஒரு சுத்தியல் என்பது,

நடைமுறையில் பார்க்கப் போனால், சமூக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லா உழைக்கும் மக்களின் திரளுரு ஆகும்.

அதன் விளைவாக, முதலாளித்துவம் நாட்டின் உற்பத்திச் சக்திகளை, சமூக உற்பத்தியின் எல்லா உழைப்பாளிகளின் கூட்டுழைப்பால் இயக்குவிக்கக் கூடிய ஓர் ஒத்திசைவான உற்பத்திச் சக்தியாக மாற்றுகிறது. மக்களுக்கிடையே உள்ள பரஸ்பரச் சார்புநிலை முன்பைவிட அதிகமாகவும், வலுவானதாகவும் இருக்கிறது. மேலும் அவர்களுக்கிடையேயுள்ள பிணைப்புகள், சமூக முழு அளவில் நடைபெறும் செயல்களை, ஒரு சிறிய அளவேனும் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் சார்ந்திருக்குமாறு உள்ளன.

இதற்கிடையே, சமூகம் முழுமையின் கூட்டுழைப்பால் உருவாக்கப்பட்ட விளைபொருள், சமூகம் முழுமைக்கும் உடைமையாயில்லாமல்—ஒரு சில தனிமனிதர்களின் உடைமையாக—உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களான முதலாளிகளின் உடைமையாக உள்ளது. அது, உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் சுவீகரித்தலின் தனி முதலாளித்துவ வடிவத்துக்கும் அல்லது உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ தனியுடைமைக்கும் இடையே ஆழமாக வேரூன்றியுள்ள எதிர் முரண்பாட்டினைத் தோற்றுவிக்கிறது, இம்முரண்பாடு முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடென்று அறியப்படுகிறது. இடையிடை நிகழ்கின்ற அபரிமிதமான உற்பத்தி என்ற பொருளாதார நெருக்கடி நிலைகளுக்கு இதுவே காரணமாகும், பொது நோக்குநிலையிலிருந்து பார்க்கையில் இது அபத்தமாகும். நிலப்பிரபுத்துவ சமூகத்தில் கோதுமையின் மிகுந்த மகசூல் எல்லோருக்கும் உணவு என்பதையே குறித்தது, ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் இவ்வகை மகசூல், தங்களது வேலைகளை இழந்த தொழிலாளர்

களுக்குப் பசிபட்டினி என்பதையே குறிக்கும், எனெனில் கோதுமையை விற்க முடியாது. ஆகையால் அடுத்த ஆண்டு அதன் கீழ் உள்ள நிலப்பரப்பு குறைக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிகள் என்பவை மூலதனத்தின் தேவைகளுடன் ஒப்பிடும் போது, பொருட்களின் அபரிமிதமான உற்பத்தியாகும், இது உற்பத்தியில் ஒரு வீழ்ச்சியை இன்றியமையாததாக்குகிறது, மேலும் தொழிலாளர்கள் வேலையில்லாதவர்களாக மாற்றப்படுகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் என்பது சந்தைத் தேவைகளில் இன்னும் மேலான சரிவையும், பல தொழிற்சாலைகளில் உற்பத்தியின் குறைப்பையும் குறிக்கிறது; புதிய தொழில் நிறுவனங்களோ அல்லது புதிய வேலைகளோ உருவாக்கப்படுவதில்லை, மேலும் வேலையில்லாதவர்களும் அவர்களது குடும்பங்களும் பசிபட்டினி, நோய்களாலும் துன்பப்படும் போதே, முன்பே உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்கள் அழிக்கப்படுகின்றன. எனினும் முடிவாக, பண்டங்களின் கையிருப்புச் சரக்குகள் செலவழிந்து விடுகின்றன, உற்பத்தி மறுபடியும் விரிவடையத் துவங்குகிறது, வாணிபம் பெருகுகிறது, வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது—பிறகு ஒரு சில ஆண்டுகளுக்கான "செழுமை", வெளித்தோற்றத்தில் எல்லைகளற்ற உற்பத்தியின் விரிவிற்குக் கொண்டு செல்கிறது. தேவையோடு ஒப்பிடும் போது பண்டங்கள் மறுபடியும் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்பட்டு விட்டன என்பது தெளிவாகும் வரை இந்த திடீர் வளர்ச்சி நீடிக்கிறது, பின்பு இந்த சுழற்சி மீண்டும் நடைபெறுகிறது. முதலாளித்துவத்தில் உற்பத்தி வளர்ச்சிக்கான எல்லைகளற்ற சாத்தியங்களுக்கும், (குறிப்பாக தற்போதைய விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சியின் கீழ்) உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் மட்டான சமூக இலக்கிற்கும், அதாவது லாபத்திற்கும் இடையிலான ஆழ்ந்த

முரண்பாடு காணப்படுகிறது; இதனால் பரவலான உழைக்கும் மக்கள் திரளினரின் பணம் செலுத்தும் திறனுடைய தேவை மட்டுப்படுத்தப்படுகிறது.

இந்நாளைய முதலாளித்துவம் நெருக்கடிகளை கண் மூடித்தனமான ஆயுதப் போட்டியை முடுக்கி விட்டு நெருக்கடி நிலைகளை அகற்ற முடியாவிட்டாலும் மட்டுப் படுத்தவாவது முயல்கிறது. ஆயுதப் போட்டியின் தேவை பூர்ஷ்வா அரசாங்கங்களின் தேவையாகும். இது இயல்பான பொருளாதார உற்பத்திச் செயல்முறையின் வரம்பைத் தாண்டிச் செல்கிறது. தற்போது முதலாளித்துவ நாடுகளால் பல நூறு கோடி டாலர்கள், ஏவுகணைகள், அணு ஆயுதங்கள், விமானங்கள், டாங்கிகள், போர்க் கப்பல்கள் ஆகியவற்றைத் தயாரிக்கச் செலவிடப்படுகின்றன. பொருளாதாரத்தின் நோக்குநிலையிலிருந்து அது பணம் மற்றும் உழைப்பின் வீணடிப்பாகும், ஏனெனில் குறிப்பாக யுத்த தளவாடங்கள் புனருற்பத்தியின் பொருளாதாரச் செயல்முறையில் பயன்படுத்தப்பட முடியாது. மேலும், இன்று இவை பழையவையாகின்றன, அதே நேரத்தில் புதிய, நவீன ஆயுதங்களுக்காக கோடிக்கணக்கில் அதிகம் செலவு செய்ய வேண்டியுள்ளது.

முதலாளித்துவம் அதன் நெருக்கடி நிலைகளை முற்றிலுமாக நீக்கும் வழிமுறைகளைக் கண்டுபிடிக்கா விட்டாலும் கூட, ஆயுத உற்பத்திப் போட்டியின் மூலம், அவற்றை வலுவற்றவையாகச் செய்யவும் மட்டுப்படுத்தவும் வழிமுறைகளைக் கண்டுபிடித்துள்ளது என்று முதலாளித்துவ முறையை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் அது அவ்வாறல்ல, ஆனால் அந்த முடிவு சரியானதாக இருந்தாலும் கூட அது முதலாளித்துவத்தின் மீது ஒரு மரணத் தீர்ப்பை வழங்கியிருக்கும், ஏனெ

னில் தொடர்ந்து உயிர் வாழ்வதற்காக, ஆயுதப் போட்டியின் மூலம் விளைபொருளை மிக பெரிய அளவிற்குத் தூக்கி எறியவும் அழிக்கவும் முற்படும் ஒரு சமூக அமைப்பைப் பற்றி ஒருவர் என்ன கூற முடியும்?

எனவே உபரி மதிப்பைப் பெறும் குறுகிய சுயநல இலக்கை நோக்கியும், இலாபம் பண்ணுவதற்காகவும் உற்பத்தியை முடுக்கி விடுவதன் மூலம், முதலாளித்துவ தனியுடைமை உற்பத்தி வளர்ச்சியை தடுத்து நிறுத்துகிறது, மேலும் சமூகத்தில் ஆழமான சமூக மோதல்களைத் தோற்றுவிக்கிறது.

உற்பத்தியை சமூகமயமாக்குவதினால் முதலாளித்துவம், சோஷலிசத்திற்குத் தேவையான பொருளாயத முன்நிபந்தனைகளை உருவாக்குகிறது. பெரிய நிறுவனங்களில் உற்பத்தி ஒன்றுகுவிதலின் அதிகரிப்பு, சமூக முழுமையான அளவில் உழைப்பின் கூட்டுறவு வடிவத்தின் வளர்ச்சி, ஆழமாகச் செல்லும் சமூக உழைப்புப் பிரிவினை ஆகியவை சமூகத்தின் முழுமையான சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தியை மையப்படுத்தி ஒழுங்குபடுத்துதலைக் கோருகின்றன, மேலும் சமூகம் முழுவதன் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் உற்பத்திச் சக்திகளை முடுக்கி விட வேண்டியதை அவசியமாக்குகின்றன.

பூர்ஷ்வா சித்தாந்திகள், உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ தனியுடைமை இயற்கையானது, சாசுவதமானது என்று மெய்ப்பிக்க மிகவும் கடுமையாக முயற்சி செய்கிறார்கள். அதற்காக அவர்கள் ஒரு பக்கம், "தனியுடைமை" என்ற கருதுக்கோளை "முதலாளித்துவ தனியுடைமை" என்ற கருதுக்கோளிற்காக பரிமாற்றம் செய்ய முயல்கிறார்கள், அவ்வாறு முயல்கையில் முதலாளித்

துவத்தின் அடிப்படை அம்சமான சுரண்டுதலை நீக்கப் பார்க்கிறார்கள். தனியுடைமை மனித இயற்கைக்கு ஒத்துப் போவதால் சாசுவதமானதாய் உள்ளது என்பது அவர் களது எண்ணமாகும். மறு பக்கம், இந்நாளைய முத லாளித்துவத்தின் கீழ், தொழிலாளர்கள் உட்பட சமூகத் தின் எல்லா அங்கத்தினர்களின் உடைமையாக முத லாளித்துவ உடைமை மாறி ஒரு தர மாற்றத்திற்கு ஆளாகி யுள்ளது என்று அவர்கள் வாதாடுகிறார்கள். இன்று பூர்ஷ்வா பொருளியலாளர்கள் உடைமையின் பிரச்சி னைக்குப் பதிலாக உற்பத்தியை நிர்வகிக்கும் பிரச்சினை யை வைக்க முற்படுகிறார்கள். இவ்வறாக, பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் சித்தாந்தி அ. க்ராஸ்லெண்ட் என்பவர், மிக அதிகமாகத் தொழில்மயமாக்கப்பட்ட உற்பத்தி நிலை மைகளில், உடைமை உறவுகள் தங்களது முக்கியத் துவத்தை இழந்து வருகின்றன என்று கூறுகிறார்.

"புதிய தொழிற்துறை சமுதாயம்" என்ற புனை கருத்தின் ஆசிரியரான ஜான் கே. கல்ப்ரெய்த் எழுதியபடி பெரிய கார்ப்பரேஷன்களின் மூலதனத்தின் உடைமையா ளர்கள் அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டு விட்டனர், அதே நேரத்தில் எல்லோர் நலன்களிலும் உற்பத்தியை நடத்திச் செல்லும் மேலாளர்கள் முக்கியப் பங்காற்றத் தொடங் கியுள்ளனர். அந்த "நிர்வாகப் புரட்சியின்" விளைவாக, உடைமையின் உரிமையாளர்களாக முதலாளிகள் மறை யத் தலைப்படுகிறார்கள், மேலும் பூர்ஷ்வா உடைமை சோஷலிச உடைமைக்கு பக்கமாக நெருங்கி வருகிறது என்று அவர் கூறுகிறார். அதன் அடிப்படையில் முத லாளித்துவம் படிப்படியாகத் தொழிற் சார்பான சமூ கமாக தோன்றுகிறது என்றும், பின் தொடர்ந்து, இரண்டு



5—1245

எதிர்மறையான பொருளாதார முறைகளான முதலாளித்துவம் மற்றும் சோஷலிசத்திற்கிடையே ஒரு "வெளிப்படையான கூடுகை"* நடக்கிறது என்றும் அவர் வாதிடுகிறார்.

சமூக உறவுகளையும், உடைமையையும் முற்றிலுமாக விலக்கி விட்டு, சமூக அமைப்பின் தன்மையை தொழில் நுட்ப வளர்ச்சியிலிருந்து அடைய முயற்சி செய்தலே இவ்வகை புனைகருத்துகளின் முக்கியமான குறையாகும். சோஷலிச மற்றும் முதலாளித்துவ உடைமைகளுக்கிடையே உள்ள அடிப்படையான வேறுபாட்டை—யார் சார்பாக, யார் நலன் கருதி முதலாளித்துவ மற்றும் சோஷலிச தொழில் நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன என்ற முக்கியமான கூற்றை—இவ்வகை புனைகருத்துகள் அசட்டை செய்கின்றன.

"மூலதனத்தை ஜனநாயகமாக்குதல்" என்ற ஒரு புனைகருத்து சமீபகாலமாக விரிவாகப் பரவியுள்ளது. இது, இந்நாளைய முதலாளித்துவத்தின் கீழ், முதலாளித்துவ நிறுவனங்களின் முதலீட்டுப் பங்குகளை வாங்கும் தொழிலாளர்கள் முதலாளிகளுடன் கூடவே சரிசம நிலையில் உடைமையாளர்கள் ஆகிறார்கள் என்ற கூற்றில் முடிகிறது. உண்மையில், சில தொழிலாளர்கள் முதலீட்டுப் பங்குகளை விலைக்கு வாங்கி வருகிறார்கள். ஆனால், முதலாவதாக, முதலீட்டுப் பங்குகள், பெரும்பாலும் அதிகமாக ஊதியம் பெறும் தொழிலாளர்களால், உழைக்கும் வர்க்கத்தின் உயர்ந்தோர் குழாமால் விலைக்கு வாங்கப்படுகின்றன. இரண்டாவதாக, முதலீட்டுப் பங்குகள் பெறுதல் மட்டுமே ஒரு தொழிலாளியை

* John K. Galbraith, *The New Industrial State,* Houghton Mifflin Company, Boston, 1967, pp. 6—7.

முதலாளியாக மாற்றுவதில்லை. அவனது முதலீட்டுப் பங்குகளின் மீது அவன் பெறும் வருவாய் (லாப ஈவுத் தொகை), அவன் பெறும் ஊதியத்தை விட மிக மிக அதிகமாக இருந்தால் மட்டுமே அவன் முதலாளியாக மாற முடியும், இவ்வாறு அவன் பெறும் லாப ஈவுத் தொகை அவனது வருவாயின் முக்கிய மூலமாக அமைய வேண்டும். ஆனால், இவ்வகை வாய்ப்பு ஒரு ஏமாற்றும் மாயை என்பதை ஒரு எளிய மதிப்பீடு காட்டி விடும்.

உண்மையில், ஓர் ஆண்டு ஈவுத் தொகை பத்து சதவிகிதமாக இருக்கும் போது, ஒரு தொழிலாளி முதலீட்டுப் பங்குகளைப் பெறுவதற்கு, தனது பத்து வருட மொத்த ஊதியங்களைப் பயன்படுத்தினால்தான் அவனது ஊதியத்திற்கு சரிசமமான ஈவுத் தொகை முழுமையைப் அவன் பெற முடியும். ஆனால் அது முற்றிலும் சாத்தியமற்றது ஏனென்றால், அவன் தன்னையும் தன் குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும், அவனது வீடு, உணவு, மருத்துவ வசதி ஆகியவற்றிற்காக பணம் செலுத்த வேண்டும், மேலும் வரிகள் செலுத்த வேண்டும் (இவை முதலாளித்துவ நாடுகளில் மிக அதிகமாக உள்ளன). அவை அனைத்தும், முதலீட்டுப் பங்குகள் வாங்குவதற்காக அவனிடம் ஒரு சிறிய தொகையான பணத்தையே விட்டு வைக்கின்றன. இந்நிலைமைகளில் அவனால் வாங்கப்படும் ஒரு சில பங்குகள், ஒரு கூலித் தொழிலாளியாக அவனது சமூகப் பொருளாதார படிநிலையை மாற்ற ஒன்றும் செய்வதில்லை.

அத்தியாயம் மூன்று

# உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை

## உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையைப் புரட்சிகரமாக நிலைநாட்டும் வடிவங்களும் முறைகளும்

வரலாற்று பூர்வமாக முதலாளித்துவம் தன் காலத்தைக் கடந்து விட்டது என்றும், சமூகத்தின் வளர்ச்சியில் அது ஒரு நிலையற்ற, இடைக் கட்டம் என்றும், அது சோஷலிசத்தினால் மாற்றப்பட வேண்டும் என்றும் எளிமையாக கூறுவது மட்டும் போதாது. ஏனெனில் இந்த மாறுதல் தானாகவே, பொருளாதாரச் செயல்முறையின் விளைபயனாக மட்டுமே நிகழ முடியாது. முதலாளித்துவம் கொண்டு வந்த நெருக்கடிகள் எவ்வளவுதான் அடுத்தடுத்து வந்தாலும் அவற்றின் துன்பம் எவ்வளவு பெரியதாக இருப்பினும், தண்ணீர் $0^{0}$ Cக்கு கீழே தானாகப் பனிக்கட்டியாக மாறுவது போல முதலாளித்துவம் தானாகவே சோஷலிசமாக மாறும் ஒரு நிலையை எப்போதும் அடையாது. மனித சமுதாயம் உற்பத்தியின் ஒரு முறையிலிருந்து இன்னொரு முறையை நோக்கி சமூகப் புரட்சி என்று அறியப்பட்ட மக்களின் புரட்சிகரமான நடவடிக்கைகளின் மூலமாகவே மாற முடியும்.

முதலாளித்துவம் சோஷலிசத்திற்கு மாற பொருளாயத முன்நிபந்தனைகளுடன் கூட அகநிலையான முன்நிபந்தனைகளையும் உருவாக்குகிறது. முதலாளித்துவம் தொழிலாளி வர்க்கத்தைத் தோற்றுவிக்கிறது, உற்பத்தியின் சமூகமயமாக்கல் அவ்வர்க்கத்தை ஒழுங்கமைக்கிறது, விஞ்ஞான சோஷலிசத்தின் கோட்பாடு அதை சமூகத்தின் புரட்சிகர மாற்றங்களின் ஒரு ஆற்றல் வாய்ந்த இயக்குச் சக்தியாக மாற்றுகிறது. சோஷலிசத்திற்குச் செல்லும் மாற்றம் முதலாளித்துவ தனியுடைமையின் ஒரு புரட்சிகரமான தோற்ற மாறுபாட்டை முன்னனுமானிக்கிறது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிச சமூகத்திற்குச் செல்லும் ஒரு புரட்சிகரமான மாறுதலின் தவிர்க்க முடியாமையை முதல் முதலாக கார்ல் மார்க்ஸ்தான் மெய்ப்பித்தார். ஆனால் அவரது எந்த நூலும் புதிய சமூக அமைப்பின் விரிவான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. நன்மை, தீமை, நீதி, அநீதி ஆகியவற்றைப் பற்றிய நல்லெண்ணங்கள், சிந்தனைகள் மேல் நம்பிக்கை வைத்து மட்டுமே சோஷலிச சமூகம் மற்றும் அதன் பொருளாதார முறைகளைப் பற்றி ஒரு விரிவான விளக்கத்தை அளிக்க மார்க்சின் முன்னோர்களான கற்பனாவாத சோஷலிஸ்டுகள் முயன்ற போது மார்க்ஸ் அதற்கு மாறாக தான் கண்டுபிடித்த சமூக வளர்ச்சி விதிகளை அடிப்படையாகக் கொண்டு புதிய சமூகத்தின் அடிப்படை அம்சங்கள் மற்றும் அதன் வளர்ச்சியின் முக்கியமான வழிகளை மட்டும் கோடிட்டுக் காட்டினார்.

சோஷலிச சமூகம் வரலாற்று பூர்வமான வளர்ச்சியின் ஒரு நியதியான விளைபொருளாகும். அது அதற்கு முன்பிருந்த முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படையிலிருந்துதான் வெளித்தோன்ற முடியும்.

பழைய சமூகத்திடமிருந்து பெற்றதன் அடிப்படையில் தான் உற்பத்திச் சாதனங்கள் சோஷலிச வழிகளில் சமூக மயமாக்கப்பட முடியும். பெரிய முதலாளித்துவ தொழில் நிறுவனங்களும் கான்ஸர்ன்களும் மட்டுமே, சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகும் தொழிலாளி வர்க்கத் திற்கு ஆட்சியதிகாரம் மாறிய பின்பும், அவை உள்ள வாறே சமூகத்தினால் பொறுப்பேற்றுக் கொள்ள முடியும். இவ்வகை நிறுவனங்களிலும் கான்ஸர்ன்களிலும் ஏற் கெனவே உடைமையாளர்களுக்கும் உற்பத்திச் செயல் முறைக்கும் இடையே ஒரு முழுமையான முறிவு உள்ளது, பங்குதாரர்களுக்கு அளிக்கப்படும் லாப ஈவுத் தொகை அல்லது வட்டி மட்டுமே அவர்களுக்கு இடையே உள்ள ஒரே இணைப்பாக உள்ளன. தொழிலாளர்களாலும் உழைப்பாளிகளாலும் உற்பத்தி நடத்தப்படுவதால் இவ்வகை நிறுவனங்கள் தாமதமின்றி சமூகத்திடம் ஒப்படைக்கப்பட முடியும்.

பெரிய முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் அவற் றின் முதலாளித்துவ உடைமையாளர்களிடமிருந்து இழப் பீடு கொடுக்கப்படாமல் பறிக்கப்படுகின்றன, மேலும் சோஷ லிச அரசால் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள சமூகத் திடம் ஒப்படைக்கப்படுகின்றன, அதாவது அவை தேசிய மயமாக்கப்படுகின்றன.

இழப்பீடு இல்லாமல் முதலாளித்துவ உடைமைப் பறிக் கும் சாத்தியத்தை மார்க்ஸ் தத்துவ ரீதியாகத் தனது **மூலதனத்தில்** மெய்ப்பித்தார். எந்த முதலாளித்துவ தனியுடைமையும், அதாவது எந்த மூலதனமும், அதன் தோற்றுவாய்களைக் கணக்கில் கொள்ளாமலேயே முத லாளித்துவ புனருற்பத்தியின் போது திரட்டப்பட்ட உபரி மதிப்பாக மாற்றப்படுகிறது. இது இழப்பீடு செய்யப்படாமல் முதலாளியால் சுவீகரிக்கப்படுகிறது.

உண்மையில், முதலாளியால் தொடக்கத்தில் போடப்பட்ட முதலீடு முழுவதும் அவனது சொந்த சேமிப்புகளிலிருந்து வந்தது என்று மேற்கொள்வதன் மூலம் ஐய நிலையின் சாதகத்தை முதலாளிக்கே அளிப்போம் (உண்மையில் முன்பே கூறியபடி மூலதனத்தின் ஆதித் திரட்சி எளிய பண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் காலனி நாடுகளின் கொள்ளையை உட்படுத்தி உள்ளது). எளிய புனருற்பத்தியின் கீழ், அதாவது மூலதனத்தின் தொகையில் மாறுதல்களே இல்லாத புனருற்பத்தியின் கீழ் முதலாளியால் சுவீகரிக்கப்பட்ட உபரி மதிப்பு முழுவதும் முதலாளியின் குடும்பம் மற்றும் அவனது சொந்த நுகர்வுக்காக சென்று விடுகிறது. அதன் காரணமாக, ஒரு காலகட்டத்தில் முதலாளி உற்பத்தியில் பங்கேற்காமலேயே சொந்த வருவாய் என்ற வடிவத்தில் அவனது ஆரம்ப மூலதனத்திற்குச் சமமான ஒரு உபரி மதிப்புத் தொகையை விழுங்கியிருப்பான், ஆனாலும் அதே அளவு மூலதனத் தொகையின் உடைமையாளராகவும் தொடர்ந்து இருக்கிறான். அதனால்தான் எந்த ஒரு மூலதனமும் இழப்பீடு செய்யப்படாமல் முதலாளியால் சுவீகரித்துப் பயன்படுத்தப்படும் உபரி மதிப்பின் ஒரு திரட்சி ஆகும். பொருளாதாரத்தில் புரட்சிகரமான மாறுதல்களின் போது இழப்பீடு இல்லாமல் முதலாளித்துவ உடைமையை தொழிலாளி வர்க்கம் எடுத்துக் கொள்ளும் போது அது நியாயமாகவும் உரிமையின் மூலமாகவும் அதற்குச் சொந்தமானதைத் தான் திரும்பப் பெறுகிறது. ஏனென்றால் முதலாளித்துவ உடைமை என்பது தொழிலாளர்கள் அல்லது முந்தைய தொழிலாளி வர்க்க தலைமுறைகளின் ஊதியம் கொடுக்கப்படாத உழைப்பின் விளைபயனாகும்.

ஆனால் இழப்பீடு செய்யப்படாத முதலாளித்துவ உடைமையின் பறிமுதல் மட்டுமே அதன் புரட்சிகரமான

தோற்ற மாற்றத்தின் ஒரே செயல் வகை அல்ல. குறிப் பிட்ட வரலாற்று நிலைமைகளின் கீழ் முதலாளிகளில் ஒரு பகுதியினரின் (வழக்கமாக, நடுத்தர மற்றும் சிறிய) உடைமை அதன் உரிமையாளர்களிடமிருந்து மீட்கப்பட முடியும். இவ்வகை தனியார் நிறுவனங்கள் அரசு முத லாளித்துவத்தின் பல்வேறு வடிவங்கள் மூலமாக படிப் படியாக சோஷலிச நிறுவனங்களாக மாற்றம் செய்யப் படுகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சி யின் கீழ் அல்லது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் தனியார் நிறுவனங்களைப் படிப்படியாக சோஷலிசத்திற்குக் கொண்டு வரும் மாற்றம் அரசு முத லாளித்துவத்தின் கோட்பாடு என்று லெனினால் விளக்க மாக விவரிக்கப்பட்டது. எல்லா அரசியல் அதிகாரமும் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் இருக்கும் போது, பொரு ளாதாரத்தின் தலைமையான துறைகளை தொழிலாளி வர்க்கம் பெற்றிருக்கும் போது (அதாவது தொழில் துறையில் மிக முக்கியமான உற்பத்திச் சாதனங்கள்), சோஷலிசக் கட்டுமானத்தின் நலன்களில் அரசு முத லாளித்துவம் பயன்படுத்தப்படும் போது, முதலாளித்து வத்திற்கு திரும்புவது முடியாது.

அரசு முதலாளித்துவத்தைப் பயன்படுத்திப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார அரசு பல பணிகளைச் சமாளிக் கிறது. முதலாவதாக, அரசு முதலாளித்துவம் என்பது முதலாளித்துவ தனி உடைமை நிறுவனங்களின் (நடுத் தர மற்றும் சிறிய) ஒரு பகுதியின் படிப்படியான சோஷலிச மாற்றத்தின் ஒரு வடிவமாகும். இரண்டாவ தாக, இது இந்நிறுவனங்களில் உற்பத்தியை விருத்தி அடையச் செய்யவும் உற்பத்தியை ஒழுங்கமைவு செல் வதில் முதலாளிகளின் அனுபவ அறிவை பயன்படுத்த வும். மேலும் அவர்களது நிதிநிலை வளங்களை சோஷ

லிசக் கட்டுமான நோக்கில் பயன்படுத்தவும் உதவி செய்கிறது. மூன்றாவதாக, பொருளாதாரத்தில் சிறு பண்ட உற்பத்தி ஒரு பெரும் பகுதியாக அமையும் போது (விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள்) பாட்டாளி வர்க்கத்தின் அரசால் கட்டுப்படுத்தப்படும் அரசு முதலாளித்துவ நிறுவனங்கள், முதலாளித்துவ மற்றும் சிறு பண்ட பொருளாதாரத்திற்குரிய தன்னியல்பான வளர்ச்சிப் போக்குகளுக்கெதிரான போராட்டத்தில் சோஷலிசக் கட்டுமானத்தின் நிலைகளை வலுப்படுத்த உதவுகின்றன.

முதலாளிகள் தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களைக் குத்தகைக்கு பெற்றும், சோஷலிச அரசுடன் சில பொருளாதார விஷயங்களில் ஒப்பந்தக் கையெழுத்திட்டும் அரசு முதலாளித்துவம் உயிரோடிருக்க முடியும். அரசு தனியார் கலப்பு நிறுவனங்கள், அரசு முதலாளித்துவத்தின் மிக உயர்வான அமைப்புகளாகும். இவ்வகை நிறுவனங்கள் அவற்றைப் படிப்படியாக உடைமையாளர்களிடமிருந்து மீட்பதன் மூலம் சோஷலிச நிறுவனங்களாக மாற்றப்படுகின்றன. இவ்வகை மீட்பு அரசு தனியார் கலப்பு நிறுவனம் அமைத்தலின் போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமாக முந்தைய தனியார் நிறுவனத்தின் உடைமையாளரால் பெறப்படும் இலாபத்தின் வடிவத்தைக் கொள்கிறது.

உற்பத்தியில் ஒரு பெரும் தனிப் பங்கு கொள்ளும் சிறு தொழிலதிபர்கள், சிறு வியாபாரிகள், கடைக்காரர்கள் மற்றும் சிறு விவசாயிகள் ஆகியோருக்குச் சொந்தமான உடைமையைப் பொருத்தவரை அது அரசிற்கு உடனடியாகக் கொடுக்கப்பட முடியாது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் கூட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான இவ்வகை சிறு உடைமையாளர்கள் உள்ளனர், முதலாளித்துவ வேளாண்மை மிக மோசமாக வளர்ச்சி

யடைந்துள்ள, வளரும் நாடுகளான ஆசியா, ஆப் பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா முதலிய நாடுகளில் சிறு விவசாயிகள் ஜனத் தொகையின் பெரிய அளவாக அல்லது ஒரு மிகப் பெரும் பகுதியாக அமைகிறார்கள். இத்துண்டுதுண்டாக்கப்பட்ட உற்பத்தியை மற்றும் வர்த்தக நிறுவனங்களை உடனடியாக மையப்படுத்தப்பட்ட நிர்வா கத்திற்கு மாற்றுவது நடைமுறையில் சாத்தியமற்ற தாகும். இதுதான் சிறு உடைமையாளர்களிடமிருந்து, உடைமை பறிக்கப்பட முடியாமைக்கும் அரசிற்கு அளிக் கப்பட முடியாமைக்குமான முக்கியமான பொருளாதார காரணமாகும். சிறிய அளவு தனியுடைமை உடனடியாக சோஷலிச வழிகளில் மாற்றபட முடியாமைக்கு அரசியல் காரணங்கள் உட்பட வேறு பல காரணங்களும் உள்ளன, ஏனெனில் சிறு உடைமையாளர்களின் பல சமூகப் படி நிலையினர் தொழிலாளி வர்க்கத்துடன் கூட்டு சேர்ந்து கொண்டு தங்களது பொது எதிரியான முதலாளி வர்க் கத்திற்கு எதிராகச் செயல்படுகிறார்கள்.

சிறு பண்ட உற்பத்தியாளர்களுக்கு இரண்டு ஆன்மாக் கள் இருப்பதாக லெனின் கூறினார்: ஒன்று உடைமை யாளரின் ஆன்மா, மற்றொன்று உழைப்பாளியின் ஆன்மா. உழைப்பாளிகளாகச் சிறு பண்ட உற்பத்தியாளர்கள் தொழிலாளி வர்க்கத்துடன் அடிப்படையான பொதுவான நலன்களைக் கொண்டுள்ளனர். எனவே, தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாய வர்க்கத்திற்குமிடையே ஒரு நீடித்த பொருளாதார மற்றும் அரசியல் கூட்டணி இருப் பதற்கான சாத்தியம் உள்ளது. விவசாயி வர்க்கத்திற்குப் பொருளாதார உதவி அளிப்பதன் மூலமும் கூட்டுறவு என்பது புரிந்து கொள்ள எளிமையானது மற்றும் விவ சாயிகளுக்கு அனுகூலமானது (முதலில் வழங்கீடு மற் றும் வியாபாரம், அதன் பின்பு உற்பத்தியில்) என்ற

உண்மையின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமும் சோஷலிச அரசு சோஷலிசத்தில் விவசாயியைப் படிப் படியாக இணைத்தலுக்கான உண்மையான சாத்தியங் களை உருவாக்குகிறது. இதை விரிவாக பின்னர் பார்ப் போம்.

சிறு உடைமையாளர்கள் அநேகமாக எல்லா நாடு களின் பொருளாதாரத்திலும் மிக முக்கியமான பங் காற்றுகிறார்கள். முதலாளித்துவத்தின் கீழ் இவர்கள் ஏகபோக முதலாளி வர்க்கத்தால் ஒடுக்கப்பட்டனர், இது அவர்களின் வாழ்க்கை நிலைமைகளைக் கட்டுப்படுத் தியது. அவர்களில் பெரும்பாலோர் முதலாளித்துவ மற்றும் தனித்தன்மை வாய்ந்த நோக்குகளைக் கொண் டிருந்த போதும், சோஷலிச மாற்றங்கள் அவர்களுக்கு நன்மை பயக்கும். சிறு உடைமையாளர்கள் நடை முறையில் பயனடையுமாறு இச்சமூக மாற்றங்கள் செய் யப்பட வேண்டுவது மட்டுமன்றி, அவர்கள் இம்மாற் றங்களால் தாங்கள் பயன் அடைவதை உணர்ந்து, புதிய சமூக அமைப்பின் ஆதரவாளர்களாகவும் ஆக வேண்டும்.

அது எவ்வாறு நடத்தப்பட வேண்டும்? இவ்விலக்கை நோக்கி என்ன சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்க முடியும்? விவசாய வர்க்கத்தின் கூட்டுறவு பின்பு விரிவாக ஆராயப்பட இருப்பதால், இப்பொழுது, விவசாய வர்க்கத் தின் சோஷலிச மாற்றத்தைப் பற்றி எங்கெல்ஸ் கூறி யதை மட்டும் நினைவுபடுத்திக் கொள்வோம்: “சிறு விவ சாயி சம்பந்தமாக நமது பணி என்னவென்றால், முத லில் அவரது தனியாள் உற்பத்தியையும் தனியுடைமையை யும் கூட்டுறவு உற்பத்தியாகவும் கூட்டுறவு உடைமையாக வும் மாற்றுவதுதான்; இதைப் பலாத்காரமாகச் செய் யாமல், உதாரணத்தைக் கொண்டும், இந்த நோக்கத்

திற்காகச் சமுதாய உதவியைத் தந்தும் செய்வோம்.'' *

சோவியத் யூனியன் மற்றும் சில சோஷலிச நாடுகளில் விவசாய வர்க்கத்தின் ஒத்துழைப்பிற்காக இவ்வகை ஊக்குவிப்புகள் பயன்படுத்தப்பட்டன. சோவியத் யூனியனில் வேளாண்மையின் அரசு நிறுவனங்களும் (அரசு பண்ணைகள்) இயந்திர மற்றும் டிராக்டர் நிலையங்களும், பெரிய அளவு பண்ணைத் தொழிலிலிருந்தும் நவீன இயந்திர உற்பத்தியிலிருந்தும் உற்பத்தியாளர்கள் அடையும் நன்மைகளை மெய்ப்பித்துக் காட்ட பயன்படுத்தப் பட்டன. விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட அரசு உதவி அவர்கள் தனி வேளாண்மையிலிருந்துக் கூட்டு வேளாண் மைக்குச் செல்வதை இன்னும் சுலபமாக்கியது. ஒரு பரந்த கூட்டுப் பண்ணை பல நூற்றுக்கணக்கான சிறிய பண்ணைகளின் இடத்தைக் கொண்டது; சிறு உற்பத்தி யாளர்கள் ஒன்றாக வேலை செய்ய கற்றுக்கொள்வதால், அவர்களது தனிப்பட்ட நோக்குகள் கூட்டு நோக்கு களுக்குப் படிப்படியாக இடமளித்தன. இத்தகைய ஒரு பண்ணையில் உருவாக்கக் கூடிய கல்வி சார்ந்த அமைப் பும், அன்றாட வாழ்க்கை நிலைமைகளும், வாழ்க்கைத் தரங்களில் உயர்வும் இச்செய்முறையை விரைவுபடுத்த உதவுகின்றன.

ஆகவே, உற்பத்திச் சாதனங்களின் மீது சமூக உடைமையை நிலைநாட்டுவது வரலாற்று ரீதியில் நீண்ட, சிக்கலான செயல்முறையாகும். நாட்டுடைமையாக்கலின் ஒரு சட்டபூர்வமான செயல் மூலம் உற்பத்திச் சாதனங்களை சோஷலிச அரசால் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள உழைக்கும் மக்களுக்கு மாற்றுவதுதான் அதன் அடிப்படை

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி.இ. லெனின், **கம்யூனிஸ்ட் சமூகம்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கம் 84.

அம்சமாகும். ஒரு வெற்றிகரமான சோஷலிச புரட்சியின் நிலைமைகளின் கீழ் அது எதிர்பார்க்கத்தக்க அளவு எளிதாகவும் செய்யத்தக்க அளவு சுலபமானதாகவும் உள்ளது. ஆனால் அந்த சட்டபூர்வமான செயலே பொருளாதார ரீதியில் உற்பத்திச் சாதனங்களைப் பொதுமக்கள் உடைமையாக மாற்றவில்லை.

உற்பத்திச் சாதனங்களை உண்மையாகச் சமூகமய மாக்குவதற்கு உற்பத்தியை நடைமுறையில் சமூகமய மாக்க வேண்டும். இது, உற்பத்திச் சாதனங்கள் குறித்து மக்களுக்கிடையே புதிய பொருளாதார உறவுகளின் ஓர் அமைப்பை உருவாக்குவது அவசியமாகும் என்பதைக் குறிக்கும். இவ்வகை அமைப்பு முதன்முதலாக, சமூகத் தின் எல்லா அங்கத்தினர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யுமாறு உற்பத்தியை முடுக்கி விட வேண்டும்; உற்பத் தியின் திட்டமிட்ட முறையான செயல்பாட்டை உறுதிப் படுத்த வேண்டும்; ‘‘ஒவ்வொருவரிடமிருந்தும் அவரது திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது வேலைக் கேற்ப’’ என்ற கோட்பாட்டின்படி வினியோகத்தின் ஒரு சோஷலிச அமைப்பை உருவாக்க வேண்டும்; மக்கள் திரள்களை உற்பத்தியை நிர்வகிப்பதில் ஈடுபடுத்த வேண் டும், மேலும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் மத்தியிலிருந்து சிலரைத் தெரிவு செய்து பெரிய அளவி லான சமூக உற்பத்தியை நடத்த ஆற்றலுள்ள வல்லுநர் களாகப் பயிற்றுவிக்க வேண்டும்; உழைப்பின் உற்பத்தித் திறனின் சீரான வளர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டும்; சமூகத்தின் உடல்திடமுடைய ஒவ்வொரு அங்கத்தினருக் கும் வேலை அளிக்க வேண்டும்; முதலாளித்துவத் திலிருந்து பரம்பரையாகப் பெற்ற வேலையில்லாத் திண் டாட்டத்தை ஒழிக்க வேண்டும்.

வேறு சொற்களில் கூற வேண்டுமானால் சமூக உடை

மையை நிலைநாட்டுவது என்பது புதிய சோஷலிச உற்பத்தி உறவுகளின் அமைப்பை உருவாக்குவதைக் குறிக்கும். தொழிலாளி வர்க்கம், அதன் முன்னணிப்படையான கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை வரலாற்று பூர்வமான அனுபவ அறிவு இன்றி இப்பணியை முதல் முறையாக சமாளிக்க வேண்டியுள்ளது என்பதே இந்த மிகச் சிக்கலான பணியை மேலும் கடினமாக்குகிறது. இப்பணி, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் காலகட்டத்தின் போதும், சோஷலிச சமூகத்தின் தொடக்க நிலையிலும் தீர்மானம் செய்யப்பட்டது.

ஆனால், சமூக உடைமையை நிலைநாட்ட வேண்டும், ஒவ்வொருவரிடமும் தான்தான் உற்பத்தியின் உண்மையான எஜமானன் என்ற உணர்வு உருவாக வேண்டும். இதை இரண்டு வழிகளில் அடையலாம்: முதலாவதாக, உழைப்புக் கூட்டுகளும் இவற்றின் மூலம் வேலையில் சம்பந்தப்பட்ட அனைவரும் பொருளாதார முடிவுகளை எடுப்பதில் (எந்த பொருளை, எவ்வளவு, எந்த தரத்தில் உற்பத்தி செய்ய வேண்டும், தேவையெனில் எந்த விலையை நிர்ணயிக்க வேண்டும், இன்ன பிற) பங்கேற்க வேண்டும், தம் பொருளாதார நடவடிக்கைக்குப் பொருளாதார ரீதியில் பொறுப்பேற்க வேண்டும். இப்பொருளாதார முடிவுகள் நாடு தழுவிய அளவில் மைய பொருளாதார உறுப்புகளால் ஒத்திசைவிக்கப்பட வேண்டும், நாடு பூராவிற்குமாகச் சேர்த்து திட்டமிட்ட, சீரிசைவான வளர்ச்சிக்கு வகை செய்வதன் அவசியம்தான் இதற்கு முக்கிய காரணமாகும்.

இரண்டாவதாக, ஒவ்வோர் உழைப்புக் கூட்டின், அதன் உறுப்பினர்களின் நிலையும், இவர்கள் பொது மக்களின் உற்பத்திச் சாதனங்களை எவ்வளவு சிக்கனமாக, செயல்வன்மையோடு பயன்படுத்துகின்றனர் என்பதையும்

இவர்களுடைய பொருளாதார நடவடிக்கையின் இறுதி விளைபயனையும் முழுமையாகச் சார்ந்திருக்குமாறு ஒரு பொருளாதார முறையை ஏற்படுத்துவதன் மூலம் மேற் கூறியதை அடையலாம்.

உண்மையில், உலகின் முதல் சோஷலிச சமூகத்தை உருவாக்குவது சோவியத் ருஷ்யாவிற்கு மிகவும் கடின மாக இருந்தது. பழைய முறையை திரும்பவும் நிறுவு வதற்கான முனைப்பான முயற்சியில் ஓர் உள்நாட்டுப் போர் உட்பட எல்லா வழி வகைகளையும் பயன்படுத்திய உள்நாட்டு விரோதிகளான முன்னாள் நிலக்கிழார்கள், முதலாளிகள் ஆகியோரின் வெறியூட்டப்பட்ட எதிர்ப்பை வெற்றி கொள்ள போராடும் போதே இந்த முதல் தொழிலாளர்-விவசாயி அரசு, பதினான்கு முதலாளித் துவ வல்லரசுகளின் போர்க் கோலம் கொண்ட தலை யீடுகளையும் எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது. வெற்றி பெற்றவுடன் அண்மையில் தோன்றிய சோவியத் குடியரசு அச்சம் தருகிற பொருளாதார சீர்குலைவையும், திரும்பத் திரும்ப நிகழ்ந்த பொருளாதார முற்றுகைகளையும் நாச வேலை செயல்களையும் சந்திக்க நேர்ந்தது. 1941ஆம் ஆண்டு நாஜி ஜெர்மனியின் படையெடுப்பையும் சந்திக்க வேண்டியிருந்தது, பாசிசத்தை முறியடிக்க சோவியத் யூனி யனின் 20 லட்சம் மக்களின் உயிரை விலையாகத் தர வேண்டியிருந்தது. சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்திச் செல்லப்பட்ட சோவியத் மக்கள் இவ் வெல்லா சோதனைகளையும் வென்று பெரிய சமூக மாற்றங்களையும் நிறைவேற்றினார்கள். சோஷலிச தொழில்மயமாக்கல், வேளாண்மையைக் கூட்டமைத்தல் மற்றும் கலாச்சார புரட்சியையும் நிறைவேற்றுவதன் மூலம் சோவியத் யூனியனை மிக வலிமை வாய்ந்த சோஷலிச

வல்லரசாக மாற்றி உலகின் முதல் சோஷலிச சமூகத் தைப் படைத்தார்கள்.

## உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் பொருளாதார சாராம்சம்

ஆகவே, சோஷலிசம் என்பது உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை சமூக முழுமைக்கும் சொந்தமாயிருக் கிற ஒரு சமூகமாகும்.

சமூக உடைமை தன்னைத் தெளிவாக வெளிக் காட்டுகின்ற உண்மையான பொருளாதாரச் செயல் முறைகள் யாவை, மேலும் எல்லா தொழிற்சாலைகள், நிலம், அதன் வளங்கள், போக்குவரத்து வசதிகள் முத லியவை எந்த அர்த்தத்தில் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சொந்தமாயுள்ளன? மனிதனுடைய பொருளாயத, ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியமான பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்ய மனிதனுக்கு உற்பத்திச் சாதனங்கள் தேவை. ஒரு வகை யில், சமூக உற்பத்தியின் இலக்கு, அதன் இயற்கையான நோக்கம் பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்வதாகும். உற்பத்திச் செயல்முறையில்தான்—ஏதாவதொரு உற்பத்தி நடவடிக்கையில் உற்பத்திச் சாதனங்களின் ஒரு பகு தியைப் பயன்படுத்தி—மனிதன் தன்னை உற்பத்திச் சாத னங்களின் உடைமையாளராக உணருகிறான்.

முதலாளித்துவத்தின் கீழ், கூலித்தொழிலாளி கூட, தனது உற்பத்தித் திறம் வாய்ந்த நடவடிக்கையில் உற் பத்திச் சாதனங்களை உண்மையாகப் பயன்படுத்துகிறான். ஆனால் அவன் எந்த உற்பத்திச் சாதனத்தையும் உடைமையாகப் பெறாமலிருந்தால் அவற்றை அவன் நேரடியாக அடைய முடியாமல் மறைமுகமாக மட்டுமே,

தனது உழைப்புச் சக்தியை முதலாளிக்கு விற்பதன் மூலம் மட்டுமே அவற்றை அடைய முடியும். முதலாளி அவ் வுழைப்பு தனக்கு அனுகூலமாக இருப்பின் வாங்குவான். முதலாளியின் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தி, தொழிலாளியால் உற்பத்தி செய்யப்படும் உபரி மதிப்பில் தான் முதலாளியின் அனுகூலம் அடங்கியுள்ளது, இந்த உபரி மதிப்பை முதலாளி சுவீகரித்துப் பயன்படுத்திக் கொள்கிறான்.

ஆகவே, உற்பத்திச் சாதனங்களைத் தொழிலாளி பயன்படுத்துதலின் சாத்தியம் அல்லது, பொருளாதார நிபுணர்கள் கூறுவது போல, உழைப்புச் சக்திக்கும், உற்பத்தி சாதனங்களுக்குமிடையிலான இணைப்பு முத லாளியைச் சார்ந்திருக்கிறது, அபரிமிதமான உற்பத்தி என்னும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளின் போது வெளிப்படையாகத் தெரியும் உழைப்புச் சக்தியின் கொள்வினை மற்றும் விற்பனையின் ஊடாகச் செயல்படு கிறது. இந்நிலைமைகளில் பண்டங்களை உற்பத்தி செய் வது முதலாளிக்கு இலாபமற்றதாகிறது, தொழிலாளியை வேலைக்கமர்த்துவதில்லை, எனவே ஒரு பக்கம் உற் பத்திச் சாதனங்கள் விளைபயனற்றதாக இருக்கும் போது, மறு பக்கம் நேரடி உற்பத்தியாளர் ஒரு வேலையும் இன்றி இருக்கிறார்.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை என்பது உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளிகளுக்கு நேரி டையாகக் கிட்டும் என்பதை முதன்மையாகக் குறிக்கிறது. நடைமுறையில், எந்த உடல் திடமுடைய ஒரு நபருக்கும் சோஷலிச சமூகத்தில் வேலைக்கு உத்தரவாதமுண்டு என்பதில் இது வெளிப்படுகிறது. இவ்வுத்தரவாதம் உண் மையானது, எனென்றால் "ஒவ்வோர் உடல் திடமுடைய நபருக்கும் ஒரு வேலை" என்ற கோட்பாட்டின் அடிப்

படையில், சமூகத்தில் எவ்வளவு உடல் திடமுடைய அங்கத்தினர்கள் இருக்கிறார்களோ, அவ்வளவு பணிகளைச் சமூகம் திட்டமிடுகிறது, உருவாக்குகிறது. இது தானாகவே நடப்பதில்லை, பொருளாதார திட்டமிடுதல், உடல் திடமுடைய ஜனத்தொகையின் அளவை மதிப்பிடுதல், அதற்கிணையான பணிகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் நடத்தப்படுகிறது. சோஷலிசத்தின் கீழ், உற்பத்திச் சக்தியுடன் உற்பத்திச் சாதனங்களின் இணைப்பு, சமூகத்தின் அங்கத்தினர்களாலேயே, அவர்களது பொருளாதார உறுப்புகளால் சீராக்கப்படுகிறது. சோஷலிசத்தின் கீழ், உற்பத்திச் செயல்முறையில் தொழிலாளியின் பங்கேற்பு முதலாளித்துவத்திற்கே உரித்தான பொருளாதாரத் தடைகள் எதனாலும் கட்டுப்படுத்தப்படுவதில்லை. சோஷலிச சமூகம் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலையை அளிப்பதை தன் வளர்ச்சி மற்றும் பொருளாதார நடவடிக்கையின் அதிமுக்கியமான முன்நிபந்தனையாகக் கருதுகிறது. உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் அடிப்படைத் தன்மையாக, உழைப்புச் சக்திக்கும் உற்பத்திச் சாதனங்களுக்குமுள்ள நேரிடை இணைப்பின் பொருள் இதுதான். சமூக உடைமை வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கிறது: சோஷலிசமும் வேலையில்லாத் திண்டாட்டமும் கொள்கையளவில் ஒவ்வாதவையாகும். சோவியத் யூனியனின் அரசியலமைப்பு சட்டம் ஒவ்வொரு குடிமகனின் வேலை செய்யும் உரிமைக்கும் உத்திரவாதமளிக்கிறது.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் சாராம்சத்தை வெளிப்படுத்தும் மற்றொரு உண்மையான பொருளாதாரச் செயல்முறை, அது முதன்மையாக பொது மக்கள் உடைமையாக உள்ளது என்பதாகும். உற்பத்திச் சாதனங்கள் சமூக முழுமைக்கும் சொந்தமா

யுள்ளன. மேலும் அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றவர்களுடன் சேர்ந்து, அதாவது பொதுவாக அவற்றை உடைமையாகக் கொண்டுள்ளனர். இதுதான் உற்பத்திச் சாதனங்கள் பொதுமக்கள் எல்லோராலும் சுவீகரிக்கப்படுவதன் சாராம்சமாகும், உற்பத்திச் சாதனங்களில் உடைமை என்பது பொதுமக்கள் உடைமை என்ற உண்மையின் சாராம்சமாகும்.

சோஷலிசத்தின் கீழ், உற்பத்திச் சாதனங்கள் பொதுமக்களால் சுவீகரிக்கப்படுகின்றன, ஏனெனில் இந்த சுவீகரித்தலின் பொருளாயத அடிப்படை—சோஷலிச சமூகத்தின் உற்பத்திச் சக்திகள்—சமூகம் முழுமையான அளவில் ஓர் ஒத்திசைவான உற்பத்திச் சக்தியாக, சமூக உற்பத்தியில் பங்கு கொள்ளும் அனைவரின் உழைப்பால் உந்தப்படும் ஒரு உற்பத்திச் சக்தியாக அமைகிறது. இயல்பாக, சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகள், தொழில்துறை மற்றும் வேளாண்மைத் துறையாக, அவற்றின் பல்வேறுபட்ட கிளைகளாக, பொருளாதார அலகுகளான தனித்தனியான தொழில் நிறுவனங்களாக, சுரங்கங்களாக, கூட்டு மற்றும் அரசுப் பண்ணைகளாகப் பிரிக்கப்படுகின்றன, உற்பத்தி அவற்றின் வரம்பிற்குள் உண்மையாகச் செயல்படுகிறது. எனினும் செயல்முறை அளவில், பல்வேறு நிறுவனங்களும் ஒரு தனித்த முழுமையின்—தேசியப் பொருளாதாரத்தின்—பகுதிகளாகும், இவ்வாறாகப் பொதுவாகத்தான் செயல்பட முடியும், ஒருபோதும் தனித்தனியே செயல்பட முடியாது.

சோஷலிசத்திற்கு அதன் பொது மக்கள் தன்மையை எது அளிக்கிறதென்றால், உற்பத்திச் சாதனங்கள்—அதன் பொருளாதார அடிப்படை—ஒரு தனிமனிதனுக்குச் சொந்தமாயிராமல், மக்கள் எல்லோருக்கும் பொதுவாகச் சொந்தமாயுள்ளன என்பதேயாகும். பொது மக்கள் உடைமை

யான உற்பத்திச் சாதனங்களைத் தனித்தனியான கூட்டாண்மை முறையின் கூட்டுகளுக்கு ஒப்படைப்பதற்கான எந்த திட்டமும் சோஷலிசத்தின் அடிப்படையையே அழிப்பதாகும் என்பதை இது தெளிவாக்குகிறது. இவ்வகைத் திட்டங்கள், கூட்டுறவு சோஷலிசம் என்றழைக்கப்பட்ட கொள்கையின் ஆதரவாளர்களால் முன்வைக்கப்படுகின்றன.

சோஷலிச புரட்சியால் எல்லா உற்பத்திச் சாதனங்களையும், உற்பத்தி மற்றும் விளைபொருட்களின் வினியோகத்தை நடத்தும் தொழிற் சங்கங்கள் அல்லது "தொழிலாளர்கள் கூட்டமைப்பு சங்கங்களின்" உடைமையை மாற்ற வேண்டும் என்பது போன்ற கருத்துகள், தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தில் ஒரு குட்டி முதலாளி வர்க்க சந்தர்ப்பவாத போக்கான அராஜகவாத-சிண்டிக்கலிசத்தின் சித்தாந்திகளால் ஆதரிக்கப்பட்டன. கூட்டுறவு சோஷலிசத்தின் கருத்துகளையோ, அல்லது அராஜகவாத-சிண்டிக்கலிசத்தின் கருத்துகளையோ மெய்யாக்குதல், சோஷலிசத்தின் கீழ் சமூக உடைமையின் முக்கிய வடிவமாக குழு உடைமையை ஆக்குவதற்கான ஒரு முயற்சியாக இருக்கும். பொது மக்களின் உற்பத்திச் சாதனங்களை உற்பத்திக் கூட்டுகளின் உடைமைக்கு மாற்றுதல் பொது மக்களின் ஒரு ஐக்கிய உடைமையைக் கூறு போடுதலுக்கு இட்டுச் செல்லும், ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையே செயற்கையான தடைகளை உருவாக்கும்; இது நிறுவனங்களுக்கிடையே ஒரே தொடர்பின் வடிவமாக வெறும் தன்னியல்பான சந்தைப் பரிவர்த்தனையைத் தோற்றுவிக்கும், ஒரு திட்டமிட்ட பொருளாதாரத்தை சாத்தியமற்றதாக்கிவிடும். சோஷலிசத்தின் கீழ், தனி நிறுவனங்கள் தொழில்நுட்ப அளவில் குறிப்பிடத்தக்க

அளவு வேறுபடுவதால், தனியுற்பத்திக் கூட்டுகளின் உடைமையை நிறுவுவது, அவைகளுக்கிடையே மிகுதியான அளவு ஒப்பின்மைக்கு (உயர்வு, தாழ்வு நிலைக்கு) கொண்டு செல்லும். உற்பத்திச் சாதனங்களைத் தனி நிறுவனங்களின் உடைமைக்கு மாற்றுதல், முதலாளித்துவத்தின் கீழ் அடையப்பட்ட சமூகமயமாக்கலுடன் ஒப்பிடும் போது ஒரு பின்னடைவைக் குறிக்குமென்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும், சில வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் உற்பத்திச் சக்திகளின் ஒரு பெரும் பகுதி பூர்ஷ்வா அரசிற்குச் சொந்தமாயுள்ளது.

உற்பத்திச் சாதனங்களைத் தனி உற்பத்திக் கூட்டுகளுக்கு மாற்றுதலின் ஊக்கொலி ஒரு எதிர்மறையான அரசியல் அர்த்தத்தையும் கொண்டுள்ளது: சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படையாக உற்பத்திச் சாதனங்களில் பொது மக்களின் உடைமையை அழிப்பதையும் பொருளாதார திட்டமிடலின் அனுகூலங்களை ஒழிப்பதையும், முதலாளித்துவ பொருளாதாரத்திற்கே, தன்னியல்பான சந்தை உறவுகளை சோஷலிசத்தின்கீழ் கட்டவிழ்த்து விடுதலையுமே அது இலக்காகக் கொண்டுள்ளது.

இவ்வகைத் திட்டங்களை லெனின் உறுதியோடு தள்ளி வைத்தார். "ஏதாவதொரு குறிப்பிட்ட தொழிற்சாலை அல்லது தொழிலில், அவற்றின் குறிப்பிட்ட உற்பத்தி மீதான தொழிலாளரின் உடைமை உரிமைகள் சம்பந்தமாகவோ, அல்லது அரசு அதிகார பீடத்தின் உத்தரவுகளைப் பலவீனப்படுத்தவோ அல்லது தடங்கல் செய்யவோவான உரிமைகள் சம்பந்தமாகவோ நேரடியாக அல்லது மறைமுகமாகச் சட்டம் இயற்றுவது சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அப்பட்டமாகத் திரித்துப் புரட்டுவதாகும், சோஷலிசத்தை முழுக்க

நிராகரிப்பதும் ஆகும்'' * என்று லெனின் எழுதினார்.

சமூகம் முழுதான அளவில் உற்பத்திச் சாதனங்களுடன் உழைப்புச் சக்தியின் ஒரு நேரிடையான இணைப்பை அரசுடைமை (பொது மக்கள் உடைமை) மட்டுமே உறுதிப்படுத்துகிறது.

உழைக்கும் மக்களின் பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டுவதானது சோஷலிசத்தின் கீழ் சமூக உடைமையின் சாராம்சத்தை வெளிப்படுத்தும் இன்னுமொரு உண்மையான பொருளாதாரச் செயல்முறையாகும்.

சோஷலிசம் அதன் தனிவகைப் பண்புகளினால் தனி மனிதன் சுதந்திரத்தைப் பறித்து அவனது வளர்ச்சியைத் தடுப்பதாக பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் வாதிடுகிறார்கள். சோஷலிசத்தின் கீழ் ஒவ்வொரு குடிமகனின் வேலை மற்றும் வாழ்க்கைத் தொழிலைத் தேர்வு செய்யும் உரிமை உட்பட ஒவ்வொரு குடிமகனின் வேலை செய்வதற்கான உரிமையைப் பற்றி ஒரு திரித்துக் கூறப்பட்ட விளக்கத்தை அவர்கள் அளிக்கிறார்கள்.

இவ்வாறாக, கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய ஆராய்ச்சிக் கல்வி நிலையத்தின் இயக்குநரான அலக் நோவ் பொது அரசுடைமையின் இருத்தலின் உண்மை மட்டுமே உழைக்கும் நபரின் வாழ்க்கை அந்தஸ்தில் எவ்விதமான குறிப்பிடத்தக்க வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை என்றும் உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையை நீக்குதல் தனிமனிதர்களின் சமூக பொருளாதார சமத்துவ நிலைக்கு இட்டுச் செல்லவில்லை என்றும் எழுதுகிறார். **

* வி. இ. லெனின், **தொழிலாளர் கண்காணிப்பும் தொழிற்துறையின் தேசவுடைமையாக்கமும்,** மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 252.

** A. Nove, *The Soviet Economic System,* London, 1977, pp. 228, 336, 339 பார்க்க.

உண்மையில் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமைதான் குறிப்பாக, உழைப்புச் சக்தியுடன் உற்பத்திச் சாதனங்களின் ஒரு நேரிடை இணைப்புதான் உற்பத்திச் சாதனங்கள் சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களுக்கும் சமமாக கிட்டும் உரிமையை அளிக்கிறது. மேலும், மனிதனை மனிதன் சுரண்டுதலை நீக்குகிறது. உழைக்கும் மக்கள் தங்களது திறமைகளுக்கேற்றவாறு வேலை செய்யும் ஒரு வாய்ப்பைப் பெறுகிறார்கள். அவ்வர்த்தத்தில் அவர்களது சமூகப் பொருளாதார நிலைகள் சரிசமமாக இருக்கின்றன. சமூகத்தின் உற்பத்திப் பொருட்கள் முழுவதும் அவர்களுக்கு மட்டுமே சொந்தமாக உள்ளன.

சோஷலிச சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தனது திறமைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப ஒரு வேலையைத் தேர்ந்தெடுக்க முடியும். சமூக உடைமையை அடிப்படியாகக் கொண்ட உற்பத்தியில் பங்கு கொள்பவர்களாக சோஷலிச சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களும் பொருளாதார ரீதியில் சமமானவர்களாவர். ஒரே தொழிற்துறையின் பல தொழில் நிறுவனங்களின் வேறுபட்ட தொழில்நுட்ப மட்டங்களைக் கருத்தில் கொண்டு சோஷலிச சமூகம் பல்வேறு நிறுவனங்களின் தொழில்நுட்ப மட்டத்திற்கேற்ப வேறுபட்ட இலக்களவுகளை நிர்ணயிப்பதின் மூலம் ''சரிசமமான வேலைக்கு சரிசமமான ஊதியம்'' என்ற சோஷலிசத்தின் ஊதியக் கோட்பாட்டைச் செயல்படுத்துகிறது.

வரலாற்றிலேயே முதன் முறையாக, உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை, உழைக்கும் மக்களின் பொருளாதார சமத்துவத்தை வலியுறுத்தியதன் மூலம், சமூக உற்பத்தியில் அக்கறை கொண்டுள்ள, பொரு

ளாதார ரீதியில் சுதந்திரமான ஓர் உழைக்கும் தனி மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு வேண்டிய நிலைமைகளை உருவாக்குகிறது. அதே நேரத்தில், சமூக உடைமையின் ஆதிக்கம் வரலாற்று முக்கியத்துவமுடைய அப்பணியை, அது உற்பத்திச் சக்திகளின் சமூகத் தன்மையுடன் இயைந்து இருப்பதால், அப்பணியை நிறைவேற்றுதலை உறுதி செய்கிறது.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் அடிப்படைப் பொருளாதார அம்சங்கள்—உற்பத்திச் சாதனங்களுடன் உழைக்கும் நபரின் நேரிடைத் தொடர்பு, பொதுமக்களால் உற்பத்திச் சாதனங்கள் சுவீகரிக்கப்படுதல், மேலும் எல்லா உழைக்கும் மக்களின் பொருளாதார சமத்துவ நிலை முதலியன—கம்யூனிச அமைப்பின் இரண்டு கட்டங்களான சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தில் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் தனிச்சிறப்புப் பண்புகளாகும். இவ்வம்சங்கள் ஒவ்வொரு சோஷலிச நாட்டின் சமூக உடைமையின் தனிச் சிறப்புப் பண்புகளாகும்.

அதே நேரத்தில், கம்யூனிச உற்பத்தி முறையின் ஆரம்ப கட்டமான சோஷலிசத்தின் தனித்தன்மைகளினால் வரையறுக்கப்படும் சோஷலிச உடைமைக்கு பல தனி அம்சங்கள் உள்ளன, அதாவது கம்யூனிசத்துடன் ஒப்பிடும் போது உற்பத்திச் சக்திகளின் குறைந்த அளவு வளர்ச்சி, பழைய சமூக உழைப்புப் பிரிவினையின் மிச்சசொச்சங்கள் இருத்தல் (உடலுழைப்பிற்கும் மூளையுழைப்பிற்கும் இடையிலும் கடும் உழைப்பிற்கும் எளிய உழைப்பிற்கும் இடையிலும் பயிற்சித் திறமையுள்ள உழைப்பிற்கும் பயிற்சித் திறமையற்ற உழைப்பிற்கும் இடையிலும் உள்ள அடிப்படை வேறுபாடுகள்,) மேலும் வேலை செய்வது என்பது ஆரோக்கியமான மனித

தேவை என்பதை விட உயிர்வாழத் தேவையான அத்தியாவசியமான வழிமுறை என்ற மனப்போக்கு ஆகிய தனிப்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

இச்சிறப்பு அம்சங்கள், உற்பத்திச் சாதனங்களின் மீதான பொது உடைமை மட்டும்தான் உடைமையின் ஒரே ஒரு வடிவம் அல்ல என்ற உண்மையில் தங்களைத் தெளிவாகக் காட்டுகின்றன. நாம் முன்பே கண்டது போல, சோஷலிசத்தின் வரலாற்றுச் சார்பான தனித்தன்மை என்னவென்றால், பொருளாதாரத்தின் புரட்சிகரமான மாறுதல்களின் போது உற்பத்திச் சாதனங்களைச் சமூகமயமாக்குதலின் இரண்டு வடிவங்களான பொது மக்கள் உடைமை மற்றும் கூட்டுப் பண்ணைக்-கூட்டுறவு உடைமையின் வெளித்தோன்றல் மற்றும் வளர்ச்சியாகும்.

உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையின் இவ்விரு வடிவங்களைப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

### உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையும் சோஷலிச பொருளாதார நடவடிக்கையின் முக்கிய அம்சங்களும்

அடிப்படை உற்பத்திச் சாதனங்களைச் சமூகம் முழுமையின் உடைமையாக மாற்றுதலும், அதன் காரணமாக சமூக உடைமைதான் தலையாய வடிவம் என்று நிலைநாட்டுவதும் புதிய சமூகத்தை நோக்கிச் செல்லும் முதல் அடியாகும்.

மக்கள் அனைவரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் உற்பத்திச் சக்திகளின் திட்ட

மிட்ட வளர்ச்சியை ஒழுங்கமைப்பது அடுத்த நடவடிக்கை யாகும்.

பொதுவாகக் கூறினால் உற்பத்தி என்பது எப்போதுமே சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டதாகும். தேவைகளைப் பூர்த்தி செய்யும் இன்றியமையாமைதான் உற்பத்தியைத் தோற்றுவிக்கிறது. அதே பொழுது உற்பத்திச் செயல்முறை என்பது உடைமையின் உரிமையாளர்கள் உற்பத்திச் சாதனங்களின் மீது உடைமையை நிலைநாட்டும் பொருளாதார முறையாகும். இவ்வாறாக, நிலப்பிரபு அல்லது நிலக்கிழார் நிலவாடகை பெறுவதன் மூலம் நிலத்தில் தன்னுடைய உடைமையைப் பொருளாதார ரீதியில் நடைமுறைப்படுத்துகிறான். முதலாளி தன் சொந்த நுகர்வுக்கும் தனக்குச் சொந்தமான மூலதனத்தைப் பெருக்கவும் உதவும் உபரி மதிப்பைப் பெறுவதன் மூலம் உற்பத்திச் சாதனங்களின் மீது தன்னுடைய உடைமையை நடைமுறைப்படுத்துகிறான்.

சோஷலிசத்தின் கீழ், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர் அதே நேரத்தில் அவ்வுற்பத்திச் சாதனங்களை இயக்கும் நபராகவும் இருக்கிறார். எனவே உடைமையின் உரிமையாளரும் உழைக்கும் நபரும் ஒரே தனிமனிதன் தான். அதில் எதும் புதுமை இல்லை என்று கூறலாம், ஏனெனில் விவசாயி கூட தனக்குச் சொந்தமான உற்பத்திச் சாதனங்களை உடைமையாகப் பெற்று அதே நேரத்தில் அவற்றை இயக்கவும் செய்கிறான். ஆனால் சோஷலிச சமூகத்தின் அங்கத்தினர் ஒருவர், ஒரு சிறு உற்பத்தியாளரிடமிருந்து—ஒரு விவசாயி அல்லது கைவினைஞனிடமிருந்து—தவிர்க்க முடியாதபடி வேறுபாடுகிறார். ஏனெனில் அவர் சமூக உற்பத்திச் சாதனங்களைச் சமூகத்தின் மற்ற எல்லா அங்கத்தினர்களுடன் சேர்ந்து உடைமை

யாகப் பெற்றுள்ளார், சமூக உற்பத்திச் சாதனங்களை மற்றவர்களுடன் சேர்ந்து இயக்குகிறார்.

எனவேதான் சோஷலிசத்தின் கீழ் உற்பத்தியின் சமூக இலக்கு, அதாவது உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ் உற்பத்திச் சக்தியின் வளர்ச்சி யின் இலக்கு, சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களின் முடிவின்றி பெருகிவரும் தேவைகளைச் சாத்தியமான முழுமையில் பூர்த்தி செய்வதாகும், மக்களின் நலனை மேம்படுத்துவதாகும்.

ஆனால் அது விஷயத்தின் ஒரே ஒரு வெறும் பொரு ளாயத பக்கமாகும். அதன் மற்றொரு மிக முக்கியமான பக்கமென்னவென்றால், தேவைகளைச் சாத்தியமான, முழுமையான அளவில் பூர்த்தி செய்தலே சமூகத்தின் ஒவ் வொரு அங்கத்தினரின் முழுமையான மற்றும் கட்டுப் பாடற்ற வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குவது என்பதாகும். சமூகம் முழுமையாலும் உற்பத்திக் கூட்டாக நடத்தப்படுவது முற்றிலும் புதிய தனிமனிதர்களை உரு வாக்கும் என்றும், அது உற்பத்தியின் முழு அமைப்பை புரிந்து கொள்ளும் ஆற்றலுள்ள, பல துறைப் பயிற்சித் திறன் வாய்ந்த நபர்களை உருவாக்கும் என்றும் எங் கெல்ஸ் கோடிட்டுக் காட்டினார்.

சோஷலிசத்தின் கீழ், தேவைகளைப் பூர்த்தி செய் தலை அளப்பதற்கான அளவுகோல் ஏதேனும் உள்ளதா என்று கேட்கலாம். ஆம், உள்ளது. உற்பத்தியின் சமூக உறவுகளின் சாராம்சமே இன்றியமையாத மனிதத் தேவைகளை விவேகமாகப் பூர்த்திசெய்தலைக் கோருகிறது. ஆனால் தேவைகளை இப்படி விவேகமாகப் பூர்த்தி செய் தல் எதைக் குறிக்கிறது? அவற்றின் தேவைத் தீர்வுக்கு ஏதாவது புறநிலையான அளவுகோல் உள்ளதா? அல்லது இது வெறும் அகநிலையான கருதுக்கோளா? மார்க்சியம்

இவ்வினாக்களுக்கு ஓர் எளிய பதிலை அளிக்கிறது: ஆம், இவ்வகையான புறநிலை அளவுகோல் உள்ளது.

மக்கள் அவற்றை உணர்ந்திருந்த போதிலும் கூட மனிதத் தேவைகள் அகநிலையானவை மட்டுமல்ல. அறியப்பட்ட தேவைகள் என்பவை தனிமனிதனின், கூட்டின், மேலும் சமூகத்தின் பொருளாதார நலனைக் குறிப்பதாகும். தேவைகள் உடற்கூற்றை மட்டும் சார்ந்து இருக்கவில்லை. அவை சமூக வாழ்க்கையைச் சார்ந்துள்ளன; அவை சமூகத்தின் வளர்ச்சி நிலையின் அளவால் கட்டுப்படுத்தப்படுகின்றன, அதனால் பிறப்பிக்கப்படுகின்றன. தகரப் பெட்டிகளில் அடைக்கப்பட்ட உணவு, அல்லது வானொலி மற்றும் தொலைக்காட்சிப்பெட்டிகள், அல்லது கார்களின் தேவைகள் உற்பத்தியின் வளர்ச்சியின் விளைபயனாகும். பல்வேறு சகாப்தங்களிலும் நாடுகளிலும் மனிதத் தேவைகள் ஒரே மாதிரியானவையாக இல்லை. ஏனென்றால் அவை வரலாற்று பூர்வமாக வரையறுக்கப்படுகின்றன. தேவைகள் என்பதன் மூலம் நாம் இங்கு, முடியாத ஒரு பொருள் வேண்டும் அல்லது மற்றவர்களது உழைப்பின் மேல் ஒட்டுண்ணியாக இருக்க முயற்சி செய்யும் ஒரு சில தனிமனிதர்களின் கோரிக்கைகளைக் குறிப்பிடவில்லை. சமூக பூர்வமாக வளர்ச்சி அடைந்த, பண்பட்ட மக்களின் விவேகமான தேவைகளை, சமூக உற்பத்தி வளர்ச்சியின் அளவிற்கு ஒத்திசைவான தேவைகளையே இங்கு நாம் தேவைகள் என்று குறிப்பிடுகிறோம்.

சோஷலிச சமூகத்தின் வளர்ச்சியின் ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் மனிதத் தேவைகள் என்பவைச் சாதாரணமாக அல்லது முழுமையாக பூர்த்தி செய்யப்பட முடியும், எப்பொழுது என்றால் ஒரு பக்கம் உற்பத்திச் செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களின் அளவு தனிமனி

தனின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான பொருட்களின் அளவை ஒத்திருக்கும் போதும், மேலும் மறு பக்கம் இது நாள்வரை அடையப்பட்ட உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலையால் அனுமதிக்கப்பட்டால் மட்டுமே மனிதத் தேவைகள் முழுவதுமாக பூர்த்தி செய்யப்பட முடியும். வேறு சொற்களில் கூற வேண்டுமானால் தேவைகளை முழுவதுமாக அல்லது சாதாரணமாக பூர்த்தி செய்வதன் அளவுகோல் சமூக உற்பத்தியின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியளவில் இருக்கிறது. உண்மையில், சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கு அடுத்த நாளே தேவையுடன் பொருந்துகிற ஓர் உற்பத்திப் பொருளை சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் விளைவித்து அளிக்குமாறு எதிர்பார்த்தலியலாது. ஏனென்றால் அது, ஒரு பக்கம் உடனடியாக எல்லா மக்களும் ஒவ்வொரு வகையிலும் தங்களது திறமைகளை உண்மையாக மேம்படுத்த உதவும் வகையில் சமூக உற்பத்தியின் வளர்ச்சி அளவை சோஷலிசம் முதலாளித்துவத்திலிருந்து பரம்பரையாகப் பெறவில்லை. மறு பக்கம், அது முதலாளித்துவத்திலிருந்து கடந்த கால தனியுடைமை சார்ந்த எச்சங்களை உரிமையாகப் பெற்றுள்ளது. இவைகளைத் தவிர்த்தலன்றி சோஷலிச சமூகத்தின் அங்கத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் அசாத்தியமானதாகும்.

இவையெல்லாம், கம்யூனிசத்தின் முதல் கட்டமான சோஷலிசத்தின் கீழ் குடிமக்களின் தேவைகளைச் சமூக உற்பத்தியில் அவர்களின் உழைப்பின் அளவு மற்றும் தரத்திற்கேற்ப பூர்த்தி செய்தலின் கிரமப்படுத்தலை அவசியமாக்குகிறது.

சோஷலிசத்தின் தொடக்க கட்டத்தில் எல்லா அங்கத்தினர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவு மிக உயர்ந்த நிலையில் சமூகம் இல்லை. சமூகமானது

ஒவ்வொரு தனிமனிதனின் வேலை செய்யும் தேவையைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒரேயடியாக ஒழித்து விடுகிறது. கல்வியும் மருத்துவவுதவியும் எல்லா குடிமக்களும் எளிதில் பெறுமாறும் அதிக அளவில் பெறுமாறும் இருக்கின்றன.

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கைத் தேவைகள் சமூக உற்பத்தியில் அவனது உழைப்பின் அளவு மற்றும் தரத்திக்கேற்றவாறு பூர்த்தி செய்யப்படுகின்றன.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை, சமூக உற்பத்தி இயக்கத்தில் ஒரு புதிய முறையையும் தோற்றுவிக்கிறது: எல்லா பொருளாதாரச் செயல்முறைகளின் ஒரு திட்டமிட்ட செயல்பாட்டையும் தோற்றுவிக்கிறது.

சமூக உடைமை நிலைநாட்டப்படுவதானது தேசியப் பொருளாதாரம் முழுவதையும் பொருளாதார ரீதியில் ஓர் ஒத்திசைவான கூட்டிணைப்பமைப்பாக, ஒரு தனித்த முழுமையாக மாற்றுகிறது. தேசியப் பொருளாதாரம் சமூக உழைப்புப் பிரிவினையால் உற்பத்தியின் எண்ணற்ற கிளைகளாகவும், ஆயிரக்கணக்கான தொழில் நிறுவனங்களாகவும், வீடு கட்டும் இடங்களாகவும், போக்குவரத்து நிறுவனங்களாகவும் பகுக்கப்படுகிறது. ஆனால் இவையாவும் பொதுமக்கள் எல்லோராலும் சுவீகரிக்கப்படும் பொருளாக உள்ள போது, தேசியப் பொருளாதாரம் உண்மையில் லெனின் கூறியது போல ஒரு தனிமுழுமையான அலுவலகம், ஒரு தனிமுழுமையான தொழிற்சாலையாக அமைகிறது. *

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1980, பக்கம் 157 பார்க்க.

சோஷலிச சமூக உற்பத்தி, சோஷலிச சமூகத்தின் உழைக்கும் மக்களின் சமூக உழைப்பு சமூகம் முழுமை யான அளவில் பொருளாதார நடவடிக்கைகளை ஒத்திசை விப்பதை சாத்தியமாக்குகிறது, அவசியமாக்குகிறது. சமூகம் முழுமையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உற்பத் தியை உட்படுத்துதல், ஒத்திசைவான ஒரு பொருளாதார நடவடிக்கையின் ஒரு அவசியமான நிபந்தனையாகும்.

திட்டமிட்ட வளர்ச்சிக்கு ஒப்பான, ஒத்திசைவான பொரு ளாதார நடவடிக்கையின் சாராம்சம், சமூகத்தின் உறுப் பினர்கள் சமூக விளைபொருளின் உற்பத்தி, வினி யோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வை தனிமனி தனின் தேவைகளை சாத்தியமான முழு அளவில் பூர்த்தி செய்யும் அவசியத்திற்கேற்ப மற்றும் அவனது முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் அவசியத் திற்கேற்ப சீராக்குகிறார்கள் என்பதையே குறிக்கிறது.

பொருளாதாரத்தின் ஒத்திசைவான திட்டமிட்ட நிர் வாகம் என்பது முதலில் உற்பத்திச் சாதனங்கள், சமூக உழைப்பு மற்றும் விளைபயனான உற்பத்திப் பொருள் ஆகியவற்றை தேசிய பொருளாதாரத்தின் பல்வேறு கிளை கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கிடையே வினி யோகித்தலையும், நாட்டின் பல்வேறு பொருளாதார நிலப் பரப்புகளிடையே வினியோகித்தலையும், சமூக விளை பொருளின் இயக்கத்தின் பல்வேறு கட்டங்களான உற் பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு இவற்றிடையே வினியோகித்தலையுமே மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. இது தகவுப் பொருத்தங்களை நிறுவுதல் மற்றும் பேணுதலைக் குறிக்கும். அதாவது ஒரு பக்கம், சமூகத் தேவைகளின் அளவு மற்றும் கட்டமைப்புக்கும், மற்றொரு பக்கம், விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி களுக்கேற்ப உற்பத்தி மற்றும் உழைப்புச் சாதனங்களை

தேசிய பொருளாதாரத்தின் கிளைகள் மற்றும் துறை களுக்குமிடையே வினியோகித்தலுக்கும் இடையே உள்ள குறிப்பிட்ட அளவு சார்ந்த உறவுகளை நிறுவுதல், பேணு தலைக் குறிக்கும். இரண்டாவதாக, உற்பத்தி உறவு களின் வளர்ச்சி உட்பட எல்லா பொருளாதாரச் செயல் முறைகளும் திட்டமிட்டவைகளாக இருக்கின்றன. சமூகம், தன் நடவடிக்கைகளின் விளைவுகளை உற்பத் தியிலும் சமூக வாழ்க்கையிலும் முன்னறிகிறது, இம் முன்னறியப்பட்ட விளைவுகளும் உண்மையான விளைவு களும் ஒத்திசைகின்றன, அதனால் சமூகம் தன்னுடைய செயல்களைக் கட்டுப்படுத்துகிறது.

திட்டமிட்ட பொருளாதார ஒழுங்கமைப்பானது நாடு தழுவிய ஐக்கிய பொருளாதார மையத்தை முன்னனு மாணிக்கிறது. இது சோவியத் யூனியனில் அரசுத் திட்டக் குழுவாக **(State Planning Committee)** உள்ளது. சமூக உற்பத்தியில் பங்கு கொள்பவர்களின் நடவடிக்கைகளை ஒத்திசைவிப்பது இதன் செயல்பாடாகும். அரசுத் திட்டக் குழுவின் பக்க துணையாக வட்டாரங்களில், சோவியத் குடியரசுகளில், பொருளாதாரப் பிரதேசங்களில், அமைச் சரவைகளில், இலாக்காக்களில் முடிவாக, தொழில் நிறு வனங்களில் திட்டக் குழுக்களின் கிளைகளாக்கப்பட்ட ஒரு வலையமைப்பு உள்ளது.

தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிடுதல், திட்ட மிட்டமுறையான வளர்ச்சியின் ஒரு வடிவமாகும். இவ் வகைப் பொருளாதார திட்டமிடுதல், சோஷலிச சமூகத்தின், அதன் மத்திய திட்டக் குழுக்களின், சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களின் உணர்வு பூர்வமான செயலாகும், இது எதிர் காலத்தின் பொருளாதாரப் பணிகளை விஞ் ஞான ரீதியாக மெய்ப்பித்தலை நோக்கமாகக் கொண்டது. இந்நடவடிக்கை, குறிப்பிட்ட காலத்திற்கான பொருளா

தார, சமூக வளர்ச்சியின் திட்டங்களை தயாரித்தல், உரு வரைத் தீட்டுதலுக்கொப்பாகும். அதே பொழுது, திட்ட மிடுதல் என்பது ஒரு உண்மையான பொருளாதாரச் செயல் முறையாகும், இது திட்டகுறியிலக்குகளை அடை வதற்காகச் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களின் நடை முறைச் செயல்பாடு இதிலடங்கும்.

திட்டமிடுதல் என்பது சமூகத் தேவைகளை அடையாளம் கண்டுணர்வதிலிருந்து துவங்குகிறது, பின்பு வரவிருக்கிற திட்ட காலத்தில் இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற் கான சாத்தியக் கூறுகளை அடையாளங்கண்டுணர்கிறது. அடையாளங்கண்டுணரப்பட்ட தேவைகளை, அவற்றைப் பூர்த்தி செய்தலின் சாத்தியக் கூறுகளுடன் ஒப்பிடுவதன் அடிப்படையில், திட்டக் குழுக்கள் குறிப்பிட்ட காலத்தில் இயன்ற அளவு பூர்த்தி செய்ய இயலும் தேவைகளைத் தேர்வு செய்கின்றன, பகுதியளவாக மட்டுமே பூர்த்தி செய் யப்பட முடியும் தேவைகளை (அவற்றின் பூர்த்தி செய் தலின் மெய்யான அளவைக் குறிப்பிடுகிறது) மற்றும் தொடர்ந்து வருகிற திட்டகாலங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளையும் முடிவு செய்கின்றன. தேவை களின் இவ்வகை முடிவு மற்றும் படித்தர வரிசை ஒழுங் கில் முடிவுக் கருத்து, அரசிடம் மட்டும் இருப்பதில்லை, தொழிற்சங்கங்கள், இளம் கம்யூனிஸ்ட் சங்கம் போன்ற சமூக அமைப்புகளிடமும் உள்ளது.

திட்டமிடுதல், ஜனநாயக மையப்படுத்தல் கொள்கை யின் மீது அமைந்துள்ளது. இது மைய மற்றும் அடி மட்டத் திட்டக் குழுக்களும் திட்டத்தை தீட்டுவதில் சேர்ந்து பங்கு கொள்கின்றன என்பதைக் குறிக்கிறது. நகல் திட்டங் கள் விவாதங்களுக்காக முன்வைக்கப்படுகின்றன. உழைக் கும் மக்களின் கூட்டுகளில் வெளிப்படையாக விவாதிக் கப்படுகின்றன. இவ்விவாதங்களின் போது முன்வரும்

பிரேரணைகள், நகல் திட்டங்களைத் திருத்துவதற்கு உதவுகின்றன. பின்பு அவற்றிற்கு அரசின் மிக உயர்ந்த சட்டமியற்றும் குழுக்களினால் (சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தால்) அனுமதி அளிக்கப்படுகின்றது. பின்பு, அவை அரசுச் சட்டங்களாகின்றன.

திட்டங்களை விஞ்ஞான ரீதியாக மெய்ப்பித்தல் மிகவும் முக்கியமாகும். புறநிலையான பொருளாதாரச் சட்டங்கள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் போக்குகள், சமூக மற்றும் இயற்கை விஞ்ஞானங்களின் சாதனைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்டத்தை தீட்டுவதின் அவசியத்தில் இது அடங்கும்.

பொருளாதார வளர்ச்சியின் நல்வாய்ப்புகளை வெளிப்படுத்துதல், உற்பத்தி வளர்ச்சியின் நீண்டகாலப் பின்விளைவுகளை விஞ்ஞான ரீதியில் முன்னறிதல், அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சமூக உற்பத்தி மற்றும் வினியோகத்தில் பங்கு கொள்ளும் கோடிக் கணக்கான மக்களின் நடவடிக்கைகளை திட்டமிட்டு நிலைப்படுத்துதல், ஒத்திசைவித்தல் ஆகியவை திட்டமிடுதலின் மிக முக்கியமான செயல்பாடாகும். எனவேதான் திட்டங்கள் பல்வேறு வகையான கால வரையறைகளைக் கொண்டவைகளாக இருக்கின்றன. சோவியத் யூனியனில் ‘‘1986 – 1990ஆம் ஆண்டுகளுக்கும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசையமைவுகள்’’ சமூகத்தின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் ஐந்தாண்டு திட்டங்கள் மற்றும் வருடாந்திர திட்டங்கள் இத்தகைய திட்டங்களாகும்.

அத்தியாயம் நான்கு

# உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ் உழைக்கும் மக்களுக்கிடையே நுகர்வுப் பொருட்களின் வினியோகம்

## சோஷலிசத்தின் கீழ் உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் உள்ள தொடர்பு

நாம் முன்பே பார்த்தபடி, சமூக உடைமையின் கீழ் சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களும் உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தமட்டில் சமமானவர்களாக இருக்கின்றனர், மனிதனை மனிதன் சுரண்டுதல் முழுவதுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. இவ்வாறாக, உழைப்பின் எல்லா விளைபொருட்களும் பொதுச் சொத்தின் பகுதியாக உள்ளன. இவை உற்பத்தியின் வளர்ச்சிக்காகவும் (உற்பத்திக்கான நுகர்வு) உழைக்கும் மக்களின் மற்றும் சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களின் தனிநபர் நுகர்வுக்காகவும் ஒரு திட்டமிட்ட வழியில் வினியோகிக்கப்படுகின்றன, பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ், தனிநபர் நுகர்வுக்காக பொருள் மதிப்புகள் எந்த விதிகளின் அடிப்படையில் வினியோகிக்கப்படுகின்றன?

நாம் முன்பே பார்த்தபடி, வினியோகத்தின் தன்மை, சாராம்சம் மற்றும் வடிவங்கள் உற்பத்திச் செயல்முறையின் பொருளாதார உறவுகளால் தீர்மானிக்கப்படுகின்றன. ஆகவே நுகர்வுப் பொருட்கள், அவை உற்

பத்தி செய்யப்பட்ட பின்புதான் வினியோகிக்கப்பட முடியும். அவ்விளைபொருளில் தனிப்பட்ட உழைக்கும் மக்கள், மற்றும் பல்வகை சமூகக் குழுக்களின் பங்கை வினியோகம் தீர்மானிக்கிறது. வேறு சொற்களில் கூற வேண்டுமானால், இது, ஒவ்வொரு குறிப்பிட்ட உழைக்கும் நபரும் விளைபொருளில் பெறும் பங்கின் அளவை நிர்ணயிக்கிறது.

வினியோகம் என்பது சமூக புனருற்பத்தியின் கட்டங்களில் ஒன்றாகும். உற்பத்தி மற்றும் நுகர்வைப் பிணைக்கும் ஒரு தொடர்பாகும். எனவேதான் நுகர்வுப் பொருட்களின் வினியோகம், சமூக உற்பத்தியில் பங்கு கொள்ளுபவர்களுக்கிடையே உற்பத்திச் சாதனங்களை பகிர்ந்தளிப்பதால் முன்நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் உற்பத்திச் சாதனங்களின் இவ்வகை வினியோகம், உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையேயாகும். விளைபொருள் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களுக்குச் சொந்தமாயுள்ளது, மேலும் அவர்களின் நலன்களுக்காக வினியோகிக்கப்படுகின்றது. விளைபொருளை சுவீகரிப்பதிலும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களின் நலன்களுக்காக அது வினியோகிக்கப்படுவதிலும் உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வினியோகத்தை உற்பத்தியிலிருந்து தனிப்படுத்திக் காண்பது மிகவும் தவறானதாகும், அல்லது விளைபொருள் வினியோகத்தில் எந்த வடிவத்தை வேண்டுமாயினும் சமூகம் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று நினைப்பது முற்றிலும் தவறானதாகும். உண்மையில், வினியோகம், உற்பத்தியிலிருந்து பெறப்படுகிறது, மேலும் அதைச் சார்ந்துள்ளது. அதே நேரத்தில், வினியோகம், உற்பத்தியின் விளைபயனாக இருக்

கும் போதே, பிற்கூறப்பட்டதின் மீது ஒரு தீவிரமான தாக்கத்தைக் கொண்டுள்ளது. அது உற்பத்தியின் வளர்ச்சியை மேம்படுத்த அல்லது தடை செய்ய முடியும்.

சோஷலிச சமூகத்தில் வினியோகம், சமூக முழுமை மற்றும் அதன் எல்லா உழைக்கும் மக்களின் நலன்களாலும் தீர்மானிக்கப்படுகின்றது; ஒவ்வொருதனிமனிதனின் முழு வளர்ச்சிக்கு வகை செய்கிறது. சோஷலிசத்தின் கீழ், வினியோகத்தின் உறவுகள், சமூக உற்பத்தியில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் விளைபொருளில் ஒரு பங்கை அளிக்கிறது. இது, சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தனது திறமைகளை வளர்க்க, பேண மற்றும் வெளிப்படுத்த வழிகோலுகிறது. ஏனென்றால் உழைக்கும் மக்களே உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உற்பத்தியின் விளைபயனான உழைப்புப் பொருட்களின் உடைமையாளர்கள் ஆவார்கள்.

எனவேதான், சோஷலிசத்தின் கீழ், வினியோகம், முதலாளித்துவத்தின் கீழ் வினியோகத்திற்கே தனித்தன்மையாக உள்ள கட்டுப்பாடுகளை வெற்றிகொள்கிறது.

இவ்வாறாக, முதலாளித்துவத்தின் கீழ் வினியோகம், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களான முதலாளிகளின் வர்க்க நலன்களில் நடைபெறுகிறது. எனவே கூலித் தொழிலாளர்களால் உருவாக்கப்படும் உற்பத்திப் பொருளின் பெரும் பகுதி, நாட்டின் மிகச் சிறிய கூறாக உள்ள முதலாளிகளால் சுவீகரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. விளைபொருளின் மறு பகுதி கூலியுழைப்பிற்கு உழைப்பூதியம் கொடுப்பதற்காக முதலாளிகளால் பயன்படுத்தப்படுகின்றது. எனவே உற்பத்திப் பொருளின் வினியோகத்தில் இரண்டு வர்க்கங்களான கூலித் தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளுக்கிடையே பகை முரண்பாடு வெளிப்படுகிறது.

முதலாளிகள் பெறும் விளைபொருளின் பங்கு பெரிதாகப் பெரிதாக, கூலித் தொழிலாளர்களுக்குச் செல்லும் பங்கு சிறியதாகிக் கொண்டேயிருக்கும் என்ற உண்மையில் அப்பகைமை முரண்பாட்டின் சாராம்சம் அடங்கியுள்ளது. வேலையில்லாதவர்களின் பெரும் படையைக் கொண்டுள்ள சமூகத்தில், தொழில் நிறுவனங்களின் உடைமையாளர்களான முதலாளிகள், ஊதிய உழைப்பாளிகள் அவர்களது வேலைகளை விட்டு விடுவார்கள் என்ற அச்சம் சிறிதுமின்றி, அவர்களுக்காக மேலும் ஒரு சிறிய பங்கை ஒதுக்கி வைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதே நேரத்தில், தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன ஒற்றுமை எவ்வளவுக்கெவ்வளவு வலிமையானதோ முதலாளி வர்க்கத்தின் மீது அதன் எதிர்ப்பு எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமானதோ சுரண்டுபவர்களிடமிருந்து அது அவ்வளவுக்கவ்வளவு அதிகச் சலுகைகளை வலிந்து பெற முடியும், தனது உழைப்புச் சக்தியை தொழில் நிறுவனங்களின் உடைமையாளர்களான முதலாளிகளுக்கு இன்னும் அதிக ஊதியத்திற்கு விற்க முடியும்.

ஆனால் முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் கட்டமைவு, முக்கியமாக இந்நாளில் மிகவும் பல்வேறான முரண் கூறுகளைக் கொண்டதாக உள்ளது என்ற கருத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் அது, உயர் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர் பிரிவினர், பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள், பெண்கள் ஆகியவர்களைக் கொண்டுள்ளது. எனவேதான் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் சலுகைகள் பெற்ற குழுக்களின் நலன், உழைக்கும் மக்களின் பெரும் பகுதியின் வாழ்க்கைத் தரங்களை மோசமாக்குதல் மற்றும் அவர்களை மேலும் சுரண்டுதலையும் அடிப்

படையாகக் கொண்டு தோன்றுகிறது, அது சார்பு நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் வருவாய் இறக்கச் சரிவிலிருந்தும் தோன்றுகிறது.

சோஷலிசத்தின் கீழ் உற்பத்தியின் முக்கியமான புதிய சமூக பொருளாதார சாராம்சம் நுகர்வுப் பொருட்களின் வினியோகத்தின் முக்கியமான புதிய வடிவங்களையும் விகிதாசாரத்தையும் தீர்மானிக்கிறது.

ஓர் ஆண்டில் உழைக்கும் மக்களால் உருவாக்கப்பட்ட விளைபொருள் என்றறியப்படும் மொத்த சமூக உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி, பயன்படுத்தப்பட்டுத் தீர்ந்து போன உற்பத்திச் சாதனங்களை மாற்றீடு செய்ய செலுத்தப்படுகிறது; மற்றொரு பகுதி உற்பத்தியைப் பெருக்கவும், ஒரு மூன்றாவது பகுதி ஒரு சேம ஒதுக்கீடு அல்லது காப்புறுதி, பல்வேறு வகைப்பட்ட தற்செயல் நிகழ்ச்சிகளுக்காக (விளைச்சல் நொடிப்பு, வெள்ளம், நிலநடுக்கம் முதலியன) ஒரு நிதி உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. நான்காவது பகுதி கலாசார மற்றும் ஆக்க நலப் பெருவீத கட்டுமானத்திற்காகச் செலவிடப்படுகிறது. ஒரு ஐந்தாவது பகுதி உற்பத்தியுடன் தொடர்பில்லாத நிர்வாகச் செலவுகளைச் சமாளிப்பதற்கும் நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மொத்த சமூக உற்பத்திப் பொருளில் எஞ்சியுள்ள பகுதி மக்களின் நுகர்வு நிதியாக அமைகிறது. சோஷலிசத்தின் கீழ் சமூக முழுமை மற்றும் அதன் அங்கத்தினர்களின் நலன்களுக்காக விளைபொருட்கள் ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும், சமூக உற்பத்திப் பொருளின் வினியோகிக்கப்பட்ட எல்லா பகுதிகளிலும் ஓர் இசைவு உள்ளதையும் நாம் காண்கிறோம்.

இவ்வாறாக, உற்பத்தியை விரிவாக்குவதற்காக உள்ள

நிதியின் பெருக்கம் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் பொருள் மதிப்புகளின் உற்பத்திப் பெருக்கத்தை இன்றியமையாததாக்குகிறது. அதன் காரணமாக மக்களின் நுகர்வில் ஒரு பெருக்கமும் அதன் கட்டமைப்பில் ஒரு முன்னேற்றமும் ஏற்படுகின்றன.

ஆகவே, சோஷலிசத்தின் கீழ் உற்பத்தியின் திரட்சி மற்றும் விரிவு ஒரு இறுதி நோக்கம் மட்டும் அல்ல, ஆனால் மக்களின் நல்வாழ்க்கை நிலையின் மேம்பாட்டுக்காக ஒரு பொருளாயத முன்நிபந்தனையாகும். உற்பத்தியின் நிலையான வளர்ச்சியும் விரிவுபடுத்தலும் உழைக்கும் மக்களிடையே கூட்டாண்மை உறவுகள், நட்பு முறையான ஒத்துழைப்பு மற்றும் சமூக முழுமையான அளவில் அதன் நலன்களுக்காக பரஸ்பர உதவி முதலியவற்றை வலுப்படுத்த உதவுகின்றன. மேலும் இது வர்க்கங்களுக்கு இடையிலும் பல்வகைப்பட்ட வேலைகளுக்கு இடையிலும் உள்ள அடிப்படையான வேறுபாடுகளைக் குறைப்பதை சாத்தியமாக்குகிறது.

அதே பொழுது சோஷலிசத்தின் கீழ் சமூக உற்பத்திப் பொருளின் பல்வேறு பகுதிகளுக்கிடையே பகைமையற்ற முரண்பாடுகள் உள்ளன. உண்மையில், தற்பொழுது உற்பத்தியின் பெருக்கத்திற்கு உற்பத்திப் பொருளின் பெரும் பங்கு செல்லும் பொழுது நுகர்வுக்குச் செல்லும் பங்கு சிறியதாக உள்ளது. ஆனால் எதிர்காலத்தில் பிற்கூறப்பட்டது நிச்சயமாகப் பெருகும். பல்வேறுபட்ட நிதிகளுக்கிடையே விளைபொருளின் திட்டமிட்டமுறையான வினியோகத்தினால் சமூகம் இந்நிதிகளுக்கிடையே மிகச் சிறந்த முறையில் சாத்தியமான விகிதத்தை ஏற்படுத்த முடியும், இது உற்பத்தியின் சாதாரண வளர்ச்சியையும் அதே நேரத்தில் நுகர்வின் அதிகரிப்பையும் உறுதி செய்கிறது. சேமிப்பு நிதியை மிக விவேகமாகப் பயன்படுத்துதல்

(அதன் பங்கு ஒரே பங்காக இருக்கும் போதோ அல்லது குறைக்கப்படும் போது கூட) ஓர் அவசியமான அளவில் உற்பத்தி விரிவடைதலையும், நுகர்வு பெருகுதலையும் சாத்தியமாக்குகிறது.

சோஷலிசத்தின் கீழ், பெரும்பாலான தனிநபர் நுகர்வுப் பொருட்கள், உழைப்பு உள்ளீடுகளுக்கு ஏற்பவும், சமூக நுகர்வு நிதிகள் மூலமாகவும் வினியோகிக்கப்படுகின்றன.

### வேலையின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ப வினியோகம் என்ற சோஷலிச மூலக் கோட்பாடு

சோஷலிசத்தின் கீழ், ஒவ்வொரு உழைக்கும் தனி மனிதனின் நிலையும், பெரும்பாலும், அவனது வேலையினால் தீர்மானிக்கப்படுகிறது. சோஷலிசத்தின் கீழ், சமூக உற்பத்தியில் ஒவ்வொருவருடைய வேலையின் தரம் மற்றும் அளவிற்கேற்ப பொருள் மதிப்புகள் வினியோகிக்கப்படுகின்றன. இவ்வகை வினியோகம், உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையால் இன்றியமையாததாக்கப்படுகிறது.

உண்மையில், ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகளின் சக உடைமையாளர்களாக எல்லா உழைக்கும் மக்களும் இருக்கும் ஒரு சமூகத்தில், மொத்த உற்பத்தி வளர்ச்சியில், பொருள் மதிப்புகள் உருவாக்குதலில் அல்லது சேவை வசதிகளை அளிப்பதில் ஒவ்வொரு தனி மனிதனின் ஈடுபாடும் சமூகத்திற்கு அவனது உழைப்புப் பங்களிப்பினால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. ஏனென்றால் இங்கு, பொது நலனுக்காகத் தனி மனிதனின்

பங்களிப்பை மதிப்பிடும் அளவுகோலாக உழைப்பு மட்டுமே உள்ளது.

சோஷலிசத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பொருள் மதிப்புகள் அனைத்தும், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களான உழைக்கும் மக்களுக்கே சொந்தமாயுள்ளன, அதனால் அவர்களின் நலன்களுக்காகவும் வினியோகிக்கப்பட வேண்டும். ஒரு சோஷலிச சமூகத்தின் வினியோகத்தில், எனவே நுகர்வில் உழைக்கும் மக்களின் பங்கேற்பு அவர்களின் வேலையினால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு உழைக்கும் தனி மனிதனும் சமூகத்திற்கு எவ்வளவு பங்களித்தானோ அதே அளவை, பல்வேறு சமூக நிதிகளுக்கான கழிவு போக, சமூகத்திலிருந்து பெறுகிறான்.

கம்யூனிசத்தின் முதல் கட்டமான சோஷலிசத்தின் கீழ்தான், உழைக்கும் மக்களின் உழைப்பு உள்ளீட்டிற்கேற்ப நுகர்வுப் பொருட்களை வினியோகித்தல் நடைபெறுகிறது. கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்தில் தேவைகளுக்கேற்ப பொருள் மதிப்புகள் வினியோகிக்கப்படும்.

சோஷலிசத்தின் கீழ் ஒவ்வொரு நாட்டிலும், முந்தைய முதலாளித்துவ கட்டத்துடன் ஒப்பிடும் போது, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம், உற்பத்தியின் மட்டம் மற்றும் உழைப்பின் உற்பத்தித் திறன் முதலியவை கணிசமான அளவில் வளர்ந்திருந்த போதிலும் அவை மனிதத் தேவைகளுக்கேற்ப வினியோகம் செய்யத் தேவையான பொருள் மதிப்புகளின் அளவை விட இன்னும் குறைவானவையாக இருப்பதால், வேலைக்கேற்ற வினியோகம் அவசியமாகின்றது.

ஆகவே, உழைப்பின் சமூக சாராம்சத்தில், உழைப்புக் குறித்து மனித மனப்போக்குகளில் சோஷலிசம் அடிப்படையான மாறுதல்களைக் கொண்டுவந்தாலும், வேலைக்

காக புதிய செயல் தூண்டுதல்களைத் தோற்றுவித்தாலும் சோஷலிசத்தின் கீழ் உழைப்பு என்பது சமூகச் செல்வத்தை அதிகரிக்கச் செய்யும் வழிவகை மட்டுமல்ல, அனைத்து சமூக உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வழிவகை மட்டுமல்ல, அது ஓர் உயிர்வாழ்வுச் சாதனமாகும்.

சோஷலிச உடைமை ஆதிக்கம் செலுத்தும் போது சோஷலிசச் சமூகம் உழைக்கும் மக்கள் எல்லோருக்கும் ஒரு வேலையை வழங்குகிறது, உழைப்பின் படைக்கும் தன்மையை மேம்படுத்த உதவுகிறது. இங்கு உழைக்கும் மக்கள் தங்கள் வேலை செய்யும் திறமையை சுதந்திரமாகச் செயல்படுத்தவும், தங்களது உள்ளெண்ணங்களை நிறைவேற்றவும், ஒவ்வொரு வகையிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தவும், உற்பத்தியை நடத்துவதில் பங்கு கொள்ளவும், நாடு தழுவிய சோஷலிசப் போட்டியில் பங்கு கொள்ளவும், புதிதுபுனைவோர் இயக்கத்தில் பங்கு கொள்ளவும் ஒரு வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

"தான் தேர்ந்தெடுத்த சமூக ரீதியில் பயனுள்ள வேலையைச் செய்வதும் உழைப்புக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுவதும் உழைக்கும் ஆற்றலுள்ள ஒவ்வொரு சோவியத் குடிமகனின் கடமையும் கௌரவமும் ஆகும். சமூகத்திற்குப் பயன் தரும் வேலையைத் தட்டிக் கழித்தல் சோஷலிச சமூகத்தின் மூலக் கோட்பாடுகளுடன் பொருந்தாததாகும்'', இவ்வாறு சோவியத் யூனியனுடைய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

உழைக்கும் மக்கள் தங்களுக்காகவும் தங்கள் சமூகத்திற்காகவும் வேலை செய்வதும் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ் அவர்களது கூட்டு நடவடிக்கையும் ஒவ்வொரு உழைக்கும் நபரின் பொருளாதாரச் சுதந்திரத்தைக் குறிக்கிறது.

தனி மனிதனின் பொருளாதாரச் சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனின் சுயேச்சையான பொருளாதார நடவடிக்கை என்ற எண்ணம் முற்றிலும் தவறான தாகும். உற்பத்தியின் போது மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டிருப்பதால் சுயேச்சையான பொருளா தார நடவடிக்கை இருக்கவே முடியாது. ஆனால் அந்த இடைத் தொடர்பு தன்னை பல்வேறு வழிகளில் வெளிக் காட்டுகிறது. உற்பத்திச் சாதனங்களின் மீதான முத லாளித்துவ தனியுடைமையின் கீழ், உற்பத்திச் சாதனங் களின் உடைமையாளர்களான மக்களும், இவ்வகைச் சாத னங்கள் பறிக்கப்பட்டவர்களும் ஒருவருக்கொருவர் எதிர் நிற்கின்றனர், இது அவர்களுக்கிடையே பகை முரண் பாடுகளைத் தோற்றுவிக்கிறது.

வரலாற்றிலேயே முதன்முதலாக, சமூக உடைமையின் கீழ், மக்கள் பொதுவான இலக்குகளை அடைவதற்கும், எல்லோருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவுமே, தங் களுக்கிடையே பரஸ்பரப் பொருளாதாரப் பிணைப்புகளை உணர்வு பூர்வமாக ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இங்கு சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்ற அங்கத் தினர்களுடன் சேர்ந்து, சமூக மற்றும் சொந்தத் தேவை களை பூர்த்தி செய்வதற்காக உற்பத்திச் சாதனங்களை திறமையாகப் பயன்படுத்த அக்கறை கொண்டுள்ளார்.

அதே பொழுது, சோஷலிசத்தின் கீழ் வேலை இது வரை தனி மனிதனின் பிரதானமான இன்றியமையாத தேவையாகவும் சமூகத்திற்காக ஊதியம் இல்லாமல் வேலை செய்யும் பழக்கமாகவும் மாறவில்லை. மேலும் வேலையின் சாராம்சம் ஒரே மாதிரியானதாக இல்லை. மூளை, உடல் உழைப்புகளுக்கிடையே, தொழிற்துறைச் சார்ந்த மற்றும் வேளாண்மை சார்ந்த உழைப்புகளுக் கிடையே, பயிற்சித் திறமையுள்ள மற்றும் பயிற்சித்

திறமையற்ற உழைப்புகளுக்கிடையே, கடின மற்றும் எளிய உழைப்புகளுக்கிடையே கணிசமான வேறுபாடுகள் தொடர்ந்து உள்ளன. சோஷலிசத்தின் கீழ் சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களும் தேசியச் செல்வம் மற்றும் பொது நலனுக்கான உழைப்பை உணர்வு பூர்வமாக, பொறுப்பான மனப்போக்கோடு அணுகுகிறார்கள் என்று கூற முடியாது.

எனவேதான், சமூக உற்பத்தியில் ஒவ்வொரு உழைக் கும் மனிதனின் உழைப்புப் பங்களிப்புக்கு ஏற்ப உற் பத்திப் பொருளில் ஒரு பங்கைப் பெறுமாறு வினி யோகித்தலை பாகுபடுத்துவது அவசியமாகிறது. எனவே தான் ஒவ்வொரு உழைக்கும் மனிதனின் உழைப்பளவு மற்றும் நுகர்வளவின் மீதும் சமூகம் ஒரு கண் காணிப்பை ஏற்படுத்தும் அவசியம் தோன்றுகிறது.

எனவே, உழைப்புக்கேற்ற வினியோகம் ஒரு புற நிலையான அவசியமாகிறது, சோஷலிசத்தின் பொருளா தார விதியாகிறது. உழைக்கும் மக்களிடையே பொருள் மதிப்புகளை வினியோகிக்கும் போது, உழைப்பின் அளவு, நேரம், உழைப்பின் தீவிரம், அதன் தரம், உழைக்கும் மனிதனின் தேர்ச்சி மற்றும் உற்பத்தி அனுபவம், உழைக் கும் நிலைமைகள், சமூகத்திற்காக பல்வேறு ஸ்தூல மான வேலைகளின் முக்கியத்துவம் ஆகியவற்றையும் சமூகம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சோஷ லிசத்தின் கீழ் வினியோகம், மனித இனம், தேசிய இனத் தன்மை, வயது, பால் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளை ஒழித்து விடுகிறது. சம அளவும் சம தரமுமுள்ள உழைப்பிற்கு, சம அளவு விளைபொருளைச் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் பெறுமாறு "ஒவ் வொருவரிடமிருந்தும் அவரது திறமைக்கு ஏற்ப, ஒவ்

வொருவருக்கும் அவரது உழைப்பிற்கேற்ப'' என்ற மூலக் கோட்பாடு நிறைவேற்றப்படுகிறது.

சோஷலிசத்தின் கீழ், மிகப் பரந்த பல்வகை ஸ்தூல மான வேலைகள் உள்ளன (கடைசல் தொழிலாளர், எஃகு வார்ப்பவர், தின் பண்டங்கள் செய்பவர், கால்நடை வளர்ப்பவர்). ஒவ்வொரு வகை வேலையும் மற்ற எல்லா வற்றிலிருந்தும், தொழில் முறைகள், உழைப்புக் கருவி கள், சிக்கலான தன்மை, தீவிரம் மற்றும் வேலை நிலைமைகள் ஆகியவற்றில் மட்டும் வேறுபடுவதில்லை, ஆனால் மொத்த சமூக உற்பத்திப் பொருளைப் படைப்ப தில் உழைக்கும் நபரின் வெவ்வேறு பங்கேற்பாலும் மாறுபடுகின்றன.

வேலைக்கேற்ப நுகர்வுப் பொருட்கள் வினியோகிக் கப்பட வேண்டுமானால், பல்வேறு வகைப்பட்ட வேலை களும் ஒரு குறிப்பிட்ட பொதுமைக்கு, அதாவது ஒரு தனியளவிற்குக் குறைக்கப்பட வேண்டும். பொருளாதார நடைமுறையில் உழைக்கும் மக்களின் ஒவ்வொரு வகை பிரிவுக்கும் உழைப்பு வரையளவுகள் வரையறுக்கப்படு கின்றன. இவை கண்டிப்பாக ஆய்வறிவு சார்ந்தவை யாகும், அதாவது மனிதத் திறமைகளுக்கும் உற்பத் தியின் தொழில்நுட்ப இயல் திறன்களுக்குமேற்ப இவை வரையறுக்கப்படுகின்றன. இவ்வரையளவுகளின் நிறை வேற்றம் பற்றிய கண்காணிப்பு ஒவ்வொரு உழைக்கும் நபரின் உழைப்புக் கணக்கெடுப்பின் அடிப்படையாகும்.

சமூக உழைப்பில் ஒவ்வொரு தனிநபரின் பங்கையும், அதற்கேற்ப சமூக நுகர்வு நிதியில் அவரது பங்கையும் மதிப்பிடுதல் குறித்து, உழைக்கும் மக்களுக்கும் சமூகத் திற்குமிடையேயுள்ள நேரடி உறவுகளின் மீது உழைப்புக் கேற்ப வினியோகம் நிறுவப்பட்டுள்ளது. வினியோகிக்கப் பட்ட விளைபொருளில் ஒவ்வொரு தனி மனிதனின்

பங்கும் முதலாவதாக, அவனது உழைப்பின் அளவு மற்றும் தரத்தைச் சார்ந்துள்ளது; இரண்டாவதாக, வாழ்க்கையின் அவசியப் பொருட்களின் கையிருப்பள வைச் சார்ந்துள்ளது. உழைக்காத வருமானங்கள் மற்றும் ஒட்டுண்ணி நுகர்வை உழைப்புக்கேற்ற வினியோகம் ஒழித்து விடுகிறது.

உழைப்புக்கேற்ற வினியோகம், ஒவ்வொரு மனிதனின் நுகர்வின் அளவுகளை நிர்ணயம் மட்டும் செய்வதில்லை, ஆனால் சமூக உற்பத்தியின் வளர்ச்சி மீதும் இது செல் வாக்குச் செலுத்தி, அதைப் பெருக்குகிறது. வினியோகத் தின் அக்கோணத்தைக் கருத்தில் கொண்டுதான் "வினி யோகம் என்பது உற்பத்தி ஆக்க அளவை அதிகரிக்கச் செய்யும் ஒரு முறை, ஒரு கருவி மற்றும் ஒரு வழிவகை யாகும்"* என்று லெனின் எழுதினார். உழைப்பின் தரம் மற்றும் அளவுடன் ஊதியத்தை இணைப்பதன் மூலமும் இதன் காரணமாக ஒவ்வொரு உழைக்கும் மனிதனின் வேலைத் தீவிரத்தைக் கூடுதலாக்கியும், உழைப்புக்கேற்ப வினியோகம் என்ற மூலக் கோட்பாடு, தேசியப் பொருளாதாரம் முழுவதிலும், ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும் உற்பத்தியை நடத்தும் செயல்வன்மையை மேம்படுத்துவதை சாத்திய மாக்குகிறது. உழைக்கும் மக்கள் தங்கள் தனித்த மற்றும் கூட்டு உழைப்பின் பயன்களை மேம்படுத்தவும், அவர் களின் திறமைகளை வளர்க்கவும், அவர்களின் பயிற்சித் திறமைகள் மற்றும் உழைப்பு உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், அவர்களிடம் பொருளாயத மற்றும் தார்மீக அக்கறையை இது ஏற்படுத்துகிறது. சோஷ

* V.I. Lenin, *Collected Works,* vol. 32, Moscow, Progress Publishers, 1977, p. 448.

லிச சமூகத்தில் உழைப்புக்கேற்ப வினியோகம் தொடர்ந்து மேம்பட்டு வருவது பெரிய முக்கியத்துவத்தை பெறுகிறது. உற்பத்தியின் முடிவான விளைபொருட்களுடன், உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களின் அளவு மற்றும் தரத்துடன் இவ்வினியோகத்தை நெருக்கமாகப் பிணைப்பது என்பதுதான் மேற்கூறிய வளர்ச்சியின் தலையாயப் போக்காகும்.

உழைப்புக்கேற்ற வினியோகம், முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் ஒப்பிடுகையில் சோஷலிசத்தின் அனுகூலங்களில் ஒன்றாகும். சமூக அங்கத்தினர்கள் எல்லோரின் முழுமையான நலனை உறுதி செய்வதே அதன் நோக்கமாகும். சமூகச் செல்வத்தின் வளர்ச்சியுடன் ஊதிய அளவுகள் வளருகின்றன, எனவே ஈட்டப்பட்ட வருவாய்கள் உயருகின்றன, வாழ்கை நிலைமைகள் மேம்படுகின்றன. வேலை செய்வதில் மக்களுக்கு அக்கறையை ஏற்படுத்தும் அதே நேரத்தில் சோஷலிசத்தின் கீழ் வினியோகம் ஒரு மிகப் பெரிய வளர்ப்புப் பணி சார்ந்த பங்காற்றுகிறது. சோஷலிச உழைப்புக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துகிறது, மேலும் வேலையின் மீது ஒரு கம்யூனிச மனப்போக்கை புகட்டுவதற்கு உதவுகிறது.

உழைப்புக்கேற்ற வினியோகம், எல்லா உடல் திடமுடைய குடிமக்களையும் சமூக உற்பத்தியில் இழுக்கிறது, சோஷலிசத்தின் கீழ் எல்லோரும் வேலை செய்ய வேண்டும் என்பதை வலுப்படுத்துகிறது, தேவைகளுக்கேற்ப வினியோகம் செய்யும் கம்யூனிச வினியோகத்திற்குச் செல்லும் மாறுதல்களுக்கான முன்நிபந்தனைகளை உருவாக்க உதவுகிறது.

வரலாற்றிலேயே முதன்முறையாக, எல்லா உழைக்கும் மக்களின் சமூகப் பொருளாதார சமத்துவத்தை சோஷலிசம் உறுதி செய்கிறது. இது, அவர்கள் எல்லோ

ரும் உற்பத்திச் சாதனங்கள் தொடர்பாக சமமானவர்கள், ஒரு வேலை பெறுவதில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு, அவர்களது திறமைகளுக்கேற்ப சமூகத்திற்காக வேலை செய்ய ஒரு கடமை உள்ளது, அவர்களின் உழைப்பின் அளவு மற்றும் தரத்திற்கேற்ப சமூக விளை பொருளில் தங்களது பங்கைப் பெற ஒரு சமமான உரிமையும் உண்டு என்பனவற்றில் யெல்லாம் அடங்கியுள்ளது.

சோஷலிசத்தின் கீழ் சமத்துவம் என்பது சமப்படுத்துவதைக் குறிப்பதில்லை, ஏனென்றால் சோஷலிசம் தனிமனிதத் தனித் தன்மைகளையும், சொந்த பண்புகளின் வேறுபாடுகளையும் விலக்குவதில்லை. கொச்சையாக சமப்படுத்துவது என்பது சோஷலிசத்துடன் ஒவ்வாததாகும், ஏனென்றால் இது, உழைப்பாளி தன் திறமைகளை மேம்படுத்த தூண்டுவதில்லை, உழைப்பு உற்பத்தித் திறனை அதிகரிக்கவோ, அல்லது உற்பத்தியில் தொழில் நுட்பச் சாதனைகளை அறிமுகம் செய்யவோ தூண்டுவதில்லை. ஆகவே உற்பத்தி வளர்ச்சியின் சாத்தியக் கூறுகளைக் கட்டுப்படுத்துகிறது. சமூகத்தின் அங்கத்தினர்கள் தங்களது தேவைகளை இன்னும் பெரிய அளவில் பூர்த்தி செய்தலை சமப்படுத்தப்பட்ட வினியோகம் சாத்தியமற்றதாக்கி விடும் என்பதையே இது குறிக்கிறது. எனவேதான் மார்க்சியவாதிகள் சமப்படுத்தப்படும் வினியோகத்தின் பால் ஒரு எதிர்மறையான அணுகுமுறையை எப்போதும் கொண்டுள்ளனர்.

சரி சமமான வேலைக்கு சரி சமமான ஊதியம் என்பது சமமின்மையின் அம்சங்களையும் கொண்டுள்ளது. ஏனென்றால் அதே அளவு ஊதியம், தனிப்பட்ட தனித் தன்மைகளைக் கொண்டுள்ள பல்வகைப்பட்ட மக்களுக்கும் செயல்படுத்தப்படுகிறது. உழைப்பாளிகள், வேலைக்கான



8—1245

திறமையிலும் ஆற்றல்களிலும் வேறுபடுகிறார்கள். ஆகவே, ஒரே நேர அளவில், சமமல்லாத உழைப்புப் பங்கை சமூகத்திற்கு அளித்து, சமமில்லாத வருவாய்களைப் பெறுகிறார்கள். மேலும் மக்களின் குடும்ப நிலையும் குடும்ப உள்ளடக்கமும் வெவ்வேறானவை. வேலை செய்ய இயலாத அங்கத்தினர்களைக் கொண்டுள்ள பெரிய குடும்பங்களின் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினரின் வருவாய் மற்றும் நுகர்வு, அதிக எண்ணிக்கையில் உடல் திடமுடைய நபர்களைக் கொண்டுள்ள குடும்பங்களின் அங்கத்தினர்களின் வருவாய் மற்றும் நுகர்வை விட குறைந்ததாக உள்ளன. எனவே சோஷலிசத்தின் கீழ், பல் வகைப்பட்ட குடும்பங்களின் பொருளாயத தரங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு சமமின்மை உள்ளது.

வேறு சொற்களில் கூற வேண்டுமானால், தனி மனிதர்களால் உற்பத்திச் சாதனங்கள் கைப்பற்றப்படுவதில் வெளிப்படும் அநீதியைத்தான் சோஷலிச சமூகம் ஒழித்துக் கட்டுகிறதே ஒழிய, நுகர்வின் சமமின்மையில் வெளிப்படும், உழைப்புக்கேற்ப நுகர்வுப் பொருட்கள் வினியோகம் செய்யப்படுதலில் உள்ள அநீதியை உடனடியாக ஒழிப்பதில்லை.

உற்பத்தியின் வளர்ச்சியுடன், தேவைகளைப் பூர்த்தி செய்தலின் அளவின் சமமின்மை படிப்படியாக ஒழிக்கப் படுகிறது. கம்யூனிசத்தின் உயர் கட்டத்தில்தான், "ஒவ்வொருவரிடமிருந்தும் அவரது திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது தேவைகளுக்கேற்ப" என்ற வினியோகத்தின் மூலக் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தும் போதுதான், பொருள் மதிப்புகளின் வினியோகத்தில் முழுமையான நீதி அடையப்படும்.

## சமூக நுகர்வு நிதிகள் மூலமாக வினியோகம்

உற்பத்திச் சாதனங்களில் சோஷலிச சமூக உடைமையின் கீழ், தனிநபர் நுகர்வுக்கான எல்லா பொருட்களும் உழைப்புக்கேற்ப வினியோகிக்கப்படுவதில்லை. அவற்றில் ஒரு குறிப்பிட்ட பகுதி, சமூக நுகர்வு நிதிகள் மூலமாக வினியோகிக்கப்படுகிறது. எனவே, சமூகத்தின் தேசிய வருமானத்திலிருந்து அமைக்கப்பட்ட முழு நுகர்வு நிதி இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: உழைப்புக் கேற்ப வினியோகம் செய்யும் நிதி, சமூக நுகர்வு நிதிகள்.

உழைப்புச் சக்தியின் புனருற்பத்தியின் சோஷலிசத் தன்மையினால்தான் பொருள் மதிப்புகளின் ஒரு பகுதியை சமூக நுகர்வு நிதிகள் மூலமாக வினியோகம் செய்வது அவசியமாகிறது, இது அதன் உள்ளீடுகளை ஈடு செய்வதை மட்டும் அவசியமாக்குவதில்லை, ஒவ்வொரு தனி மனிதனின் உடல் மற்றும் தார்மீகத் திறமைகளின் முழு வளர்ச்சியை உறுதி செய்வதையும் அவசியமாக்குகிறது.

சோஷலிசத்தின் கீழ், உடல் நலம், கல்வி, குழந்தைகள் வளர்ப்பு முதலியவை குறித்த தேவைகள் (இவை ஒவ்வொரு தனி மனிதனின் முழு வளர்ச்சிக்கு மிக முக்கியமானவையாகும்) பூர்த்திச் செய்யப்பட்டன. இத்தேவைகள், உழைக்கும் மக்களின் வருவாய், அவர்களின் குடும்பத்தின் சமுதாயப் படிநிலை, வேலை செய்வதற்கான திறன் முதலியவற்றை கணக்கில் கொள்ளாமல் பூர்த்தி செய்யப்பட வேண்டும், ஏனென்றால் இத்தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன, சமுதாயம் முழுவதிலும் ஒவ்வொருவரும் திருப்தி செய்யப்படுகின்றனரா என்பதை சோஷலிச சமுதாயம் கவனித்து

கொள்கிறது. எனவேதான், தேவைகளைக் கூட்டாக பூர்த்தி செய்வதற்கான நிதிகளை, அல்லது சமூக நுகர்வு நிதிகளை சமூகம் அமைக்கிறது. இந்நிதிகள், எல்லா உழைக்கும் மக்களின் ஜீவாதாரமான நலன்களை பெரிதும் பாதிக்கும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை சோஷலிச சமூகம் தீர்ப்பதை இயலச் செய்கிறது.

முதலாவதாக, சமூக நுகர்வு நிதிகள், சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களின் ஒரு குறிப்பிட்ட வகையான தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏறக்குறைய சரிசமமான நிலைமைகளை உருவாக்குதலை சாத்தியமாக்குகிறது.

இரண்டாவதாக, சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களின் திறமைகளை வளர்ப்பதற்காக, பொருளாயத நிலைமைகளில் உள்ள சமூகப் பொருளாதார வேறுபாடுகளை படிப்படியாகத் துடைத்தொழிப்பதற்கான முன்நிபந்தனைகளை ஏற்படுத்த இந்நிதிகள் உதவுகின்றன. இலவசக் கல்வி, இலவச உடல் நலப் பாதுகாப்பு, உடற் பயிற்சி, குழந்தை நலக் காப்பகங்களின் உதவியுடன் குழந்தைகளை வளர்ப்பதில் சரிசமமான வாய்ப்புகளை உறுதி செய்தல் ஆகியவற்றிற்காகச் சமூக நுகர்வு நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தேவைகளை சமூக நுகர்வு நிதிகள் மூலமாகப் பூர்த்தி செய்வதன் மூலம், ஒவ்வொரு தனி மனிதனின் திறமைகளை வளர்ப்பதற்கு மிக அவசியமான தேவைகளுக்கு சமூகம் முன்னுரிமை அளிக்கிறது.

சமூக நுகர்வு நிதிகள் மூலமாக வினியோகம் என்பதை அடிப்படையாகக் கொண்டு, பூர்த்தி செய்யப்பட்ட தேவைகளின் கட்டமைப்பின் மீது சோஷலிச அரசு ஒரு தீவிரமான தாக்கத்தைச் செலுத்துகிறது, இதனால் எல்லா தனி மனிதர்களின் வளர்ச்சி மற்றும் அவர்களின் உழைப்புத் திறமைகளின் வளர்ச்சிக்கான சரிசமமான

பொருளாயத நிலைமைகளை உறுதி செய்யும் அளவு நுகர்வை திட்டமிட்டமுறையில் சாத்தியமாக்குகிறது.

மூன்றாவதாக, சமூக நுகர்வு நிதிகள் மூலமாக தொடர்ச்சியாக வினியோகம் செய்தல், சோஷலிசத்தின் கீழ் பல்வகைப்பட்ட வர்க்கங்கள் மற்றும் சமூகக் குழுக்களின் சமூகப் பொருளாதார நிலைகளைப் பெரிதும் ஒத்திருக்கச் செய்வதை சாத்தியமாக்குகிறது. அது சோஷலிச சமூகத்தின் எந்த ஒரு சமூகக் குழு அல்லது வர்க்கத்தின், எல்லா உழைக்கும் மக்களின் அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்கிறது.

சமூக நுகர்வு நிதிகளிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள், சமூகத்தின் செல்வாதாரங்களின் அதிகரிப்போடு கூடவே, சோஷலிச கட்டுமானத்தின் திட்டவட்டமான வரலாற்று நிலைமைகளைச் சார்ந்து உருவாகி, வளருகின்றன.

சோஷலிசத்தின் கீழ், கல்வி மற்றும் உடல் நலத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள செல்வாதாரங்களின் பங்கு கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்பதை வரலாற்று பூர்வமான அனுபவம் காட்டுகிறது. சமூக மற்றும் தார்மீகத் தேவைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் சமூகம் அதன் எல்லா அங்கத்தினர்களின் தேவைகளின் ஒட்டுமொத்தமான மேம்பாட்டை உறுதிப்படுத்துகிறது.

சமூக நுகர்வு நிதிகளின் ஒரு பெரும் பகுதி அரசு வரவு-செலவு திட்டத்திலிருந்து அமைக்கப்படுகிறது, ஒரு மையப்படுத்தப்பட்ட வழியில் பயன்படுத்தப்படுகிறது. அரசு தொழில் நிறுவனங்களும் அமைப்புகளும், அவற்றின் லாபத்தில் ஒரு பகுதியை சமூகப் பண்பாட்டு நிதிகள் மற்றும் வீட்டுவசதி நிதிகள் நிறுவுவதற்கு பயன்படுத்துகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் கலாசார மற்றும் ஆக்க

நலச் செயல்களுக்காகவும் சமூகப் பாதுகாப்பிற்காகவும் வேண்டிய நிதிகளை அமைக்கின்றன.

சோவியத் யூனியனில் சமூக நுகர்வு நிதிகள் செகன்டரி பள்ளிகள், உயர் கல்வி நிலையங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள், தனித் தேர்ச்சியளிக்கும் பள்ளிகள், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் மற்ற நிறுவனங்கள், நூலகங்கள் போன்றவற்றைப் பேணவும், உயர் கல்வி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் மாணவர்களுக்கு மானியம் அளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. அரசு மருத்துவ மனைகள் மற்ற மருத்துவ நிலையங்களையும் நடத்துகிறது; இலவச மருத்துவ உதவி, குறைக்கப்பட்ட விலையில் ஆரோக்கிய இல்லங்கள் மற்றும் ஓய்வில்லங்களின் சேவைகள் முதலியவற்றை அளிக்கிறது, ஓய்வூதியம், தற்காலிக இயலாமைப் படிகள் மற்றும் தாய் சேய் நலன்கள் ஆகியவற்றிற்காக பணமளிக்கிறது.

தொழிலாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஓய்வு நேரப் பொழுது போக்கை ஒழுங்கமைக்கவும் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுமுறை வழங்கவும், பள்ளி செல்லும் வயதிற்கு முந்தைய குழந்தைகளைப் பேணவும் சமூக நுகர்வு நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சோவியத் யூனியனில் ஓய்வூதியங்கள், உழைக்கும் மக்களின் வருமானங்களிலிருந்து எந்தக் கழிவுகளும் இன்றி அரசு மற்றும் கூட்டுறவுப் பண்ணைகளின் செலவுகளிலிருந்து மட்டுமே வழங்கப்படுகின்றன. தற்பொழுது சோவியத் யூனியனில் ஆண்கள் 60 வயதிலும், பெண்கள் 55 வயதிலும் ஓய்வு பெறலாம். கடினமான வேலை நிலைமைகளில் பணி புரியும் அலுவலகர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு முன்பே ஓய்வு பெறலாம்.

சோவியத் அரசு வயதானோர் மற்றும் உழைப்பு உடல் ஊன முற்றோர் மீது நிலையான அக்கறை காட்டுகிறது, இவர்களுக்காக பல போர்டிங் இல்லங்களைப் பராமரித்துப் பேணி வருகிறது.

1985ஆம் ஆண்டில், 65 மில்லியன் சோவியத் உழைப் பாளிகளும் அவர்களது குடும்பத்தினர்களும் ஆரோக்கிய இல்லங்களுக்கும், ஓய்வில்லங்களுக்கும், பிரயாணிகள் விடுதி களுக்கும் ஓய்வு மற்றும் சிகிச்சைக்காகவும் சென்றனர், அவர்களில் 48 மில்லியன் மக்கள் நீண்ட கால ஓய்வு மற்றும் சிகிச்சை வசதியைப் பெற்றார்கள். பிற்கூறப் பட்டவர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் சமூகக் காப்புறுதி மற்றும் அரசு வரவுசெலவு திட்ட நிதிகளி லிருந்தும் உதவி பெற்றனர், அதாவது இலவசமாகவோ, மொத்த விலையில் 30இலிருந்து 50 சதவீகிதம் வரை செலுத்தி குறைக்கப்பட்ட விலைகளிலோ பயணச் சிகிச்சை. வசதிகளைப் பெற்றுள்ளனர்.

அதற்கு மேல், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக் கான உழைக்கும் மக்கள் சமூகப் கலாசார நிதிகளி லிருந்தும், தொழில் நிறுவனங்களின் நிதிகளிலிருந்தும் இலவச அல்லது குறைக்கப்பட்ட விலையில் வசதி களைப் பெற்றுள்ளனர். 1940இலிருந்து 1985 வரை சமூக நுகர்வு நிதிகளிலிருந்து சோவியத் மக்களுக்கு அளிக்கப்பட்ட பண வழங்கீடுகளும் வசதிகளும் 32 மடங்கு பெருகி உள்ளன. 1985ஆம் ஆண்டு அவை 147 மில் லியன் ரூபிள்களை எட்டின.

சமூக நுகர்வு நிதிகளின் ஒரு பகுதி, உழைக்கும் மக் களுக்கு அவர்களது உழைப்பு உள்ளீடுகளுடன் எந்தத் தொடர்புமில்லாமல் நேரிடையாகச் செல்கிறது என்பது கவ னிக்கத்தக்கதொரு விஷயமாகும். அவ்வகையில் சமூகம் பல கலாசாரத் தேவைகளையும், பொதுக் கல்வி மற்றும்

பொது நலத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மற்றொரு பகுதி, சமூக உற்பத்திக்கு உழைக்கும் மக்களின் உழைப்புப் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு வினியோகிக்கப்படுகிறது. இவ்வாறாக, ஓய்வூதியங்கள் மற்றும் படிகளின் அளவு உழைக்கும் மக்களின் ஊதியங்களைச் சார்ந்துள்ளன.

சமூக நுகர்வு நிதிகளின் வளர்ச்சி சோஷலிச சமூகத்தின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதில் ஒரு மிகப் பெரும் பங்காற்றுகிறது. இலவச மற்றும் சர்வபொது கல்வியின் அமைப்பு, இலவச மருத்துவ உதவி, பள்ளிக்கு முந்தைய குழந்தை நல நிலையங்கள், சமூகப் பாது காப்பமைப்பு இவையெல்லாம் வேலைக்கு உத்தரவாதமளிப்பதோடு கூட உழைக்கும் மக்களுக்குத் தம் குழந்தைகளின் எதிர்காலம் மீது கவலையில்லாமல் செய்கின்றன.

சமூக நிதிகள் மேலும் பெரும் பங்காற்றுகின்றன. இவை தனி மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கான சாதகமான நிலைமைகளை உருவாக்குவதற்கும், மேன்மேலும் பெருகும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், ஓய்வூதியங்கள், மானியங்கள், படிகள் மற்றும் நன்மைகளை உயர்த்துவதற்காகவும் மிக அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. சமூக நுகர்வு நிதிகள் நிலவுவதும் அவை அதிகரிப்பதும் எந்த ஒரு சமூகக் குழுவையும் சேர்ந்த ஒரு நபருக்கும் உயர் கல்வி உட்பட கல்வி பெறவும் கலாசார மற்றும் கலைகளின் எல்லா மதிப்புகளையும் அனுபவிக்கவும், தனது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றன.

சமூக நுகர்வு நிதிகள் உற்பத்தியின் மீதும் தாக்கம் செலுத்துகின்றன. அவை, உற்பத்தித் திறனை உயர்த்துவதில், உழைக்கும் மக்களின் வேலை நிலைமைகளை

மேம்படுத்துவதில் அவர்களின் அக்கறையை நடைமுறைப் படுத்துகின்றன.

ஆகவே உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை சமூக நுகர்வு நிதிகளைத் தோற்றுவிப்பதை சாத்தியமாக்குகிறது. இச்சமூக நுகர்வு நிதிகள் ஒவ்வொரு தனி மனிதனும் தனது திறமைகளை வளர்ப்பதற்கும், தனது பொருளாயத மற்றும் தார்மீகத் தேவைகளை மேலும் அதிக அளவில் பூர்த்தி செய்வதற்கும் உதவுகின்றன. இதன் மூலம் சமூகத்தை உயர் கட்டமான கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்கிறது.

*அத்தியாயம் ஐந்து*

# சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் வடிவங்கள்

## உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் முதன்மையான வடிவமான பொது மக்கள் உடைமை (அரசு உடைமை)

நாம் மேற்கூறியவாறு, சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை, பொது மக்கள் உடைமை (அரசு உடைமை) மற்றும் கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உடைமை என்ற வடிவங்களைக் கொண்டுள்ளது. சோவியத் யூனியனில் உற்பத்தி சாதனங்களில் 90 சதவீதம் பொது மக்கள் உடைமையாக உள்ளது. பிற சோஷலிச நாடுகளில், உற்பத்திச் சாதனங்களில் பெரும்பான்மை பொது மக்கள் உடைமையாக உள்ளது.

பொது மக்கள் உடைமை, தேசியப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான எல்லா உற்பத்திச் சாதனங்களையும் கூட்டிணைவாகச் சேர்த்துள்ளது. தொழில்துறை, கட்டுமானத் துறை மற்றும் வேளாண்மையின் அடிப்படை உற்பத்திச் சாதனங்கள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகள், வங்கிகள், வாணிப, நகராட்சி மற்றும் பிற நிறுவனங்களின் சொத்துகள், அடிப்படையான

நகர் சார்ந்த வீட்டு வசதிகள் ஆகியவற்றை பொது மக்கள் உடைமை கூட்டிணைவாகச் சேர்த்துள்ளது. சோவியத் யூனியனிலும் மங்கோலியாவிலும், எல்லா நிலமும் பொது மக்கள் உடைமையாகும்.

அடிப்படை உற்பத்திச் சாதனங்களனைத்தையும் அரசு உடைமையாகக் குவிப்பது, ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதார திட்டத்தின் அடிப்படையில் சமூக உற்பத்தியைத் விவேகமாக ஒழுங்கமைப்பதை சாத்தியமாக்குகிறது, மேலும் இத்திட்டத்தை ஒவ்வொரு பொருளாதார அலகையும் கட்டுப்படுத்தும் திட்ட குறியிலக்குகளின் வடிவில் நடைமுறைப்படுத்துவதைச் சாத்தியமாக்குகிறது.

சோஷலிசப் பொது உடைமையின் மிக முக்கியமான சிறப்பம்சம் என்னவென்றால், சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களும், முக்கியமான உற்பத்திச் சாதனங்களின் சக உடைமையாளர்களாக ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டுள்ளனர் என்பதாகும். சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையை, பொது மக்கள் நிறுவனங்களின் செயல்பாட்டை, உற்பத்தியின் பெருக்கத்தை, சமூக முழுவதின் நலன்களில் உழைப்புக் கருவிகள் விவேகமாகப் பயன்படுத்தப்படுதலை இவையெல்லாவற்றையும் சோஷலிச அரசு ஒழுங்கமைக்கிறது. இது உழைக்கும் மக்களிடம் சமூகச் செல்வத்தின் பால் ஒரு அக்கறையான மனப்போக்கை வளர்க்கிறது. எனவே ஒவ்வொரு உழைக்கும் நபரும் தன்னை நாடு முழுவதின் எஜமானனாகவே காண வேண்டும்.

கூட்டுறவு (கூட்டுப் பண்ணை) உடைமை சோஷலிச சமூக உடைமையின் மற்றொரு வடிவமாகும். சோவியத் யூனியனில் இது அடிப்படையான உற்பத்திச் சொத்துகளில் 10 சதவீதமாக அமைகிறது. 1981இல் சோவியத் யூனியனில் சாகுபடி பரப்பில் ஏறத்தாழ 45 சதவீதத்தில்,

கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுப் பண்ணைகள்) பயிர் செய்தன. மேலும் இவை மாடுகளில் **42** சதவீதத்தையும் கொண்டிருந்தன.

உடைமையின் வடிவங்களுடன் பொருந்துமாறு, சோஷலிச சமூகம் இரண்டு வகையான நிறுவனங்களைக் கொண்டுள்ளது: அரசு தொழில் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத் தொழில் நிறுவனங்கள். முற்கூறப்பட்டது தொழிற்துறை, கட்டுமானத் துறை, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு துறைகளின் உற்பத்தி நிறுவனங்களை உட்கொண்டுள்ளது. சோவியத் வேளாண்மைத் துறையில் அரசு நிறுவனங்கள், அரசுப் பண்ணைகளையும் பண்ணைகள்-ஆலைகளையும் குதிரை வளர்ப்புப் பண்ணைகளையும் உள்ள்டக்கியுள்ளன. வேளாண்மைத் துறையில் உற்பத்தி நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகும். சோவியத் யூனியனில், இவற்றில் கூட்டுப் பண்ணைகள், பல கூட்டுப் பண்ணைகளுக்கு சேவை புரியும் நிறுவனங்கள், கூட்டு மீன் பண்ணைகள், மற்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இவையாவும் அடங்கும்; பிற சோஷலிச நாடுகளில் வேளாண்மை மற்றும் பல்வகை தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும்.

கூட்டுறவு உடைமையின் சோஷலிசத் தன்மை பெரும்பாலும் பொது மக்கள் உடைமையின் ஆதிக்கத்தால் தீர்மானிக்கப்பட்டது. கூட்டுறவு உடைமை சோஷலிசத்தினால் கண்டுபிடிக்கப்படவில்லை, இது முதலாளித்துவத்தின் கீழ் தான் முதலில் தோன்றியது என்பது தெரிந்ததே. எனினும், முதலாளித்துவ தனி உடைமை ஆதிக்கம் செலுத்திய சமூகத்தில், கூட்டுறவுடைமை கூட தனியுடைமை யாகும். பொது மக்கள் உடைமை தலைமை இடத்தைக் கொள்ளும் போதுதான் கூட்டுறவு உடைமை சோஷலிசத் தன்மை கொண்டதாகிறது.

சோஷலிசத்தின் கீழ், பொது மக்கள் உடைமை அதற்கேயுரித்தான சில விசேஷமான அம்சங்களைக் கொண்டுள்ளது. பொது மக்களது உற்பத்திச் சாதனங்களில் பல்வேறு பகுதிகளை இயங்கச் செய்யும் உற்பத்திக் கூட்டுகளைக் கொண்ட தனிபட்ட நிறுவனங்களின் வரம்பிற்குள் அது உண்மையில் செயல்படுகிறது. ஆனால் சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளும் அவற்றின் பல்வகைப்பட்ட பகுதிகளும் தொழில்நுட்ப ரீதியில் ஒன்றிலிருந்து ஒன்று கணிசமாக வேறுபடுகின்றன (தொழில்நுட்பத்தில் முன்னேறியுள்ள தொழில் நிறுவனங்களோடு தொழில்நுட்ப அளவில் கீழ் மட்டத்திலுள்ள நிறுவனங்களும் உள்ளன). எனவேதான், பல்வகைப்பட்ட தொழில் நிறுவனங்களின் கூட்டுகளின் உழைப்பில் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. சில தொழில் நிறுவனங்களில், மற்றவைகளை விட, தொழில்நுட்ப மட்டம் உயர்வாகவும் உழைப்பு எளிதாகவும் உள்ளன.

பல நிறுவனங்களின் உற்பத்தியின் வேறுபட்ட தொழில்நுட்ப மட்டங்களின் விளைவாகவும் அவற்றின் கூட்டுகளின் உழைப்பில் அடிப்படை வேறுபாடுகளின் விளைவாகவும் இக்கூட்டுகள் வெவ்வேறு அளவில் பொருட்களை உற்பத்தி செய்கின்றன, இதனால் பொது விளைபயனில் இவற்றின் பங்கு வெவ்வேறானது. ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும் வெவ்வேறு விதமான பொருளாதார நிர்வாகம் இருக்கின்றது என்ற உண்மையும் ஒரு முக்கியமான பங்காற்றுகிறது: சரிசமமான உற்பத்தி நிலைமைகளில் கூட, மற்றவைகளை விட சில தொழில் நிறுவனங்களில் உற்பத்தி சிக்கனமானதாகவும் உற்பத்திக் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் உழைப்பு உற்பத்தித் திறனும் உயர்வானவையாகவும் உள்ளன.

சோஷலிசத்தின் கீழ், தனிப்பட்ட தொழில் நிறு

வனங்களின் உழைப்புப் பங்களிப்புகளையும் சமூகம் கணக் கில் எடுத்துக்கொள்ள வேண்டும், ஏனென்றால் அத னால், உற்பத்தியின் உள்ளார்ந்த ஆற்றலின் குறை பாட்டால், எல்லா மனிதத் தேவைகளையும் முழுமை யாகப் பூர்த்தி செய்ய இயலவில்லை. தொழில் நிறு வனங்களின் உழைப்புப் பங்களிப்புகள், அவற்றின் கூட்டு களின் செயல் நிறைவேற்றத்திற்கு வெகுமதி அளிப்ப தற்காகக் கணக்கு வைக்கப்பட வேண்டும். இவ்வகைக் கணக்கெடுப்பு தொழில் நிறுவனங்களில்தான் செய்யப்பட முடியும், ஏனென்றால் உற்பத்திப் பொருள் என்பது தனிபட்ட தொழிலாளர்களின் உழைப்பின் பயனாக இருப் பது மட்டுமல்ல, மொத்த கூட்டுகளின் உழைப்பின் பய னாகவே உள்ளது.

சமூக உற்பத்திப் பொருளுக்கு கூட்டுகளின் உழைப்புப் பங்களிப்பைக் கணக்கு வைப்பதும், அடையப்பட்ட பலன் களுக்கேற்ப அவற்றிற்கு வெகுமதியளிப்பதும், சோஷ லிசத்தின் கீழ், தொழில் நிறுவனங்களின் கூட்டுகள் அவற்றிற்கே உரிய சிறப்பு கூட்டு நலனைக் கொண்டுள்ளன என்பதைக் குறிக்கின்றன. அரசினாலும், சமூகத்தினா லும் நிறுவப்படும் திட்டக் குறியிலக்குகளை நிறைவேற்று தல் மட்டும் அவற்றின் உற்பத்தி நோக்கம் அல்ல. கூட்டு களுக்கும் தனி நபர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்கு வதும் எனவே அவர்களுடைய தேவைகளையும் அவர் களுடைய குடும்பங்களின் தேவைகளையும் பூர்த்தி செய் வதும் உற்பத்தியின் விளைபயன்களைச் சார்ந்துள்ளன.

சோஷலிசத்தின் கீழ் மக்கள் பொது உடைமையின் மற்றொரு சிறப்பு அம்சமென்னவெனில், அது தன்னை அரசு உடைமையாக வெளிக்காட்டுகிறது என்பதாகும். இங்கு சோஷலிசத்தின் கீழ் உடைமையின் பொருளாதார சாராம்சம், அது பொது மக்களின் உடைமையாகும்

அதாவது, அது சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களுக்கும் சொந்தமானது, அவர்களின் நலன்களுக்காக நடை முறைப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் அதன் வடிவம் அரசுடைமையாக உள்ளது.

பொது மக்கள் உடைமையின் அரசு வடிவம் என்பது உற்பத்திச் செய்முறையில் பங்கு கொள்ளும் அனைவரும் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை ஆகியவற்றில் பொதுவான திட்ட அளவுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் குறிக்கிறது. சோஷலிச அரசு, தேசியப் பொரு ளாதார வளர்ச்சிக்காகத் திட்டங்களைத் தீட்டுகிறது, இவை அரசு ஆட்சியின் மிக உயர்ந்த சட்டமியற்றும் உறுப்புகளால் ஆமோதிக்கப்பட்டு சட்டங்களாக நிறை வேற்றப்பட வேண்டும். சமூக உற்பத்தியில் பங்கு கொள்ளும் அனைவரும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார விதிகளின்படி நடக்க வேண்டும்.

இவ்வகை பின்பற்றுதல் சோஷலிச சமூக அமைப்பின் ஜனநாயக அடிப்படைகளுடன் முரண்படவில்லை, ஆனால் முற்றிலும் மாறாக, அவற்றின் பரந்த வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குகிறது. பல்வகை வடிவங்களில் சமூக உற்பத்தியை நடத்துவதில் உழைக்கும் மக்கள் திரளி னர் மிக அதிகமாக ஈடுபட்டுள்ளனர்: உற்பத்தி கலந் தாய்வுக் கூட்டங்கள், கண்காணிப்பின் பலவகை வடி வங்களில் பங்கேற்றல் ஆகியவை. சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் இன்றைய கட்டத்தில் சோஷலிச தொ ழில் நிறுவனங்களின் அதிக சுதந்திரத்தை உறுதி செய் வது, உற்பத்திக் கூட்டுகளுக்கு உரிமைகளை விரிவுபடுத் துவதன் மீது பெரும் கவனம் செலுத்தப்படுகிறது. அரசு தொழில் நிறுவனங்களை நடத்துவதில் மக்கள் கூட் டங்களின் ஈடுபாடு எவ்வளவுக்கெவ்வளவு பரந்து உள்

ளதோ, அதே அளவுக்கு சோஷலிச அமைப்பின் ஜன நாயகவாதம் பரந்து காணப்படுகிறது.

ஓர் அரசியல் ஸ்தாபனத்தின் பணியைத் தொடரும் சோஷலிச அரசு மையப் பொருளாதார அமைப்பாக புதிய பொறுப்பையும் ஏற்கிறது, இது சமுதாயம் தழுவிய அள வில் சோஷலிசப் பொருளாதார நடவடிக்கையின் அகப் பொருளாகும்.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் இச்சிறப்பு அம்சங்கள் இதற்கு மிக முக்கியம் வாய்ந்த வையே அல்ல, ஆனால் முன்பே விளக்கியபடி, கம்யூனிச சமூகத்தின் முதல் கட்டமான சோஷலிசத்தின் விசேஷ நிலைமைகளில் அதன் அடிப்படை சாராம்சத்தின் வெளிப் பாடுகளாக மட்டுமே உள்ளன.

சோவியத் யூனியனின், மற்ற பிற சோஷலிச நாடு களின் பொருளாதாரத்தில் தனித்துறை பயிற்சி மேற் கொண்டுள்ள பூர்ஷ்வா சித்தாந்திகள், சோஷலிச அரசு, சமூகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட, உற்பத்திச் சாதனங் களின் ஒரே சுயேச்சையான உடைமையாளர் என்றும், அது சமூகம் முழுவதன் நலன்களுடன் ஒத்திசைவாக இருப்பதற்குப் பதிலாக நடைமுறையில் சமூக நலன்களுக்கு நேர்மாறாயுள்ளது என்றும், சோஷலிச நாடுகளில் அர சுடைமையைப் பொறுத்தமட்டில் ‘‘உழைப்பாளிகள் அன் னியமயப்படுத்தப்பட்டுள்ளனர்’’ என்றும், அவர்கள் ‘‘அதி கார அரசு இயந்திரத்தினால்’’ சுரண்டப்படுகின்றனர் என் றும் கூறுகிறார்கள் (ஒ. சிக், ரா. கராடி).

சோஷலிசத்தின் தனிப்பட்ட சில வரலாற்று கட்டங் களில் மேற்கூறியபடி ‘‘உழைப்பாளிகள் அன்னியமயப் படுத்தப்படுவது’’ நடக்கலாம். ஆனால் இதற்குக் காரணம் பொது மக்கள் உடைமையல்ல, மாறாக இதன் யதார்த்த நிறைவேற்றத்தில் உள்ள ஒரு சில குறைகளே (அளவிற்

கதிகமான மையப்படுத்தல், உற்பத்தியின் நிர்வாகத்தில் உழைப்பாளிகளின் பங்கேற்பை அலட்சியப்படுத்தியது, உற்பத்தியின் இறுதி முடிவுகளுக்கும் ஊதியத்திற்கும் தொடர்பின்மை, இன்ன பிற) காரணமாகும்.

## அரசு (பொது மக்களின்) சோஷலிச உடைமைக்கும் முதலாளித்துவத்தின் கீழ் அரசுடைமைக்கும் இடையேயுள்ள வேறுபாடு

முன்பே காட்டியபடி, உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் மிக முக்கியமான வடிவம் பொது மக்கள் (அரசு) உடைமையாகும்.

சோஷலிசத்தின் கீழ் அரசுடைமை, அரசு முதலாளித்துவ உடைமை மற்றும் அரசு-ஏகபோக உடைமையிலிருந்தும் அடிப்படையில் மாறுபட்டுள்ளது.

ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் அரசுடைமை உள்ளது. உண்மையில், பூர்ஷ்வா அரசு பல்வகைப்பட்ட சொத்துகளை உடைமையாகக் கொண்டுள்ளது: தொழில் துறை, போக்குவரத்து மற்றும் எரிசக்தித் தொழில் நிறுவனங்கள், தகவல் தொடர்பு வசதிகள், பரந்த நிலப் பரப்புகள், காடுகள், இராணுவ தளவாடங்கள் மற்றும் ஆயுதங்கள் முதலியவற்றை உடைமையாகக் கொண்டுள்ளது. இது நிதி ஆதாரங்களையும் கூட கொண்டுள்ளது, மேலும் அரசு வரவு செலவு திட்டத்தை தீட்டுகிறது.

சில பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் அரசு முதலாளித்துவ உடைமையின் வளர்ச்சி, தனியார் மூலதன ஆதிக்கத்தின் அடிப்படைகளை குலைப்பதாலும், இத் தனியார் மூலதனம் அரசு உடைமையால் வெளி தள்ளப்படுவதாலும், அரசு முதலாளித்துவ உடைமையை சோஷலிச சமூக உடைமை என்கின்றனர்.

இன்றைய நிலைமைகளில், பெரிய அமெரிக்க கார்ப் பொரேஷன்களுக்கு உடைமையின் வடிவத்தை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் அவை தாமா கவே தங்களை முதலாளிகளின் அதிகாரத்திலிருந்து விடு வித்துக் கொள்கின்றன, மேலும் சுரண்டலை ஒழிக்கின் றன என்று அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஜா. கல்ப்ரெய்த் நிரூபிக்க முயலுகிறார். அது "புதிய சோஷலி சத்திற்கு" ஒப்பாகும் என்று அவர் நம்புகிறார்.*

குட்டி முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் கூட ஏக போகங்களின் ஆட்சியாதிக்கம் மற்றும் அடக்குமுறையைக் கட்டுப்படுத்தும், மேலும் ஏகபோகக் கொள்ளையிலிருந்து சிறு தொழில் அதிபர்களைப் பாதுகாக்கும் அரசுடைமை யின் மீது தங்களது முழு நம்பிக்கையை வைத்துள்ளனர்.

எனினும், முதலாளித்துவத்தின் கீழ் அரசுடைமை முதலாளித்துவமானது என்பதை மனதில் கொள்ள வேண்டும், ஏனென்றால் முதலாளி வர்க்கத்தின், எல்லா வற்றிற்கும் மேலாக ஏகபோக முதலாளி வர்க்கத்தின் நிர்வாக உறுப்பாக நிடைமுறையில் உள்ள பூர்ஷ்வா அர சிற்கு இது சொந்தமாயுள்ளது. எனவே அரசுடைமை முதலாளி வர்க்கத்தை மேலும் வளப்படுத்தப் பயன்படுத் தப்படுகிறது. அரசு தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் தனி முதலாளிகளுக்கு குறைந்த விலைகளில் விற்கப்படுகின்றன. அது ஏகபோக லாபங் களை அதிகரிக்க உதவுகிறது. மேலும் அதே பொழுது அரசு தொழில் நிறுவனங்களை நஷ்டம் உண்டாக்கு பவையாக மாற்றுகிறது. அது முதலாளித்துவ உற்பத்தி யின் முரண்பாடுகள் மற்றும் இடர்ப்பாடுகளின் காரண

* J. K. Galbraith, *Economics and Public Purpose,* The New American Library, inc., New York, 1975, p. 268.

மாக பூர்ஷ்வா அரசு ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் அல்லது பொருளாதாரத்தின் எல்லா கிளைகளையும் கூட பொறுப்பேற்றுக்கொள்கிறது. போர்க் காலங்கள் அல்லது போருக்குப் பிற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவு, அபரிமிதமான உற்பத்தி நெருக்கடிகள், அவற்றின் காரணமாக முதலாளித்துவ சமூகத்தில் சமூக முரண்பாடுகள் தீவிரமாகப் பெருகுதல் போன்ற பொருளாதார ரீதியில் கடினமான நிலைமைகளின் போதும் முதலாளித்துவ உற்பத்தியின் சிரமங்களும் முரண்பாடுகளும் ஒரு கடுமையான திருப்பத்தை மேற்கொள்ளும் போதும் இவ்வகைப் பொறுப்பேற்புகள் குறிப்பாக அடிக்கடி நிகழும்.

ஏகாதிப்பத்தியத்தின் கீழ் அரசு முதலாளித்துவ உடைமை பெரும்பாலும் இரண்டு வழிகளில் அமைக்கப்பட்டுள்ளது: பட்ஜெட்டிலிருந்து புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டியமைப்பதன் மூலமும் தொழில் நிறுவனங்களையும் முழுத் தொழில் கிளைகளையும் முதலாளித்துவ நாட்டுடைமையாக்கல் மூலமும் அமைக்கப்படுகிறது.

முதலாளித்துவ நாடுகளில் அரசுடைமை மிகப் பெரிய அளவில் இரண்டாவது உலக யுத்தத்தின் போது (1939–1945) நடந்தது. உதாரணமாக, கிரேட் பிரிட்டனில் அரசுத் தொழில் நிறுவனங்களைக் கட்டியமைப்பது தனியார் கம்பெனிகளைக் கட்டியதுடன் ஒப்பிடும் பொழுது ஒரு கணிசமான பங்காக விளங்கியது. 1940லிருந்து 1945 வரை அமெரிக்காவில் புதிய தொழில் நிறுவனங்களை அமைப்பதில் அரசின் பங்கு 65% சதவிகிதமாக இருந்தது. விமானக் கட்டுமானம், கப்பல் கட்டுமானம், அலுமினிய தொழில் உற்பத்தி, செயற்கை ரப்பர் மற்றும் வெடிப்பொருள் தொழில் உற்பத்தி, அணுசக்தி தொழில்துறை ஆகிய

வற்றிற்கு அரசு பண உதவி அளித்தது. போருக்குப் பின் ஆயுதப் போட்டியின் காரணமாக அரசுடைமை மிக விரைவாக வளர்ச்சியடைந்தது.

இரண்டாவது உலக யுத்தத்தில் பாசிசத்தின் மீதான வெற்றியும் உலக சோஷலிச அமைப்பின் உருவாக்கமும் சர்வதேச அரங்கில் அணிசேர்க்கையில் சமூக முன்னேற்றம், ஜனநாயகம் மற்றும் அமைதிக்காகப் போராடும் மக்கள் இனங்களுக்கு ஆதரவாக அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தின. இந்நிலைமைகளில் ஏகாதிபத்திய நாடுகளின் மக்கள் திரளினர் ஏகபோக ஆட்சிக்கு முடிவுக் கட்ட வேண்டும் என்று கோரினர். அடிப்படை ஜனநாயக மாற்றங்களுக்கான போராட்டத்தின் ஒரு முக்கிய கருவியாக நாட்டுடைமையாக்கலைத் தொழிலாளி வர்க்கம் கண்டது. கம்யூனிஸ்டுகள்தாம் பெரிய முதலாளித்துவ தொழில் நிறுவனங்களை நாட்டுடைமையாக்குவதற்காக தொடர்ச்சியாகப் போராடினர். சில பூர்ஷ்வா கட்சிகள் கூட, தயக்கங்கள் இருந்த போதிலும் நாட்டுடைமையாக்கலை ஆதரித்தன. கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஆஸ்திரியாவின் முதலாளித்துவ அரசாங்கங்கள் பல மாறுபட்ட அளவுகளில் நாட்டுடைமையாக்கலை நடைமுறைப் படுத்தின, ஆனால் அதற்கு ஒரு பூர்ஷ்வா தன்மையை அளித்தன.

தொழில் நிறுவனங்களையும் பிற நிறுவனங்களையும் முதலாளித்துவ அரசின் உடைமையாக மாற்றுவது முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பூர்த்தி செய்தது. இது தொழிற்துறை மற்றும் இன்சுரன்ஸ் துறையின் லாபகரமான கிளைகளையும் பெரிய தொழில் நிறுவனங்களையும் பாதிக்கவில்லை, இவையாவும் ஏகபோகங்களின் கைகளிலேயே தொடர்ந்து இருந்தன.

முதலாளித்துவத்தின் கீழ் தொழில் நிறுவனங்கள்

அரசுடைமையாக மாற்றப்படும் போது, அவற்றின் முன்னாள் உடைமையாளர்கள் வழக்கமாக அரசிடமிருந்து ஒரு பெரும் இழப்பீட்டுத் தொகையைப் பெறுகின்றனர். நாட்டுடைமையாக்கலுக்கு முன்பு தொழில் நிறுவனங்களின் உடைமையாளர்கள் லாபத்தின் வடிவில் வருமானம் பெற்றனர், மேலும் வருமானத்தின் அளவு சந்தையின் ஏற்ற இறக்கங்களைச் சார்ந்துள்ளது. ஆனால் தொழில் நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படும் போது முன்னாள் உடைமையாளர்கள் அரசு உத்தரவாதம் அளிக்கப்பட்ட வட்டியின் வடிவத்தில் ஒரு நிலையான வருடாந்திர வருமானம் பெறுகிறார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் உடைமையாளர்கள் தம் வருடாந்திர வருமானம் உத்தரவாதம் செய்யப்பட்ட அரசுக் கடன் பத்திரங்களைப் பெறுகின்றனர். நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களை நடத்துவதற்கு விசேஷக் குழுக்கள் வேலைக்கமர்த்தப்படுகின்றன. இவை முன்னாள் உடைமையாளர்களையும் பெரிய தொழில்முனைவர்களுடன் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள பூர்ஷ்வாக் கட்சிகளின் செயலாளர்களையும் உள்ளடக்கி உள்ளன. இவ்வகை நாட்டுடைமையாக்கல் ஏகபோக உடைமையின் வடிவத்தை மாற்ற மட்டுமே செய்கிறது, ஒரு குறிப்பிட்ட அளவு ஏகபோக லாபத்தைப் பெறும் முறைகளையும் மாற்றுகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களால் உருவாக்கப்படும் லாபம் அரசைச் சென்றடைகிறது. இதில் ஒரு கணிசமான பெரும் பகுதியை அரசு, இழப்பீடு மற்றும் வட்டி என்ற வடிவங்களில் முன்னாள் உடைமையாளர்களுக்கு அளித்து விடுகிறது.

நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் முன்னாள் உடைமையாளர்களால் பெறப்படும் இழப்பீடு, அவர்கள் தங்களது மூலதனங்களை குறைந்த லாபம்

தரும் உற்பத்திக் கிளைகளிலிருந்து அதிக லாபம் தரும் கிளைகளுக்கு மாற்றுவதை சத்தியமாக்குகிறது. வேறு சொற்களில் கூற வேண்டுமானால், நாட்டுடையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களின் உயர் பதவிகள் ஏகபோகப் பிரதிநிதிகளால் கைப்பற்றப்படுவதும், முன்னாள் உடைமையாளர்களுக்கு அரசு பெரும் இழப்பீடுத் தொகைகளை வழங்குவதும் முதலாளித்துவத்தின் கீழ் அரசுடைமை ஏகபோகங்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை குறிக்கின்றன.

சில வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் (இங்கிலாந்து, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஆஸ்திரியா) முன்பு நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் சில நேரங்களில் ஏகபோக உடைமையாகத் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன, அதாவது தனியுடைமையாக்கல் நடைபெறுகிறது.

இவ்வகை தனியுடைமையாக்கல் ஏகபோகங்களுக்கு புதிய செல்வங்களைக் கொண்டு வருகிறது. அரசு வழக்கமாக இத்தொழில் நிறுவனங்களை ஏகபோகங்களுக்கு குறைந்த விலைக்கு விற்கிறது.

ஆகவே முதலாளித்துவ சமூகத்தில் அரசுடைமை உருவாதலுடன் உற்பத்தி உறவுகளின் சாராம்சம் மாறுவதில்லை என்றும் உற்பத்திச் சாதனங்கள் முதலாளி வர்க்கத்தின் கைகளிலேயே தொடர்ந்து இருக்கின்றன என்றும் நாம் காண்கிறோம். எனினும் அரசு முதலாளித்துவ உடைமை தோன்றியதே தனியுடைமையின் நிலைமறுப்பைக் குறிக்கிறது, தனி சுவீகரித்தல் இன்றியே இருக்க முடியும் என்ற சாத்தியத்தையும் காட்டுகிறது. அரசுடைமை நிலவுவதே தனியுடைமை சாசுவதமானது என்ற பூர்ஷ்வா கருத்தை தவறு என்று நிரூபிக்கிறது.

அதே போது, அரசு ஏகபோக உடைமை உருவாதல்,

உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தில் புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துகின்றது. அரசுத் தொழில் நிறுவனங்களில் பல கூலித் தொழிலாளர்கள் வேலைச் செய்கிறார்கள். வேலை நிறுத்தங்களின் போது இவர்கள் தனிப்பட்ட முதலாளிகளையல்ல, முழு முதலாளி வர்க்கத்தை எதிர்க்கின்றனர். தொழிலாளி வர்க்கம் ஏகபோகங்களின் ஆட்சியதிகாரத்தை அழிப்பதற்கும் அரசு முதலாளித்துவ உடைமையின் நிர்வாகத்தின் மீது ஜனநாயகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் தன் போராட்டங்களின் மூலம் ஒரு வாய்ப்பைப் பெறுகிறது.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் கூட அரசுடைமை உள்ளது. இங்கு அரசு தொழில்துறை, வேளாண்மை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம், வங்கித் துறையில் நிறுவனங்களை உடைமையாகப் பெற முடியும்.

இந்நாடுகளின் வளர்ச்சி அனுபவம் இவ்வகை உடைமை இரண்டு வழிகளில் தோன்ற முடியும் என்பதைக் காட்டுகின்றது. முதலாவதாக, நாட்டின் அரசாங்கம், காலனி ஆட்சியதிகாரிகளின் முன்னாளைய உடைமை மீது கட்டுப்பாடு பெற முடியும் அல்லது வெளிநாட்டு ஏகபோகங்கள் மற்றும் உள்நாட்டு பெரிய தொழிலதிபர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களை நாட்டுடைமையாகக் முடியும். இரண்டாவதாக, அது புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டியமைக்க முடியும். பெரும்பாலான விடுதலை பெற்ற நாடுகளில் அரசுடைமை உருவாதல், அடிப்படை சமூக மாற்றங்களுக்கான போராட்டத்தில் ஜனநாயகச் சக்திகளுக்குப் புதிய வாய்ப்புகளை அளிக்கின்றது.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் அரசுத் துறையின் வளர்ச்சி முற்போக்கானது, ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கொண்டது. அதிகாரத்தில் உள்ளவர்களை

யும் சமூகத்தின் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளையும், அரசின் திசையமைவையும் சார்ந்து பொருளாதாரத்தின் மீது அதன் தாக்கத்தின் அளவு நாட்டிற்கு நாடு வேறுபடு கிறது என்பதையும் வாழ்க்கை காண்பிக்கிறது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் வேறுபட்ட தனிப் பண்புகளைக் கொண்டுள்ளன: சுதந்திரம் பெற்ற பின்பு, அவற்றில் சில புரட்சிகரமான ஜனநாயக வழியை மேற்கொண்டன, பிற நாடுகள் சோஷலிச மாற்றங்களின் வழியைத் தேர்ந் தெடுத்தன, மற்றும் சில நாடுகளில் முதலாளித்துவ உற் பத்தி உறவுகள் தலைமையான இடத்தைப் பெற்றன.

சோஷலிச மாற்றங்களின் வழியை மேற்கொண்டுள்ள புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில், உடைமை உறவு களில் முன்னேற்றமான மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெரிய மற்றும் நடுத்தர அளவு தனியுடைமை கட்டுப்படுத்தப்படுகிறது, உற்பத்திச் சாத னங்களின் மீதான அரசு மற்றும் கூட்டுறவு உடைமை யின் வளர்ச்சி தீவிரப்படுத்தப்படுகிறது. இந்நாடுகளில் அர சுடைமை தோன்றி வளர்தல், ஏகாதிபத்திய ஏகபோகங் களுக்கும் பெரிய தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் எதிராகத் திருப்பப்படுகிறது. இங்கு அரசின் குறுக்கீடு, முதலாளி வர்க்கத்தைப் பொருளாதாரத்தின் மிக முக் கியமான கிளைகளிலிருந்து நீக்கிவிட்டு, அயல்நாட்டு மற் றும் உள்நாட்டு மூலதனத்தின் செயல்பாட்டுத் துறையைக் கட்டுப்படுத்துகிறது. பெரும் தொழிற்துறை, எரி சக்தித் துறை, அயல்நாட்டு வாணிபம் மற்றும் நிதித் துறை போன்ற மிக முக்கியமான துறைகளில் அரசின் வலுப் பெற்ற நிலைகள் ஒரு சுதந்திரமான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கும், சிக்கலான சமூகப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கும் உதவி செய்கின்றன.

தேசிய முதலாளி வர்க்கத்தால் அரசியல் பொருளா

தாரக் கொள்கை வரையறுக்கப்பட்டுள்ள நாடுகளில், முதலாளித்துவ வளர்ச்சியின் பாதையைப் பின்பற்றும் நாடுகளில் அரசுடைமை உருவாதல், உற்பத்தியின் அதிக லாபகரமான துறைகளில் தனியார் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் துறைகளிலேயே பெரும்பாலும் கட்டுப்படுத்துப்பட்டுள்ளது. இந்நாடுகளில் பொருளாதாரத்தில் அரசின் குறிக்கீடு, தேசிய முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்காக முடுக்கிவிடப்படுகிறது, அது தனி மூலதனத்தின் வளர்ச்சியைத் தடுப்பதில்லை. முதலாளித்துவ வழியைப் பின்பற்றும் புதிதாக விடுதலைப் பெற்ற நாடுகளில் அயல்நாட்டு மற்றும் தனியார் தேசியத் தொழில் நிறுவனங்கள் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பங்கைத் தொடர்ந்து ஆற்றுகின்றன.

வளரும் நாடுகளின் அரசுடைமையின் தன்மை எவ்வளவு முரண்பாடு உள்ளதாக இருப்பினும் அது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போக்குகளின் ஒரு புறநிலையான வெளிப்பாடாகும், ஏனென்றால் அது அயல்நாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துகிறது. புதிதாக விடுதலைப் பெற்ற நாடுகளில் உருவாகி வளர்ந்து வரும் தேசிய உற்பத்திச் சக்திகள் அவற்றின் பொருளாதாரச் சுதந்திரத்தை வலுப்படுத்த உதவுகின்றன.

வழக்கமாக, அரசுத் துறையின் வளர்ச்சி வளரும் நாடுகளில் மூலதனத் திரட்சியின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிக முக்கியமானதாகும், மேலும் இது நாட்டுப்புறங்களில் உள்ள உபரியான வேலைச் செய்யும் ஆற்றலுடைய மக்களைத் தொழிற்துறையில், போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்துவதற்கு உதவி செய்கிறது, உள்நாட்டுச் சந்தையின் திறனைப் பெருக்குகிறது, அதன் மூலமாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்ற மிகக் கடினமான பிரச்சினையைத் தீர்க்க உதவுகிறது. அரசு

டைமை, அதன் வளர்ச்சி, வளரும் நாடுகளின் பொருளாதாரத்தில் அரசின் குறுக்கீட்டின் பெருக்கம் முதலியன தொலை நோக்குத் திட்டங்களின் அடிப்படையில் தேசிய வளர்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### சோஷலிசத்தின் கீழ் உற்பத்திச் சாதனங்களின் மீதான கூட்டுறவு உடைமை

கூட்டுறவு உடைமை (கூட்டுப் பண்ணை உடைமை) என்பது சோஷலிசத்தின் கீழ் சமூகவுடைமையின் மற்றொரு வடிவமாகும். அரசு பொதுமக்கள் உடைமையின் தேவையைப் போன்று கூட்டுறவு உடைமையின் தேவை புறநிலையான காரணங்களினால் உருவாகின்றது, இது எல்லா சோஷலிச நாடுகளிலும் நிலவுகிறது.

தொழிலாளி வர்க்கத்தினால் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பணிகளில் மிக முக்கியமான ஒன்று, விவசாய மக்களை புதிய வாழ்க்கை முறைக்கு படிப்படியாகத் திருப்புவதும், சிறிய விவசாயப் பண்ணைகளைப் பல்வகைப்பட்ட வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் இழுப்பதுவுமாகும்.

மக்கள் ஆட்சியதிகாரம் வேளாண்மையில் இரு வேறுபட்ட பொருளாதார அமைப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது: இவற்றில் ஒன்று பெரிய நிலவுடைமையாளர்கள் அல்லது குத்தகை முதலாளித்துவ உரிமையார்களின் தனியுடைமையை அடிப்படையாகக் கொள்கிறது, மற்றொன்று சிதறுண்ட விவசாயப் பண்ணைகளால் உருப்படுத்திக் காட்டப்படுகின்றது. எனவேதான் சோஷலிச மாற்றங்கள் இரண்டு வழிகளில் நடத்தப்படுகின்றன: முதலாவதாக, பெரிய நிலவுடைமையாளர்களிடமிருந்து பறிக்கப்

பட்ட பண்ணைகளின் அடிப்படையில் அரசு வேளாண்மை நிறுவனங்களை அமைத்தல்; இரண்டாவதாக, கூட்டுறவு வழியில் விவசாயிகள் தாமாகவே முன்வருதல்.

சோவியத் யூனியனிலும் சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பெரும்பாலான பிற நாடுகளிலும் வேளாண்மை, முதன்மையாகச் சிறு விவசாயப் பண்ணைகளைப் பெரிய சோஷலிசப் பண்ணைகளாக மாற்ற உதவும் கூட்டுறவு மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

சிறிய பண்ணைகளில் இயந்திரங்களையும் மற்றும் விவசாயத் தொழில்நுட்பத்தின் நவீன சாதனைகளையும் பயன்படுத்துவது கடினமாகும், உழைப்பின் உற்பத்தித் திறன் மிகக் குறைந்த நிலையில் உள்ளது. அதன் விளைவாக, சிறு விவசாயப் பண்ணை முறை, விவசாயியின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவோ அல்லது அவனது வேலையைச் சுலபமாக்கவோ முடியாது. பெரிய அளவிலான சோஷலிச உற்பத்தி மட்டுமே விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அடிப்படையை அளிக்க முடியும். மேலும் சோஷலிசத் தொழிற்துறையின் உதவியிருந்தும் கூட, சிறு தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி, நகரங்களில் வாழும் ஜனத்தொகையின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. சிறு பண்ட உற்பத்தி முதலாளித்துவ அடிப்படைகள் தோன்றுவதற்கும் இடமளிக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். சோஷலிசப் புரட்சியின் நலன்கள், நாட்டுப்புறத்தில் முதலாளித்துவம் வளர்தலின் அபாயத்தை ஒழிக்க வேண்டியதை அவசியமாக்குகிறது. சிறு அளவு விவசாயப் பண்ணை முறையின் சோஷலிச மாற்றத்திற்கான வழிகள் யாவை?

எளிய கருவிகளைப் பயன்படுத்தி தனது சொந்த உழைப்பு மூலம், விவசாயி உணவுப் பொருட்களையும்

தொழிற்துறைக்கு வேண்டிய கச்சாப் பொருட்களையும் உற்பத்தி செய்கிறான். ஆனால், தொழிற்துறையில் குறிப் பிடத்தக்க நிலைமைகளின் கீழ், ஆலைகளையும் தொழிற் சாலைகளையும் முதலாளி வர்க்கத்திலிருந்து பறிமுதல் செய்வது சாத்தியமாகும், சிறு விவசாயப் பண்ணைகள் ஒருபோதும் நாட்டுடைமையாக்கப்படக் கூடாது.

சிறு விவசாயிகளைப் பொறுத்தமட்டில், அவர்களின் தனியுற்பத்தி மற்றும் தனியுடைமையை ஒன்றுபடுத்திக் கூட்டாக்குவது மக்கள் ஆட்சியதிகாரத்தின் பணியாகும். இங்கு, எக்காரணத்தை முன்னிட்டும் வன்முறை பயன் படுத்தப்படக் கூடாது. விவசாயிகளின் படிப்படியான, தன் னிச்சையான ஒன்றுபடுத்துதல் மூலமாக மட்டுமே கூட் டுறவுச் சங்கங்களை நிறுவ முடியும். இயற்கையாகவே, புதி தாக அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பாட்டாளி வர்க்கத்தின் அரசின் ஆதரவு மற்றும் பொருளாதார உதவியின்றி இருக்க முடியாது.

பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு, வழக்கமாக எளிய நிபந்தனைகளின் பேரில், இயந்திரங்கள் மற்றும் உரங்கள் அளிக்கிறது, கடன்களும் மற்ற பிற பணவுதவியும் பெரிய அளவில் வழங்குகிறது.

ஆகவே, சோஷலிச நாடுகளின் அனுபவம் காண்பிப் பது போல, விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றிணைத் தல் நாட்டுப்புறங்களில் சோஷலிச உடைமை மற்றும் சோஷலிச பண்ணை முறைகளை நிறுவுவதற்கான முக் கியமான வழியாகும். இது வேளாண்மை சார்ந்த உற் பத்தி நிலை மற்றும் உழைக்கும் விவசாயிகளின் நலன் களுடன் ஒத்திசைவாக உள்ளது. கூட்டுறவுதான் கூட்டு வேளாண்மை முறையின் மிக எளிய வடிவமாகும். இது, விவசாயி எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய மற்றும்

அவரது தனி நலன்களை அரசு முழுமையின் நலன்களுடன், பொதுமக்கள் எல்லோரின் நலன்களுடன் சரியாகப் பொருத்துகின்ற ஒரு வடிவமாகும்.

சோவியத் யூனியனில் கூட்டுறவுமயப்படுத்தல் பல வடிவங்களில் செயலுருப்படுத்தப்பட்டது. முதலில் விவசாயிகள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இவ்வகைக் கூட்டமைத்தலின் கீழ், விவசாயிகள் கூட்டாகக் கொள்வினைகள் செய்யவும், ஓரளவாக நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யவும் பின்பு இவற்றை கூட்டுறவு அங்கத்தினர்களுக்கு விற்பதிலும் ஒத்துழைத்தார்கள். பின்பு, சப்ளை துறை, விற்பனை துறை, கடனுதவி வசதி, பண்ணை விளைபொருளைத் தயாரித்தல், சில வேலைகளை கூட்டாகச் செய்தல் மற்றும் நிலத்தின் கூட்டுப் பயிரிடுதலின் சங்கங்கள், முதலியவற்றில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. மேலும் சிக்கலான, நிலையான உற்பத்தியாளர்-கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இவ்வகைப் படிப்படியான கூட்டுறவில் விவசாயிகள் கூட்டாக வேலை செய்யவும், பெரிய அளவு கூட்டுப் பண்ணை முறையின் அனுகூலங்களை உணர்ந்து பாராட்டவும் கற்றுத் கொள்கின்றனர்.

சோவியத் யூனியனில், உற்பத்தியாளர் கூட்டுறவின் அடிப்படை வடிவமாக ஆர்டெல்களை நடைமுறையே முன்வைத்தது.

இவ்வகைப் பண்ணையில் அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் மட்டும் சமூகமயமாக்கப்படுகின்றன. ஆர்டெல் உறுப்பினர்களின் வருவாயின் மிக முக்கியமான ஊற்றுவாய் சமூகக் கூட்டுப் பயிரிடுதலாகும். இவர்களில் ஒவ்வொருவரும் வேளாண்மை விளைபொருளின் உற்பத்திக்கு தனது சொந்த உழைப்பைப் பங்களிக்க வேண்டும். இச்

சங்கத்தின் வருவாயின் ஒரு பகுதி அதன் உறுப்பினர் களின் சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன் படுத்தப்படுகிறது, அவர்களது உழைப்பு உள்ளீட்டின் அளவு மற்றும் தரத்திற்கேற்ப வினியோகிக்கப்படுகிறது; மற்றொரு பகுதி உற்பத்தியைப் பெருக்கவும், பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. தவிரவும், இச்சங்க உறுப்பினர்கள் வழக்கமாக, சிறிய எண்ணிக்கையில் கால்நடைகளையும் வளர்ப்புப் பறவை களையும் கொண்ட துணைப் பண்ணைகளையும் வைத் திருப்பர்.

வேளாண்மையைக் கூட்டுறவுமயப்படுத்தல், கூட்டுறவு உடைமை உருவாதல் போன்றவை சில பொது அம்சங் களைக் கொண்டுள்ளன என்று உலக சோஷலிச அமைப் பின் வளர்ச்சியனுபவம் காட்டுகிறது: படிப்படியான மற் றும் தன்னிச்சையான ஈடுபாடு, கூட்டுறவின் கீழ்மட்ட வடி வங்களிலிருந்து (சப்ளை மற்றும் விற்பனை, நுகர்வோர் முதலியன) உற்பத்தியாளர் கூட்டுறவின் உயர்ந்த வடி வத்திற்கு மாறுதல், சோஷலிச அரசின் வழிக்காட்டும் மற்றும் உதவி போன்ற பொது அம்சங்களைக் கொண் டுள்ளன.

அதே சமயத்தில், சோஷலிசத்தை நிர்மாணிக்கும் ஒவ்வொரு நாட்டினுடைய திட்டவட்டமான வரலாற்று மற்றும் சமூக பொருளாதார நிலைமைகள், வேளாண்மை கூட்டுறவின் மீது ஒரு குறிப்பிட்ட அடையாள முத்தி ரையை விட்டுச் செல்கின்றன. கூட்டுறவுச் செயல்முறை யின் கால வரையறையிலும், கூட்டுறவின் திட்டவட்ட மான வடிவங்களிலும் வேற்றுமைகள் உள்ளன. சோவி யத் யூனியனில் ஆர்டெல்களுக்கு என்றென்றைக்குமாக இலவசமாக அளிக்கப்பட்ட அரசு நிலம் கூட்டுறவுமயப் படுத்தப்பட்டது.

பிற சோஷலிச நாடுகளில் விவசாயிகளின் தனியுடைமையாக நிலம் அளிக்கப்பட்ட போது, கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. விவசாயிகள் கூட்டுப் பண்ணைகளில் ஒன்றிணைந்த போது, நிலம், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உடைமையாகியது.

அத்துடன் மற்ற சிறப்பியல்புகளும் இருந்தன. இவ்வாறாக, முதலாளித்துவ அமைப்பின் கீழ் கூட கூட்டுறவு பரவலாகக் காணப்பட்ட நாடுகளில் (பல்கேரியா, செக்கோஸ்லோவேக்கியா முதலிய நாடுகளில்) மக்கள் ஆட்சியதிகாரம் கூட்டுறவு இயக்கத்தின் துண்டாடுதலுக்கு ஒரு முடிவு கட்டி, அவ்வியக்கத்தை ஜனநாயகமாக்கிய ஒரு கொள்கையைப் பின்பற்றியது, மேலும் பரிவர்த்தனைத் துறைக்கு வேண்டிய எல்லா கூட்டுறவுச் சங்கங்களையும் ஒரு தனித்த அமைப்பாக ஐக்கியப்படுத்தியது. அரசு உதவியோடு வளர்ந்து கொண்டே கூட்டுறவு, நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் இடையே உள்ள பொருளாதாரப் பிணைப்புகளின் ஒரு முக்கிய வடிவமாக ஆயிற்று. அது வாணிபத் துறையில் ஊகமான முதலாளித்துவ அம்சங்களை நீக்க உதவியது.

உலக சோஷலிச அமைப்பு உருவாதலின் விளைவாகத் தோன்றிய புதிய நிலைமைகளும், வேளாண்மையின் சோஷலிச மாற்றத்திற்கான பொருளாயத,தொழில் நுட்ப மற்றும் ஸ்தாபன ரீதியான முன்னிபந்தனைகளை உருவாக்குவதில் சோவியத் நாட்டின் அனுபவத்தையும் உதவியையும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளும் சோஷலிச நாடுகளில் விவசாயப் பண்ணைகளின் வெற்றிகரமான கூட்டமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன.

சோஷலிசக் கூட்டுறவு உடைமை உருவாதல் ஒரு கடுஞ் சிக்கலான செயல்முறையாகும். ஏனென்றால் இது தனி

விவசாயியின் பண்ணை முறையிலும் சிறுவுடைமையாள ரின் மனப் போக்கு மற்றும் அன்றாட வாழ்க்கையின் முழு முறையிலும் சமூக, பொருளாதார, கலாசார மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

விவசாயிகள் செல்வர், வறியர் என்ற சமூக அடுக்கு களாகப் பிரிக்கப்படுவதற்கு கூட்டுறவு முடிவு கட்டியது. அரசின் உதவியால் வேளாண்மையின் தொழில்நுட்ப மட்டத்தின் வளர்ச்சி, விவசாயிகளின் உழைக்கும் நிலைமை களை மேம்படுத்துகிறது, உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்கிறது. நாட்டுப்புற உழைக்கும் மக்கள், இயந்திர ஓட்டிகளாகவும், பால்கறக்கும் இயந்திரங்களை இயக்குபவர்களாகவும், இதரர்களாகவும் புதிய திறமை களைப் பெறுகிறார்கள். கூட்டமைத்தல், விவசாயிகளின் நலனை ஒரு கணிசமான அளவு மேம்படுத்தவும் அவர் களின் கலாசார மற்றும் தார்மீக வளர்ச்சி நிலையை உயர்த்தவும் உதவுகிறது.

### உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிசக் கூட்டுறவு உடைமைக்கும் முதலாளிவத்தின் கீழ் கூட்டுறவு உடைமைக்குமிடையேயுள்ள வேறுபாடு

சோஷலிசத்தின் கீழ் கூட்டுறவு உடைமை முதலாளித்துவ நாடுகளின் கூட்டுறவு உடைமையிலிருந்து அடிப்படையில் வேறுபடுகிறது. முதலாளித்துவத்தின் கீழ் சப்ளை, விற் பனை, நுகர்வோர், சில நேரங்களில் உற்பத்தியாளர் கூட் டுறவுச் சங்கங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. முத லாளித்துவ நாடுகளில் வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளால் பரஸ்பர உதவிக்காகவும் தங்கள் பண் ணைகளைப் பெரிய வேளாண் மற்றும் தொழிற்துறை

மூலதனத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள் வதற்காகவும் அமைக்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள், 19ஆவது நூற்றாண்டின் பிற் பகுதியிலேயே வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் முதலில் தோன்றின என்றும் இரண்டாவது உலக யுத் தத்துக்கு (1939–1945) பின் அவற்றின் எண்ணிக்கை மிக விரைவாக அதிகரித்து வருகின்றது என்றும் வர லாறு காட்டுகிறது. அவற்றின் வளர்ச்சி பிரான்ஸ், ஜெர் மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, ஸ்பெயின், ஜப்பான் போன்ற நாடுகளில் ஓர் உயர்ந்த அளவை எட்டியுள்ளது.

"கூட்டுறவு சோஷலிசத்தைப்" பற்றிய மேற்கூறிய கருதுக்கோளுக்கேற்ப, கூட்டுறவு என்பது "முதலாளித் துவம் சோஷலிசமாக அமைதியாகவும் படிப்படியாகவும் மாறும்" முக்கியமான சாதனங்களில் ஒன்றேயாகும். ஏனெனில் முதலாளித்துவத்தின் கீழ், கூட்டுறவு உடைமை யில் சோஷலிசத்தின் அம்சங்கள் உள்ளன. இந்தத் தத் துவம் நைம்ஸ் சிந்தனைப் பள்ளியின் பிரதிநிதிகளால் (பிரான்சில் சா. ஷிட் மற்றும் பிறர்) பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது. நுகர்வோர் கூட்டுறவுச் சங் கங்கள் கூட முதலாளித்துவத்தை சோஷலிசமாக மாற் றம் செய்ய முடியும் என்று இவர்கள் அறுதியிட்டுக் கூறு கின்றனர். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பரந்த அளவில் வளர்வதன் மூலம் முதலில் வாணிகத்தின் மீது ஓர் ஆதிக்கம் பெற முடியும், பின்பு அவை வள ஆதாரங் களைத் திரட்டத் திரட்ட, தொழில்துறை நிறுவனங்களை வாங்க இயலும், முடிவில் கூட்டுப் பண்ணைகளை நிறுவு வதற்காக வேளாண்மை நிலங்களையும் வாங்க முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். இத்தத்துவத்தின்படி வர்க்கப் போராட்டம் எதுமின்றி, பெரிய ஏகபோக உடை



10—1245

மையை ஒழித்தல் இன்றியே முதலாளித்துவம் சோஷ லிசமாக மாற முடியும்.

எப்படியாயினும், முதலாளித்துவத்தின் கீழ் தொழிற் துறையிலோ வேளாண்மையிலோ கூட்டுறவு உடைமை உருவாதல் முதலாளித்துவ அமைப்பின் தன்மையை மாற்றுவதில்லை. இவ்வகைக் கூட்டுறவு உடைமை, முத லாளித்துவ தனியுடைமை அல்லது தனிமனித சிறு வுடைமை போன்றே, முதலாளித்துவப் பொருளாதார விதிகளின் அடிப்படையில் வளர்கின்றது. இது முதலாளித் துவத்தின் முழுப் பொருளாதார அமைப்புடன் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. ஆகவே, அதன் சமூக-பொருளாதாரத் தன்மை மற்றும் சாராம்சம் நாட் டில் ஆதிக்கம் செலுத்தும் உற்பத்தி உறவுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

முதலாளித்துவத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் உழைக்கும் மக்களின் நிலைமையில் ஓர் அடிப்படையான முன்னேற்றத்தையும் கொண்டு வர முடியாது, அவர் களது ஜீவாதாரமான நலன்களை உறுதி செய்யவோ, காப்பாற்றவோ முடியாது.

முதலாளித்துவத்தின் கீழ் கூட்டுறவு, புதிய சமூக அமைப்புக்குச் செல்லும் மாற்றத்திற்கான பொருளாதார முன்னிபந்தனைகளை உருவாக்க ஓரளவு உதவுகிறது. என்றாலும், இது முதலாளித்துவப் பொருளாதார அமைப் பையோ அல்லது உற்பத்திச் சாதனங்களின் மீதான தனி யுடைமையையோ ஒழிக்க முடியாது, இது அதன் நோக்க மாக இருக்கவில்லை. கூட்டுறவு உடைமையின் வளர்ச்சி யால் மட்டுமே, சோஷலிசம் தோன்ற இட்டுச் செல்ல முடியாது.

அதே நேரத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவை, சிறு உற்பத்தியாளர்களையோ அல்லது பொதுஜன நுகர்ப

வர்களையோ ஐக்கியப்படுத்தும் கூட்டு நிறுவனங்களாகும். இவை தொழிற்துறை, வாணிகம் மற்றும் வேளாண்மையில் பெரிய மூலதனத்தின் ஆதிக்கத்திற்கெதிராக ஒரு போராட்டம் நடத்துகின்றன. இதுதான் முதலாளித்துவ தனி தொழில் நிறுவனங்களிலிருந்து அவற்றின் வேறுபாடாகும்.

தொழிலாளி வர்க்கம் மற்றும் நகர, நாட்டுப்புற நடுத்தர மக்கள் பிரிவுகளின் வெகுஜன ஸ்தாபனங்களாக இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களது உறுப்பினர்களை முதலாளித்துவ சுரண்டலிலிருந்தும் ஏகபோகங்களிலிருந்தும் காப்பாற்ற முற்படுகின்றன, சில சமயங்களில் உழைக்கும் மக்களின் பொருளாயத நிலைமையில் சில மேம்பாடுகளை ஏற்படுத்தி உள்ளன. எனவேதான், சிறு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு முன்னேற்றம் வாய்ந்ததாக உள்ளது, இது பெரும்பாலான விவசாய மக்கள் திரளினரை அவர்களது உரிமைகளுக்கான ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கத்தில் ஈடுபடுத்துகிறது. அவர்களது உணர்வுநிலையைத் தட்டி எழுப்பி, ஆற்றலுள்ள செயல் புரிபவர்களாக மாற்றுகிறது.

எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் என்பவை பரந்த ஜனநாயக இயக்கத்தின் ஒரு பிரிக்க இயலாத உட்பகுதியாகும், முற்போக்கான சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கும் சமூக வாழ்க்கையை ஜனநாயகமாக்குவதற்குமான போராட்டத்தின் ஒரு வடிவமாகும்.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் கீழ்தான், கூட்டுறவுச் சங்கங்கள் சோஷலிச நிறுவனங்களாக உள்ளன, கூட்டுறவு உடைமை உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் ஒரு வடிவமாகிறது. பொருளாதாரத்தில் உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுமக்கள் (அரசு) உடைமையின் அதிமுக்கியத்துவம்

வாய்ந்த இடத்தினால்தான் அதன் சோஷலிசத் தன்மை உள்ளது. தேசியப் பொருளாதாரம் சமூக முழுமையின் நலன்களில் வளருகிறது. தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா உழைக்கும் மக்களின் கைகளிலும் அரசு ஆட்சி உள்ளது.

## சோஷலிச உடைமையின் இரு வடிவங்களின் ஒற்றுமையும் அவற்றிற்கிடையே உள்ள வேற்றுமைகளும்

சோஷலிச சமூக உடைமையின் தோற்றமும் பொருளா தாரத்தின் முக்கியமான துறைகளின் அடிப்படை உற்பத் திச் சாதனங்களை உழைக்கும் மக்களின் அரசுக்கு மாற்று வதும் வேளாண்மைத் துறை உட்பட சமூக உற்பத்தி முழுமையின் சோஷலிச மாற்றத்திற்கான நிலைமைகளை உருவாக்குகின்றன. சோஷலிசத்தை கட்டமைப்பதில் அர சுடைமை கூட்டுறவு உடைமை தோன்றுவதற்கு முன்னரே தோன்றுகிறது.

சோஷலிச உடைமையின் இரு வடிவங்களும் (பொது மக்கள் உடைமை மற்றும் கூட்டுறவு உடைமை) தங்கள் சமூகப் பொருளாதார தன்மையில் ஒரே வகையைச் சார்ந் தவையாகும். அது ஏன் அவ்வாறு உள்ளது? ஏனென் றால் அவற்றில் தனியுடைமை இல்லை, மனிதனை மனி தன் சுரண்டுதல் கிடையாது, உழைக்கும் மக்களின் நலன் களுக்காக பொருள் மதிப்புகள் சுவீகரிக்கப்படுகின்றன, ஒரு கம்யூனிசச் சமூகத்தை உருவாக்குவதே அவற்றின் நோக்க மாகும்.

உடைமையின் இவ்விரு வடிவங்களிடையே வேறுபாடு இல்லை என்பது பொருளல்ல. உண்மையில், கணிசமான வேறுபாடுகள் இருக்கின்றன. இவை உற்பத்திச் சாத

ணங்களை சமூகமயமாக்குதலின் பல்வேறு மட்டங்களில் தெரிகின்றன.

முழுமையான தேசியப் பொருளாதாரத்தின் அளவிலேயே உற்பத்திச் சாதனங்கள் சமூகமயமாக்கப்படுகின்றன என்பதையே பொதுமக்கள் உடைமை குறிக்கிறது. உற்பத்திச் சாதனங்கள் தனிபட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு உடைமையாக உள்ளன என்பதைக் கூட்டுறவு உடைமை குறிக்கிறது. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் கூட்டு உடைமையாளர்களாக ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டுள்ளனர்.

எனவே, உற்பத்தி, உழைப்பு, நிர்வாகம், விளை பொருளின் சுவீகாரம் மற்றும் அதன் விற்பனையின் ஒழுங்கமைப்பிலும் பல வேறுபாடுகள் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் அதிக பொருளாதாரச் சுதந்திரம் கொண்டுள்ளன. இவை அரசு தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு வரைமுறை விதியிலிருந்து தனித்து உள்ளன.

இவ்வாறாக, அரசு தொழில் நிறுவனங்களில் உற்பத்தியின் ஒழுங்கமைப்பு சமூக உற்பத்தியின் முழுமையான அளவில் அரசால் ஒழுங்குபடுத்தப்படுகிறது, அதே நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் அது இச்சங்கத்தின் உறுப்பினர்களாலேயே ஒழுங்குபடுத்தப்படுகிறது.

அரசு தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அரசினால் பிரதிநிதித்துவம் பெற்ற சமூகம் முழுமைக்கும் சொந்தமானவை. அரசு சோஷலிச தொழில் நிறுவனங்களின் விளைபொருட்களான நுகர்வுப் பொருட்கள் இரு சமூக வடிவங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஒரு பகுதி கூட்டு நுகர்வுச் சொத்துகளாக அமைகின்றன: வீடுகள், மருத்துவ மற்றும் கல்வி வசதிகள், நூல்நிலையங்களின் பொருட்கள் முதலியன. மற்றொரு பகுதி சுய ஊதியத்தின் மூலம் சொந்த

உடைமையின் பொருட்களாக மாற்றப்படுகிறது, தனி நுகர்வில் செலவழிக்கப்படுகிறது. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தொழில் நிறுவனங்களில் உற்பத்திச் செய்யப்பட்ட விளை பொருட்கள் அந்த கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாகும், இது அதன் வேலையின் விளைபயன்களை உற்பத்தியின் வளர்ச்சிக்கும் நுகர்விற்கும் தானே பகிர்ந்தளிக்கிறது.

அரசுத் துறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள உழைக்கும் மக்கள், பொதுமக்கள் தொழில் நிறுவனங்களில் தங்கள் வேலையின் மூலமாக தங்களது வருவாயில் கிட்டத்தட்ட பெரும் பகுதியைப் பெறுகிறார்கள் என்றும், இங்கு ஊதியம் அரசால் ஏற்படுத்தப்பட்ட வரையளவினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது என்றும், அதே சமயத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்கள் வருவாயின் பெரும் பகுதியை கூட்டுப் பண்ணையில் அவர்களது வேலையிலிருந்தும், வருவாயின் கூடுதலான பகுதியைத் தங்களது சொந்த துணைப் பண்ணைகளின் வேலையிலிருந்தும் பெறுகிறார்கள் என்றும் உலக சோஷலிச அமைப்பில் சோஷலிச நிர்மாணத்தின் அனுபவம் காட்டுகிறது.

அதே நேரத்தில், பொதுமக்களுக்குரித்தான தொழில் நிறுவனங்களுக்கும் கூட்டுறவு தொழில் நிறுவனங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் சோஷலிச உடைமை வகையினுள் உள்ள வேறுபாடுகள் ஆகும், அவை ஒன்றுக்கொன்று முரண்படானவையல்ல. அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது தவறாகும்.

சோஷலிசத்தின் கீழ் மிக முக்கியமான பங்கு பொதுமக்கள் உடைமைக்கு உரித்தானது. முதன்முதலாக, அது மிகுதியாக உள்ளது, மேலும் அது தேசிய பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறைகளான தொழிற்

துறை, கட்டுமானம், வேளாண்மையில் அரசு தொழில் நிறுவனங்கள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புத் துறையில் பரவி உள்ளது. முழுமையான தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சிக்கும் சோஷ லிசத்தின் பொருளாதார விதிகளின் முழுப் பயன்படுத் தலுக்கும் அரசுடைமை ஓர் அவசியமான நிபந்தனை யாகும். நாட்டின் செல்வத்தின் கணிசமான பகுதியை ஒரு தனித்த நிதியாகக் குவிப்பதையும் இதை உற்பத்தி யின் பொர்ருளாதாரப் பயன் தன்மையை அதிகப்படுத்து வதையும் மக்கள் நல்வாழ்க்கைத் தரத்தை தடையில்லாது உயர்த்துவதையும் அரசுடைமை சாத்தியமாக்குகிறது.

அரசு தொழில் நிறுவனங்கள் நவீன இயந்திரங்கள், எரிசக்தி மற்றும் மின் சக்தி மூலாதாரங்கள் மிக அதிக அளவில் அளிக்கப்பட்டுள்ளன. இத்தொழில் நிறுவனங் களில் சமூக உழைப்புப் பிரிவினை மேலும் வளர்ச்சியுற்ற தாகவும் அவை தங்களுக்குள் இடைத் தொடர்பு கொண் டவையாகவும் அதிகத் தனித்துறைப் பயிற்சி உள்ளவை யாகவும் இருக்கின்றன. மற்ற தொழில் நிறுவனங் களின் செயல்பாடும் முழு தேசிய பொருளாதார வளர்ச்சி யும் எந்த ஓர் அரசுத் தொழில் நிறுவனத்தின் செயல் பாட்டையும் சார்ந்துள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் அரசு கணி சமான உதவி அளிக்கிறது. நில அபிவிருத்தி, மின்சார மயமாக்கும் வேலைகள் முதலியவற்றை நடத்துகிறது, பண உதவி அளித்தும் வேளாண்மைக்கு வேண்டிய ஊழியர்களைப் பயிற்றுவித்தும் அரசு உதவி செய்கிறது.

சோஷலிசத்தின் கீழ் உடைமை இரண்டு வடிவங்களில் நிலவுவதானது, தொழிலாளர்கள் விவசாயிகள் என்ற இரு நட்புடைய வர்க்கங்கள் இருப்பதை குறிக்கிறது. தொழி லாளி வர்க்கம் விவசாய வர்க்கத்துடன் ஒரு நெருங்கிய

இணைப்பை ஏற்படுத்தி சமூகத்தின் தலையாய வர்க்கமாகிறது என்ற உண்மையில்தான் பொதுமக்கள் உடைமையின் முக்கியமான பங்கு வெளிப்படுகிறது.

அத்தியாயம் ஆறு

# உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் வளர்ச்சி

## பொதுமக்கள் உடைமையின் வளர்ச்சி

உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையின் உறவுகள் சமூகத்தின் மற்ற எல்லா உறவுகளையும் தீர்மானிப்பதால் சோஷலிசத்தின் கீழ், பொருளாதார உறவுகளின் ஒவ்வொரு வடிவத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் சோஷலிச உடைமை செயல்நோக்கத்தையும் உறுதியையும் அளிக்கிறது.

ஆனால், சோஷலிச உடைமையும் அதன் வடிவங்களும் மாற்ற முடியாதவையாகவோ அல்லது தேக்க முற்றவையாகவோ இல்லை. சோஷலிசத்தின் கீழ் உடைமை உறவுகள் இயக்காற்றல் மிக்கவையாகும். உற்பத்திச் சக்திகளின் தன்மை மற்றும் அளவிற்கேற்ப வளர்ந்து கொண்டே அவை, சமூக முன்னேற்றத்தின் மீது ஒரு தீவிரமான தாக்கத்தைச் செலுத்துகின்றன, உற்பத்திச் சக்திகளின் எல்லைகளற்ற வளர்ச்சிக்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றன.

உண்மையில், அதன் தொடக்க கட்டத்தில் சோஷலிச உடைமை போதுமான அளவு வலுவுள்ளதாக இல்லை. உடைமையின் வெளித் தோன்றும் வடிவங்களை வலுப்

படுத்துவதும், திடமாக்குவதும், சோஷலிச புனருற்பத்தியின் செயல்முறையில் சோஷலிச உடைமையின் இயக்கத்தை சரிப்படுத்துவதும் மிக முக்கியமான பணியாகும்.

பின்பு சமூக உடைமை, சோஷலிச உற்பத்தியின் விளைபயனாகவே வளர்ச்சியடையத் துவங்குகிறது; உற்பத்திச் செயல்முறையின் போதே அது பெருக்கமடைகிறது, அதன் தரத்திலான அளவுகளை மாற்றுகிறது; அதன் வடிவங்கள் நிறைவுபடுத்தப்படுகின்றன, சமூக உற்பத்தியில் அவற்றின் இடைத் தொடர்பு மாறுகின்றது.

சோஷலிசத்தின் தொடக்க கட்டத்தில் பொதுமக்கள் உடைமை உறவுகள், தொழிற்துறை முழுவதும் முதன்மையாக நிறுவப்படுகின்றன. அதே போது, வேளாண்மை உற்பத்தியின் பெரும் பகுதி, கூட்டுறவுச் சங்கங்களாகவே உள்ளன. பின்னர், வேளாண்மையில் அரசு மற்றும் கூட்டுறவு உடைமைக்கும் இடையே உள்ள பொருளாயத இடைத் தொடர்பு முற்கூறப்பட்டதற்கு ஆதரவாக மாறுகிறது. அத்துடன் கூட்டுறவு உடைமை வலுப்படுத்தப்படுகின்றது, வளர்ச்சியடைகின்றது; ஆனால் அரசுடைமையைப் போன்றே அதுவும் தர மற்றும் அளவு மாறுதல்களை அடைகின்றது. **1940**ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போதும் **1982**ஆம் ஆண்டில் சோவியத் யூனியனின் மொத்த உற்பத்தியில் அரசுப் பண்ணைகள், வேளாண்மையில் உள்ள பிற அரசு தொழில் நிறுவனங்களின் பங்கு கச்சாப் பஞ்சில் ஏறத்தாழ ஆறு மடங்கும் உருளைக்கிழங்கில் எட்டு மடங்கும், மாமிசத்தில் நான்கு மடங்கும், பாலில் ஐந்து மடங்கும், முட்டைகளில் முப்பத்தியொரு மடங்கும் பெருகியது.

பொதுமக்கள் உடைமையில் உழைக்கும் மக்களுக்கும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு நிலவுகிறது. உழைப்புச் சாதனங்கள் உழைக்கும் நபரை

ஓர் எதிர்ப்புணர்ச்சியுள்ள சக்தியாக கருதவில்லை. ஏனென்றால், அவை சமூகம் முழுமைக்கும் சொந்தமாக உள்ளன என்ற உண்மை, இவற்றை, உழைக்கும் மக்களின் பொருளாயத நலத்தை தடையில்லாமல் உயர்த்துவது மற்றும் தனிமனிதர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான கருவியாக மாற்றுகின்றது.

உழைக்கும் மக்களே மாறியுள்ளனர். அரசியல் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டுள்ள தொழிலாளி வர்க்கம், அடிப்படை உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமையாக்கியுள்ளது. தொடக்கத்தில் அதன் திறமைத் தரமும், பணிக்கான கட்டமைப்பும் அதே நிலையில் தொடர்ந்து உள்ளன. அது, பழைய உழைப்புச் சாதனங்களை அதே தொழில்நுட்ப அறிவுடன் பயன்படுத்தியது. சமூக உற்பத்தியின் வளர்ச்சி, தொழிலாளி வர்க்கத்தில் மிக முக்கியமான மாறுதல்களுக்கு இட்டுச் சென்றது. பெரிய அளவு இயந்திரத் தொழிற்துறையின் புதிய கிளைகள் உருவாதலுடன், அதன் புதிய பிரிவுகள் தோன்றின. விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம், உற்பத்தியின் தொழில்நுட்பக் கட்டமைப்பில் தர மாறுதல்களைத் தோற்றுவிக்கிறது; பழைய இயந்திரங்களிலிருந்து நவீன தானியங்கி இயந்திரம், உற்பத்தித் தன்னியக்கம் மற்றும் பன்முக இயந்திரமாக்குதலுக்கான மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

உற்பத்தி முறைகளின் இயந்திரமயமாக்கல் அதிகரிக்கிறது. உற்பத்தியின் சமூகத் தன்மை வளர்ந்துகொண்டேயிருக்கிறது. சமூக உழைப்புப் பிரிவினையின் பெருக்கம், மேன்மேலும் வளர்ந்து வரும் உற்பத்தித் தனித்துறைப்பாடு மற்றும் உற்பத்திக் குவிக்கப்படுவதில் வெளிப்படுத்தப்படுகிறது; பல்வகைத் துறைகள் மற்றும் தொழில் நிறுவ

ணங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு விரிவடைகின்றது. சோவியத் யூனியனில் இது உற்பத்தி, ஆராய்ச்சி-உற்பத்தி, தொழிற்துறை மற்றும் விவசாய-தொழிற்துறை கூட்ட மைப்புகள் உருவாதலுக்கும் இட்டுச் சென்றுள்ளது.

துரிதமான தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது, கம்ப் யூடரால் நிர்வகிக்கப்படும் இயந்திரங்கள், கருவிகள், பல் வேறு கட்டுப்பாடு அமைப்புகள் மற்றும் சாதனங்கள், தானாகவே திறமையாக இயங்கும் இயந்திரங்கள் (தொழிற் துறை ரோபோட்கள்) முதலியவற்றின் உற்பத்தி விரி வடைந்ததில் வெளிப்படுத்தப்படுகிறது.

அதே நேரத்தில், விஞ்ஞான, தொழில்நுட்ப முன் னேற்றம், வேளாண்மையில் தொழிலாளி வர்க்கத்தை உருவாக்கவும், வளரச் செய்யவும் உதவுகிறது. மூளை மற் றும் உடல் உழைப்புகளுக்கிடையேயுள்ள அடிப்படை வேறு பாடுகளையும் உழைப்பிலிருந்த மற்ற வேறுபாடுகளை யும் கூட, நகர் மற்றும் நாட்டுப்புறப் பகுதிகளுக்கிடை யேயுள்ள வேறுபாடுகளையும் படிப்படியாகத் துடைத் தழிப்பதற்கு சோஷலிசத்தின் வளர்ச்சி உதவுகிறது. இப் பொழுது எஞ்சியுள்ள சமூகப் பொருளாதார வேறு பாடுகள் பகைமையற்றவைகளாக, சோஷலிசத்திற்கே தனிப் பண்பாக உள்ளன.

பொதுமக்கள் உடைமையின் வளர்ச்சி, பல்வகைப்பட்ட மூளை மற்றும் உடல் உழைப்புகளுக்கிடையேயுள்ள சமூகப் பொருளாதார வேறுபாடுகளையும் நுண்ணிய மற் றும் நுண்மையற்ற உழைப்புகளுக்கிடையேயுள்ள வேறு பாடுகளையும் படிப்படியாகக் குறைக்கிறது. இவ்வேறு பாடுகள் துடைத்தழிக்கப்படும் போது பொதுமக்கள் உடை மை முதிர்ச்சியடைகிறது.

## உற்பத்திச் சாதனங்களின் மீதான கூட்டுறவு உடைமையின் வளர்ச்சி விதிகள்

உற்பத்தியில் சோஷலிச உறவுகளின் வெற்றியுடன் தோன்றிய கூட்டுறவு உடைமை மாறி வருகிறது. அதன் வளர்ச்சியில் மிக முக்கியமான பங்கு, சோஷலிச உடைமையின் தலையாய மற்றும் மிக முதிர்ச்சியுற்ற வடிவமான பொது மக்கள் உடைமையின் வளர்ச்சி மற்றும் முழு நிறைவையே சாரும்.

அரசால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களின் வளர்ச்சியின் மீது ஒரு தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, அவைகளுக்கு மிக நுணுக்கமான உற்பத்திச் சாதனங்களை அளிக்கின்றன. அதே நேரத்தில், கூட்டுறவு உற்பத்தி மேலும் சமூகமயமாக்கப்படும் போதும், அதன் தொழில்நுட்ப அளவு உயரும் போதும், சோஷலிச உடைமையின் இரு வடிவங்களும் நெருக்கமாக வர முற்படுகின்றன.

கூட்டுறவு உடைமையின் வளர்ச்சியின் போது, உற்பத்தியின் பொருட்சார்பான காரணிகளில் முதன்மையாக அடிப்படை மாறுதல்கள் நிகழ்கின்றன. உண்மையில், கூட்டுறவுச் சங்கங்களின் தொடக்க ஆண்டுகளில், அவற்றின் முக்கியமான உற்பத்திச் சொத்துகள், சிறு தனிப் பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட சொத்துகளைச் சமூகமயமாக்குவதன் மூலம் அமைக்கப்பட்டன. எரிசக்தித் திறனில் வேலை செய்யும் விலங்குகளின் பங்கு அதிகமாயிருந்ததே தவிர, இயந்திரங்களின் பங்கு அல்ல. இயந்திரங்களின் பங்கு குறைவாகவே இருந்தது.

சோஷலிச உற்பத்தியின் வளர்ச்சியுடன், நிலைமைகள் குறிப்பிடத்தக்க அளவு மாறியுள்ளன. அடிப்படை உற்

பத்திச் சொத்துகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன, அவற்றின் தொழில்நுட்ப மட்டம் மிக அதிகமாக உயர்ந்துள்ளது, கூட்டுறவுமயமாக்கலின் ஆரம்ப காலத்திற்கு முன்பில்லாத புதிய இயந்திர வகைகள் தோன்றியுள்ளன. இவ்வாறாக, 1940லிருந்து 1982 வரை சோவியத் வேளாண்மையின் அடிப்படையான உற்பத்திச் சொத்துகளும் பொருளாயத சாதனங்களும் 5.7 மடங்கு பெருகியுள்ளன. 1960லிருந்து 1981 வரை பல்கேரியாவில் வேளாண்மையில் டிராக்டர் அணி (சடப் பொருள் அலகுகள்) 2.5 மடங்கு பெருகியுள்ளது, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 2.0 மடங்கும், மங்கோலியாவில் 5.5 மடங்கும், செக்கோஸ்லோவேக்கியாவில் ஏறத்தாழ இரு மடங்கும் பெருகியுள்ளது, சோவியத் யூனியனில் இரு மடங்கிற்கு மேலாகவும் உயர்ந்துள்ளது. அக்காலத்தில், சோஷலிச நாடுகளின் அரசுத் தொழில் நிறுவனங்கள் வேளாண்மைக்கு பல தானிய அறுவடை இயந்திரங்களையும் தாது உப்பு உரங்களின் பெரும் அளவுகளையும் வழங்கின.

கூட்டுறவுப் பண்ணைகளின் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வேளாண்மையில் மனித சக்தி கட்டமைப்பில் மாற்றங்கள் நடைபெறுகின்றன, அத்துறைக்காகப் புதிய ஊழியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர், தனித்துறைப் பயிற்சிக்கான உயர் கல்வி மற்றும் விசேஷத் தொழில் கல்வி பெற்ற தேர்ச்சியாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயருகிறது. 1970லிருந்து 1985 வரை, சோவியத் யூனியனில் வேளாண்மையில் இவ்வகை தேர்ச்சியாளர்களின் எண்ணிக்கை 2.3 மடங்காக உயர்ந்தது, அவர்களின் எண்ணிக்கை 2.4 மில்லியன்களாகும்.

ஆகவே, கூட்டுறவுமயப்படுத்தப்பட்ட விவசாயிகள் வர்க்கம் அதன் தோற்றுவாய்களில், உற்பத்தி நிலையில், மொத்த உழைக்கும் மற்றும் வாழ்க்கை நிலைமைகளில்

ஓர் உண்மையான புதிய வர்க்கமாகத் தோன்றியுள்ளது. இது சோஷலிச நிர்மாணத்தின் போதும் சோஷலிச உற் பத்தி உறவுகளின் வளர்ச்சியின் போதும் உருவாகிறது. அந்தப் புதிய வர்க்கம், சமூகப் பொருளாதாரப் படிநிலை யில் தொழிலாளி வர்க்கத்திற்கு அருகில் வர முற்படு கிறது. அதனால் தொழிற்துறை உழைப்பு மற்றும் வேளாண்மை உழைப்பிற்கிடையேயுள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும், நகர் மற்றும் நாட்டுப்புறத்திற்குமிடையே யுள்ள வேறுபாடுகளும் ஒழிக்கப்பட்டு விடுகின்றன, வர்க்க வேறுபாடுகள் துடைத்தழிக்கப்படுகின்றன, இது ஓரினத் தன்மை கொண்ட சமூகத்தை நோக்கி முன்னேறு கிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் சமூகப் பண்ணை முறை வளர்ச்சியுடன், கூட்டுறவாகவுள்ள விவசாயிகள், தொழி லாளர்கள் மற்றும் அலுவலகர்களின் உண்மையான வரு வாய்கள் படிப்படியாக ஒத்திருக்கச் செய்யப்படுகின்றன. சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் மெய்யான வருவாய், தொழிலாளர்கள் மற்றும் அலு வலகர்களின் வருவாய்களுடன் ஒப்பிடும் போது, (ஒவ் வொரு குடும்ப அங்கத்தினரின் வருவாய்களுடன்) **1965**இல் **75** சதவிகிதத்திலிருந்து **1970**இல் **80** சதவிகித மாகவும், **1983**இல் **90** சதவிகிதத்திற்கு மேலாகவும் உயர்ந் தது.

கூட்டுறவு உற்பத்தியின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தின் மாறுதல், வேளாண்மையில் அரசு மற் றும் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி நிலைகளை நெருக்கமாக ஒன்றுபடுத்துவதை சாத்தியமாக்குகிறது. சோ வியத் யூனியனில், கூட்டுப் பண்ணைகள் (கூட்டுறவு நிறு வனங்கள்) சாகுபடி நிலத்தில் **1000** ஹெக்டேர் பரப்பள விற்கான உற்பத்திச் சொத்துகளில் அரசுப் பண்ணை

களைப் (அரசு தொழில் நிறுவனங்களை) பெரும் பாலும் எட்டிவிட்டன, அவை உழவு நிலத்தின் ஒவ் வொரு 1000 ஹெக்டேருக்குமான டிராக்டர்கள் மற்றும் லாரிகளின் எண்ணிக்கையில் அரசு தொழில் நிறுவ னங்களை விஞ்சிவிட்டன.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிச உடை மையின் வடிவங்களான பொதுமக்கள் உடைமை மற்றும் கூட்டுறவு உடைமையை ஒத்திருக்கச் செய்தல், இத் துறைகளுக்கிடையே ஒருமைப்பாடு, பிணைப்புகளின் வளர்ச் சியையும் தேசியப் பொருளாதாரத்தின் மற்ற துறை களுடன் இணைப்பையும் (தொழிற்துறை, போக்குவரத்து, வாணிபம்) விவசாய-தொழிற்துறைக் கூட்டமைப்புகள் உருவாவதையும் மறைமுகமாகக் குறிக்கிறது.

பல்வகைப்பட்ட அரசு-கூட்டுறவு தொழில் நிறுவனங் களின் பரந்த வளர்ச்சி, கூட்டுறவு உடைமை பொதுமக்கள் உடைமையுடன் அதிக அளவில் இடைச் செயலாற்று கின்றது என்பதைக் காட்டுகிறது.

அரசு உற்பத்திச் சாதனங்களையும் கூட்டுறவுத் துறை யின் உற்பத்தி உள்ளாற்றலையும் இணைப்பது கூட்டுறவுத் துறையின் தொழில்நுட்ப மட்டத்தை அதிகரிக்க உதவு கிறது. அதன் மூலம் தொழிற்துறை அடிப்படையில் அரசு மற்றும் கூட்டுறவு தொழில் நிறுவனங்களின் பொருளா யத-தொழில்நுட்ப அடித்தளத்தின் வளர்ச்சியைச் சமப் படுத்த உதவுகிறது.

சோவியத் நாட்டில் 1988இல் நிறைவேற்றப்பட்ட கூட் டுறவு பற்றிய சட்டம், நாட்டில் கூட்டுறவு வளர்ச்சிக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை கோடிட்டுக் காட்டுகிறது. சோவியத் நாட்டில் இன்று நடைபெறும் சீரமைப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கையின் பொருளாதார, சமூக, ஸ்தாபன அமைப்பு மற்றும் சட்ட நிபந்தனைகள்

இதில் வரையறுக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் கூட்டுறவின் உள்ளாற்றல்களை, வாய்ப்புகளைத் திறந்து காட்டுகிறது; நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதில் இதன் பங்கைக் கோடிட்டுக் காட்டுகிறது; நாட் டின் பொருளாதார வாழ்க்கையை மேலும் ஜனநாயக மயப்படுத்தும் போக்கை வலுப்படுத்துகிறது; கூட்டுப் பண் ணை இயக்கத்திற்கு புதிய உந்து சக்தியை அளிக்கிறது; கூட்டுறவுச் சங்கங்களில் பரவலான மக்கள் திரளினரை ஈடுபடுத்துவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கிறது. உணவுப் பொருள், வெகுஜன நுகர்வுப் பொருட்கள் மற் றும் சேவை வசதிகளை மக்களுக்கும் தேசியப் பொருளா தாரத்திற்கும் அளிப்பதில் கூட்டுறவு வடிவங்களை சகல விதங்களிலும் பயன்படுத்த இது வகை செய்கிறது. இச் சட்டம் கூட்டுறவு ஜனநாயக வளர்ச்சியின் முக்கியக் கோட் பாடுகளை வரையறுக்கிறது, அரசிற்கும் கூட்டுறவிற்கும் இடையிலான உறவுகளை நிர்ணயிக்கிறது, கூட்டுறவுகள் தம் பொருளாதார நடவடிக்கையின் வடிவங்களை சுதந் திரமாகத் தேர்ந்தெடுக்க உத்தரவாதமளிக்கிறது, முன் மொழிவிற்கும் சுய நிர்வாகத்திற்கும் பரவலாக வாய்ப் பேற்படுத்துகிறது, தம் உழைப்பின் விளைபயனில் கூட் டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உள்ள பொறுப் புணர்வை அதிகப்படுத்துகிறது.

இச்சட்டம் தன்னிச்சையாகக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர வும் அதிலிருந்து வெளியேறவும் கூட்டுறவின் நிர்வாகத் தில் பங்கேற்கவும் உரிமையை உத்தரவாதமளிக்கிறது; இதில் கூட்டு நிர்வகிப்பின் சுதந்திரமும், திட்டக் கடமை களின் நிறைவேற்றம் சம்பந்தமான முடிவுகளை எடுப் பதில் சுதந்திரமும் உத்தரவாதம் செய்யப்படுகிறது; இச் சட்டம் உழைப்பு உரிமையில் சமூக நீதிக்கும் சமூக சமத் துவத்திற்கும் வகை செய்கிறது; இது உழைப்பின் அளவு,

தரத்திற்கேற்ப சொந்த வருமானம் மற்றும் சமூகப் பாது காப்பிற்கு உரிமையளிக்கிறது.

சோஷலிசப் பொருளாதாரத்தில் அரசுத் துறைக்கும் கூட்டுப் பண்ணை-கூட்டுறவுத் துறைக்கும் இடையில் சம மான பரஸ்பரச் செயலாக்கத்திற்கு வகை செய்வதுதான் கூட்டுறவைப் பற்றிய சட்டத்தின் நோக்கமாகும்.

அத்தியாயம் ஏழு

# சோஷலிசத்தின் கீழ் நுகர்வுப் பொருட்களின் மீதான உடைமை

## சோஷலிசத்தின் கீழ் தனிநபர் உடைமை

உற்பத்தியின் எந்த முறையின் கீழும் தனிநபர் (சொந்த) உடைமை இருந்துள்ளது. இது, சுய நுகர்வுக்கான பொருட்களின் சுவீகரித்தல் குறித்து மக்களுக்கிடையேயான பொருளாதார உறவுகளாகும். சுய சுவீகரித்தலின் தன்மை எப்போதுமே, சமூக உறவுகளின் ஒவ்வோர் அமைப்பிலும் உற்பத்திச் சாதனங்களின் மீதான அடிப்படை உடைமையின் வடிவத்தால் தீர்மானிக்கப்படுகிறது, அதையும் சார்ந்திருக்கிறது.

தனிநபர் உடைமை அடிப்படையாகத் தனியுடைமையிலிருந்து வேறுபடுகிறது. தனியுடைமையின் முக்கியமான குறிக்கோள் உற்பத்திச் சாதனங்களாகும், அது மற்ற மக்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. தனிநபர் உடைமை என்பது நுகர்வுப் பொருட்கள், உற்பத்தியின் விளைபயன்களின் மீதான உடைமையாகும், இது பிற மக்களைச் சுரண்டுவதற்குப் பயன்படுத்தப்பட முடியாது.

முதலாளித்துவத்தின் கீழ், முதலாளி வர்க்கத்தின் உடைமை, உழைப்பினால் ஈட்டப்படாத வருவாயிலிருந்து பெறப்படுகிறது. உற்பத்திச் சாதனங்களை முதலாளி வர்க்

கம் உடைமையாகக் கொண்டுள்ளதால் அது இவ்வரு வாயைப் பெற முடியும், அதனால் கூலித் தொழிலாளி களின் ஊதியம் வழங்கப்படாத உழைப்பால் உருவாக்கப் படும் விளைபொருட்களை அபகரிக்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ், உழைக்கும் மக்களின் சொந்த உடைமை, முதலாளித்துவ தொழில் நிறுவனங் களின் கூலி வேலைக்கான வருவாயிலிருந்து அடையப் படுகிறது. அதனால்தான், அங்கு தொழிலாளியின் நிலைமை என்பது இத்தொழில் உற்பத்தியின் நிலை மற்றும் சந்தையின் நிலை, வேலையற்றவர்களின் படை நிலவு வது, வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. அதன் விளைவாக, முதலாளித்துவ சமூகத்தில் உழைக்கும் தனிமனிதனின் சுய சுவீகரித்த லின் மட்டம் மிகவும் நிலையற்றதாக உள்ளது, ஏனென் றால் அவன் எப்போதும் வேலையிழப்பு, முழு வறுமை யினால் அச்சுறுத்தப்படுகின்றான்.

சோஷலிசத்தின் கீழ், தனிநபர் உடைமை என்பது உழைப்பினால் ஈட்டப்பட்ட வருவாய், சேமிப்புகள், நுகர் வோர் மற்றும் வீட்டுப் பொருட்கள், வீடுகள், சொந்த போக்குவரத்து வசதிகள் மற்றும் சொந்த துணைப் பண் ணைகளையும் வீட்டு வேலையையும் நடத்துவதற்கான சில உற்பத்திச் சாதனங்கள் போன்றவற்றின் மீதான உடை மையாகும் (இது சமூகத்தின் அங்கத்தினர்களினால் தனித்தனியாக உரிமையாகக் கொள்ளப்படும்).

சோஷலிசத்தின் கீழ், உழைப்பினால் ஈட்ட பெறாத வருவாய் தனிநபர் உடைமையின் ஓர் ஆதாரமாக இருக்க முடியாது, ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை மனிதனை மனிதன் சுரண்டு வதற்கு முடிவுகட்டுகிறது.

சோஷலிசத்தின் கீழ், தனிநபர் உடைமையின் சிறப்பம்

சம் என்னவென்றால் உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையுடன் அதன் தொடர்பு மற்றும் சார்பாகும். சமூக உற்பத்தியில் பங்கேற்பவராக ஒவ்வோர் உழைக்கும் நபரும் நுகர்வுப் பொருட்களைப் பெறுகிறார். அதனால் இந்நிலைமைகளில் தனிநபர் உடைமை எப்போதுமே உழைப்பினால் ஈட்டப்பட்டதாக உள்ளது. சோஷலிசத்தின் கீழ் உழைப்பு ஒன்றுதான் பொருள் மதிப்புகளின் ஆதாரமான தனிநபர் உடைமையாகக் கொள்ளப்பட முடியும். சமூக உற்பத்தியில் தயாரான விளை பொருட்கள், சமூக உடைமையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன, பின்பு அவை ஒவ்வொரு நபரின் உழைப்புப் பங்களிப்புக்கேற்ப உழைக்கும் மக்களிடையே வினியோகிக்கப்படுகின்றன, எனவே சொந்த உடைமையாகின்றன. சமூகத்தினால் ஒவ்வோர் உழைக்கும் மனிதனுக்கும் அளிக்கப்பட்ட வேலை செய்வதற்கான உரிமை, அவனுக்கு ஒரு நிலையான வேலையை உத்தரவாதமளிக்கிறது, மேலும் அவனது உழைப்பு உள்ளீட்டிற்கேற்ப பொருளாயத வாய்ப்பிற்கும் உத்தரவாதமளிக்கிறது. வேறு சொற்களில் கூற வேண்டுமானால், சோஷலிசத்தின் கீழ் தனிநபர் உடைமை சுரண்டலின் ஒரு கருவியாக ஒருபோதும் ஆக முடியாது.

முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் சோஷலிசத்திற்கு மாறியதும் நுகர்வுப் பொருட்களின் மீதான தனிநபர் உடைமை ஒழிக்கப்பட்டு விடும் என்றும், சோஷலிசம் சொந்த விருப்பங்களையும் தேவைகளையும் கட்டுப்படுத்துகின்றது என்றும் வாதிடுகிறார்கள். உண்மையில், சோஷலிசம் பிற மக்களின் உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் உற்பத்திச் சாதனங்களின் மீது பெறப்படும் தனியுடைமையை மட்டும்தான் ஒழிக்கிறது. அதே நேரத்தில், உழைக்கும் மக்களின் வளரும் தேவைகளை மிகச் சாத்

தியமான அளவில் பூர்த்திச் செய்வதுதான் சோஷலிசத்தின் இலக்காகும். சோஷலிசம் தனிமனிதனின் சுதந்திரமான வளர்ச்சியையும் அவனது விருப்பங்கள் மற்றும் பொருளாயத, தார்மீகத் தேவைகளின் வளர்ச்சியையும் அவற்றின் பூர்த்தி செய்தலையும் உத்தரவாதம் செய்கிறது.

சோஷலிச உற்பத்தி வளர வளர உழைக்கும் நபர் சமூகத்திலிருந்து பெறும் விளைபொருட்களின் அளவும் இடையறாது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும் பொருந்தவில்லை, ஆனால் மேலும் பெரிய அளவு கலாசார மற்றும் வீட்டுப் பொருட்கள், நீடித்து உபயோகிக்கக் கூடிய நுகர்வு பொருட்களுக்கும் கூட பொருந்துகிறது. வீட்டு வேலையை எளிதாக்கவும், கலாசார மற்றும் அன்றாட வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவும் புதிய சாதனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது வீட்டு வேலைகளுக்குத் தேவையான நேரத்தைக் குறைத்து, ஓய்வு நேரத்தை அதிகரிக்கவும், தனிமனிதனின் முழுமையான வளர்ச்சிக்கான நிலைமைகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

1940லிருந்து 1985 வரை, சோவியத் தொழிலாளர்கள் மற்றும் அலுவலகர்களின் உண்மையான வருவாய்கள் 4.5 மடங்கும், கூட்டுப் பண்ணை விவசாயிகளின் வருவாய்கள் 8 மடங்கும் (ஒவ்வோர் உழைக்கும் மனிதனின் வருவாய்) பெருகியுள்ளன. 1928லிருந்து வீட்டு வாடகை தொடர்ந்து அப்படியே உள்ளது. இது பொதுச் சேவைகளையும் (நீர், மின்சக்தி மற்றும் எரிசக்தி வழங்குதல் போன்றவை) சேர்த்து, தொழிலாளர்கள் மற்றும் அலுவலகர்களின் குடும்பங்களின் வருவாயில் சராசரியாக 3 சதவிகிதம் மட்டுமேயாகும். அரசு மற்றும் கூட்டுறவு வாணிப அமைப்பின் மூலமாக நுகர்வுப் பொருட்களின் விற்பனை 1940லிருந்து 1985 வரை எவ்வாறு அதிகரித்

துள்ளது என்று காண்போம்: உணவுப் பொருள் விற் பனை 8.4 மடங்களுக்கு மேலும் பெருகியுள்ளது; மற்ற பொருள்களின் விற்பனை 20 மடங்கு அதிகரித்தது, அவையுட்பட வானொலி பெட்டி விற்பனை 44 மடங்கும், தட்டுமுட்டுச் சாமான் விற்பனை 43 மடங்கும், நகைகளின் விற்பனை 45 மடங்கும் பெருகியுள்ளது. அதே காலகட் டத்தில், தொழிலாளர்கள் மற்றும் அலுவலகர்களின் சரா சரி மாத ஊதியம் 5.6 மடங்கு பெருகியுள்ளது, அது 1985ஆம் ஆண்டில் 190 ரூபிள்களாகியுள்ளது.

அதே நேரத்தில், தனிநபர் உடைமை சமூக உற்பத்திச் செயல்முறையின் மீது எதிர்செயல் புரிகிறது; ஏனென் றால் இது உழைப்புச் சக்தியின் புனருற்பத்தியுடன் இணைக்கப்பட்டுள்ளது, உழைக்கும் மக்களின் உடல் மற் றும் தார்மீக திறமைகளின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்ய உதவுகிறது. விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வேகம் எவ்வளவுக்கெவ்வளவு விரை வாக உள்ளதோ, சமூகத்தின் பொருளாயத மற்றும் தொ ழில்நுட்ப அடிப்படையின் மட்டம் எவ்வளவுக்கெவ்வளவு உயர்வாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு உழைக்கும் மக்களின் அறிவு, பணிக்கான பயிற்சி மற்றும் பொதுக் கலாசாரம் உயர்வாக இருக்க வேண்டும். அதை அடை வதற்கு தனிநபர் உடைமையும் ஒரு முக்கியமான பங் காற்றுகின்றது. அதனால்தான் அதன் வளர்ச்சி சோஷலிச புனருற்பத்தியின் ஓர் அவசியமான ஆதாரப் பொருள் மட்டுமல்ல, ஆனால் உற்பத்தியின் மேம்பாடு மற்றும் எல்லைகளற்ற வளர்ச்சிக்கு மிக முக்கியமானதும் ஆகும். அவ்வளர்ச்சி, உழைக்கும் மக்களின் தேவைகளை மேலும் அதிக அளவில் பூர்த்தி செய்கிறது என்பதையும் அவர்களின் கலாசார மற்றும் தொழில்நுட்பத் தரங்களை உயர்த்த உதவுகிறது என்பதையும் உற்பத்தியில் அவர்

களது உழைப்பின் பயன் தன்மையை மேலும் அதிகரிப்ப தாக மாற்றுகிறது என்பதையும் குறிக்கிறது.

எனவே, நாம் முன்பே கண்டபடி, தனிநபர் தேவை களின் வளர்ச்சி மற்றும் சமூக உற்பத்தியின் வளர்ச்சிக் கிடையே இருவழித் தொடர்பு மற்றும் சார்பு உள்ளது. புதிய தேவைகள் எப்போதுமே உற்பத்திக்கு முன் புதிய கோரிக்கைகளை வைக்கின்றன, அதன் வளர்ச்சிக்கும் மேம் பாடடைதலுக்கும் ஒரு தோற்றுவாயாக உள்ளன. எனவே, தனிநபர் உடைமை, சமூக உடைமையின் மேம்பாடு மற்றும் வளர்ச்சியின் கூடவே படிப்படியாக வளர்ச்சி யடைகிறது. உண்மையில், தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் அதன் அதிகரித்துவரும் பயன் தன் மை, உழைக்கும் மக்களின் எப்போதும் வளர்ந்து வரும் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திறன் வாய்ந்த பொருளாதார அடித்தளத்தை வழங்குகின்றன.

அதே நேரத்தில், தேவைகளைப் பூர்த்தி செய்தல் பொருள் மதிப்புகளின் வளர்ச்சியினால் மட்டுமே வரை யறுக்கப்படுவதில்லை. சோஷலிச சமூகம், பொருளாயத மற்றும் உடற்சார்பானத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மனித வாழ்க்கையின் புனருற்பத்திக்கே தீர்மானகரமான தாக இருந்த போதும், தனிமனிதனின் முழு மொத்த மான தார்மீக வளர்ச்சியை உறுதி செய்ய முற்படுகிறது. தார்மீக தேவைகளைப் பூர்த்தி செய்தல் கூட, முடிவாக பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சியினால் தீர்மானிக் கப்படுகிறது.

சோஷலிசத்தின் கீழ், உற்பத்தி மற்றும் அதன் கட் டமைப்பை சமூகம் ஒழுங்கமைக்கிறது, இதன் மூலம் இது உடல், தார்மீக மற்றும் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்தலை சாத்தியமாக்குகிறது.

தனிநபர்த் தேவைகளைச் சிறந்தவையாக்குவது,

சோஷலிச வாழ்க்கையை மேம்படுத்த, புதிய தனிமனிதனை உருவாக்க ஓர் அத்தியாவசியமான நிபந்தனையாகும். சோஷலிச சமூகம் மனிதத் தேவைகள் உருவாதலின் மீது ஒரு செயல்முனைப்பான தாக்கத்தைச் செலுத்துகிறது. சமூக உற்பத்தியின் மிக உயர்ந்த இலக்கை அடைவதே இதன் முக்கிய கட்டளைவிதியாகும்: உற்பத்திச் சக்திகளின் மட்டத்தைக் கருத்தில் கொண்டு தனிமனிதனின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதேயாகும்.

தனிநபர்த் தேவைகளை உருவாக்கும் போது, நுகர்வுப் பொருட்களின் வினியோகத்தின் முறைகளையும் வடிவங்களையும் மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும். ஊதியம் மற்றும் சமூக நுகர்வு நிதிகளின் அதிகரிப்பை மேலும் நல்ல முறையில் சமப்படுத்துவதன் மூலம் சமூகம் மக்களின் பொருளாயத, சமூக மற்றும் தார்மீகத் தேவைகளின் வளர்ச்சி தகவு வீதங்களின் மீது செல்வாக்கைச் செலுத்துகின்றது.

## சோஷலிசத்தின் கீழ் பொது ஸ்தாபனங்களின் உடைமை

சோஷலிசத்தின் கீழ் பொது ஸ்தாபனங்களின் உடைமை என்பது சமூக உடைமையின் ஒரு வகையாகும். அது சமூக பொது ஸ்தாபனங்களினால் வசமாகக் கொள்ளப் பெற்றிருக்கும் பொருள் மதிப்புகளின் உடைமை, பயன்படுத்தல் குறித்து உள்ள உறவுகளை வெளிப்படுத்துகிறது. சோஷலிசத்தின் கீழ், தொழிற்சங்கங்கள், படைப்பாளர் சங்கங்கள் (கட்டிடக்கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர் சங்கங்கள், நாடகத்துறை கழகம் போன்றவை), வாலன்டரி கழகங்கள் (கண்டுபிடிப்போர் கழகம், இயற்கைப் பாதுகாப்புக் கழகம், தீத்தடுப்புக் கழகம், பல்வகை விஞ்ஞான



12—1245

மற்றும் தொழில்நுட்பக் கழகங்கள், மக்களுக்கிடையே பொது அறிவைப் பரப்புவதற்கான கழகம் போன்றவை) ஆகிய பொது ஸ்தாபனங்களிடம் சொத்துடைமை உள்ளது. சோஷலிசத்தின் கீழ், உழைக்கும் மக்களின் பல்வகைப் பட்ட நலன்களையும் பூர்த்தி செய்வதில் ஒரு முக்கியமான பங்காற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு தங்களது நட வடிக்கைகளை நிறைவேற்ற பொருளாயத நிதிகள் வேண்டும்.

அவற்றின் உடைமை சோஷலிச உடைமையாக இருந்த போதிலும் அது அரசு (பொதுமக்கள்) உடைமை மற்றும் கூட்டுறவு உடைமைகளின் வடிவங்களிலிருந்து வேறு படுகிறது. பொது ஸ்தாபனங்கள் உற்பத்திச் சாதனங்களை உருவாக்கும் தொழில் நிறுவனங்களை நடத்துவதில்லை, எனவே அவற்றின் உடைமை பெரும்பாலும் உற்பத்தி இலக்கு அற்ற நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படு கிறது.

இந்த ஸ்தாபனங்களின் உடைமை, உற்பத்தியல்லாத துறையின் செயல்பாட்டின் ஒரு தனித்தன்மை வாய்ந்த வடிவமாகும். இங்கு பொருளாதார உறவுகள், பெரும் பாலும் ஏற்கெனவே உள்ள பொருள் மதிப்புகளின் பரி வர்த்தனை மற்றும் நுகர்வில் பணிவிடை செய்தல் அல் லது கூடுதலான மதிப்புகளை உருவாக்குதலில் தங்களை வெளிப்படுத்துகின்றன; இம்மதிப்புகள், சேவைகள் என்ற வடிவத்தில், எல்லாவற்றிற்கும் மேலாகக் கலாசார மற் றும் தார்மீக சேவைகள் என்ற வடிவத்தில், பொது ஸ்தா பனங்களின் அங்கத்தினர்களால் அவர்களது முழுமை யான வளர்ச்சிக்காக நுகரப்படுகின்றன.

பொது ஸ்தாபனங்களின் செல்வம் பெரும்பாலும் சமூ கத் துறையில் செயல்படுவதால், வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் மக்களின் கலாசார, தார்மீக மற்றும் பிற

தேவைகளைப் பூர்த்தி செய்வதே அவற்றின் பணியாகும். உற்பத்தி மற்றும் சமூக நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு உழைக்கும் மக்களைப் பயிற்றுவிப்பதும், விளையாட்டு மற்றும் அறிவொளி வேலையை நிறைவேற்றுவதும் இப்பணியில் அடங்கும்.

பொது ஸ்தாபனங்களின் உடைமை, ஆரோக்கிய இல்லங்கள், ஓய்வில்லங்கள், கலாசார மாளிகைகள், பொழுது போக்கு மன்றங்கள், விளையாட்டரங்கங்கள் முதலியவற்றை உட்கொண்டுள்ளது.

பொது ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களுடைய வருவாயின் ஒரு பகுதியை, நுழைவுக் கட்டணம் மற்றும் உறுப்பினர் கட்டணம் என்ற வடிவங்களில், தன்னிச்சையாகக் குவிப்பதன் மூலம் அவ்வுடைமை பெரும்பாலும் உருவாக்கப்படுகிறது. வேறு சொற்களில் கூற வேண்டுமானால், பொது ஸ்தாபனங்களின் உடைமை, சொந்த பண பங்களிப்புகளின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது; சோஷலிச சமூகத்தில் உழைக்கும் மக்களின் சொந்த உடைமையின் ஒரு பகுதியை தன்னிச்சையாகவே சமூகமயமாக்குவதும், சொந்த மற்றும் பொதுமக்களின் சுவீகரித்தலுக்காக உள்ள சமூக உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி குறிப்பிட்ட மறு விநியோகமும் இடம் பெறுகின்றன.

பொது ஸ்தாபனங்களின் உடைமையை உட்படுத்தும் பொருளாதார உறவுகள் வழக்கமாக, சொத்துரிமை என்ற வடிவத்தில் சட்டப்பூர்வமாகப் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. சோவியத் யூனியனின் அரசியலமைப்புச் சட்டத்தின் 10ஆவது பாரா “தொழிற்சங்கங்கள் மற்றும் பிற பொது ஸ்தாபனங்கள் தங்களது விதிப்படியான பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் உடைமை கூட சோஷலிச உடைமையில் உள்ளடக்கமாகக் கொள்ளப்படுகிறது” என்று கூறுகிறது.

அதே நேரத்தில், நாடு முழுமையான அளவில் பொது ஸ்தாபனங்களின் ஒரே தனித்த சேகரமான உடைமை என்று ஒன்றுமில்லை, அவைகளில் ஒவ்வொன்றும் தனக்கே சொந்தமான உடைமையைக் கொண்டுள்ளது. எனினும், பொது ஸ்தாபனங்கள் அரசிற்கு சொந்தமானவையாக இல்லாவிட்டாலும் அவை, பொதுமக்கள் உடைமையின் பொருட்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப் பட்டுள்ளன. இவ்வாறாக, அவை வழக்கமாக அரசு கட்டிடங்களிலும் அரசு நிலத்தின் மீதும் அமைந்துள்ளன; மக்களின் பொதுச் சேவைகளையும் கலாசார, அறிவொளி மற்றும் உடல் நல வசதிகளையும் பயன்படுத்திக் கொள்கின்றன. பொது ஸ்தாபனங்களின் இயல்பான செயல் பாட்டை உறுதிசெய்வதற்காக அரசு பண மற்றும் பிற உதவிகளையும் அளிக்கிறது.

பல்வேறு பொது ஸ்தாபனங்கள் நிறுவப்படும் போது, சில சொத்துகள் அரசினால் இழப்பீடு இல்லாமல் இந்த ஸ்தாபனங்களின் பொறுப்பில் விடப்படுகின்றன. உதாரணமாக, ஓய்வில்லங்கள், ஆரோக்கிய இல்லங்கள் சோவியத் தொழிற்சங்கங்களின் உடைமையின் பொறுப்பில் வைக்கப் பட்டன. அதே நேரத்தில், பொது ஸ்தாபனங்களின் சொத்துகள் அவற்றின் நடவடிக்கைகள் மூலமாகவே அதிகரிக்கப்படுகின்றன: புத்தகம் வெளியிடுதல், ஊதியம் அளிக்கப்பட்ட சொற்பொழிவுகள், இசையரங்கு நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் முதலியன. சோஷலிச அரசு பொது ஸ்தாபனங்களின் உடைமையைப் பாதுகாக்கிறது, சோஷலிச உடைமையின் அவ்வடிவத்தை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவுகிறது.

பொது ஸ்தாபனங்களின் சொத்துகள் ஜனநாயக மையவாத கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு நடத்தப் படுகின்றன. இந்த ஸ்தாபனங்கள் தங்களது விதிப்

படியான பணிகளைச் செயற்படுத்துவதற்காக தங்கள் சொத்துகளைப் பயன்படுத்தும் விதிகளைத் தாங்களே இயற்றுகின்றன.

பொது ஸ்தாபனங்கள், வளர வளர தங்களது பொறுப்பிலுள்ள சொத்துகளின் வினியோகம் மற்றும் மறு வினியோகத்தில் மட்டும் ஈடுபடவில்லை, ஆனால் பரந்த உற்பத்திச் செயல் மூலம் (வெளியீடு போன்ற) இச் சொத்துகளை மேம்படுத்துவதிலும் கூட ஈடுபட்டுள்ளன. இவ்வுற்பத்திச் செயல், உழைக்கும் மக்களின் வளர்ந்து வரும் தார்மீக மற்றும் படைக்கும் திறனுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சோஷலிச சமூகத்தின் அங்கத்தினர்களது முழுமையான மற்றும் ஒத்திசைவான வளர்ச்சியை உறுதிசெய்யவும் பாடுபடுகிறது.

பொது ஸ்தாபனங்களின் சொத்துச் சார்பான மற்றும் நிதிநிலை சார்ந்த அடித்தளம் வலுப்பெறுதலும் வளர்ச்சியடைதலும் அதன் செயல்பாட்டின் அதிகரித்துவரும் பயன் தன்மையும் மெய்யான சோஷலிசத்தின் கீழ் அவற்றின் மிகப்பெரும் பங்கையும் முக்கியத்துவத்தையும் குறிக்கின்றன. அதே பொழுது, உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் முன்னேற்றம் மற்றும் சமூக உற்பத்திப் பரிமாணத்தின் வளர்ச்சி பொது ஸ்தாபனங்களின் வளர்ச்சியைக் குறிக்கின்றன; அதாவது இது உற்பத்திச் சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் மீதான பொது மக்கள் உடைமை பிரதானமான பங்கு வகிக்கும் ஒன்றையொன்று பின்னிச்சார்ந்த ஒரு செயல் முறை உள்ளது என்பதைக் குறிக்கிறது.

பல்வகைப்பட்ட கலாசார, விஞ்ஞான மற்றும் பிற தேவைகளை வெளிக்கொணரவும் அவற்றை மேம்படுத்தவும், மனித நடவடிக்கையின் இத்துறையின் கூட்டாண்மை ஆதாரக் கொள்கைகளைப் பேணவும் கூட பொது ஸ்தா

பனங்கள் உதவி புரிகின்றன. ஆகவே, சோஷலிச சமூகத்தின் அரசியல், பொருளாதார, கலாசார வாழ்க்கையில் பொது ஸ்தாபனங்களின் உடைமை ஒரு மிக முக்கியமான பங்காற்றுகிறது.

## சோஷலிசத்தின் கீழ் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை

வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள், அரசுப் பண்ணைகள் மற்றும் இடைப் பண்ணைத் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள் மற்றும் நாட்டுப்புற அறிவுப் பகுதியினர் ஆகியோரால் பேணப்படும் துணைப் பண்ணைகள் சோஷலிசத்தின் கீழ் தனிநபர் உடைமையின் ஒரு தனிவகையான வடிவமாகும்.

இங்கு சிறு அளவு உற்பத்திச் சாதனங்கள், பசுக்கள், கறவை மாடுகள், நெடுநாளிருக்கிற தாவரங்கள், வேளாண் வசதிகள், சொந்த துணைப் பண்ணைகளின் விளைபொருள் ஆகியவை தனியுடைமையாக உள்ளன. பொருள் மதிப்புகளின் தோற்றுவாய், சமூக உற்பத்தியில் உழைப்பு அல்ல, ஆனால் சமூக உற்பத்தியிலிருந்து பெறப்பட்ட அவர்களின் வருவாயைப் பெருக்கவும், நாட்டுப்புற உழைக்கும் மக்களின் தேவைகளை இன்னும் பெரிய அளவில் பூர்த்தி செய்யவும் உதவும் சொந்த துணைப் பண்ணைகளில் உழைப்பாகும். சமூகமயமாக்கப்பட்ட துறை அது வரை வேளாண் விளைபொருளை மிகுந்த அளவில் உற்பத்தி செய்யவில்லை, இக்காரணத்தால் வேளாண் கச்சாப் பொருட்களில் தேசிய பொருளாதாரத்தின் எல்லா தேவைகளையும் உணவுப் பொருட்களில் மக்கள் தொகையின் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிய

வில்லை, எனவே துணைப் பண்ணைகள் அத்தியா வசியமானவைகளாக உள்ளன.

தனிப்பட்டோர்த் துணைப் பண்ணையை, தனித்தனி யான சிறு பண்ட உற்பத்தியாக, சோஷலிசப் பொருளா தாரத்தில் ஒரு ஒத்திசைவற்ற அங்கமாகக் காணக் கூடாது. அது சமூக உற்பத்தியுடன் மிக நெருக்கமாகப் பிணைக் கப்பட்டுள்ளது, அதைச் சார்ந்துள்ளது. சமூக (கூட்டு) உற் பத்தியில் பங்கு கொள்ளும் அதே உழைக்கும் மனிதன் தான் இவ்வகைப் பண்ணையையும் இயக்குகிறான்; இது நாட்டுப்புறத்திலுள்ள மனித சக்தி வள ஆதாரங்களை மேலும் அதிக அளவில் பயன்படுத்த உதவுகிறது. ஏனென் றால் இது உழைப்புச் செயல்முறையில் உழைக்கும் மக் களின் குடும்ப அங்கத்தினர்கள், ஓய்வூதியக்காரர்கள் மற்றும் இளம் பருவத்தினர்களையும் உட்படுத்துகிறது.

தனிப்பட்டோர்த் துணைப் பண்ணையில் உற்பத்தி செய் யப்படும் விளைபொருளின் பெரும்பகுதி, அவ்வகை பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது, அதே போது, உபரி விளைபொருளின் ஒரு பகுதி பண்ட-பண உறவுகளின் துறையில் நுழைந்து சந்தைக்குச் செல்கிறது. அது, துணைப் பண்ணையற்ற உழைக்கும் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு கூடுதல் தோற்று வாயாக இருப்பது மட்டுமல்ல, ஆனால் உணவுப் பொருட் களின் சந்தை சரக்குத் தொகுதியாகவும் அமைகிறது. அதன் மூலமாக நகர ஜனத்தொகையின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது. அதே நேரத்தில் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை நாட்டுப்புறம் சார்ந்த உழைக்கும் மக்களின் உழைப்பினால் ஈட்டப்பட்ட வரு வாய்களை அதிகரிக்கிறது, அதனால் நகர் மற்றும் நாட்

டுப்புற ஜனத்தொகையின் வருவாய்களைச் சமப்படுத்து கிறது.

ஆகவே, சோஷலிசத்தின் கீழ் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை முறை என்பது சமூக மற்றும் சொந்த நலன்களை இணைக்கும் ஒரு பயனுள்ள வடிவ மாகும், இது ஜீவாதாரமான சமூகப் பொருளாதார பணி களைச் செயல்படுத்துகிறது. எனவேதான் சமூக உற்பத்தி நலன்களுடன் ஒத்திசைவாயுள்ள தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை முறையின் வளர்ச்சிக்கான வழி, சோஷலிச நாடுகளின் இந்நாளைய விவசாயக் கொள்கையின் ஒரு முக்கியமான அம்சமாக உள்ளது. சோவியத் யூனியனின் அரசியலமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது பாரா, "துணைப் பண்ணைகளை நடத்துவதில் குடிமக்களுக்கு அரசு மற்றும் கூட்டுப் பண்ணைகள் உதவி வழங்கும்" என்று கூறுகிறது.

சமூக உற்பத்தியுடன் அதிக நெருக்கமான பிணைப்பு தனிப்பட்டோர்த் துணைப் பண்ணையின் வளர்ச்சியின் தற்போதைய நிலையின் ஒரு முக்கிய அம்சமாகும். கூட் டுறவுச் சங்கங்களுடன் ஓர் ஒப்பந்தத்தின் மூலம் நாட்டுப் புற மக்கள் அவற்றின் கால்நடைகள், பறவைகளை வளர்க் கிறார்கள். அவ்வகைப் பண்ணை முறையின் கீழ் அரசு மற்றும் கூட்டுறவுத் நிறுவனங்கள் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணைகளுக்கு தீவனம், போக்குவரத்து வசதிகள் மற்றும் கால்நடை மருத்துவ வசதிகள் போன்றவற்றை அளித்து எல்லா ஒழுங்கமைப்பு விஷயங் களுக்கும் பொறுப்பேற்றுக் கொள்கின்றன; அவற்றின் விளைபொருளை விற்பனை செய்வதில் உதவுகின்றன.

தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை முறையின் உள் ளார்ந்த ஆற்றல்களை இவ்வாறு பயன்படுத்துதல் சமூக மற்றும் தனிநபர் உடைமையை வலுப்படுத்த உதவுகிறது,

பொருளாதார நலன்களின் இடைத்தொடர்பையும் வலுப்படுத்த உதவுகிறது, அதன் மூலமாக உற்பத்தி மற்றும் உழைப்பை சமூகமயமாக்குதலை அதிகரிக்க உதவுகிறது.

துணைப் பண்ணைகளில் உற்பத்தி மற்றும் உழைக்கும் நிலைமைகள் முன்னேற்றம் அடைந்துள்ளன, அதிக நுட்பமான தொழில்நுணுக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன, நவீன கருவிகள், தொழில்நுட்பச் சாதனங்கள், தாது உப்பு உரங்கள், பூச்சிக் கொல்லிகள் முதலியவை பரந்த அளவில் உபயோகிக்கப்படுகின்றன.

வேளாண் உற்பத்தியின் தொழிற்துறைமயமாக்கல், தனித்துறைப்பாடு மற்றும் குவிமையமாதல் ஆகியவற்றின் தற்போதைய காலக்கட்டத்தில் சோஷலிச நாடுகளில் இடைப் பண்ணை மற்றும் வேளாண் தொழிற்துறை ஒருங்கிணைப்பின் வளர்ச்சியிலும் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை ஒரு பெரும் பங்காற்றுகிறது, மேலும் அதன் உள்ளாற்றல் சோஷலிச வேளாண்மையின் வளர்ச்சிக்காக வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

1987ஆம் ஆண்டு முதல் சோவியத் நாட்டில் மக்களின் தேவைகளை மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்யவும், குறிப்பிட்ட சில பிரிவு மக்களுக்கு (ஓய்வூதியம் பெறுபவர்கள், மாணவர்கள், இதரர்கள்) சமூக ரீதியில் பயனுள்ள வேலைகளை அளிப்பதற்காகவும், தம் உழைப்பிற்கேற்ப கூடுதல் வருமானம் பெறும் வாய்ப்புகளை அளிப்பதற்காகவும் தனிநபர் உழைப்பு செயல்நடவடிக்கை பயன்படுத்தப்படுகிறது. சிறு கைவினைத் தொழில், சேவை வசதிகள் ஆகிய துறைகளில் இது அனுமதிக்கப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க சம்பந்தப்பட்ட தனிநபர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் உழைப்பின் அடிப்படையிலானது. அரசு இந்த தனிநபர் உழைப்பு

நடவடிக்கையை ஒழுங்கமைத்து, அதை சமுதாய நலன் கருதி பயன்படுத்த வழியமைக்கிறது.

சமூகப் (அரசு மற்றும் கூட்டுறவு) பண்ணைகள், மிக அதிகமாக வளர்ச்சி அடைந்த உற்பத்திச் சக்திகளின் அடிப்படையில் பண்டங்களிலும் சேவைகளிலும் மக்களின், சமூகத்தின் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலும் அதன் வளர்ச்சி நிலைவரை, தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை முறையும் தனி நபர் உழைப்பு நடவடிக்கையும் சோஷலிச பொருளாதாரத்திற்கே உரியதாயுள்ளன.

ஆகவே, சோஷலிசத்தின் கீழ், தனிநபர் உடைமை என்பது, தேசியப் பொருளாதாரத்தில் உழைப்பின் அளவு மற்றும் தரத்திற்கேற்ப சமூக உற்பத்தியிலிருந்து பெறும் வருவாய்களிலிருந்து பெறப்படுகிறது, சமூக நுகர்வு நிதிகளிலிருந்து பெறும் பண வழங்கீடு மற்றும் தனிப்பட்டோர்த் துணைப் பண்ணைகளிலிருந்தும் தனிநபர் உழைப்பு நடவடிக்கையிலிருந்தும் பெறப்பட்ட வருவாயிலிருந்தும் அடையப்படுகிறது. சமூக உற்பத்தியில் உழைப்புக்கேற்ப செய்யப்படும் வினியோகத்தின் மூலம் பெறப்படும் வருவாய்தான் எல்லா தனிநபர் வருவாய்களிலும் மிக முக்கியமான ஆதாரமாகும்.

தனிநபர் உடைமை மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் உள்ளது. வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகள் மட்டும் அல்லாமல், சமூகத்தின் தேசிய இன மரபுகள், தனித்தன்மைகள் அதன் மீது தாக்கம் செலுத்துகின்றன. உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுமக்கள் உடைமையும் கூட்டுறவு உடைமையும் நெருக்கமாக வருவது, இவ்வடிவங்களில் சமூக உற்பத்தியின் சமமற்ற மட்டத்தினால் விளைவிக்கப்படும் தனிநபர் உடைமையின் கட்டமைப்பில் உள்ள வேறுபாடுகளையும் குறைக்கிறது.

ஆகவே, சோஷலிச உடைமையின் உறவுகள் ஒரு முழு மையான அமைப்பாக உருவாகின்றன. இது உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் இரு வடிவங் களை (பொதுமக்கள் உடைமை மற்றும் கூட்டுறவு உடை மை) உள்ளடக்கியுள்ளது; நுகர்வுப் பொருட்களின் மீதான பல்வகைப்பட்ட தனிநபர் உடைமை: தனிநபர் உழைப்பு நடவடிக்கை, தனிப்பட்டோர்த் துணைப் பண்ணைகளின் மீதான உடைமை மற்றும் பொது ஸ்தாபனங்களின் உடைமை ஆகியவற்றையும் உட்கொண்டுள்ளது.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமை தான் சோஷலிச சமூக அமைப்பின் பொருளாதார அடிப் படையாகும், இது அதன் வலிமையின் ஒரு வற்றாத வள ஆதாரமாக உள்ளது, சமூக உற்பத்தியின் நிலையான வளர்ச்சி மற்றும் மக்களின் நல் வாழ்க்கையின் மேம் பாட்டின் ஆதாரமாகவும் உள்ளது. உற்பத்திச் சாதனங் களின் மீதான சமூக உடைமையின் வரலாறு சார்பான அனுகூலம், இது மனிதனை மனிதன் சுரண்டுவதை முடிவுக்குக் கொண்டு வருகிறது என்பதாகும். இது உழைக் கும் மக்கள் இனி ஒருபோதும் முதலாளிகளுக்காக வேலை செய்வதில்லை, ஆனால் தங்களுக்கும் தங்களது சமூகத்திற்காகவும் மட்டுமே வேலை செய்கிறார்கள் என்ப தைக் குறிக்கிறது. அதன் விளைவாக, உழைப்புக்கான அவர்களது மனப்போக்கு ஒரு மாறுதலை அடைகிறது, உழைப்பு புதிய அர்த்தம் மற்றும் சாராம்சத்தைப் பெறு கிறது, ஏனென்றால் சோஷலிசத்தின் கீழ் தனிமனிதனின்

நிலைமை முதன்மையாக அவனது உழைப்பின் விளை பயன்களைச் சார்ந்துள்ளது.

பொது மக்கள் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலா சாரத்தைத் தடையில்லாமல் அனுபவிக்கிறார்கள். தனி மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கான நிலைமைகளை சோஷலிசம் உருவாக்குகிறது. ''முற் காலத்தில் மனித கூர்மதி, மனிதனின் மூளை ஒரு சிலருக்கு மட்டும்தான் தொழில்நுட்ப மற்றும் கலாசாரத்தின் பயன்களை அளிப் பதற்காக இயங்கியது, இது மற்றவர்களிடமிருந்து அடிப் படை அத்தியாவசியத் தேவைகளை—கல்வி மற்றும் வளர்ச்சியைப் பறித்தது. இன்று விஞ்ஞானத்தின் அற் புதங்கள், கலாசாரத்தின் பெறுபலன்கள் நாடு முழுமைக் கும் உரிமையாயுள்ளன, இனி ஒருபோதும் மனிதனின் அறிவாற்றலும் மனித கூர்மதியும் அடக்கு முறைக்கும் சுரண்டுதலுக்கும் பயன்படுத்தப்பட மாட்டா'' என்று லெனின் வலியுறுத்திக் கூறினார்.* சோவியத் யூனியனி லும் மற்ற பல நாடுகளிலும் அமைக்கப்பட்ட மெய்யான சோஷலிசத்தின் வரலாற்று பூர்வமான அனுபவம் இந்த கருத்தின் வலிமையையும் உண்மையையும் மெய்ப்பித் துள்ளது.

* V.I. Lenin, *Collected Works*, vol. 26, pp. 481-82.

## சொற்றொடர் விளக்கம்

**உடைமை**—உற்பத்திச் சாதனங்கள் மற்றும் விளை பொருளின் சுவீகரித்தல் மற்றும் பயன்படுத்துதல் குறித்த மனித உறவுகள்.

**சமூக உடைமை**—சோஷலிசத்தின் கீழ் பொருள் மதிப்பு கள் பொதுவில் உடைமையாகக் கொள்ளப்படுகின்ற போது உற்பத்திச் சாதனங்கள் அல்லது நுகர்வுப் பொருட்கள் குறித்த மனித உறவுகள்.

**சோஷலிசத்தின் கீழ் அரசுடைமை**—சோஷலிச கட்டத்தில் அரசுடைமையாகிய சமூக உடைமையின் ஒரு வடிவம். உடைமையின் பொருட்கள் தனிப்பட்ட கூட்டுகள் அல்லது தனிமனிதர்களுக்கு சொந்தமாக இல்லாமல் சமூகத்தின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் சொந்தமாக உள்ளன.

**சோஷலிசத்தின் கீழ் கூட்டுறவு உடைமை**—அரசு சோஷ லிச உடைமையைப் போன்ற அதே வகையான சோஷலிச சமூக உடைமையின் ஒரு வடிவம். இது அடிப்படை உற்பத்திச் சாதனங்களை சமூகமயமாக்குதலை ஆதார மாகக் கொண்டது.

**தனிநபர் உடைமை**—சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருள் மதிப்புகளை சுவீகரிப்பது குறித்த சமூக அங்கத்தினர்களின் பொருளாதார உறவுகள்.

**தனியுடைமை**—பொருள் மதிப்புகளின் சுவீகரித்தல் குறித்த உறவுகள். உற்பத்திச் சாதனங்கள் மற்றும்

விளைபொருட்கள் தனிப்பட்ட மனிதர்களால் சுவீகரிக்கப் படுவதை இவை உட்படுத்துகின்றன.

**பொதுமக்கள் உடைமை**—சமூகத்தின் அனைத்து அங்கத் தினர்களும் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உற்பத்தி யின் விளைபயன்களின் சக உடைமையாளர்களாக இருக் கும் சமூக உடைமையின் அடிப்படையான வடிவம்.

**முதலாளித்துவத்தின் கீழ் அரசுடைமை**—உற்பத்திச் சாத னங்களின் மீதான முதலாளித்துவ உடைமையின் ஒரு வடிவம், இவை அரசால் உடைமையாகப் பெறப் பட்டுள்ளன.

**முதலாளித்துவத்தின் கீழ் கூட்டுறவு உடைமை**—கூட்டுப் பொருளாதார நடவடிக்கையின் நோக்கத்திற்காக உற் பத்தியாளர்கள் உற்பத்திச் சாதனங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் ஒரு பகுதியையும் பண பங்களிப்பு களையும் தன்னிச்சையாக குவிக்கும் போது எழும் கூட் டுடைமை. இது முதலாளித்துவ பொருளாதார விதிகளின் அடிப்படையில் வளரும் கூட்டு முதலாளித்துவ உடைமை யின் ஒரு வகையாகும்.

**உழைப்பின் உற்பத்தித் திறன்**—உழைக்கும் நேரத் தின் ஓர் அலகில் உருவாக்கப்பட்ட பொருள் மதிப்புகளின் அளவால் (அல்லது எதிர்மாறாக, ஒரு விளைபொருளின் அலகிற்காகச் செலவழிக்கப்பட்ட உழைக்கும் நேரத்தின் அளவால்) அளவிடப்படும் மனித உற்பத்தி நடவடிக்கை யின் பயன்முனைப்பு.

**உழைப்பின் கூட்டுறவு**—பொருளாயத மற்றும் தார்மீக மதிப்புகளை உற்பத்திச் செய்வதில் தனிப்பட்ட உழைக் கும் மனிதர்களைக் கூட்டாக ஒன்று சேர்க்கும் சீரிசைவுச் செயல்.

**உழைப்பு** — மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இயற்கைப் பொருளுக்குப் பயன் மதிப்பின் வடிவத்தை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட உணர்வு பூர்வமான மனித நடவடிக்கை.

**உழைப்புச் சக்தி** — வேலைக்கான மனிதனின் ஆற்றல், பொருள் மதிப்புகளை உருவாக்குதலில் பயன்படுத்தப் படும் அவனது உடல் மற்றும் தார்மீக திறமைகளின் முழுமை.

**உழைப்புப் பிரிவினை** — உழைப்புக் கருவிகளின் வேற்றுமைப்பாடு மற்றும் வளர்ச்சிக்கேற்ற உழைப்புச் செயல் முறையின் பல வகைப்பட்ட பிரிவினைகள்; உழைப்பு உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான ஒரு முக்கியமான காரணக் கூறு.

**உற்பத்தி** — மக்கள் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பொருள் மதிப்புகளை உருவாக்கும் செயல்முறை. இச்செயல்முறையில் அவர்கள், பல்வேறு மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பயனுள்ள பொருட்களாக மாற்றுவதற்காக இயற்கைப் பொருட்களின் மீது செயல்படுகிறார்கள்.

**பண்ட உற்பத்தி** — உற்பத்தியாளர்களால் சொந்த நுகர்விற்கில்லாமல் சந்தையில் கொள்வினை விற்பனை மூலம் பரிவர்த்தனைக்காக விளைப்பொருட்கள் தயாரிக்கப்படும் சமூக உற்பத்தியின் ஒரு வடிவம். இது சமூக உழைப்புப் பிரிவினையின் அடிப்படையிலும் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத் தனித்துவத்தின் அடிப்படையிலும் எழுகிறது.

**உற்பத்தி உறவுகள்**—பொருள் மதிப்புகளின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு குறித்து மக்களின் விருப்பம் மற்றும் உணர்வு நிலையிலிருந்து சுயேச்சையாக, புறநிலையில் உருப்பெறும் மக்களுக் கிடையேயான உறவுகள்.

**உற்பத்திச் சாதனங்கள்**—உழைப்புச் சாதனங்கள் அல் லது உழைப்புக் கருவிகள் (இயந்திரங்கள், கருவிகள், உற்பத்திக் கட்டிடங்கள் முதலியவை) மற்றும் உழைப்புப் பொருட்களின் மொத்தம் (கச்சாப் பொருட்கள், எரி பொருள் முதலியன).

**உற்பத்தி முறை**—பொருள் மதிப்புகளைப் பெறு வதற்கான ஒரு வரலாற்றுப் பூர்வமாக வரையறுக்கப்பட்ட முறையாகும், இரண்டு அம்சங்களின் ஐக்கியமாகும்: உற் பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகள்.

**அடிமையுடைமை உற்பத்தி முறை**—மனிதனை மனிதன் சுரண்டுதலையும் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் அடி மைகளின் மீதான அடிமை உடைமையாளர்களின் உடை மையையும் அடிப்படையாகக் கொண்ட, மனித இன வர லாற்றின் முதல் உற்பத்தி முறை; பொருளாதாரச் சார் பற்ற நிர்ப்பந்தத்தின் உதவியினால் அடிமைகள் சுரண் டப்பட்டார்கள்.

**நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை**—நிலத்தின் மீதான நிலப்பிரபுக்களின் (நிலக்கிழார்களின்) உடைமையை அடிப் படையாகக் கொண்டு பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்யும் ஒரு முறை; உடனடி உற்பத்தியாளர்கள், நிலப் பிரபுவினால் உடைமையாகக் கொள்ளப்பட்ட நிலத்தின்

மீது தனிப்பயிரிடுதலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், நிலப் பிரபுக்களைச் சார்ந்திருக்கும் உற்பத்தி முறை.

**உற்பத்தியின் தனித்துறைப்பாடு**—ஒரு குறிப்பிட்ட வகை விளைபொருளை உற்பத்திச் செய்யும் பொருளாதாரத் தின் குறிப்பிட்ட தொழிற்துறைகள் மற்றும் நிறுவனங் களின் எண்ணிக்கையின் பெருக்கத்தில் வெளிப்படுத்தப் படும் சமூக உழைப்புப் பிரிவினையின் ஒரு வடிவம்.

**உற்பத்தியைச் சமூகமயமாக்குதல்**—தேசியப் பொருளா தாரத்தில் பல்வகைத் துறைகளின் துண்டு துண்டாக உள்ள உற்பத்திச் செயல்முறைகளை, ஓர் ஒத்திசைவான சமூகச் செயல்முறையாக்கும் இணைப்பு.

**ஊதியம்:**

**சோஷலிசத்தின் கீழ் ஊதியம்**—தேசிய வருவாயின் பகுதி யிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் அலுவலகர்களின் பங்களிப்பு (பண வடிவத்தில் வெளிக்காட்டப்படுகிறது). இப்பகுதி உழைக்கும் மக்களின் சொந்த நுகர்வுக்காகச் செலவிடப்படுகிறது; அவர்களின் உழைப்பு உள்ளீட்டின் தரம் மற்றும் அளவிற்கேற்ப வினியோகிக்கப்படுகிறது.

**முதலாளித்துவத்தின் கீழ் ஊதியம்**—உழைப்புச் சக்தியின் மதிப்பின் (அதற்கேற்றவாறு விலையின்) ஒரு மாற்றப் பட்ட வடிவம், அதாவது கூலித் தொழிலாளியால் முத லாளிக்கு விற்கப்பட்ட உழைப்பிற்கான திறமை.

**ஏகபோகம்**—உற்பத்தி மற்றும் சந்தையின் ஒரு கணிச மான பகுதியை பொறுப்பேற்றுக்கொள்ளும் ஒரு பெரிய தொழில் நிறுவனம் அல்லது நிறுவனங்களின் ஓர்



13—1245

அமைப்பு. இது ஏகபோக லாபத்தைப் பெறுவதற்காக சந்தையின் மீது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது.

**ஏகாதிபத்தியம்** – ஏகபோக முதலாளித்துவம், அதன் உச்ச மற்றும் இறுதியான கட்டம், சோஷலிசப் புரட்சிக்கான முற்பொழுது. இது முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் ஏகபோகங்கள் தலையான இடத்தை கைப்பற்றிய 19ஆவது நூற்றாண்டின் முடிவில் 20ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியது.

**கம்யூனிசம்** – உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையின் அடிப்படையிலான ஒரு சமூகப் பொருளாதார அமைப்பு, தனிமனிதனின் முழு வளர்ச்சியை உறுதி செய்யும் மனித இனத்தின் சமூக முன்னேற்றத்தின் மிக உயர்ந்த கட்டம்.

**கூட்டுப் பண்ணை** – சோவியத் வேளாண்மையில் கூட்டுறவு சோஷலிச உற்பத்தியாளர் நிறுவனம். கூட்டு உழைப்பு மற்றும் சமூக உற்பத்திச் சாதனங்களின் அடிப்படையில் கூட்டு பயிரிடுதலின் நோக்கத்திற்காக தோன்றிய விவசாயிகளின் ஒரு தன்னிச்சையான சங்கம்.

**சமூக நுகர்வு நிதிகள்** – சமூகத்தின் அனைத்து அங்கத்தினர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் (பொது உடல்நலம், கல்வி முதலியன) தனி மனிதர்கள், வர்க்கங்கள் மற்றும் சமுதாயப் படிநிலைகளின் சமூகப் பொருளாதார நிலைகளை சரிசமப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் சோஷலிச சமூகத்தின் தனிநபர் நுகர்வு நிதியின் ஒரு பகுதி.

**சோஷலிசம்** — கம்யூனிச உற்பத்தி முறையின் முதல் கட்டம், இதன் பொருளாதார அடிப்படை உற்பத்திச் சாதனங்களின் மீதான சமூக உடைமையாகும். சமூகத்தின் அனைத்து அங்கத்தினர்களின் தேவைகளை இயன்ற வரை முழுமையான அளவில் பூர்த்தி செய்யும் வகையிலும், தனிமனிதனின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையிலும் இது திட்டமிட்ட முறையில் வளருகிறது. சோஷலிசத்தின் கீழ் பொருள் மதிப்புகள், ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரது திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது வேலைக்கேற்ப'' என்ற கோட்பாட்டின் படி வினியோகிக்கப்படுகின்றன.

**தனிப்பட்டோர்த் துணைப் பண்ணை** — தனிநபர் உழைப்பின் அடிப்படையில் சோஷலிசத்தின் கீழ் வீட்டு நிலத்தின் மீது பயிரிடுதல், இது கூடுதல் வருவாயின் ஒரு தோற்றுவாயாக உள்ளது, உழைக்கும் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

**திட்டமிட்ட முறை** — சோஷலிச உற்பத்தியின் ஒழுங்கமைப்பாடு மற்றும் செயற்பாட்டின் ஒரு வடிவம், பல்வேறு தேசிய பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சியில் தகவுப் பொருத்தங்களை உணர்ச்சி முனைப்புடன் நிறுவுதல் மற்றும் தொடர்ந்து செய்தல்.

**தேசியப் பொருளாதார திட்டமிடுதல்** — வரவிருக்கின்ற ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான, விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பொருளாதாரப் பணிகளை உருப்படுத்திக் காட்டுவதை நோக்கமாகக் கொண்ட சோஷலிச சமூகத்தின் நடவடிக்கை; உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வில் அனுகூலமான தகவுப்

பொருத்தங்களை அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்தல்.

**நாட்டுடைமையாக்கம்** – தனியுடைமையின் வசமாக இருக்கும் உற்பத்திச் சாதனங்களை அரசு உடைமைக்கு மாற்றுதல். அது யாரால் நிறைவேற்றப்படுகிறது, யார் நலன்களுக்காக நடத்தப்படுகிறது என்பதைச் சார்ந்து அதன் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் சாராம்சம் வேறுபடுகிறது.

**நாட்டுடைமையாக்கலை நீக்குதல் (தனியுடைமையாக்குதல்)** – அரசுச் செலவில் உருவாக்கப்பட்ட புதிய தொழில் நிறுவனங்கள் மற்றும் தனியார் கம்பெனிகளின் சொத்துகளை நாட்டுடைமையாக்கலின் விளைவாகத் தோன்றிய அரசு தொழில் நிறுவனங்கள், வங்கிகள், போக்குவரத்து வசதிகள் முதலியவற்றை தனியுடைமைக்கு மீண்டும் மாற்றுதல்.

**நுகர்வு** – உற்பத்தியில் உருவாக்கப்பட்ட பொருள் மதிப்புகளைப் பயன்படுத்துதல், உற்பத்திச் செயல்முறையின் இறுதிக் கட்டம். நுகர்வில் இரு வகைகள் உள்ளன: உற்பத்திக்கான நுகர்வு – இயந்திரங்கள், கச்சாப் பொருட்கள், பிற உற்பத்திச் சாதனங்கள் யாவும் உற்பத்திச் செயல்முறையில் பயன்படுத்தப்படுகின்றன; மேலும் தனிநபர் நுகர்வு – தனிமனிதன் தனது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பல்வகைப் பொருள் மதிப்புகளைப் (உணவு, உடை, கலாசார மற்றும் வீட்டுப் பொருட்கள் முதலியவற்றை) பயன்படுத்துகிறான்.

**பண்டம்** – சில மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்

வதற்கும் கொள்வினை விற்பனை மூலமாக பரிவர்த் தனை செய்வதற்குமான உழைப்பின் உற்பத்திப் பொருள்.

**புதிய காலனியாதிக்கம்**—புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளை முதலாளித்துவ முறையினுள் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் ஏகபோக இலாபங்களை உறுதி செய் வதற்காகவும், அவற்றின் மீது சமத்துவமற்ற பொருளா தார மற்றும் அரசியல் உறவுகளை கட்டாயமாகச் சுமத் தும் ஓர் அமைப்பு.

**பொருளாதார சமநிலை**—உற்பத்திச் சாதனங்கள் சம் பந்தமாக சமூகத்தின் அனைத்து அங்கத்தினரிடையே யான சமமான சமுதாயப் படிநிலை. உற்பத்திச் சாதனங் களின் மீதான சமூக உடைமையின் வெற்றியின் விளை வாகவும் மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்தலின் விளைவாகவும் இது நிறுவப்படுகிறது.

**பொருளாதாரத்தை இராணுவமயமாக்குதல்**—போருக்கு தயார்படுத்துதல் மற்றும் அதை நடத்துதலின் நலன் களுக்கு பொருளாதாரத்தைக் கீழ்நிலைப்படுத்துதல்.

**பொருளாதார நலன்**—தனிமனிதன், மனிதக் குழுக் கள் மற்றும் சமூக முழுமையின் தேவைகளின் வெளிப் பாட்டின் ஒரு வடிவம். ஒரு தனிமனிதனின் பொருளா தார நலன் என்பது அவனால் உணரப்பட்ட தேவைகளின் ஒரு வெளிப்பாடாகும்.

**பொருளாதார நெருக்கடி**—உற்பத்தியின் சமூகத் தன் மைக்கும் சுவீகரித்தலின் தனி முதலாளித்துவ வடிவத்

திற்கும் இடையே உள்ள முரண்பாட்டின் காரணமாக முதலாளித்துவ நாடுகளின் உற்பத்தியில் திரும்பத் திரும்ப நிகழ்கிற பின்னடைவுகள்.

**மதிப்பு**—பண்டத்தில் உருக்கொண்டுள்ள சமூக உழைப்பு, இது பரிவர்த்தனையில் வெளிப்படுத்தப்படுகிறது.

**உபரி மதிப்பு**—கூலித் தொழிலாளர்களால் தங்களது உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கும் மேலாக உருவாக்கப் படும் மதிப்பு, இது இழப்பீடு செய்யப்படாமல் முதலாளி களால் அபகரிக்கப்படுகிறது. இதன் உற்பத்தி மற்றும் அப கரிப்பு முதலாளித்துவ உற்பத்தி முறையின் இலக்காக அமைகின்றன.

**மனிதனை மனிதன் சுரண்டுதல்**—உற்பத்திச் சாதனங் களை உடைமையாகக் கொண்டுள்ள வர்க்கம் நேரடி உற்பத்தியாளர்களின் உபரி உழைப்பால் (சில நேரங்களில் அவசியமான உழைப்பின் ஒரு பகுதியால்) உருவாக்கப் பட்ட விளைபொருளை அபகரித்தல்.

**முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கால கட்டம்**—தொண்டுழைப்புச் செய்கிற விவசாயி வர்க் கத்துடன் கூட்டு சேர்ந்து தொழிலாளி வர்க்கத்தால் அரசியல் ஆட்சி வெற்றி கொள்ளப்பட்டதிலிருந்து துவங்கி (பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்) கம்யூனிசத்தின் முதல் கட்டமான சோஷலிசத்தைக் கட்டுவதுடன் முடியும் ஒரு வரலாற்றுக் காலகட்டம்.

**முதலாளித்துவம்**—உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவ தனி உடைமை மற்றும் முதலாளிகள்

கூலியுழைப்பைச் சுரண்டுவது ஆகியவற்றின் அடிப்படையி லான சமூகப் பொருளாதார அமைப்பு.

**அரசு-ஏகபோக முதலாளித்துவம்** – ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியில் மிக நவீன கட்டம்; பூர்ஷ்வா அரசின் ஆட்சி ஏகபோகங்களின் ஆட்சியுடன் மேலும் அதிக லாபம் தரும் ஏகபோக மூலதனத்தை உறுதி செய்வதற்காக ஒரு தனித்த அமைப்பாக இணையும் கட்டம். இது தொழி லாளர் மற்றும் ஜனநாயக இயக்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அடக்கு கிறது; ஆக்கிரமிப்பு வெளியுறவுக் கொள்கையைப் பின் பற்றுகிறது; உலக சோஷலிச அமைப்புக்கு எதிராக பொருளாதார, அரசியல் மற்றும் சித்தாந்தப் போராட் டத்தை நடத்துகிறது.

**மூலதனம்** – கூலித் தொழிலாளர்களை முதலாளிகள் சுரண்டுவதன் மூலம் உபரி மதிப்பைக் கொண்டு வரும் மதிப்பு; இது பூர்ஷ்வா சமுதாயத்தின் முக்கிய வர்க்கங் களுக்கிடையேயான உறவுகளை வெளிப்படுத்துகிறது: உற் பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டும், இவற் றை சுரண்டுதலுக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தும் முதலாளிகளுக்கும், வேலைக்கான தங்களது திறமை யைத் தவிர வேறொன்றுமில்லாத, அதை முதலாளி களுக்கு விற்க கடமைப்படுத்தப்படும் கூலித் தொழிலா ளர்களுக்குமிடையே உள்ள உறவுகளை வெளிப்படுத்து கிறது.

**வர்க்கங்கள்:**

**தொழிலாளி வர்க்கம்** – முதலாளித்துவ மற்றும் சோஷ லிச சமூகத்தின் தலையாய உற்பத்திச் சக்தியான, பொருள் மதிப்புகளை உற்பத்தி செய்யும் நேரடி உற்பத்தியா

ளர். முதலாளித்துவத்தின் கீழ், உற்பத்திச் சாதனங்கள் பறிக்கப்பட்ட மற்றும் தங்களது உழைப்புச் சக்தியை விற்று வாழும் கூலித் தொழிலாளி வர்க்கம்; சோஷலிசத்தின் கீழ், அரசு (பொதுமக்கள்) தொழில் நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள சுதந்திரமான உழைக்கும் மக்களின் ஒரு வர்க்கம்.

**விவசாயி வர்க்கம்** – வேளாண்மையில் உற்பத்திச் சாதனங்களை உடைமையாகப் பெற்றிருக்கும், உழைப்பின் விளைபொருட்களை உற்பத்திச் செய்யும் சமூகப் பொருளாதார வர்க்கம்.

**விதி:**

**சோஷலிசத்தின் அடிப்படைப் பொருளாதார விதி** – சோஷலிச உற்பத்தியின் இடையறாத வளர்ச்சி மற்றும் நிறைவுபடுத்துதல் மூலம் சமூகத்தின் அனைத்து அங்கத்தினர்களின் பன்முக வளர்ச்சியையும், சாத்தியமான அளவு நலனையும் உறுதி செய்யும் சோஷலிசப் பொருளாதார இயக்கத்தின் விதி.

**பொருளாதார விதி** – மனிதர்களுக்கிடையே பொருளாதார அல்லது உற்பத்தி உறவுகளில் நிலையான, புறநிலையான பரஸ்பரச் சார்புநிலைகள் மற்றும் காரண-காரிய தொடர்புகள்.

**முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி** – முதலாளித்துவ உற்பத்தியின் உந்து காரணங்கள், இயக்குச் சக்திகள், அதன் நோக்கம், உபரி மதிப்பை அடைவதற்கான வழிகள் மற்றும் சாதனங்களைத் தீர்மானிக்கும் உபரி மதிப்பின் விதி.

**வினியோகம்** – உற்பத்தி உறவுகளின் உட்பகுதி. இதன் போது உற்பத்தியில் பங்கு கொள்பவர்களுக்கு உரியதான

விளைபொருளின் பகுதி தீர்மானிக்கப்படுகிறது. உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையின் வகையினால் வினியோகத்தின் மூலக் கோட்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

**வேலையில்லாத் திண்டாட்டம்**—முதலாளித்துவத்திற்கே தனிப் பண்பாக உள்ள புலப்பாடு; இதன் கீழ் உழைக்கும் மக்களின் ஒரு பிரிவினர் வேலையைப் பெற முடியாமல், மூலதனத்தின் திரட்சியாலும், உழைப்புச் சக்தியின் தேவையில் ஒரு வீழ்ச்சியாலும், வேலையில்லாதவர்கள் ஒப்பியல்பான உபரி ஜனத்தொகையாக மாறுகின்றனர்.

**வாசகர்களுக்கு**

*இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும்* **முன்னேற்றப் பதிப்பகம்** *மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.*

*தங்கள் கடிதங்களை* "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

**ஷோ-ரூம்**

136, அண்ணாசாலை, சென்னை—600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

**விற்பனை நிலையங்கள்**

3—22—75—D, மதுரை சாலை;

திருநெல்வேலி ஜங்ஷன் – 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் – 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் – 624001

## முன்னேற்றப் பதிப்பகத்தின் புதிய வெளியீட்டை படித்து விட்டீர்களா?

அ. புசுயெவ்

**முதலாளித்துவம் என்றால் என்ன?**
(சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை)

நவீன முதலாளித்துவத்தின் அடிப்படை பிரச்சினைகள் இந்நூலில் விளக்கப்படுகின்றன.

பொருளாதார கருத்தினம் என்ற வகையில் மூலதனத்தின் சாரம் என்ன? முதலாளித்துவ சுரண்டலின் முக்கிய வடிவங்கள் யாவை? முதலாளித்துவ சொத்துடைமை என்றால் என்ன? அமூகி, மடியும் முதலாளித்துவமாகிய ஏகாதிபத்தியத்தின் முக்கிய அறிகுறிகள் யாவை? முதலாளித்துவப் பொது நெருக்கடி என்றால் என்ன, இது எதில் வெளிப்படுகிறது? என் முதலாளித்துவத்திற்கு எதிர்காலம் இல்லை? —இக்கேள்விகளுக்கும், இன்னும் இது போன்ற பிற கேள்விகளுக்கும் எளிய, புரியக் கூடிய வடிவத்தில் இந்நூலில் பதில்கள் தரப் படுகின்றன.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

## முன்னேற்றப் பதிப்பகத்தின்
## புதிய வெளியீட்டை
## படித்து விட்டீர்களா?

எஃப். வோல்கவ், தி. வோல்கவா

**உபரி மதிப்பு என்றால் என்ன?**
(சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை)

உபரி மதிப்பின் உற்பத்தியைப் பெருக்கும் முக்கிய வழிகள் யாவை? உபரி மதிப்பு எப்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது, வெவ்வேறு முதலாளிகள் இதை எப்படி சுவீகரிக்கின்றனர்? வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளிகளைச் சுரண்டுவதை வலுப்படுத்துவதில் ஏகபோகங்கள், நிதி மூலதனத்தின் பங்கு என்ன? சர்வதேச ஏகபோகங்கள், விடுதலையடைந்த நாடுகளின் உழைப்பாளிகளை எத்தகைய நவீனகாலனியாதிக்க வடிவங்களில் சுரண்டுகின்றன? இக்கேள்விகளுக்கெல்லாம் இந்நூலில் புரியும்படி பதில் தரப்பட்டுள்ளது.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

## அச்சுப்பிழை

79ஆவது பக்கத்தில் 22ஆவது வரியில் உள்ள 20 லட்சத்திற்கு பதிலாக 2 கோடி என படிக்கவும்.

# சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசையில் இடம் பெறும் புத்தகங்கள்

சமூக விஞ்ஞானம்—சுருக்க நூல்
மார்க்சிய-லெனினியம் என்றால் என்ன?
அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?
தத்துவஞானம் என்றால் என்ன?
விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?
இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
முதலாளித்துவம் என்றால் என்ன?
சோஷலிசம் என்றால் என்ன?
கம்யூனிசம் என்றால் என்ன?
உழைப்பு என்றால் என்ன?
உபரி மதிப்பு என்றால் என்ன?
சொத்துடைமை என்றால் என்ன?
வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் என்றால் என்ன?
அரசு என்றால் என்ன?
புரட்சி என்றால் என்ன?
விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி என்றால் என்ன?
ஆளுமை என்றால் என்ன?
சமூக அரசியல் அகராதி

**ISBN 5—01—001469—6**